லெனின்

நிலப் பிரச்சினையும் சுதந்திரப் போராட்டமும்

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

MC 13
7/8/23

வி. இ. லெனின்

நிலப் பிரச்சினையும் சுதந்திரப் போராட்டமும்

(கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்)

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ. 1974

மொழிபெயர்ப்பாளர்: ரா. கிருஷ்ணையா

பதிப்பாளர் முன்னுரை

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் மார்க்சிய-லெனினியக் கழகம் வெளியிட்ட வி. இ. லெனின், நூல் திரட்டின் ஐந்தாவது பதிப்பிலிருந்து இந்த மொழி பெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

© உரிமைப் பதிவு
தமிழ் மொழிபெயர்ப்பு
''முன்னேற்றப் பதிப்பகம்'', 1974

பொருளடக்கம்

நிலப் பிரச்சினையும் சுதந்திரப் போராட்டமும். . . 5

டுமாவில் நிலப் பிரச்சினை. 11

''ருஷ்யாவில் விவசாய நிலப் பிரச்சினையின்'' சாராம்சம் 17

ருஷ்யாவில் பெரு நிலப்பிரபு, சிறு விவசாயி இவர்களது நிலவுடைமை. 25

சீனாவில் ஜனநாயகமும் நரோதிசமும். 27

இரு வகைக் கற்பனாவாதங்கள் 38

நிலப் பிரச்சினை பற்றிய நகல் தீர்மானம். விவசாயிப் பிரதிநிதிகளது முதலாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது 46

கருத்துரையாளரின் குறிப்புகளிலிருந்து. விவசாயிகளும் தொழிலாளர்களும் 50

சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி திரும்பவும் விவசாயி களை ஏமாற்றுகிறது 64

நிலத்தைப் பற்றிய உரை. தொழிலாளர்கள், படைவீரர் கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்தியது, 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8) 74

நிலத்தைப் பற்றிய அரசாணை 75

விவசாயிகள் கேள்விகளுக்குப் பதில் 83

மத்தியக் குபோர்னியாக்களின் ஏழை விவசாயிகள் கமிட்டிகளுடைய பிரதிநிதிகளின் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு, 1918 நவம்பர் 8 . . 85

நில இலாகாக்கள், ஏழை விவசாயிகள் கமிட்டிகள், கம்யூன்களின் முதலாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு, 1918 டிசம்பர் 11 98

கிராமப்புறத்திலான வேலை பற்றிய உரை. ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது (போல்ஷிவிக்குகள்) எட்டாவது காங்கிரசில் நிகழ்த்தியது, 1919, மார்ச் 23 116

நடுத்தர விவசாயிகள் சம்பந்தமான போக்கு குறித்து ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது (போல்ஷிவிக்குகள்) எட்டாவது காங்கிரசின் தீர்மானம் . . 145

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் சகாப்தத்தில் பொருளாதாரமும் அரசியலும் 151

நிலப் பிரச்சினை பற்றிய ஆய்வுரைகளின் பூர்வாங்க நகல் (கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்காக) 168

பண்ட வடிவ வரி பற்றிய உரை. ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது (போல்ஷிவிக்குகள்) பத்தாவது அனைத்து ருஷ்ய மாநாட்டில் நிகழ்த்தியது, 1921 மே 26 188

கூட்டுறவு குறித்து 211

பதிப்பாளர் குறிப்புகள் 223

நிலப் பிரச்சினையும்
சுதந்திரப் போராட்டமும்

நிலப் பிரச்சினை குறித்து டூமா[1] விவாதித்து வருகிறது. இந்தப் பிரச்சினையின் தீர்வுக்காக இரண்டு பிரதான பிரேரணைகள் முன்வைக்கப்படுகின்றன: ஒன்று காடேட்டுகளால்[2] ஆதரித்து வாதாடப்படுவது, மற்றொன்று ''துருதொவிக்குகளால்''[3], அதாவது விவசாயிப் பிரதிநிதிகளால் ஆதரித்து வாதாடப்படுவது.

இந்தத் தீர்வுகள் குறித்து ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியினது ஒற்றுமைக் காங்கிரஸ்[4] விவசாயி இயக்கம் சம்பந்தமாய் அனுசரிக்கப்பட வேண்டிய போக்கு பற்றிய தீர்மானத்தில் முற்றிலும் சரியாகவே குறிப்பிடுகின்றது: ''முதலாளித்துவக் கட்சிகள் விவசாயி இயக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும், அதைத் தமது பிடிக்குள் கொண்டுவரவும் முயற்சி செய்கின்றன—ஒரு கட்சி (சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்[5]) தனது கற்பனாவாதக், குட்டிபூர்ஷுவா சோஷலிசக் குறிக்கோளை அனுசரித்தும் மற்றொன்று (காடேட்டுகள்) பெருவீதத் தனியார் நிலவுடைமையை ஓரளவுக்குப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் அதே போதில் அரைகுறைச் சலுகைகளைக் கொண்டு விவசாயிகளுடைய சொத்துடைமை உணர்ச்சிகளைத் திருப்திப் படுத்துவதன் மூலம் புரட்சி இயக்கத்தைப் பலவீனமாக்கும் பொருட்டும் இவ்வாறு முயற்சி செய்கின்றன.''

சமூக-ஜனநாயகக் காங்கிரசின் இந்தத் தீர்மானத்தின் பொருள் என்னவென்று பார்ப்போம். காடேட்டுக் கட்சியானது அரை-நிலப்பிரபுத்துவக் கட்சியாகும். மிதவாத நிலப் பிரபுக்கள் பலரும் இதில் இருக்கின்றனர். இக்கட்சி நிலப் பிரபுக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகப் பாடுபடுகிறது,

தவிர்க்க முடியாதவையாகிவிட்ட சில சலுகைகளை மட்டுமே விவசாயிகளுக்கு அளிக்க உடன்படுகிறது. பெருவீதத் தனியார் நிலவுடைமையைக் கூடுமான வரை பாதுகாப்பதற்காக காடேட்டுகள் முயற்சி செய்கின்றனர்; விவசாயிகள் ஆதாயம் பெறும் வண்ணம் நிலப்பிரபுக்களினுடைய நிலங்கள் யாவும் பூரணமாய் உடைமை மாற்றம் செய்யப்படுவதை இவர்கள் எதிர்கின்றனர். நிலத்துக்காக விவசாயிகள் நஷ்ட ஈடு தர வேண்டுமென்று, அதாவது அரசின் மூலமாய் அவர்கள் நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தை விலைக்கு வாங்க வேண்டுமென்று காடேட்டுகள் பிரேரணை செய்வதன் நோக்கம், விவசாயிகளது மேல்மட்டப் பகுதியோரை ''ஒழுங்கு அமைதிக் கட்சியாய்'' மாற்றுவதே ஆகும். இந்த நஷ்டஈடு எப்படி அமைந்திருப்பினும், நிலத்துக்கு எவ்வளவுதான் ''நியாயமான'' விலை நிர்ணயிக்கப்படுவதாயினும், உண்மையில் நஷ்ட ஈடு வசதி படைத்த விவசாயிகளுக்குத்தான் ஓரளவு சுலபமானதாய் இருக்கும், ஏழ்மைப்பட்ட விவசாயிகளுக்கு இது பெருஞ் சுமையாகவே அமையும். கிராமச் சமுதாயத்தால் நிலம் விலைக்கு வாங்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தும், இன்ன பலவும் செய்தும் எவ்வளவுதான் சட்டதிட்டங்கள் காகிதத்தில் வரையப்பட்ட போதிலும், நடைமுறையில் நிலமானது விலை கொடுத்து வாங்க வல்லோராய் இருப்பவர்களுடைய கைகளிலேதான் தவிர்க்க முடியாதபடி இருந்து வரும். எனவே நஷ்டஈட்டுத் திட்டம் ஏழை விவசாயிகளுக்குப் பாதகமாய்ப் பணக்கார விவசாயிகளையே பலப்படுத்தும்; விவசாயிகளை இது பிளவுபடுத்தி, பூரண சுதந்திரத்துக்கும் அனைத்து நிலங்களுக்குமான அவர்களுடைய போராட்டத்தை இவ்விதம் பலவீனப்படுத்தவே செய்யும். விவசாயிகளில் ஓரளவு அதிக வசதியுடையோராய் இருக்கும் பகுதியோரை சுதந்திர இலட்சியத்தை விட்டுத் துறந்து, பழைய ஆட்சியாளர்களின் பக்கத்துக்கு வந்துவிடும்படிக் கவர்ந்திழுப்பதற்கான தூண்டில் இரையே இந்த நஷ்டஈட்டுத் திட்டம். நிலத்துக்காக நஷ்டஈடு கொடுப்பதென்பது, சுதந்திரப் போராட்டத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக விடுதலைப் பணம் கொடுப்பதையே குறிக்கிறது; சுதந்திரத்துக்காகப் போராடுவோரில் ஒரு பகுதியோரைத் துரோகமிழைத்து சுதந்திரத்தின் பகைவர்களிடம் ஓடச் செய்வதற்காக அவர்களுக்கு லஞ்சம்

தருவதையே குறிக்கிறது. தான் பெறும் நிலத்துக்காக நஷ்டஈடு கொடுக்கும் வசதி படைத்த விவசாயி ஒரு சிறு நிலச்சுவான்தாரராகிவிடுவார்; துரோகமிழைத்து இவர் பழைய நிலப்பிரபுவோடும் அதிகார வர்க்க ஆட்சியாளர்களோடும் சேர்ந்து கொள்வது சுலபமாகிவிடும்.

எனவே, காடேட்டுக் கட்சி (இந்த அரை-நிலப்பிரபுத்துவக் கட்சி) புரட்சி இயக்கத்தை, அதாவது சுதந்திரப் போராட்டத்தைப் பலவீனமாக்கும் நடவடிக்கைகளை ஆதரித்து நிற்கிறதென்று சமூக-ஜனநாயகக் காங்கிரசின் தீர்மானம் கூறுவது முற்றிலும் நியாயமே.

நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக டூமாவில் ''துருதொவிக்குகள்'' அல்லது விவசாயிப் பிரதிநிதிகள் முன்வைக்கும் பிரேரணையை இப்பொழுது பரிசீலனை செய்து பார்ப்போம். இன்னமும் இவர்கள் தமது கருத்துக்களைப் பூரணமாய்த் தெளிவுபடுத்தவில்லை. இவர்கள் இடைநிலையில் நிற்கின்றனர், காடேட்டுகளுக்கும் ''நாட்டுப்புறத்தாருக்கும்'' (மக்கள் நேய சோஷலிஸ்டுக் கட்சி), நிலத்தில் ஒரு பகுதிக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கும் (காடேட்டுகளின் பிரேரணை) அனைத்து நிலத்தையும் பறிமுதல் செய்வதற்கும் (சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியினர் முன்வைத்திருக்கும் பிரேரணை) இடைநிலையில் நிற்கின்றனர்; ஆனால் தொடர்ந்து காடேட்டுகளிடமிருந்து விலகி, ''நாட்டுப்புறத்தாரை'' நெருங்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

''நாட்டுப்புறத்தாரை'' முதலாளித்துவக் கட்சி என்றும், கற்வனுவாதக் குட்டிபூர்ஷுவா சோஷலிசத்தின் குறிக்கோள்களே இவர்களுடைய குறிக்கோள்கள் என்றும் சமூக-ஜனநாயகக் காங்கிரஸ் தீர்மானம் கூறுவது சரிதானா?

''நாட்டுப்புறத்தார்'' மிக அண்மையில் முன்வைத்திருக்கும் நிலச் சீர்திருத்த மாசோதாவை, அவர்களுடைய **நரோத்னி வெஸ்த்னிக்கின்** நேற்றைய இதழில் (இதழ் 9) வெளிவந்திருக்கும் இந்த மசோதாவை எடுத்துக் கொள்வோம். தனியார் நிலவுடைமை அனைத்தும் அறவே ஒழிக்கப்படவும், ''சகலருக்குமாகிய சரிசமமான நிலவுரிமை'' தோன்றவும் இந்த மசோதா வகை செய்கிறது[6]. ''நாட்டுப்புறத்தார்'' சரிசமமான நிலவுரிமையைப் புகுத்த விரும்பக் காரணம் என்ன? பணக்காரன், ஏழை என்னும் பாகுபாட்டை ஒழிக்க

விரும்புகிறார்கள் என்பதே காரணம். இது ஒரு சோஷலிசக் குறிக்கோளாகும். எல்லா சோஷலிஸ்டுகளும் இதை விரும்பு கின்றனர். ஆனால் சோஷலிசத்தில் பல்வேறு வகைகள் இருக் கின்றன; பாதிரிமார் சோஷலிசமுங்கூட இருக்கிறது; குட்டி பூர்ஷுவா சோஷலிசமும் இருக்கிறது, பாட்டாளி வர்க்க சோஷலிசமும் இருக்கிறது.

பணக்காரன், ஏழை என்னும் பாகுபாட்டை எப்படி ஒழிப்பதெனச் சிறு உடைமையாளர் கண்டுவரும் கனவின் வெளிப்பாடே குட்டிபூர்ஷுவா சோஷலிசம். ஏழையாகவோ பணக்காரனாகவோ இல்லாமல் எல்லோரும் ''சரிசமமான'' உடைமையாளர்களாவது சாத்தியமே என்பதாய்க் குட்டி பூர்ஷுவா சோஷலிசம் நினைக்கிறது. ஆகவே சகலருக்குமாகிய சரிசமமான நிலவரிமைக்கு வகை செய்யும் மசோதாக்களைக் குட்டிபூர்ஷுவா சோஷலிஸ்டுகள் தயாரிக்கின்றனர். ஆனால் எதார்த்தத்தில், வறுமையையும் இல்லாமையையும், சிறு உடைமையாளர் அவற்றை ஒழிக்க விரும்பும் வழியில், ஒழித்துவிட முடியாது. பணத்தின் ஆட்சி, மூலதனத்தின் ஆட்சி இருக்கும்வரை நிலத்தைச் சரிசமமாய் **உபயோகித்துக் கொள்வது** சாத்தியமன்று. சந்தைக்கான உற்பத்தி நீடிக்கிற வரை, பணத்தின் ஆட்சியும் மூலதனத்தின் ஆதிக்கமும் இருக் கும் வரை உலகில் எவ்விதமான சட்டங்களாலும் அசமத்து வத்தையும் சுரண்டலையும் ஒழித்துவிட முடியாது. எல்லா நிலங்களும், ஆலைகளும், உற்பத்திக் கருவிகளும் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு மாற்றப்படும்போது மட்டுமே, சமூக மயமாக்கப்பட்ட, திட்டமிடப்பட்ட, பெருவீதப் பொரு ளுற்பத்தி ஒழுங்கமைக்கப்படும்போது மட்டுமே சுரண்டலைப் பூரணமாய் ஒழித்திட முடியும். எனவேதான் பாட்டாளி வர்க்க சோஷலிசம் (மார்க்சியம்), ''சரிசமமான'' சிறுவீதப் பொருளுற்பத்தி சாத்தியமே என்பதாய்க் குட்டிபூர்ஷுவா சோஷலிசம் கொண்டிருக்கும் நம்பிக்கைகள் யாவும், முத லாளித்துவத்தில் சிறுவீதப் பொருளுற்பத்தியை அழியாது பாதுகாப்பது சாத்தியமென அதற்குள்ள நம்பிக்கையுங்கூட ஆதாரமற்றவையே என்று தெளிவுபடுத்துகின்றது.

அனைத்து நிலத்துக்காகவும் பரிபூரண சுதந்திரத்துக்காக வும் விவசாயிகள் நடத்தும் போராட்டத்துக்கு வர்க்க உணர்வு படைத்த பாட்டாளி வர்க்கம் முழுநிறை ஆதரவளிக்

கின்றது; ஆனால் பொய்யான நம்பிக்கைகளை எதிர்த்து விவசாயி களை அது எச்சரிக்கை செய்கிறது. விவசாயிகள் பாட்டாளி வர்க்கத்தின் துணை கொண்டு நிலப்பிரபுக்களின் அதிகாரத்தை வீழ்த்தி, பிரபுத்துவ நிலவுடைமைக்கும் நிலப்பிரபு, அதிகாரவர்க்க அரசுக்கும் அறவே முடிவுகட்ட முடியும். நிலத்தில் எல்லா விதமான தனியார் உடைமையையுங்கூட விவசாயிகள் ஒழித்துவிடலாம். இப்படிப்பட்ட நடவடிக்கை கள் விவசாயிகளுக்கும் தொழிலாளி வர்க்கத்துக்கும் அனைத்து மக்களுக்கும் பெரிதும் நலம் பயக்கும். விவசாயிகளுடைய போராட்டத்துக்கு சாத்தியமான முழு அளவில் உதவி புரிவது தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கு உகந்ததாகும். ஆனால் நிலப்பிரபுக்கள், அதிகாரவர்க்கத்தினர் இவர்களது ஆதிக் கத்தை வீழ்த்துவதால் மட்டும், அது எவ்வளவுதான் முழுமை யாய் நடைபெற்றாலுங்கூட, மூலதனத்தின் ஆதிக்கத்துக்குக் குழிபறித்துவிட முடியாது. நிலப்பிரபுக்கள், அதிகாரவர்க்கத் தாரது ஆட்சியிலிருந்து விடுபட்ட ஒரு சமுதாயத்தில்தான், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு மான கடைசிப் பெரும் போராட்டம், சோஷலிச அமைப்புக் கான போராட்டம் இறுதி முடிவு கிட்டும்படி நடந்தேறும்.

ஆதலால்தான் சமூக-ஜனநாயகவாதிகள் காடேட்டு களுடைய துரோகத்தனமான வேலைத்திட்டத்தை எதிர்த்து இவ்வளவு வைராக்கியமாய்ப் போராடுகின்றனர்; ''சரிசம மாக்கப்படுதல்'' என்பதான பொய் நம்பிக்கைகளுக்கு இட மளிப்பதை எதிர்த்து விவசாயிகளை எச்சரிக்கின்றனர். நிலத் துக்காகவும் சுதந்திரத்துக்காகவும் தற்போது நடைபெறும் போராட்டத்தில் வெற்றி பெற வேண்டுமாயின் விவசாயிகள் முற்றிலும் தமது சுயமுயற்சிகளையே ஆதாரமாய்க் கொள் வதும், காடேட்டுகளைச் சார்ந்திராது சுயேச்சையாய் இருப் பதும் அவசியமாகும். எல்லா விதமான நிலச் சீர்திருத்த மசோதாக்கள் குறித்தும் நடைபெறும் விவாதத்தால் அவர் கள் தவறான பாதையில் திசைதிருப்பிவிடப்படாமல் இருக்க வேண்டும். ஆட்சியதிகாரம் பழைய எதேச்சாதிகார, நிலப் பிரபு, அதிகாரவர்க்க அரசாங்கத்தின் கையில் இருக்கும் வரை யில், ''உழைப்பு நியமங்களுக்கும்'', ''சரிசமமாக்குதலுக் கும்'', இன்ன பலவற்றுக்குமான இந்தப் பிரேரணைகளைப் பற்றி விவாதிப்பது வெறும் கால விரயமே அன்றி வேறல்ல.

பல்வேறு மசோதாக்களது ஷரத்துக்கள், விதிமுறைகள் ஆகிய இந்தப் புரட்டால் விவசாயிகளுடைய நிலப் போராட்டம் பலவீனமடையவே செய்யும். பழைய ஆட்சியாளர்கள் இந்த ஷரத்துக்களையும் விதிமுறைகளையும் கிழித்தெறிவர், அல்லது விவசாயிகளை ஏமாற்றுவதற்கான புதிய கைக்கருவிகளாய் இவற்றை மாற்றிக் கொள்வர். எப்படி நிலம் பெறுவதென்று புரிந்து கொள்ள விவசாயிகளுக்கு இந்த ''நிலச் சீர்திருத்த மசோதாக்கள்'' உதவப் போவதில்லை; புரிந்து கொள்வதை மேலும் கடினமாக்குவதே அவை செய்யக் கூடிய கைங்கரியமாயிருக்கும். பழைய அதிகாரவர்க்க அரசாங்கத்தின் ஆட்சியதிகாரப் பிரச்சினையை அவை கேவலமான, அற்பமான சட்டவாதத் தில்லுமுல்லுகளைக் கொண்டு குழப்படிச் செய்கின்றன. காட்டுத்தனமான பழைய அதிகாரிகள் வரம்பற்ற தமது வன்முறை அதிகாரம் அனைத்தையும் உண்மையில் அப்படியே வைத்திருக்கையில், அருமையான, அன்பார்ந்த அரசாங்க அதிகாரிகள் வருவார்களென்ற நம்பிக்கையை ஊட்டி இவை மண்டையைக் குழப்புகின்றனவே அன்றி வேறு ஒன்றுமில்லை. கனவான்களே, காகித ''நிலச் சீர்திருத்த மசோதாக்களை'' வைத்துக் கொண்டு விளையாடுவதை நிறுத்துங்கள். பழைய ஆட்சியாளர்களாலாகிய தடைமதில் தகர்த்தெறியப்பட்டதும் விவசாயிகள் சுலபமாகவே நிலப் பிரச்சினையைத் தீர்த்துக் கொண்டுவிடுவார்கள். நீங்கள் உங்கள் கவனம் அனைத்தையும் இத்தகைய எல்லாத் தடைமதில்களையும் அகற்றுவதற்காக விவசாயிகள் நடத்தும் போராட்டத்திலே ஈடுபடுத்துவதுதான் நல்லது.

1906 மே 19ல் (ஜூன் 1) எழுதப்பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 13,
பக்கங்கள் 122-25

டுமாவில் நிலப் பிரச்சினை

அரசபீடத்தின் உரைக்குப் பதிலுரை வரைந்ததுதான் டுமாவில் காடேட்டுகள் மேற்கொண்ட முதலாவது செயல். கோரிக்கையாய் எழுப்பாமல் அடக்கவொடுக்கமான வேண்டுகோளாய் வகுத்துக் கொண்டனர். தூதுக்குழு மூலம் பதிலுரை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட வேண்டுமென்ற அவர்களுடைய வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதும் பேச்சுமூச்சின்றி உடனே அன்றைய நிகழ்ச்சி நிரலுக்குச் சென்றனர்—இது அவர்களுடைய இரண்டாவது ''செயல்''. இம்முறை முன்னிலும் அடக்கவொடுக்கமாய் நடந்து கொண்டனர். இப்பொழுது மூன்றுவது செயல் ஆரம்பமாகியுள்ளது—டூமா நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டிருக்கும் நிலப் பிரச்சினை பற்றிய விவாதம் நடைபெறுகிறது.

தொழிலாளர்கள் எல்லோரும் இப்பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். மிகப் பெருந் திரளினரான விவசாயிகளுக்கு இந்த நிலப் பிரச்சினைதான் மற்றவை யாவற்றையும்விட மிகவும் கவலைக்குரிய பிரச்சினையாய் இருந்து வருகிறது. விவசாயிகள் இன்று புரட்சியில் தொழிலாளர்களது பிரதான கூட்டாளிகளும், அவர்களது ஒரேயொரு நேசப் படையெனக் கூறத்தக்கோருமாகிவிட்டனர். மக்கள் சுதந்திரத்தின் கட்சியாராய்த் தம்மை அழைத்துக் கொள்ளும் காடேட்டுகள் மக்களுடைய சுதந்திர இலட்சியத்துக்குப் பற்றுறுதியுடன் பணியாற்றுகிறவர்களா என்பதை வேறு எதையும்விடச் சிறப்பாய் இந்த நிலப் பிரச்சினைதான் காட்டக் கூடியது.

மக்களுக்கு, அதாவது பிரதானமாய் விவசாயிகளுக்கு வேண்டியது என்ன? விவசாயிகளுக்கு வேண்டியது நிலம்தான்.

இது யாவரும் அறிந்ததே. நாட்டிலுள்ள நிலங்கள் யாவும் தமக்குரியவையாகிவிட வேண்டுமென்று விவசாயிகள் கோருகின்றனர். நிலப்பிரபுக்கள், அதிகாரவர்க்கத்தினர் இவர்களது கொடிய ஆதிக்கத்தை வீழ்த்த வேண்டுமென விரும்புகின்றனர். உழைப்பு வாரமாகிய பழைய கோர்வேவாகவே மிகப் பெருமளவுக்கு இருந்து வரும் உழைப்புச் சேவைக்கு உட்படுத்தி தம்மை இனி நிலப்பிரபுக்கள் வருத்தாமலிருக்கும் பொருட்டு விவசாயிகள் நிலங்களை இந்த நிலப்பிரபுக்களிடமிருந்து பறிக்க வேண்டுமென விரும்புகின்றனர்; அதிகாரவர்க்கத்தார் இனியும் தொடர்ந்து பொது மக்களை ஆட்டிப் படைத்து அட்டகாசம் புரிவதைத் தடுக்கும் பொருட்டு அவர்களிடமிருந்து அதிகாரத்தைப் பிடுங்கிவிடவேண்டுமென விரும்புகின்றனர். நிலத்துக்காக விவசாயிகள் நடத்தி வரும் போராட்டத்தில் தொழிலாளர்கள் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும்; நிலப் பிரச்சினையை நேராகவும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வரையறுப்பதற்கும் தொழிலாளர்கள் அவர்களுக்கு உதவி புரிய வேண்டும்.

நிலப் பிரச்சினையைக் குழப்படி செய்வதும் புரியட்டாது அடிப்பதும் மிகச் சுலபம். விவசாயிகளுக்கு நிலம் ஒதுக்கப்பட வேண்டும்தான் என்று வாதாடிவிட்டு, பிறகு இந்த நில ஒதுக்கீட்டால் விவசாயிகளுக்கு எந்தப் பயனும் இல்லாத படிச் செய்யும்படியான நிபந்தனைகளால் அதைச் சுற்றி வளைத்து மடக்குவது எளிய காரியமே. அரசாங்க அதிகாரிகளே மீண்டும் நில ஒதுக்கீடு செய்வார்களாயின், மிதவாத நிலப்பிரபுக்களே மீண்டும் ''குடித்துறை நடுவர்களாய்''[7] நியமிக்கப்படுவார்களாயின், செலுத்தப்பட வேண்டிய நஷ்ட ஈட்டின் ''மிதமான அளவுகளைப்'' பழைய எதேச்சாதிகார அரசாங்கமே நிர்ணயிக்குமாயின், பிறகு விவசாயிகள் எந்த அனுகூலமும் பெறமுடியாது; அதற்குப் பதில் 1861ல் செய்யப்பட்டது போல[8] மோசடியே செய்யப்படுவார்கள்; அவர்களுடைய கழுத்தில் மற்றொரு சுருக்குதான் மாட்டப்படும். ஆகவே விவசாயிகள் மிகவும் எச்சரிக்கையோடும், எளிதில் நம்பி ஏமாந்துவிடாமலும் இருக்க வேண்டுமென்பதை வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் மும்முரமாய் அவர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். இன்றுள்ள நிலவரங்களில், நஷ்டஈட்டுப் பிரச்சினையும், எந்த ஆட்சியால் நிலம்

''ஒதுக்கீடு'' செய்யப்பட வேண்டும் என்ற பிரச்சினையும் தலை யாய முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். விவசாயிகளுக்கு ஆதரவாய் இருப்போர் யார், நிலப்பிரபுக்களுக்கு ஆதரவாய் இருப்போர் யார் என்பதற்கும், மற்றும் ஒரு பக்கத்தை விட்டுத் துறந்து எதிர்ப் பக்கத்துக்கு ஓட முயலுவோர் யார் என்பதற்குமான உடனடியான, தவற முடியாத சோதனையாய் அமைவது நஷ்டஈட்டுப் பிரச்சினைதான். நஷ்டஈடு என்பதன் பொருளை ருஷ்ய விவசாயி நன்கு அறிவார்—ஓ, மிக நன்முக வே அறிவார்! விவசாயிகளுடைய நலன்களும் நிலப்பிரபுக் களுடைய நலன்களும் எப்படி நேர் மாறுய் இருக்கின்றன என்பதை இந்தப் பிரச்சினை மிகவும் சிறப்பாய்ப் புலப்படுத்து கின்றது. எனவே ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழி லாளர் கட்சியின் ஒற்றுமைக் காங்கிரஸ் நிலத்துறை வேலைத் திட்டத்தின் மூல நகலில் ''உடைமை நீக்கம்'' என்னும் சொல் லுக்குப் பதில் ''பறிமுதல்'' (அதாவது நஷ்டஈடு இல்லாத உடைமை நீக்கம்) என்னும் சொல்லை அதனிடத்தில் புகுத்தியது முற்றிலும் நியாயமே ஆகும்.

நஷ்டஈட்டுப் பிரச்சினையில் விவசாயிகளுடைய நலன் களும் நிலப்பிரபுக்களுடைய நலன்களும் எப்படி நேர்மாறுய் இருக்கின்றனவோ அதே போல, எந்த ஆட்சியால் நிலம் ஒதுக் கீடு செய்யப்பட வேண்டுமென்ற பிரச்சினையில் விவசாயி களுடைய நலன்களும் அரசாங்க அதிகாரிகளுடைய நலன் களும் நேர் மாறுய் இருக்கின்றன. எனவே சோஷலிசத் தொழி லாளர்கள் நிலப் பிரச்சினையானது பழைய ஆட்சியாளர் கள் கையில் விட்டு வைக்கப்படாதிருப்பது எவ்வளவு முக்கிய மென்பதை மிகவும் முனைந்து நின்று விடாமுயற்சியுடன் விவசாயிகளுக்கு விளக்கிச் சொல்ல வேண்டும். பழைய ஆட்சி யாளர்களால் செயல்படுத்தப்படுமாயின் எந்த விதமான நிலச் சீர்திருத்தத்தாலும் எந்தப் பயனும் இல்லையென்பதை விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும். நல்ல வேளையாய் இந்தப் பிரச்சினையிலும் விவகாரத்தின் கருப் பொருள் குறித்து ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் ஒற்றுமைக் காங்கிரசில் உடன்பாடு ஏற்பட்டுவிட்டது; காங்கிர சின் தீர்மானம் விவசாயிகளுடைய புரட்சிகரச் செயல்களை ஆதரிப்பதன் அவசியத்தை நிபந்தனையின்றி அங்கீகரித்தது. நிலச் சீர்திருத்தமானது **பரிபூரண** ஜனநாயக அரசிடமே,

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களாகவும் மக்களால் பதவியிலிருந்து திருப்பியழைக்கக் கூடியவர்களாகவும் இருக்கும் அரசாங்க அதிகாரிகளிடமே ஒப்படைக்கப்பட வேண்டுமென்று ஒளிவு மறைவின்றி கூறுமல் விட்டது எமது கருத்துப்படி இக் காங்கிரஸ் புரிந்த ஒரு தவறே ஆகும். ஆனால் இந்த விவகாரம் குறித்து மிகவும் விவரமாய் இன்னொரு சந்தர்ப்பத்தில் எடுத்துரைப்பதாய் இருக்கிறோம்.

நிலப் பிரச்சினை குறித்து டூமாவில் இரு பிரதான வேலைத் திட்டங்கள் பிரேரிக்கப்படப் போகின்றன. டூமாவில் பெருந் தொகையோராய் இருக்கும் காடேட்டுகள் விவசாயிகளுக் குத் தீங்கின்றி நிலப்பிரபுகளை அவர்களுடைய வழியிலே செல்ல விட விரும்புகிறார்கள். பிரபுக்களின் நிலங்களில் ஒரு பெரும் பகுதியைக் கட்டாய முறையில் உடைமை நீக்கம் செய்ய காடேட்டுகள் ஒத்துக் கொள்கிறார்கள் என்றாலும், முதலில் அவர்கள் நஷ்டஈடு தரப்பட வேண்டுமென்று வற் புறுத்துகின்றனர்; இரண்டாவதாக, நிலச் சீர்திருத்தத்தைச் செயல்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பற்றிய பிரச்சினை புரட்சிகர-விவசாயியின் வழியிலல்லாது, மிதவாத-அதிகார வர்க்க வழியில் தீர்க்கப்பட வேண்டுமென விரும்புகிறார்கள். எப்பொழுதும் போல காடேட்டுகள் தமது நிலத்துறை வேலைத்திட்டத்தில் விளாங்கு மீனைப் போல பிடி கொடாது நிலப்பிரபுக்களுக்கும் விவசாயிகளுக்குமிடையே, பழைய ஆட்சி முறைக்கும் மக்கள் சுதந்திரத்துக்குமிடையே நெளிந் தோடப் பார்க்கின்றனர்.

துருதொவிக், அல்லது விவசாயிக் கோஷ்டி இன்னும் தனது நிலத்துறை வேலைத்திட்டத்தைத் திட்டவட்டமாய் வரையறுக்கவில்லை. எல்லா நிலங்களும் உழைக்கும் மக்க ளுக்கே உரியதாயிருக்க வேண்டுமென்று இது வற்புறுத்து கிறது, ஆனால் நஷ்டஈடு குறித்தோ, பழைய ஆட்சி முறையைப் பற்றிய பிரச்சினை குறித்தோ தற்போதைக்கு ஒன்றும் கூறாமல் இருந்து வருகிறது. இந்த வேலைத்திட்டம் தெளிவாய் வரை யறுக்கப்பட்டதும் இதைப் பற்றி விவாதிக்கும்படியான சந்தர்ப்பங்கள் பலவும் நமக்குக் கிடைக்கும்.

அதிகாரவர்க்க அரசாங்கமானது காடேட்டு நிலச் சீர் திருத்தத்தையுங்கூட கருத்தில் எடுத்துக்கொள்ள மறுக்கிறது.

செல்வச் செழிப்பு மிக்க நிலப்பிரபு-அதிகாரவர்க்கத்தவர் கள் சிலர் இந்த அதிகாரவர்க்க அரசாங்கத்தின் தலைமையில் இருக்கின்றனர்; இவர்களில் பலரும் தலைக்குப் பத்தாயிரக் கணக்கான தெஸ்லியத்தீனு வீதம் நிலமுடைத்தவர்கள். இந்த அரசாங்கம் (ஓர் எழுத்தாளர் வேடிக்கையாய்க் குறிப்பிட்டது போல்) ''மகமத்திய மதத்தைத் தழுவினலும் தழுவுமே ஒழிய'' பிரபுக்களினுடைய நிலங்களைக் கட்டாய முறை யில் உடைமை நீக்கம் செய்ய ஒருபோதும் சம்மதிக்காது. ஆகவே நிலப் பிரச்சினைக்கு டீமா காணக் கூடிய ''முடிவு'' ஒரு பிரகடனமாகவே, கோரிக்கைகளது அறிக்கையாகவே இருக்குமே அல்லாது, இச்சொல்லின் மெய்யான பொருளில் ஒரு முடிவாய் இருக்காது. காடேட்டுகளிடமிருந்து மக்கள் பிரதிநிதிகளுக்கு ஏற்ற முறையில் கம்பீரமாகவும் துணி வோடும் ஒலிக்கும் நேர்மை வாய்ந்த பகிரங்கக் கோரிக்கை களுக்குப் பதிலாய், அடக்கவொடுக்கமான வேண்டுகோள் களையே மீண்டும் நாம் கேட்க வேண்டியிருக்கும். துருதொவிக் கோஷ்டி இச்சந்தர்ப்பத்திலாவது காடேட்டுகளிடமிருந்து முற்றிலும் சுயேச்சையான ஒரு நிலையை எடுப்பார்களென எதிர்பார்ப்போமாக.

சோஷலிசத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை, இப் பொழுது அவர்கள் மிகவும் முக்கியமான ஒரு கடமையை நிறைவேற்றியாக வேண்டும். தமது முழு பலத்தையும் கொண்டு எல்லா வழிகளிலும் அவர்கள் பொதுவில் தமது நிறுவன ஒழுங்கமைப்பையும், குறிப்பாய் விவசாயிகளுடன் தமக்குள்ள தொடர்புகளையும் விரிவாக்கிச் செல்ல வேண்டும். நஷ்டஈட்டுப் பிரச்சினையின் உட்பொருளையும், நிலச் சீர் திருத்தம் பழைய ஆட்சியாளர்களுடைய கையில் விடப்படு வதைச் சகித்துக் கொண்டிருக்க முடியுமா என்பதையும் விவசாயிகளுக்கு அவர்கள் கூடுமான அளவுக்கு விரிவாகவும் தெளிவாகவும் நுணுக்கமாகவும் விவரமாகவும் விளக்கிக் கூற வேண்டும். தற்போதைய அரசியல் நெருக்கடியில் தவிர்க்க முடியாதபடி எழப்போகும் தகர்வுக் கட்டத்துக்குத் தயார் செய்து கொள்ளும் பொருட்டு, சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்துக்கும் புரட்சிகர விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணியைப் பலப்படுத்தவும் விரிவாக்கிச் செல்லவும் அவர்கள் முழு முயற்சி செய்தாக வேண்டும். விவசாயிகளுக்கு

எல்லா நிலங்களும், மக்களுக்குப் பூரண சுதந்திரமும் முழுநிறை ஆட்சியதிகாரமும் என்னும் பிரச்சினை பயனுள்ள முறையில் தீர்க்கப்படுவதற்குரிய ஒரே உத்தரவாதம் இந்தக் கூட்டணிதான்.

வோல்னை, இதழ் 15,
1906, மே 12

நூல் திரட்டு,
தொகுதி 13,
பக்கங்கள் 99-102

"ருஷ்யாவில் விவசாய நிலப் பிரச்சினையின்" சாராம்சம்

"விவசாய நிலப் பிரச்சினை" என்பது — வழக்கமாய்க் கையாளப்பட்டு ஏற்கப்பட்டிருக்கும் இத்தொடரை உபயோகிப்பதெனில்—முதலாளித்துவ நாடுகள் எல்லாவற்றிலும் இருந்து வரும் ஒரு பிரச்சினையாகும். ஆனால் ருஷ்யாவில், இந்தப் பொதுவான முதலாளித்துவ விவசாய நிலப் பிரச்சினையுடன் கூடவே, "உண்மையில் ருஷ்யாவுக்கே உரிய" மற்றொரு விவசாய நிலப் பிரச்சினையும் இருந்து வருகிறது. இந்த இரு விதமான விவசாய நிலப் பிரச்சினைகளுக்குமுள்ள வேறுபாட்டைச் சுருக்கமாய்ச் சுட்டிக்காட்டும் பொருட்டு, பெரிய நிலப் பிரபுக்களுடைய நிலங்கள் தம் கைக்கு மாற்றப்பட வேண்டுமெனக் கோரும் சிறு நிலவுடைமையாளர்களது பரவலான ஜனநாயக இயக்கம் எதுவும் நாகரிக வளர்ச்சியுடைய எந்த முதலாளித்துவ நாட்டிலும் இருக்கவில்லை என்பதை நாம் குறிப்பிடலாம்.

ருஷ்யாவில் இப்படிப்பட்ட ஓர் இயக்கம் இருக்கிறது. ஆகவே ருஷ்யாவைத் தவிர்த்து வேறு எந்த ஐரோப்பிய நாட்டிலும் மார்க்சியவாதிகள் சிறு நிலவுடைமையாளர்களுக்கு நிலங்கள் மாற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கவோ, ஆதரிக்கவோ இல்லை. ருஷ்யாவில் இருந்து வரும் விவசாய நிலப் பிரச்சினையின் தவிர்க்க முடியாத ஒரு விளைவு என்னவெனில், மாற்றப்படும் நிலங்களது உடைமைக்கும் பட்டுவாடாவுக்கும் ஏற்பாடு செய்யும் விதம் குறித்து (பங்கீடு, ஊராட்சியின் உடைமையாக்குதல், நாட்டுடைமையாக்குதல்) கருத்து வேறுபாடுகள் இருப்பினும், மார்க்சியவாதிகள் எல்லோருமே இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்கிறார்கள்.

''ஐரோப்பாவுக்கும்'' ருஷ்யாவுக்கும் ஏன் இந்த வேறுபாடு? ருஷ்யாவினது வளர்ச்சியின் தனிவிதமான தன்மையா, அல்லது ருஷ்யாவில் முதலாளித்துவம் இல்லை என்பதா, அல்லது நமது முதலாளித்துவத்திற்குள்ள தனி விசேஷமான நிர்க்கதி நிலையும் நிவாரணமின்மையுமா காரணம்? பல்வேறு ரகத்தவருமான நரோத்னிக்குகள் இப்படித்தான் நினைக்கின்றனர். ஆனால் இந்தக் கருத்தோட்டம் அடிநிலையிலேயே தவறுனதாகும்; நிகழ்ச்சிகள் இது தவறுனதே என்பதை நெடுங்காலத்துக்கு முன்பே நிரூபித்துக் காட்டியிருக்கின்றன.

''ஐரோப்பாவுக்கும்'' ருஷ்யாவுக்குமுள்ள வேறுபாடு ருஷ்யாவின் மிகக் கடுமையான பிற்பட்ட நிலையிலிருந்து எழுவதாகும். மேலைய நாடுகளில் முதலாளித்துவ விவசாய அமைப்பு முழுநிறைவாய் நிறுவப்பட்டுவிட்டது; இங்கு பிரபுத்துவம் நெடுங் காலத்துக்கு முன்பே துடைத்தெறியப்பட்டுவிட்டது; பிரபுத்துவத்தின் மீதமிச்சங்கள் சொற்பமாகவே இருப்பதால் இவை குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றுவதில்லை. மேலைய நாடுகளின் விவசாயத்தில் சமூக உறவின் பிரதான வகையாய் இருப்பது கூலியுழைப்பாளருக்கும், கூலியாட்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வோர் அல்லது சாகுபடியாளர் அல்லது நிலவுடைமையாளருக்கும் இடையிலான உறவே ஆகும். சிறு சாகுபடியாளர்கள் இவ்விரு தரப்பாருக்கும் இடைநிலையில் இருக்கின்றனர்; இவர்களில் சிலர் கூலிக்கு வேலை செய்வோரது, தமது உழைப்பு சக்தியை விற்போரது (விவசாயிகளுடைய பல விதமான துணை வேலை அல்லது சில்லறை வருமானத் துறை எனப்படுவதைச் சேர்ந்தோரது) வர்க்கத்தினராய் மாறிவிடுகிறார்கள்; ஏனைய சிலர் கூலியாட்களை அமர்த்திக் கொள்ளும் வர்க்கத்தினராகி விடுகிறார்கள் (சிறு சாகுபடியாளர்கள் அமர்த்திக் கொள்ளும் கூலியாட்களின் எண்ணிக்கை பொதுவாய் நினைக்கப்படுவதைக் காட்டிலும் மிகவும் அதிகமாகும்).

இதே மாதிரியான முதலாளித்துவத் தன்மையதான விவசாய அமைப்பு ஏற்கனவே ருஷ்யாவில் உறுதியாய் நாட்டப் பெற்றுள்ளது, இடையறாது வளர்ந்து செல்கிறது என்பதில் சந்தேகமில்லை. நிலப்பிரபுவின் பயிர்த்தொழில் விவசாயியின் பயிர்த்தொழில் ஆகிய இரண்டுமே இத்திசையிலேதான் வளர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் கலப்பற்ற முத

லாளித்துவ உறவுகள் நமது நாட்டில் இன்னமும் **பிரம்மாண்ட** அளவுக்குப் **பிரபுத்துவ** உறவுகளால் மூழ்க்கடிக்கப்பட்டுதான் உள்ளன. ருஷ்யாவின் விவசாய நிலப் பிரச்சினையின் தனித் தன்மை, மிகப் பெருந் திரளான மக்கள், மிகவும் முக்கியமாய் விவசாயிகள் எல்லோரும், இந்த உறவுகளை எதிர்த்து நடத்தும் போராட்டத்திலேதான் காணக் கிடக்கிறது. மேற்கு நாடுகளில் இந்த வகைப்பட்ட ''பிரச்சினை'' பழங் காலத்தில் எங்கும் இருந்து வந்தது, ஆனால் இது இந்நாடுகளில் நெடுங் காலத்துக்கு முன்பே தீர்க்கப்பட்டுவிட்டது. ருஷ்யாவில் இதன் தீர்வு தாமதப்பட்டுவிட்டது—1861ஆம் ஆண்டின் நிலச் ''சீர்திருத்தத்தால்'' இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை, தற்போதைய நிலைமையில் ஸ்தலீப்பினது நிலத்துறைக் கொள்கையாலும்[9] இதைத் தீர்க்க முடியப் போவதில்லை.

இன்றைய ருஷ்யாவின் விவசாய நிலப் பிரச்சினையின் தன்மையைப் புலப்படுத்தும் பிரதான விவரங்களை ''ஐரோப்பிய ருஷ்யாவில் நிலவுடைமை'' என்னும் கட்டுரையில் (நேவ்ஸ்கயா ஸ்வெஸ்தா,* இதழ் 3) நாம் எடுத்துரைத்தோம். சுமார் 7 கோடி தெஸ்ஸியத்தீனு நிலம் மிகப் பெரிய 30,000 நிலப்பிரபுக்களின் உடைமையிலிருக்கின்றது; ஏறத்தாழ இதே அளவு நிலம் 1 கோடி விவசாயிக் குடும்பங்களின் உடைமையிலிருக்கின்றது—இதுதான் சித்திரத்தின் பிரதானப் பின்னணிக் களம். இந்தச் சித்திரத்தைத் தமக்குச் சான்றுரைக் கொண்டுள்ள பொருளாதார உறவுகள் யாவை? இந்த 30,000 பெரிய நிலப்பிரபுக்கள் பிரதானமாய்ப் பழங் காலத்து நில வேந்தர்களாகிய பிரபுக் குலத்தோரையும் பழங் காலத்துப் பிரபுத்துவப் பொருளாதாரத்தையும் குறிப்பவர்களாவர். தலைக்கு 500 தெஸ்ஸியத்தீனுவுக்கு அதிகமான நிலங்களைப் பெற்ற 27,833 பண்ணையார்களில் 18,102 பேர், அதாவது ஏறத்தாழ மூன்றில் இரு பகுதியோர் பிரபுக் குலத்தவர்கள். இவர்களுக்குச் சொந்தமாயிருக்கும் பெரிய பிரபுத்துவப் பண்ணைகளின் நிலங்களை—இந்தப் பெரிய நிலப்பிரபுக்களில் ஒவ்வொருவரும் 2,000 தெஸ்ஸியத்தீனுவுக்கும் அதிகமான நிலங்களின் உடைமையாளர்!—இந்தப்

---

* பீட்டர்ஸ்பர்கில் 1912ல் வெளிவந்த போல்ஷிவிக்குகளுடைய சட்டபூர்வமான செய்தியேடு—[பதிப்பாசிரியர்.]

பண்ணையார்களிடமுள்ள உழுபடைக் கருவிகளையும் கால் நடைகளையும் கூலியாட்களையும் கொண்டு சாகுபடி செய்வது முடியாத காரியம். ஆகவே இந்த நிலைமையில் பழைய கோர்வே வார முறை பெருமளவுக்குத் தவிர்க்க முடியாததாகிறது; பெரிய பிரபுத்துவப் பண்ணைகளின் நிலங்களில் சிறுவீதப் பயிர்த் தொழில், சிறு வீதச் சாகுபடி நடை பெறுகிறது என்பதே, நிலப்பிரபுக்களுடைய நிலங்கள் சிறு விவசாயி களுடைய கருவிகளையும் கால்நடைகளையும் கொண்டு சாகு படி செய்யப்படுகின்றன என்பதே இதன் பொருள்.

இந்தக் கோர்வே முறை மிகவும் முக்கியமாய் ஐரோப் பிய ருஷ்யாவின் மத்திய மாநிலங்களில், பாரம்பரிய ருஷ்யப் பகுதிகளானவற்றில், அதாவது நமது விவசாயத்தின் இதயப் பகுதிகளில், மலிந்திருப்பது தெரிந்ததே. உழைப்பு வாரம்[10] எனப்படுவது கோர்வேமுறையின் நேரடியான வழித்தோன்ற லும் எச்சமுமே அன்றி வேறல்ல. குளிர் காலத்தில் செய்து கொள்ளப்படும் வேலை ஒப்பந்தம்,[11] துண்டித்தளிக்கப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடாய்ச் செய்ய வேண்டிய வேலைகள், ''திட்டு நில உழைப்புச் சேவை''[12] முதலான பலவற்றை யும் போன்ற கொத்தடிமைக்குரிய கொடிய நிபந்தனைகளின் அடிப்படையிலான வாரச் சாகுபடி முறைகளும் உண்மை யில் கோர்வே முறையேதான். இப்படிப்பட்ட வாரச் சாகு படி ஏற்பாட்டின்படி விவசாயிக்கு ''ஒதுக்கப்படும் துண்டு நிலமானது'', நிலப்பிரபுவுக்குச் சாகுபடி ஆட்களும், ஆட் களோடுகூட சாகுபடிக் கருவிகளும் கால்நடைகளும் வழங்கு வதற்கான ஒரு சாதனமே ஆகும். படுமோசமானவையே என்றாலுங்கூட இந்தக் கருவிகளும் கால்நடைகளும்தான் நிலப் பிரபுக்களின் நிலங்களைச் சாகுபடி செய்ய உதவுகின்றன.

மிகப் பெருந் திரளான விவசாயிகளது சகிக்க முடியாத வறுமை நிலை—இந்த விவசாயிகள் தமக்கு ஒதுக்கப்பட்ட துண்டு நிலங்களுடன் கட்டுண்டவர்கள், ஆயினும் இந்நிலங் களைக் கொண்டு பிழைக்க முடியாமல் திண்டாடுகிறவர்கள்— மிகப் புராதன காலத்திய வேளாண்மை வேலைநுட்பம், தொழில் துறைக்குரிய உள்நாட்டுச் சந்தையின் மிதமிஞ்சிய பற்றாக்குறை—இவைதாம் மேற்கூறிய நிலைவரங்களால் ஏற் படும் விளைவுகள். இந்த நிலைவரங்கள் அடிநிலையில், கருப் பொருளில் இது நாள் வரை மாற்றமின்றி அப்படியே

இருந்து வருகின்றன என்பதற்கு, 3 கோடி விவசாயிகள் வரையில் பாதிக்கப்பட்டிருக்கும் தற்போதைய பஞ்சம் மிகவும் எடுப்பான நிரூபணமாகும். ஒப்பளவில் உயர்ந்த தரத்தை (மிகச் சிறந்த முதலாளித்துவப் பண்ணைகளில்) இதற்குள்ளாகவே ஏற்படச் செய்திருக்கும், வேகமாய் வளர்ந்து வரும் வேளாண்மை வேலைநுட்பத்துக்குரிய ஒரு சகாப்தத்தில் இப்படிப் படுபயங்கர வெகுஜனப் பட்டினியை, கட்டுண்டவர்களாகியப் பெருந் திரளான சிறு நிலவுடைமையாளர்களது பண்ணையடிமைக்கு ஒப்பான நசுக்குண்ட இழிநிலையாலும், இல்லாமையாலும், நிர்க்கதியான நிலையாலும் மட்டுமே உண்டாக்க முடியும்.

மேற்கு ஐரோப்பிய விவசாயிகள் மத்திய காலத்துக்குப் பிற்பாடு கண்டிராத இத்தகைய பயங்கரக் கேடுகளை விளைவிக்கும் அடிப்படை முரண்பாடு, நமது தொழில் துறையில் வெகுவாகவும் நமது விவசாயத்தில் கணிசமாகவும் வளர்ச்சியுற்றிருக்கும் முதலாளித்துவத்துக்கும் மத்திய காலத்தியதாகவும் பிரபுத்துவத் தன்மையதாகவும் இருந்து வரும் நிலவுடைமை முறைக்கும் இடையிலுள்ள முரண்பாடே ஆகும். இந்தப் பழைய நிலவுடைமை முறை அடியோடு தகர்த்து ஒழிக்கப்பட்டாலன்றி இந்த நிலைமையிலிருந்து விடுபட்டு வெளிவர வழி இல்லை.

நிலப்பிரபுக்களுடைய நிலச் சொத்து மட்டுமின்றி, விவசாயிகளுடைய நிலச் சொத்துங்கூட பிரபுத்துவ உறவுகளையே அடிப்படையாய்க் கொண்டுள்ளன. முன்னதன் விவகாரத்தில் இது சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப்படையாகவே தெரிகிறது. பெரிய பிரபுத்துவ நிலவுடைமைகளை—உதாரணமாய் 500 தெஸ்ஸியத்தீனுவுக்கு மேற்பட்ட நிலவுடைமைகளை—ஒழிப்பதால் விவசாயத்தில் பெருவீதப் பொருளுற்பத்தி உண்மையில் அதிகரிக்கவும் வளர்ச்சியுறவும் செய்யுமே அல்லாது, ஒருபோதும் பலவீனமுற்றுவிடாது என்பதை மட்டும் இங்கு குறிப்பிட்டால் போதும். பெரிய பிரபுத்துவப் பண்ணைகள் காப்பு அரண்களாய் அமைந்து பாதுகாப்பது, கட்டுண்ட உழைப்பின் அடிப்படையிலான சிறுவீதச் சாகுபடியையே அன்றி, பெருவீதப் பொருளுற்பத்தியை அல்ல. ருஷ்யாவில் மிகப் பெருவாரியான பிராந்தியங்களில் 500 தெஸ்ஸியத்தீனு, அல்லது அதற்கு மேற்பட்ட நிலங்களைக் கொண்ட

பெரிய பண்ணைகளை அவற்றின் உடைமையாளர்களது உழுபடைக் கருவிகள், கால்நடைகளைக் கொண்டும் கூலியுழைப்பைக் கொண்டும் நடத்திச் செல்வது நடைமுறையில் சாத்தியமன்று; அல்லது எப்படியும் இது மிகமிகக் கடினமானது. இத்தகைய பண்ணைகளின் பருமனைக் குறைப்பது, கட்டுண்ட உழைப்பின் அடிப்படையிலான சிறுவீதச் சாகுபடி வழக்கொழிந்து, விவசாயமானது பெருவீத முதலாளித்துவப் பொருளுற்பத்தியாய் மாற்றமடைவதற்குரிய அவசிய நிலைமைகளில் ஒன்றாகும்.

மறுபுறத்தில், ருஷ்யாவில் விவசாயியின் சாகுபடிக்காக ஒதுக்கப்படும் நிலவுடைமையின் வடிவமும் மத்திய காலத்திய, பிரபுத்துவ இயல்புகளைக் கொண்டதாகவே இருந்து வருகிறது. இது சட்ட வடிவம் பற்றிய பிரச்சினை மட்டுமல்ல—கிராமச் சமுதாய நிறுவன அமைப்பு ஒழிக்கப்பட்டு, தனியார் நிலவுடைமை புகுத்தப்படுவதன் மூலம் பட்டாளத்து சார்ஜண்டின் பாணியில் இந்த வடிவம் தற்போது மாற்றப்பட்டு வருகிறது. இந்த உடைமையின் மெய்யான தன்மையை, கிராமச் சமுதாய நிறுவன அமைப்பின் சிதைவால் பாதிக்கப்படாதிருக்கும் இந்தத் தன்மையைப் பற்றிய பிரச்சினையும் ஆகும் இது.

மிகப் பெருந் திரளினரான விவசாயிகள் மிகச் சிறிய, கடுகுத் ''திட்டுகளை'' (=சின்னஞ்சிறு துண்டு நிலங்களை), ஒன்றுக்கொன்று நெடுந் தொலைவில் விலகியமைந்தவை என்பதோடு, உண்மையில் மிக மட்டரகமான, மிகச் சிறு துண்டுகளைப் பெற்றிருக்கிறார்கள் (1861ல் விவசாயிகளது நிலங்கள் நிலப்பிரபுத்துவச் சீமான்களது மேற்பார்வையில் வரையறுத்து நிர்ணயிக்கப்பட்டவை என்பதாலும், நிலங்கள் சத்திழந்து நலிவுற்றுவிட்டதாலும் ஏற்பட்ட விளைவு இது). மிகப் பெருந் திரளான விவசாயிகளது இந்தக் கண்கூடான உண்மை நிலை இவர்களைத் தவிர்க்க முடியாதபடி பிரபுத்துவப் பெரும் பண்ணைகளின் பரம்பரை உடைமையாளர்களுக்கு, பழைய ''எஜமானர்களுக்குக்'' கட்டுண்டு அடிமைப்படச் செய்கிறது.

பின்வரும் சித்திரத்தை நீங்கள் தெளிவாய் மனதிற் கொள்ள வேண்டும்: ஒரு புறத்தில் 30,000 பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள் தலைக்கு 2,000 தெஸ்ஸியத்தீனு நிலம்

பெற்றிருக்க, மறு புறத்தில் 1,00,00,000 விவசாயிக் குடும்பங்கள் ''சராசரிக்'' குடும்பம் ஒன்றுக்கு 7 தெஸ்ஸியத்தீஞ வீதம் நிலம் பெற்றிருக்கின்றன. கிராமச் சமுதாய நிறுவன அமைப்பு எவ்வளவுதான் தகர்க்கப்பட்டு தனியார் நிலவுடைமை தோற்றுவிக்கப்பட்ட போதிலும், அப்படியும் அதனால் மேற்கூறிய உண்மை நிலவரத்திலிருந்து எழும் கட்டுண்ட அடிமை நிலையையும், உழைப்பு வாரத்தையும், கோர்வேயையும், பண்ணையடிமைக்குரிய வறுமையையும், பண்ணையடிமை முறைக்குரிய சார்பு நிலையையும் மாற்றிவிட முடியாது என்பது தெளிவு.

இத்தகைய ஒரு நிலைமையின் காரணமாய் எழும் ''விவசாய நிலப் பிரச்சினையானது'' ருஷ்யாவின் முதலாளித்துவ வளர்ச்சிக்குச் சகிக்க முடியாத தடையாகிவிட்ட பண்ணையடிமை முறையின் மீதமிச்சங்களை ஒழித்திடும் பிரச்சினையே ஆகும். ருஷ்யாவின் விவசாய நிலப் பிரச்சினை, நிலப்பிரபுக்கள், நில ஒதுக்கீடு பெற்ற விவசாயிகள் ஆகிய இரு தரப்பாருக்குமுரிய பழைய, மத்திய காலத்திய நிலவுடைமை வடிவங்களை அடியோடு தகர்த்திடும் பிரச்சினையே ஆகும். இந்த நிலவுடைமையின் அளவு கடந்த பிற்பட்ட நிலையின் காரணமாகவும், இந்த நிலவுடைமைக்கும் முதலாளித்துவ அமைப்பாகிவிட்ட தேசப் பொருளாதார அமைப்பு அனைத்துக்கு முள்ள அளவு கடந்த இசைவின்மையின் காரணமாகவும் இப்படிப்பட்ட ஒரு தகர்வு அத்தியாவசியமாகிவிட்டது.

இது அடியோடு பெயர்த்தெறியப்படும் ஒரு தகர்வாகவே இருந்தாக வேண்டும், ஏனெனில் இசைவின்மை மிதமிஞ்சியதாய் இருக்கிறது, பழையது அளவு மீறி பழையதாய் இருக்கிறது, ''நோய் கவனிக்கப்படாமல் விடப்பட்டு மிகவும் முற்றிவிட்டது''. எப்படியும், அதன் எல்லா வடிவங்களிலும் இந்தத் தகர்வு உள்ளடக்கத்தில் முதலாளித்துவத் தன்மையதாகவே இருக்கும், ஏனென்றால் ருஷ்யாவின் பொருளாதார வாழ்வு அனைத்தும் ஏற்கனவே முதலாளித்துவத் தன்மையதாகிவிட்டது; நிலவுடைமை முறையும் நிச்சயமாய் இதற்குக் கீழ்படிந்தே ஆக வேண்டும்; சந்தையின் ஆணைகளுக்கு, இன்று நமது சமுதாயத்தில் சர்வவல்லமை படைத்தாய் இருக்கும் மூலதனத்தின் நிர்ப்பந்தத்துக்கு அது தன்னைத் தகவமைத்து கொண்டே ஆக வேண்டும்.

இந்தத் தகர்வு தவறுமல் அடியோடு பெயர்த்தெறியப் படும் ஒரு தகர்வாகவும், முதலாளித்துவத் தன்மையதாக வுமே இருக்கும் என்னும் இந்த நிலையிலும், பதில் அளிக்கப்பட வேண்டிய பின்வரும் கேள்வி ஒன்றும் இருக்கிறது: சம்பந்தப் பட்ட இரு வர்க்கங்களாகிய நிலப்பிரபுக்கள், விவசாயிகள் ஆகிய இவற்றில் எந்த வர்க்கம் இந்த மாற்றத்தைச் செயல் படுத்தும் அல்லது நெறியாண்மை புரியும், இதன் வடிவங் களை நிர்ணயிக்கும்? ''ஓர் ஒப்பீடு: விவசாய நிலத் துறையில் ஸ்தலீப்பினது வேலைத்திட்டமும் நரோத்னிக்குகளுடைய வேலைத்திட்டமும்'' என்னும் நமது அடுத்த கட்டுரை ''தீர்க்கப்படாத இந்தப் பிரச்சினையைப்'' பரிசீலிக்கும்.

நேவ்ஸ்கயா ஸ்வெஸ்தா,
இதழ் 6, 1912, மே 22

நூல் திரட்டு,
தொகுதி 21,
பக்கங்கள் 306-10

ருஷ்யாவில் பெரு நிலப்பிரபு, சிறு விவசாயி இவர்களது நிலவுடைமை

1861 பிப்ரவரி *19*இன்* ஆண்டு நிறைவு அண்மையில் நடைபெற்றதையொட்டி, ஐரோப்பிய ருஷ்யாவில் தற்போதுள்ள நில வினியோக நிலைவரத்தை நினைவுபடுத்துவது பொருத்தமுடையதாகவே இருக்கும்.

ஐரோப்பிய ருஷ்யாவில் நிலத்தின் வினியோகம் பற்றிய அதிகார பூர்வமான கடைசிப் புள்ளிவிவரங்கள் உள்துறை



* *1861* பிப்ரவரி *19*ல் ஜார் மன்னர் இரண்டாம் அலெக்சாண்டர் ருஷ்யாவில் பண்ணையடிமை முறையை ஒழிக்கும் பிரகடனத்தை வெளியிட்டார்.—[பதிப்பாசிரியர்.]

அமைச்சகத்தால் வெளியிடப்பட்டவை; இவை 1905க்கு முன்னதானவை.

இந்தப் புள்ளிவிவரங்களின்படி (வட்டத் தொகைகளில்) சுமார் 30,000 பெரிய நிலப்பிரபுக்களிடம் தலைக்கு 500 தெஸ்ஸியத்தீனுவுக்கும் அதிகமான நிலங்கள் இருந்தன. இவர்களிடமிருந்த மொத்த நிலம் சுமார் 7,00,00,000 தெஸ்ஸியத்தீனு.

ஏறத்தாழ 1,00,00,000 ஏழை விவசாயிக் குடும்பங்களிடம் **இதே அளவு** நிலங்கள் இருந்தன.

சராசரியாய் ஒவ்வொரு பெரிய நிலப்பிரபுவுக்கும் சுமார் 330 ஏழை விவசாயிக் குடும்பங்கள் வீதம் இருந்தன என்பதும், விவசாயிக் குடும்பம் ஒன்றுக்குச் சுமார் 7 (ஏழு) தெஸ்ஸியத்தீனு வீதமும், அதேபோதில் பெரிய நிலப்பிரபு ஒருவருக்குச் சுமார் 2,300 (இரண்டு ஆயிரத்து முன்னூறு) தெஸ்ஸியத்தீனு வீதமும் நிலமிருந்தது என்பதும் இதிலிருந்து தெரிய வருகின்றன.

இதைப் பட வடிவில் காட்டும் பொருட்டு மேலே **உள்ள** விளக்கப் படத்தை வரைந்திருக்கிறேன்.

நிடுவில் வெள்ளையாய் இருக்கும் பெரிய நீள்சதுரம் பெரிய நிலப்பிரபு ஒருவரின் நிலப் பண்ணையைக் குறிக்கிறது. அதைச் சுற்றிலுமுள்ள சிறிய சதுரங்கள் சிறு விவசாயிக் குடும்பங்களுடைய நிலங்களைக் குறிக்கின்றன.

மொத்தம் 324 சிறு சதுரங்கள் இருக்கின்றன. வெள்ளையாய் இருக்கும் நீள்சதுரத்தின் பரப்பு 320 சிறு சதுரங்களுக்குச் சமமானது.

பிராவ்தா, இதழ் 51,
1913, மார்ச் 2

நூல் திரட்டு,
தொகுதி 23,
பக்கங்கள் 10-11

சீனவில் ஜனநாயகமும் நரோதிசமும்

சீனக் குடியரசின் இடைக்கால ஜனாதிபதி சன் யாத் சனுடைய கட்டுரை—பிரஸ்ஸல்ஸ் சோஷலிஸ்டுச் செய்தியேடு Le Peupleலிருந்து* இதை எடுத்துள்ளோம்—ருஷ்யர்களான நமக்குத் தனிச் சிரத்தைக்குரியதாகும்.

காரணம் என்னவெனில், பார்வையாளர்தான் பெரும் பகுதி ஆட்டத்தையும் பார்க்கின்றவர். சன் யாத்சன் மிகவும் சுவையான ''பார்வையாளர்'', ஏனென்றால் ஐரோப்பிய கல்வி பெற்றிருந்துங்கூட, ருஷ்யாவைப் பற்றி அவர் சிறிதும் தகவல் அறிந்தவராய்த் தெரியவில்லை. ஒரு குடியரசை வெற்றிகரமாய் நிறுவிக் கொண்டுவிட்ட போர்க்குணம் படைத்த வெற்றிகர சீன ஜனநாயகத்தின் அறிவார்ந்த பிரதிநிதியான இவர், ருஷ்யாவுடனும் ருஷ்ய அனுபவத்துடனும் ருஷ்ய இலக்கியத்துடனும் தொடர்பில்லாமல் சுயேச்சையாகவே, முழுக்கமுழுக்க ருஷ்யப் பிரச்சினைகளாய் எழுப்புகின்றார். முற்போக்குச் சீன ஜனநாயகவாதியானவர், அப்படியே ருஷ்யரைப் போலவே வாதாடுகின்றார். ருஷ்ய நரோத்னிக்குடன் இவருக்குள்ள ஒற்றுமை மிகவும் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது; அடிப்படைக் கருத்துக்களும் தனிப்பட்ட பதப்பிரயோகங்கள் பலவுங்கூட முற்றிலும் ஒத்திருக்கும்படியான அளவுக்குச் செல்கிறது, இந்த ஒற்றுமை.

பார்வையாளர்தான் பெரும் பகுதி ஆட்டத்தையும் பார்க்கின்றவர். மாபெரும் சீன ஜனநாயகத்தின் கொள்கைத் திட்டம்—சன் யாத்சனுடைய கட்டுரை இப்படிப்பட்ட ஒரு

---

* பெல்ஜியத் தொழிலாளர் கட்சியின் மத்திய ஏடு, 1885 முதலாய் பிரஸ்ஸல்ஸில் வெளிவந்தது.—[பதிப்பாசிரியர்.]

கொள்கைத் திட்டமே ஆகும்—ஆசியாவின் தற்கால முதலாளித்துவப் புரட்சிகளில் ஜனநாயகத்துக்கும் நரோதிசத்துக்குமுள்ள உறவை அண்மைக் கால உலக நிகழ்ச்சிகளின் ஒளியில் மீண்டும் பரிசீலிக்கும்படி தூண்டுவதோடு, இப்படிப் பரிசீலிப்பதற்கு நமக்குத் தக்கதொரு சந்தர்ப்பத்தையும் அளிக்கிறது. இந்த உறவு, 1905ல் ஆரம்பமான புரட்சிகர சகாப்தத்தில் ருஷ்யாவை எதிர்நோக்கும் மிக முக்கியப் பிரச்சினைகளில் ஒன்றாகும். இது ருஷ்யாவை மட்டுமின்றி, ஆசியா அனைத்தையும் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினை—சீனக் குடியரசின் இடைக்கால ஜனாதிபதியினுடைய கொள்கைத் திட்டத்திலிருந்து, குறிப்பாய் இக்கொள்கைத் திட்டத்தை ருஷ்யாவிலும் துருக்கியிலும் பாரசீகத்திலும் சீனாவிலும் ஏற்பட்டு வரும் புரட்சிகர வளர்ச்சிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், இது நன்கு விளங்கும். மிகப் பல அம்சங்களில், மிகவும் அத்தியாவசியமான அம்சங்களில், ருஷ்யாவானது சந்தேகத்துக்கு இடமின்றி ஓர் ஆசிய நாடாகும்; அதுவும் இருள் சூழ்ந்த, மத்திய காலத்திய, வெட்ககரமான அளவுக்குப் பிற்பட்டதான ஒரு ஆசிய நாடாகும்.

ருஷ்யாவின் முதலாளித்துவ ஜனநாயகமானது அதன் தொலை நெடுங் காலத்திய, தன்னந் தனியான முன்னோடியாகிய பிரபுக்குலத்து ஹெர்சன் முதல், அதன் வெகுஜனப் பிரதிநிதிகளாகிய 1905ஆம் ஆண்டின் விவசாயிச் சங்கத்தின் உறுப்பினர்கள், 1906-12ஆம் ஆண்டுகளது முதல் மூன்று டூமாக்களின் துருதொவிக் பிரதிநிதிகள்வரையில், தொடர்ச்சியாய் நரோத்னிக் சாயலுடையதாய் இருந்துள்ளது. சீனாவில் முதலாளித்துவ ஜனநாயகம் இதே நரோத்னிக் சாயலுடையதாய் இருப்பதை இப்பொழுது நாம் காண்கிறோம். இறுதியாய் உலக முதலாளித்துவ நாகரிகத்தின் ஓட்டத்தினுள் இழுக்கப்பட்டு வரும் கோடானு கோடியானோரின் ஆழ் மட்டத்திலிருந்து எழும் இந்தப் புரட்சி இயக்கத்தால் உருவாக்கப்படும் கருத்துக்களின் ''சமூக முக்கியத்துவத்தை'', சன் யாத்சனை ஓர் உதாரணமாய்க் கொண்டு இப்பொழுது பரிசீலித்துப் பார்ப்போம்.

சன் யாத்சனுடைய கொள்கைத் திட்டத்தின் ஒவ்வொரு வரியும் போர்க் குணம் படைத்த நேர்மையான ஜனநாயகத்தின் மனப்பாங்கு கொண்டிருக்கிறது. ''வர்ண இனப்''

புரட்சியால் ஆவதொன்றுமில்லை என்னும் தீர்க்கமான உணர்வினை வெளிப்படுத்துகின்றது. அரசியல் பிரச்சினைகளில் அக்கறையில்லாமையோ, அரசியல் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடும் போக்கோகூட, அல்லது சீனச் ''சமூகச் சீர்திருத்தமும்'', சீன அரசியலமைப்புச் சீர்திருத்தங்களும், இன்ன பிறவும் சீன எதேச்சாதிகாரத்துடன் ஒத்திசைய முடியுமென்ற கருத்தோகூட இதில் கடுகளவும் தென்படவில்லை. பரிபூரண ஜனநாயகத்தையும் குடியரசுக் கோரிக்கையையுமே இது ஆதரித்து நிற்கின்றது. வெகுஜனங்களின் நிலை, வெகுஜனப் போராட்டம் இவை பற்றிய பிரச்சினையை இது திட்டவட்டமாய் எழுப்புகிறது. உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்களுக்கு ஆர்வமிக்க ஆதரவு அளிக்கின்றது; அவர்களுடைய பலத்திலும் அவர்களுடைய இலட்சியத்தின் நீதியிலும் நேர்மையிலும் முழு நம்பிக்கை கொண்டுள்ளது.

தமது தொன்னெடுங் கால அடிமை வாழ்வை எண்ணிக் கண்ணீர் வடிப்பதோடும் சுதந்திரமும் சமத்துவமும் வேண்டுமெனக் கனவு காண்பதோடும் நில்லாமல், சீனவின் தொன்னெடுங் கால ஒடுக்குமுறையாளர்களை எதிர்த்துப் போர் புரியும் வல்லமையும் வாய்ந்த மெய்யாகவே மகத்தானதொரு மக்களின் மெய்யாகவே மகத்தான சித்தாந்தம் நம் முன்னே இருக்கக் காண்கிறோம்.

அறியாமை இருள் சூழ்ந்த, செயல் முனைப்பில்லாத, ஆசிய நாடாகிய சீனவில் அமைந்த இந்தக் குடியரசின் இடைகால ஜனநிதிபதியை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முன்னேறிய கலாசாரத்துக்குரிய நாடுகளில் இருக்கும் பல குடியரசுகளின் ஜனநிதிபதிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் இயற்கையாகவே எழுகின்றது. அந்தக் குடியரசுகளின் ஜனநிதிபதிகள் எல்லோரும் தொழில்,வர்த்தகப் பிரமுகர்கள்; முழுக்க முழுக்க அழுகிப் போன ஒரு முதலாளித்துவ வர்க்கத்தின், உச்சந் தலையிலிருந்து உள்ளங் கால் வரை சகதியும் இரத்தமும் படிந்த—பாதுஷாக்கள், சக்கிரவர்த்திகளது இரத்தமல்ல, வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களின் இரத்தம், முன்னேற்றத்தின் பெயரிலும் நாகரிகத்தின் பெயரிலும் சுட்டு வீழ்த்தப்பட்ட இத்தொழிலாளர்களின் இரத்தம் படிந்த—முதலாளித்துவ வர்க்கத்தாரின்

கையாட்கள் அல்லது கைப்பாவைகள் அவர்கள். தனது இளமைப் பருவ இலட்சியங்களை எல்லாம் நெடுங் காலத்துக்கு முன்பே விட்டொழித்து, முழுக்க முழுக்க விபசாரியாய் மாறி, இலட்சாதிபதிகளுக்கும் கோடீஸ்வரர்களுக்கும் முதலாளிகளாகிவிட்ட பிரபுத்துவக் கோமான்களுக்கும் இன்ன பலருக்கும் உடலையும் ஆன்மாவையும் விற்றுக் கொண்டு விட்ட முதலாளித்துவ வர்க்கத்தாரின் பிரதிநிதிகளாவர் அந்நாடுகளின் ஜனாதிபதிகள்.

சீனாவிலுள்ள இந்த ஆசியக் குடியரசின் இடைக்கால ஜனாதிபதி புரட்சிகர ஜனநாயகவாதியாவார்; அஸ்தமிக்கும் வர்க்கமல்ல, உதித்தெழும் ஒரு வர்க்கத்தின்—எதிர்காலங் குறித்து அஞ்சி நடுங்கும் வர்க்கமல்ல, எதிர்காலத்தில் முழு நம்பிக்கை கொண்டு, தன்னலம் பாராது அதற்காகப் போராடும் ஒரு வர்க்கத்தின்—தனது தனிச் சலுகைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு கடந்த காலத்துடன் ஒட்டிக்கொண்டு அதைப் பேணிக் காக்கவும் மீட்டமைக்கவும் பிரயத்தனம் செய்யும் வர்க்கமல்ல, இந்தக் கடந்த காலத்தை வெறுக்கும் ஒரு வர்க்கத்தின், மடிந்தொழிந்து அழுகிப் போய் புடை நாற்றம் வீசுவதைத் தொலைத்துத் தலை முழுகத் தெரிந்த ஒரு வர்க்கத்தின்—மாண்பினையும் வீரதீரத்தையும் பெற்றிருக்கும் புரட்சிகர ஜனநாயகவாதியாவார்.

அப்படியானால், பொருளாயத நாட்டங் கொண்ட மேலைய உலகு மீளமுடியாதவாறு சீரழிந்து அழுகிவிட்டது, சமய வழிப்பட்ட ஆன்மமயமான கிழக்கு உலகிலேதான் திகழொளி வீசுகின்றது என்ற அர்த்தம்? இல்லை, முற்றிலும் மாறுனதாகும் உண்மை. கிழக்கு உலகு திட்டவட்டமாய் மேற்கு உலகின் பாதையை மேற்கொண்டுவிட்டது, மேற்கு உலகு ஏற்கனவே தனக்கு வகுத்துக் கொண்டுவிட்ட இலட்சியங்களுக்கான போராட்டத்தில் கோடானு கோடியான புதிய மக்கள் இப்பொழுது பங்கெடுத்துக் கொள்ளப் போகிறார்கள் என்றுதான் இதற்கு அர்த்தம். மேலைய உலகின் முதலாளித்துவ வர்க்கம்தான் சீரழிந்து அழுகிப் போயிருக்கிறது; தனக்குச் சவக் குழி தோண்டும் பாட்டாளி வர்க்கத்தை ஏற்கனவே இது எதிர்நோக்குகின்றது. ஆனால் ஆசியாவில் போர்க் குணம் படைத்த, நேர்மை வாய்ந்த, முரணற்ற ஜனநாயகத்துக்காக முன்னின்று பாடுபடக் கூடிய ஒரு முதலாளித்துவ

வர்க்கம், பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியைச் சேர்ந்த பிரெஞ்சு நாட்டின் அறிவொளி இயக்கத்தின் மாமேதைகளுக்கும் மாபெரும் தலைவர்களுக்கும் தக்க தோழனாய்த் திகழும் ஒரு முதலாளித்துவ வர்க்கம் இன்னமும் இருந்து வருகிறது.

வரலாற்று வழியில் முற்போக்கான ஓர் இலட்சியத்தை இன்னமும் ஆதரித்து நிற்கக் கூடியாதாய் இருந்து வரும் இந்த ஆசிய முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதான பிரதிநிதியாய், அல்லது பிரதான சமூக ஆதாரமாய்த் திகழ்வது விவசாயி தான். இந்த விவசாயியுடன் கூடவே மிதவாத முதலாளித்துவ வர்க்கம் ஒன்றும் இங்கு ஏற்கனவே இருந்து வருகிறது. இந்த மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தின் தலைவர்கள்—யுவான் ஷிக்கேய் போன்ற இவர்கள்—யாவருக்கும் முதலாய்த் துரோகம் புரியக் கூடியவர்களாகவே இருக்கின்றனர்; நேற்று இவர்கள் சக்கிரவர்த்திக்கு அஞ்சி அவருக்கு அடிபணிந்து நின்றனர்; பிறகு புரட்சிகர ஜனநாயகத்தின் வலுவைக் கண்டதும், அது வெற்றி வாகை சூடப் போகிறதென்பதை உணர்ந்ததும் அவருக்குத் துரோகம் புரிந்தனர்; நாளைக்கு இவர்கள் ஜனநாயகவாதிகளுக்குத் துரோகம் புரிந்து பழைய அல்லது புதிய ''அரசியல் சட்ட நெறிச்'' சக்கிரவர்த்தி யாருடனுவது கூடிக் கொண்டுவிடுவார்கள்.

உழைப்பாளி மக்கள் பெருந் திரளினரை வீறு கொண்டெழச் செய்து விந்தைகள் புரிய வல்லோராக்கி வரும் நேர்மை மிக்க, மாபெரும் ஜனநாயக ஆர்வ உணர்ச்சி இல்லையேல், சன் யாத்சனுடைய கொள்கைத் திட்டத்தின் ஒவ்வொரு வாக்கியத்திலும் வெளிப்படையாய் ஒலிக்கும் இந்த ஜனநாயக ஆர்வ உணர்ச்சி இல்லையேல், தொன்னெடுங் கால அடிமை நிலையிலிருந்து சீன மக்கள் மெய்யான விடுதலை பெறுவது சாத்தியமன்று.

ஆனால் சீன நரோத்னிக்கு, போர்க் குணம் படைத்த ஜனநாயகத்தின் இந்தச் சித்தாந்தத்தை, முதலாவதாக சோஷலிசக் கனவுகளுடனும், சீனாவில் முதலாளித்துவப் பாதையைத் தவிர்த்துக் கொண்டு விடலாம், முதலாளித்துவத்தைத் தடுத்துவிடலாம் என்ற நம்பிக்கைகளுடனும், இரண்டாவதாகத் தீவிர நிலச் சீர்திருத்தத்துக்கான திட்டத்துடனும், இந்தச் சீர்திருத்தத்துக்கான பிரசாரத்துடனும் இணைத்துக் கொள்கின்றார். கடைசியில் கூறப்பட்ட இந்த இரு

சித்தாந்த, அரசியல் போக்குகள்தான் **நரோதிசமாய்**—இப் பதத்துக்குரிய தனி அர்த்தத்தில், அதாவது ஜனநாயகத் திலிருந்து வேறுனது, ஜனநாயகத்துடன் இணைந்து நிறை வாக்குவது என்னும் அர்த்தத்தில் நரோதிசமாய்—அமை கின்றன.

இந்தப் போக்குகளுக்கு ஆதாரம் எது? இவற்றின் முக்கியத்துவம் என்ன?

வெகுஜனங்களிடத்தே புரட்சிகரமான, ஆன்மீக எழுச்சி பிரம்மாண்ட அளவில் ஏற்பட்டிராவிடில், சீன ஜனநாயகத் தால் பழைய அமைப்பை வீழ்த்திக் குடியரசை நிறுவி யிருக்க முடியாது. உழைப்பாளி வெகுஜனங்களது நிலைமை குறித்து உள்ளப் பூர்வமான அனுதாபமும் இவர்களை ஒடுக்கு வோர் மீதும் சுரண்டுவோர் மீதும் அடங்காத வெறுப்பும் இப்படிப்பட்ட ஒரு எழுச்சிக்குரிய முன்தேவையாகும் என்ப தோடு, இந்த எழுச்சியால் வெகுவாய்த் தூண்டப்படுகின்ற வையும் ஆகும். முற்போக்கு எண்ணங் கொண்ட சீனர்கள், இந்த எழுச்சியை அனுபவித்த சீனர்கள் **எல்லோருமே**, விடுதலை பற்றிய தமது கருத்துக்களை ஐரோப்பாவிடமிருந்தும் அமெரிக்காவிடமிருந்துந்தான் பெற்றுக் கொண்டனர். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முதலாளித்துவ வர்க்கத் **திடமிருந்து** விடுதலை பெறுதலே, அதாவது சோஷலிசம் தான், உடனடிப் பணியாகும். சீன ஜனநாயகவாதிகளிடம் இது சோஷலிசத்தின்பால் அபிமானம் ஏற்படவே செய்கின்றது. சீன ஜனநாயகவாதிகளுடைய **அகநிலை** சோஷலிசத்துக்கு இதுதான் ஆதாரமாகும்.

வெகுஜனங்கள் ஒடுக்கப்படுவதையும் சுரண்டப்படு வதையும் எதிர்ப்பவர்களாதலால் இவர்கள் அகநிலை சோஷ லிஸ்டுகளாய் இருக்கின்றனர். ஆனால் ஏறத்தாழ 50 கோடி மக்களைக் கொண்ட பிற்பட்ட, விவசாய, அரைப் பிரபுத்துவ நாடாய் இருக்கும் சீனாவின் **புறநிலை** நிலைமைகள் இந்த ஒடுக்குமுறையின், சுரண்டலின் பிரத்தியேகமான, வரலாற்று வழியில் குறிப்பிட்ட ஒரு கட்டத்துக்குரியதான வடிவமாகிய பிரபுத்துவத்தை மட்டுமே நிகழ்ச்சி நிரலுக்குக் கொண்டு வருகின்றன. விவசாயமும் இயற்கைப் பொருளாதாரமும் ஆதிக்க நிலையில் இருப்பதன் அடிப்படையில் அமைந்ததே பிரபுத்துவம். சீன விவசாயி பிரபுத்துவச் சுரண்டலுக்கு

இலக்காவதற்கு மூல காரணமாயிருந்தது, ஏதேனும் ஒரு வடிவில் நிலத்தின்மீது இந்த விவசாயிக்குள்ள **பற்றுதல்தான்.** பிரபுத்துவக் கோமான்கள்தான் இந்தச் சுரண்டலின் அரசியல் தூண்கள்; இந்த முழு அமைப்புக்கும் அதிபதி சக்கிரவர்த்தி.

ஆனால் சீன ஜனநாயகவாதியின் இந்த அகநிலை சோஷலிசக் கருத்துக்களிலிருந்தும் வேலைத்திட்டங்களிலிருந்தும், ''தாவரச் சொத்துக்கு'' **மட்டுமான** ''எல்லாச் சட்டத் துறை அடிப்படைகளையும் மாற்றிவிடும்'' ஒரு வேலைத் திட்டமே, பிரபுத்துவச் சுரண்டலை **மட்டும்** ஒழித்திடுவதற்கான ஒரு வேலைத்திட்டமே உண்மையில் வெளித் தோன்றக் காண்கிறோம்.

இதுவேதான் சன் யாத்சனுடைய நரோதிசத்தின், முதலாளித்துவ ஜனநாயக நிலச் சீர்திருத்தத்துக்கான போர்க் குணம் படைத்த, அவருடைய முற்போக்கான, புரட்சிகர வேலைத்திட்டத்தின், மற்றும் அவரது கற்பனை சோஷலிசத் தத்துவத்தின் சாராம்சமாகும்.

கோட்பாட்டின் கண்ணோட்டத்தில் இந்தத் தத்துவம் குட்டிபூர்ஷுவா ''சோஷலிஸ்டுப்'' பிற்போக்குவாதியின் தத்துவமாகும். ஏனெனில் சீனாவில் ''முதலாளித்துவத்தைத்'' தடுத்துவிடமுடியும், இந்நாட்டின் பிற்பட்ட நிலையின் காரணமாய் இங்கு ''சமூகப் புரட்சி'' நடைபெறுவது எளிதாகி விடும் என்பன போன்ற கருத்துக்கள் முற்றிலும் பிற்போக்கானவையே. சன் யாத்சன் அவருக்கே உரித்தான, கள்ளமில்லாதப் பேதமையெனச் சொல்லத்தக்க, குழந்தை உள்ளத்துடன் தமது பிற்போக்கு நரோத்னிக் தத்துவத்தைத் தாமே தகர்த்துவிடுகிறார்; எதார்த்தமானது அவரை ஒத்துக் கொள்ளும்படி வற்புறுத்தும் உண்மையை, அதாவது ''சீனா பிரம்மாண்ட அளவிலான தொழில் துறை'' [அதாவது, முதலாளித்துவ]* ''வளர்ச்சியின் தறுவாயில் இருக்கிறது'', சீனாவில் ''மிகப் பெரிய அளவில் வர்த்தகம்'' [அதாவது, முதலாளித்துவம்] ''வளர்ந்தோங்கப் போகிறது'', ''ஐம்பது

* லெனின் தரும் மேற்கோள்களில் அடைப்புகளுக்குள் அமைந்த இடைக் குறிப்புகள், வேறு விதமாய்க் குறிக்கப் படாத வரை, லெனினால் புகுத்தப்பட்டவை.—[பதிப் பாசிரியர்.]

ஆண்டுகளில் பல ஷாங்காய்களையும் நாம் பெறப் போகி றோம்'', அதாவது முதலாளித்துவச் செல்வத்துக்கும் பாட் டாளியின் அவலத்துக்கும் வறுமைக்குமான மிகப் பெரிய கேந்திரங்கள் தோன்றப் போகின்றன என்பதை ஒத்துக் கொள்வதன் மூலம் அவர் இதைச் செய்கிறார்.

ஆனால் சன் யாத்சன் தமது பிற்போக்கான பொருளா தாரத் தத்துவத்தின் அடிப்படையில் மெய்யாகவே பிற்போக் கான ஒரு நிலத் துறை வேலைத்திட்டத்தை முன்வைத்து ஆதரிக்கிறாரா என்னும் கேள்வி எழுகிறது. இதுவே இவ் விவகாரத்தின் உயிர்நிலையாகும், இங்குள்ள மிகவும் சுவையான விவரமாகும், வெட்டிக் குறுக்கப்பட்டுச் சக்தியற்றதாக்கப் பட்ட மிதவாத அரைவேக்காட்டு மார்க்சியமானது இங்கு தான் அடிக்கடி தடுமாறி விழுகிறது.

உண்மை என்னவெனில் அவர் அப்படி ஒன்றும் செய்ய வில்லை. சீனாவின் சமூக உறவுகளது இயக்கவியல் இவ்வுண் மையில்தான் காணக் கிடக்கிறது—ஐரோப்பாவில் சோஷ லிசத்துக்குத் தமது முழுமனதான ஆதரவைத் தெரிவிக்கும் அதேபோதில் சீன ஜனநாயகவாதிகள் இதை ஒரு பிற் போக்குத் தத்துவமாய் மாற்றிக் கொண்டுவிடுகிறார்கள், முத லாளித்துவத்தைத் ''தடுத்துவிட'' முடியுமென்ற இந்தப் பிற்போக்குத் தத்துவத்தின் அடிப்படையில் அவர்கள் முழுக்க முழுக்க முதலாளித்துவமாய், அதிக பட்ச அளவுக்குரிய முத லாளித்துவமாய் அமையும் நிலத் துறை வேலைத்திட்டத்தை முன்வைத்துப் பாடுபடுகின்றனர்!

சன் யாத்சன் தமது கட்டுரையின் தொடக்கத்தில் அவ் வளவு ஆர்ப்பாட்டமாகவும் தெளிவற்றவாறும் எடுத் துரைக்கும் ''பொருளாதாரப் புரட்சி'' உண்மையில் எதைக் குறிப்பிடுகிறது?

ஹென்ரி ஜார்ஜ் வழியிலான ஒரு வகை ஒற்றை வரி விதிப்பு மூலம் நில வாரம் அரசுக்கு மாற்றப்படுவதையே, அதாவது நிலம் நாட்டுடைமையாக்கப்படுவதையே குறிக்கிறது இது. சன் யாத்சனால் முன்வைக்கப்பட்டு ஆதரிக்கப்படும் ''பொருளாதாரப் புரட்சியில்'' உள்ளடங்கிய மெய்ப்பொருள் வேறு எதுவும் இல்லை.

தொலைவில் எங்கோ ஒரு விவசாயப் பிரதேசத்தில் நிலத் தின் மதிப்புக்கும் ஷாங்காயில் நிலத்தின் மதிப்புக்கும் இருக்

கும் வேறுபாடு நில வாரத்தின் விகிதத்திலுள்ள வேறுபாட்டையே குறிக்கின்றது. முதலாக்கப்பட்ட நில வாரம்தான் நிலத்தின் மதிப்பு. நிலத்தின் ''அதிகப்படியான மதிப்பை'' ''மக்கள் உடைமை'' ஆக்குவதென்பதற்கு அர்த்தம், நில வாரத்தை, அதாவது நிலவுடைமையை அரசுக்கு மாற்றுவதென்பதுதான், அல்லது நிலத்தை நாட்டுடைமை ஆக்குவதென்பதுதான்.

முதலாளித்துவத்தின் கட்டுக்கோப்பினுள் இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தத்தைச் செய்வது சாத்தியமா? சாத்தியமே என்பதோடு, அது மிகவும் தூய்மையான, சிறிதும் முரணற்றதான, குறைவில்லா நிறைவு கொண்ட முதலாளித்துவத்தைக் குறிப்பதாகும். மார்க்ஸ் இதைத் **தத்துவத்தின் வறுமையில்** சுட்டிக் காட்டினார், **மூலதனத்தின்** மூன்றும் பாகத்தில் விளக்கமாய் நிரூபித்தார், **உபரி மதிப்புத் தத்துவங்களில்** ராட்பர்ட்டசுடனை தமது வாக்குவாதத்தில் மிகவும் தெளிவாய் விரித்துரைத்தார்.

நிலத்தை நாட்டுடைமையாக்குவதன் மூலம், பேத வாரத்தை [differential rent] மட்டும் விட்டு வைத்துவிட்டுத் தனிம வாரத்தை [absolute rent] ஒழிப்பது சாத்தியமாகிறது. மார்க்சினுடைய தத்துவத்தின்படி, நிலத்தின் நாட்டுடைமையாக்கம் விவசாயத்தில் மத்திய காலத்திய ஏகபோகங்களும் மத்திய காலத்திய உறவுகளும் அதிகபட்ச அளவுக்கு நீக்கப்படுவதையும், நிலத்தை விற்கவும் வாங்கவும் அதிகபட்ச சுதந்திரமளிக்கப்படுவதையும், விவசாயம் தன்னைச் சந்தைக்குத் தகவமைத்துக் கொள்வதற்கு அதிகபட்ச வசதியளிக்கப்படுவதையும் குறிப்பதாகும். வரலாற்றின் விளையாட்டால், நரோதிசமானது விவசாயத்தில் ''முதலாளித்துவத்தை எதிர்ப்பதாய்க்'' கூறிக் கொண்டு, முழு அளவில் நிறைவேற்றப்படுமாயின் விவசாயத்தில் **மிகவும்** வேகமாய் முதலாளித்துவம் வளர வகை செய்யும் நிலத் துறை வேலைத் திட்டத்தை ஆதரித்துச் செயல்படுகின்றது.

ஆசியாவில் மிகவும் பிற்பட்டதான ஒரு விவசாய நாட்டில் மிகவும் முற்போக்கான முதலாளித்துவ-ஜனநாயக நிலத் துறை வேலைத்திட்டங்கள் பரவுவதற்கு அடிநிலையான பொருளாதார அவசியம் என்ன? பிரபுத்துவத்தை அதன் எல்லா

வடிவங்களிலும் வெளிப்பாடுகளிலும் இல்லாதொழிக்க வேண்டிய அவசியமே இது.

சீனா எவ்வளவுக்கு எவ்வளவு ஐரோப்பாவுக்கும் ஜப்பானுக்கும் பின்தங்கி வந்ததோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது துண்டாடப்பட்டு, தேசியச் சிதைவுக்கு உள்ளாகும் அபாயம் அதிகரித்துச் சென்றது. புரட்சிகர வெகுஜனங்களது வீரத்தால் மட்டுமே, அரசியல் துறையில் சீனக் குடியரசைத் தோற்றுவிக்கவும், நிலத்தை நாட்டுடைமையாக்குவதன் மூலம் விவசாயத் துறையில் மிகவும் விரைவான முதலாளித்துவ முன்னேற்றம் ஏற்படும்படி உறுதி செய்யவும் வல்லதான வீரத்தால் மட்டுமே சீனா ''புத்தமைக்கப்பட'' முடியும்.

இதில் வெற்றி கிட்டுமா, எந்த அளவுக்குக் கிட்டும் என்பது வேறொரு பிரச்சினை. வெவ்வேறு நாடுகளும் அவற்றின் முதலாளித்துவப் புரட்சிகளில், அரசியலிலும் விவசாய நிலத் துறையிலும் வெவ்வேறு அளவுக்கும், மிகப் பல்வேறு இணைவுகளிலும் ஜனநாயகத்தைச் சாதித்துக் கொண்டன. சர்வதேச நிலைமையும் சீனாவில் சமூக சக்திகளது பரஸ்பர நிலையும் தான் தீர்மானகரமான காரணக் கூறுகளாய் இருக்கும். சீனச் சக்கிரவர்த்தி பிரபுத்துவக் கோமான்களையும் அதிகார வர்க்கத்தையும் மதக் குருமார்களையும் ஒன்றுபடச் செய்து முடியாட்சியை மீட்டமைக்க நிச்சயம் முயற்சி செய்வார். மிதவாத-முடியரசுவாதத்திலிருந்து இப்பொழுதுதான் மிதவாத-குடியரசுவாதத்துக்கு மாறியிருக்கும் (இந்த மாற்றம் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கப் போகிறது?) ஒரு முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதியாகிய யுவான் ஷிக்காய் முடியரசுக்கும் புரட்சிக்குமிடையே சாமர்த்தியமாய்த் தந்திரம் புரியும் கொள்கையைப் பின்பற்றுவார். சன் யாத்சனைப் பிரதிநிதியாய்க் கொண்டிருக்கும் புரட்சிகர முதலாளித்துவ ஜனநாயகமானது அரசியலிலும் நிலத் துறையிலுமான சீர்திருத்தங்களுக்காக விவசாயி வெகுஜனங்களுடைய முன்முயற்சியையும் வைராக்கியத்தையும் துணிவையும் அதிகபட்ச அளவுக்கு வளர்த்திடுவதன்மூலம் சீனாவைப்''புத்தமைப்பதற்கான'' வழிமுறைகளைக் காண முயலுவது முற்றிலும் சரியானதே.

முடிவில், சீனப் பாட்டாளி வர்க்கம் ஷாங்காய்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைத் தொடர்ந்து அதிகரித்துச்

செல்லும். இது ஒரு வகை சீன சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியை அமைத்துக் கொள்ளக் கூடும். இக்கட்சி சன் யாத்சனுடைய குட்டிபூர்ஷுவாக் கற்பனாவாதங்களையும் பிற்போக்குக் கருத்துக்களையும் விமர்சனம் செய்யும் அதே நேரத்தில், அரசியல் துறையிலும் நிலத் துறையிலுமான அவருடைய வேலைத்திட்டத்தின் புரட்சிகர-ஜனநாயக உட்கருவைத் தனித்தெடுத்து அதைப் பாதுகாக்கவும் வளர்த்துச் செல்லவும் தவறுமல் நிச்சயம் பாடுபடும்.

நேவ்ஸ்கயா ஸ்வெஸ்தா, இதழ் 17,
1912, ஜூலை 15

நூல் திரட்டு,
தொகுதி 21,
பக்கங்கள் 400-06

இரு வகைக் கற்பனாவாதங்கள்

உட்டோப்பியா [Utopia]* என்பது ஒரு கிரேக்கச் சொல், இல்லாததெனப் பொருள்படும் 'உ', இடமெனப் பொருள்படும் 'டோப்பாஸ்' ஆகிய இரண்டையும் இணைத்து உருவாக்கப்பட்டது. இல்லாத இடம், ஆகாயக் கோட்டை, கற்பனைப் புனைவு, அல்லது கட்டுக்கதை என்பதே இதன் பொருள்.

அரசியலில் கற்பனை உலகு அல்லது கற்பனாவாதம் என்பது இன்றோ, இனி எக்காலத்திலுமோ சித்திபெற முடியாத ஒரு விருப்பமாகும்; வர்க்க சக்திகளை அடிப்படையாய்க் கொண்டிராத, அரசியல், வர்க்க சக்திகளது பெருக்கத்தையும் வளர்ச்சியையும் ஆதாரமாய்க் கொண்டிராத ஒரு விருப்பமாகும்.

ஒரு நாட்டில் எந்த அளவுக்குச் சுதந்திரம் குறைவாகவும், பகிரங்க வர்க்கப் போராட்டத்தின் வெளிப்பாடுகள் அரிதாகவும், வெகுஜனங்களது கல்வித் தரம் கீழ்நிலையிலும் இருக்கிறதோ அந்த அளவுக்கு அரசியல் கற்பனாவாதங்கள் எளிதில் தோன்றி அதிக காலத்துக்கு நிலைத்திருப்பதைச் சாதாரணமாய்க் காண்கிறோம்.

தற்கால ருஷ்யாவில் இரு வகை அரசியல் கற்பனாவாதங்கள் மிகவும் விடாப்பிடியாய் நீடித்திருந்து, தமக்குள்ள கவர்ச்சியின் காரணமாய் வெகுஜனங்களிடையே ஓரளவுக்குச் செல்வாக்கு செலுத்துகின்றன. ஒன்று மிதவாதக் கற்பனாவாதம்; மற்றொன்று நரோத்னிக் கற்பனாவாதம்.

---

* 'கற்பனை உலகு'.—[மொழிபெயர்ப்பாளர்.]

மிதவாதக் கற்பனாவாதமானது அமைதியாகவும் இசைவாகவும் செயல்பட்டு, யாருடைய மனதையும் புண்படுத்தாமலே, புரிஷ்கேவிச்சுகளை[13] அகற்றுமலே, இறுதி முடிவு வரைவிடாப்பிடியாய் நின்று ஈவிரக்கமின்றி நடத்தப்பட வேண்டிய வர்க்கப் போராட்டம் இல்லாமலே, ருஷ்யாவையும் அதன் அரசியல் சுதந்திரத்தையும் பெருந்திரளினரான அதன் உழைப்பாளி மக்களது நிலைமையையும் கணிசமான அளவில் மேம்படச் செய்துவிட முடியுமென்பதாய்க் கதைக்கிறது. சுதந்திர ருஷ்யாவுக்கும் புரிஷ்கேவிச்சுகளுக்கும் இடையிலான சமாதானத்தைப் பற்றிய கற்பனாவாதமாகும் இது.

நரோத்னிக் கற்பனாவாதமானது நரோத்னிக் அறிவுத் துறையினரும் குருதொவிக் விவசாயிகளும் காணும் கனவாகும். நிலம் நியாய அடிப்படையில் புதிதாய்ப் பிரித்துப் பங்கிடப்படுவதன் மூலம் மூலதனத்தின் ஆட்சியதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் ஒழித்துவிட முடியும் என்றே, கூலியடிமை முறையை ஒழித்துவிட முடியும் என்றே, நிலத்தின் ''நியாயமான'', ''சரிசமமான'' பங்கீட்டை மூலதனத்தின் ஆதிக்கத்தில், பணத்தின் ஆட்சியில், பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி அமைப்பில் பேணிப் பராமரிக்க முடியும் என்றே இவர்கள் கற்பனை செய்து கொள்கின்றனர்.

இத்தகைய கற்பனாவாதங்களைத் தோன்றச் செய்வது எது? இன்றைய ருஷ்யாவில் இவை ஓரளவு வலிவுடன் நீடித்திருக்கக் காரணம் என்ன?

பழைய அமைப்பை, பண்ணையடிமை முறையை, உரிமைகள் இல்லாத நிலையை எதிர்த்து—சுருக்கமாய்ச் சொன்னால் ''புரிஷ்கேவிச்சுகளை எதிர்த்து''—போராட்டம் நடத்திக் கொண்டு, அதேபோது இந்தப் போராட்டத்தில் சுயேச்சையான ஒரு நிலை வகிக்காதவையான வர்க்கங்களது நலன்களால், இந்தக் கற்பனாவாதங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இந்த சுயேச்சையின்மையால், இந்தப் பலவீனத்தால் ஏற்படும் ஒரு விளைவே கற்பனாவாதம், அல்லது பகற்கனவு காணுதல். பலவீனர்கள் பகற்கனவு காண்பதைத் தவிர வேறு கதியற்றவர்கள்.

பொதுவாய் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தாரும், குறிப்பாய் மிதவாத முதலாளித்துவ அறிவுத் துறையினரும் சுதந்திரத்துக்காகவும் சட்ட நெறிக்காகவும் பாடுபடாமல்

இருப்பதற்கில்லை; ஏனெனில் இவை இல்லாமல் முதலாளித்துவர்க்க ஆதிக்கம் பூரணமானதாக முடியாது; தனக்கே உரிய தனியாதிக்கமாகவோ உத்தரவாதமானதாகவோ இருக்க முடியாது. ஆனால் பிற்போக்கைக் காட்டிலும் வெகுஜனங்களது இயக்கத்தைக் கண்டுதான் முதலாளித்துவர்க்கம் அதிகமாய் அஞ்சுகிறது. அரசியலில் மிதவாதிகளது மிக எடுப்பான, நம்ப முடியாத பலவீனத்துக்கும், முழுநிறைவான ஏலாமைக்கும் இதுவேதான் காரணம். மிதவாதிகளுடைய கொள்கை அனேத்துமே முடிவில்லாத வரிசைகளிலான மழுப்பல்களும் பொய்க் கூற்றுகளும் கபடங்களும் கோழைத்தனமான தட்டிக்கழிப்புகளுமாய் இருக்க இதுவேதான் காரணம். வெகுஜனங்களுடைய ஆதரவைப் பெறும்பொருட்டு இந்த மிதவாதிகள் ஜனநாயக வேடம் போட வேண்டியிருக்கிறது; அதேபோது இவர்கள் மிகவும் கடுமையான ஜனநாயக-விரோதிகளாய் இருக்கிறார்கள்; வெகுஜனங்களது இயக்கத்திடம், அவர்களது முன்முயற்சியிடம், முன்பு மார்க்ஸ் கடந்த நூற்றாண்டின் ஐரோப்பிய வெகுஜன இயக்கங்களில் ஒன்றைப் பற்றிக் கூறியது போல ''விண்ணைச் சாடும்''[14] அவர்களது முயற்சியிடம் ஆழ்ந்த பகைமை கொண்டிருக்கிறார்கள்.

மிதவாதத்தின் கற்பனாவாதம், ருஷ்யாவின் அரசியல் விடுதலைத் துறையிலான ஏலாமையின் கற்பனாவாதமாகும்; தன்னலவாதப் பணமூட்டைகள் புரிஷ்கேவிச்சுகளுடன் கூடிக் கொண்டு ''அமைதி வழியில்'' தனிச் சலுகைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்பி, தமது இந்தப் புனித விருப்பத்தை ''அமைதி வழியில்'' ருஷ்ய ஜனநாயகத்துக்குக் கிட்டும் வெற்றி பற்றிய தத்துவமாய் ஜோடித்துக் காட்டுகின்றனவே, அவற்றின் கற்பனாவாதமாகும். புரிஷ்கேவிச்சுகளைத் தோற்கடிக்காமலே அவர்களை வீழ்த்தலாமென்று, அவர்களுக்கு எந்தத் துன்பமுமில்லாமலே அவர்களை முறியடிக்கலாமென்று பகற்கனவு காண்பதுதான் மிதவாதக் கற்பனாவாதம். தெளிவாகவே இந்தக் கற்பனாவாதம் தீமை பயப்பதாகும்; இதற்குக் காரணம் இது ஒரு கற்பனாவாதம் என்பது மட்டுமல்ல, வெகுஜனங்களது ஜனநாயக உணர்வினை இது சீர்கெடுக்கிறது என்பதும் காரணமாகும். வெகுஜனங்கள் இந்தக் கற்பனாவாதத்தை நம்புவார்களானால், ஒருபோதும் அவர்

களால் சுதந்திரம் பெறமுடியாது, சுதந்திரம் பெறுவதற்கான தகுதி அவர்களுக்கு இருக்காது, புரிஷ்கேவிச்சுகளால் கொடுமைப்படுத்தப்பட்டு அவதியுறுவதற்கே முழுத் தகுதியுடையோராய் இருப்பார்கள்.

நரோத்னிக்குகள், துருதொவிக்குகள் இவர்களுடைய கற்பனாவாதமானது முதலாளிக்கும் கூலித்தொழிலாளிக்கும் இடைநிலையில் நிற்கும் சிறு உடைமையாளர் வர்க்கப் போராட்டம் இல்லாமலே கூலியடிமை முறையை ஒழித்து விடலாமென்று காணும் பகற்கனவாகும். பொருளாதார விடுதலைப் பிரச்சினை ருஷ்யாவுக்கு இன்று அரசியல் விடுதலைப் பிரச்சினை எப்படியோ அதே போல அவ்வளவு நெருங்கி வந்து, அதைப் போலவே அவ்வளவு உடனடியான, நேரடியான, அவசரப் பிரச்சினையாகும் போது, நரோத்னிக்குகளுடைய கற்பனாவாதம் மிதவாதிகளுடையதைக் காட்டிலும் எவ்வகையிலும் குறையாத தீங்கிழைக்கும் என்பது நிரூபிக்கப்படும்.

ஆனால் ருஷ்யா இன்னமும் அதன் முதலாளித்துவ புனரமைப்புக்குரிய கட்டத்தில் இருக்கிறதே அன்றி பாட்டாளி வர்க்கப் புனரமைப்புக்குரிய கட்டத்தில் இல்லை; அதற்கு மிகவும் முழுமையாய் முதிர்ச்சியுற்றிருப்பது பாட்டாளி வர்க்கப் பொருளாதார விடுதலைப் பிரச்சினையல்ல, அரசியல் சுதந்திரப் பிரச்சினையே ஆகும், அதாவது (சாராம்சத்தில்) பூரண முதலாளித்துவச் சுதந்திரப் பிரச்சினையே ஆகும்.

இந்தப் பிந்திய பிரச்சினையில் நரோத்னிக் கற்பனாவாதம் ஒரு தனி வகைப்பட்ட வரலாற்றுப் பாத்திரம் வகிக்கிறது. நிலம் புதிதாய்ப் பங்கிடப்படுவதால் ஏற்பட வேண்டிய (ஏற்படவும் போகிற) பொருளாதார விளைவுகளைப் பற்றிய கற்பனாவாதமாகையால், இது விவசாயிப் பெருந்திரளினரின், அதாவது முதலாளித்துவ-பிரபுத்துவ தற்கால ருஷ்யாவின் மக்களில் பெரும் பான்மையோரான பெருந் திரளினரின் மாபெரும் வெகுஜன ஜனநாயக எழுச்சியின் உடன்நிகழ்வும் அறிகுறியும் ஆகிவிடுகிறது. (முழு அளவிலான முதலாளித்துவ ருஷ்யாவில், முழு அளவிலான முதலாளித்துவ ஐரோப்பாவில் எப்படியோ அதே போல, மக்களில் பெரும்பான்மையோர் விவசாயிகளாய் இருக்க மாட்டார்கள்.)

மிதவாதக் கற்பனாவாதம் வெகுஜனங்களுடைய ஜனநாயக உணர்வைச் சீர்கெடுக்கிறது. அவர்களுடைய சோஷலிச

உணர்வைச் சீர்கெடுக்கும் நரோத்னிக் கற்பனாவாதம் அவர்களுடைய ஜனநாயக எழுச்சியின் உடன் நிகழ்வாகவும் அறிகுறியாகவும் பகுதியளவுக்கு ஒரு வெளியீடாகவுங்கூட விளங்குகிறது.

நரோத்னிக்குகளும் துருதொவிக்குகளும், ருஷ்யாவில் நிலத் துறையில் கிஞ்சித்தும் முரணில்லாத, முழுமுனைப்பான முதலாளித்துவ நடவடிக்கை ஒன்றை முதலாளித்துவ-எதிர்ப்பு மருந்தாய் முன்வைத்து நிறைவேற்றுகின்றனர்—வரலாற்றின் இயக்கவியல் அத்தகையதாய் இருக்கிறது. ''சரிசமமான'' புதிய நிலப் பங்கீடு கற்பனாவாதமே ஆகும்; ஆயினும் பழைய நிலவுடைமை அனைத்திடமிருந்தும், நிலப்பிரபுவின் நிலமா, ஒதுக்கீட்டு நிலமா, மன்னர் நிலமா என்னும் பேதமின்றி அனைத்து நிலவுடைமையிலிருந்தும், அறவே முறித்துச் செல்வதானது—**புதிய** பங்கீட்டுக்கு இந்த முறிவு அத்தியாவசியமானது—முதலாளித்துவ ஜனநாயகத்தை நோக்கி எடுக்கப்படும் மிகமிக அவசியமான, பொருளாதார வழியில் முற்போக்கான, ருஷ்யாவைப் போன்ற ஓர் அரசுக்கு மிகவும் அவசரமான நடவடிக்கையாகும்.

எங்கெல்சினுடைய குறிப்பிடத்தக்க வாக்கை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும்:

''முறைப்படியான பொருளாதார வழியில் பிழைபட அமைந்ததாயினும், உலக வரலாற்றின் கண்ணோட்டத்தில் அது பிழையற்றதாய் இருக்கலாம்.''[15]

கற்பனாவாத சோஷலிசம் சம்பந்தமாய் எங்கெல்ஸ் இந்த ஆழ்ந்த ஆய்வுரையை அளித்தார்: அந்த சோஷலிசம் முறையான பொருளாதார அர்த்தத்தில் ''தவறுனதுதான்''. உபரி மதிப்பானது பரிவர்த்தனையின் விதிகளது கண்ணோட்டத்தில் **அநியாயமானது** என்று அது கூறிய போது அந்த சோஷலிசம் ''தவறுனதாகவே'' இருந்தது. முறையான பொருளாதார அர்த்தத்தில் **அந்த** சோஷலிசத்தை முதலாளித்துவ அரசியல் பொருளாதாரத் தத்துவவாதிகள் ஆட்சேபித்ததில் தவறில்லை, ஏனெனில் உபரி மதிப்பானது பரிவர்த்தனையின் விதிகளிலிருந்து முற்றிலும் ''இயற்கையாகவே'', முற்றிலும் ''நியாயமாகவே'' எழுகின்றது.

ஆனால் கற்பனாவாத சோஷலிசம் உலக வரலாற்றின் கண்ணோட்டத்தில் **சரியானதே;** ஏனெனில் முதலாளித்துவத்தினுல்

தோற்றுவிக்கப்பட்டு இப்பொழுது, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், முதலாளித்துவத்துக்கு முடிவு கட்டிவிடும்படியான வெகுஜன சக்தியாகி, இந்தக் குறிக்கோளை நோக்கித் தடுக்கவொண்ணாத முறையில் முன்னேறிச் செல்லும் ஒரு வர்க்கத்திற்குரிய அறிகுறியாய், வெளியீடாய், முன்னறிவிப்பாய்த் திகழ்ந்தது அது.

ருஷ்யாவில் இன்றைய நரோத்னிக்கு அல்லது துருதொவிக் கற்பனாவாதத்தை மதிப்பிடுகையில் (ருஷ்யாவில் மட்டுமல்ல, இருபதாம் நூற்றாண்டில் முதலாளித்துவப் புரட்சிகளை அனுபவித்து வரும் பல ஆசிய நாடுகளிலும் என்று சொல்லலாம்) எங்கெல்சின் இந்த ஆழ்ந்த ஆய்வுரையை மனதிற்கொள்ள வேண்டும்.

நரோத்னிக் **ஜனநாயகம்** முறையான பொருளாதாரக் கண்ணோட்டத்தில் தவறாய் இருப்பினும், **வரலாற்றின்** கண்ணோட்டத்தில் சரியானதே. இந்த ஜனநாயகம் சோஷலிசக் கற்பனாவாதம் என்ற முறையில் தவறாய் இருப்பினும், விவசாயி வெகுஜனங்களது தனி வகைப்பட்டதாகிய, வரலாற்று வழியில் நெறியாக்கப்பட்ட ஜனநாயகப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் **சரியானதே**. இந்த ஜனநாயகப் போராட்டம் முதலாளித்துவப் புனரமைப்பின் பிரிக்க முடியாத ஒரு கூறும், இப்புனரமைப்பின் முழுநிறை வெற்றிக்குரிய ஒரு நிபந்தனையும் ஆகும்.

மிதவாதக் கற்பனாவாதம் விவசாயி வெகுஜனங்களுக்குப் போராடுவதிலுள்ள ஊக்கத்தைக் கெடுக்கிறது. நரோத்னிக் கற்பனாவாதம் அவர்களுக்குப் போராடுவதிலுள்ள நாட்டத்தை வெளியிடுகிறது, வெற்றி கிட்டும் பட்சத்தில் லட்சம் லட்சமாய்ப் பேறுகள் கிடைக்குமென்று அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கிறது, ஆனால் உண்மையில் இவ்வெற்றி அவர்களுக்கு நூறு அளவில் மட்டுமே பேறுகள் கிடைக்கச் செய்கிறது. ஆயினும் சொல்ல முடியாத அறியாமை இருளிலும் இல்லாமையிலும் வறுமையிலும் அழுக்கிலும் ஆதரவின்மையிலும் நிர்க்கதி நிலையிலும் வாழ்ந்து வந்துள்ள கோடிக் கணக்கானோர், இப்பொழுது போராட அணிதிரண்டு நடைபோடும் இவர்கள், முடிவில் வெற்றி கிட்டும் போது தமக்குக் கிடைக்கக் கூடிய பலன்களைத் தம் மனதில் பத்து மடங்காய்ப் பெரிதாக்கிக் கொள்வது இயற்கையே அல்லவா?

மிதவாதக் கற்பனாவாதம், பழைய சுரண்டலாளர்களது தனிச் சலுகைகளில் பங்கு பெற விரும்பும் புதிய சுரண்டலாளர்களின் தன்னல நாட்டத்தை மறைக்கும் மூடுதிரையாகும். நரோத்னிக் கற்பனாவாதம் குட்டிபூர்ஷுவாக்களைச் சேர்ந்த லட்சோப லட்சக் கணக்கான உழைப்பாளர்கள் பழைய, பிரபுத்துவச் சுரண்டலாளர்களை **அடியோடு** ஒழித்துக் கட்ட வேண்டுமென்ற ஆர்வ விருப்பத்தின் வெளியீடாகும், அதே போது இவர்களோடு கூட புதிய, முதலாளித்துவச் சுரண்டலாளர்களையும் ஒழித்துவிடலாமென்ற பொய்யான நம்பிக்கையையும் இது வெளியிடுகிறது.

மார்க்சியவாதிகள் **எல்லா வகையான** கற்பனாவாதத்துக்கும் பகையாவர். இவர்கள், பிரபுத்துவத்தை எதிர்த்து **ஒப்பற்ற பற்றுறுதியுடன்** போராடக் கூடிய வர்க்கத்தின் சுயேச்சை நிலையைப் பழுதின்றிப் பாதுகாக்க வேண்டுமென்பது தெளிவு. முதலாளித்துவ வர்க்கத்தாரைப் பிரபுத்துவக் கோமான்களது அரை மனதான எதிர்ப்பாளர்களாகவும் அடிக்கடி கூட்டாளிகளாகவுங்கூட ஆக்கிவிடும் அந்தச் சொத்துடைமையில் நூற்றில் ஒரு பங்குகூட சம்பந்தப்பட்டிராத வர்க்கமாய் இருப்பதால்தான் இது பிரபுத்துவத்தை எதிர்த்து இப்படிப் பற்றுறுதியுடன் போராடுகிறது. விவசாயிகள் சிறுவீதப் பண்ட உற்பத்தியில் சம்பந்தப்பட்டவர்கள்; வரலாற்றுச் சூழ்நிலைகளது சாதக இணைவு கிடைக்கப் பெறின் இவர்கள் பிரபுத்துவத்தைப் பூரணமாய் ஒழித்துவிடக் **கூடியவர்கள்; ஆனால் எப்பொழுதுமே** இவர்கள் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்குமிடையே, மிதவாதத்துக்கும் மார்க்சியத்துக்குமிடையே — தற்செயலாய் அல்ல, தவிர்க்க முடியாதபடி — ஓரளவு ஊசலாடவே செய்வர்.

நரோத்னிக் கற்பனாவாதத்தின் உமியை நீக்கி மதிப்புமிக்க, சிறந்த உட்கருவாய்ப் பொதிந்திருக்கும் விவசாயி வெகுஜனங்களது போர்க் குணம் படைத்த, வைராக்கியமான, நேர்மை வாய்ந்த ஜனநாயகத்தை மார்க்சியவாதிகள் கவனமாய்ப் பிரித்தெடுக்க வேண்டுமென்பது தெளிவு.

இந்த மதிப்பு மிக்க உட்கருவைப் பிரித்தெடுப்பதற்கான இடையருத முயற்சியை எண்பதாம் ஆண்டுகளின் பழைய மார்க்சிய வெளியீடுகளில் இருக்கக் காணலாம். என்றேனும் ஒரு நாள் வரலாற்றியலாளர்கள் இந்த முயற்சியினை முறை யாய்ப் பரிசீலிப்பார்கள், இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளில் ''போல்ஷிவிசம்'' என்பதாய்ப் பெயர் பெற்றுக் கொண்டதுடன் இந்த முயற்சிக்குள்ள இணைப்பை அப்பொழுது அவர்கள் தடம் குறித்துக் காட்டுவர்.

1912 அக்டோபரில்
எழுதப்பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 22,
பக்கங்கள் 117-21

நிலப் பிரச்சினை பற்றிய நகல் தீர்மானம்

விவசாயிப் பிரதிநிதிகளது முதலாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது

1) நிலப் பிரபுக்களுடைய எல்லா நிலங்களும் தனியார் உடைமையிலுள்ள எல்லா நிலங்களும் மற்றும் அரச குடும்பத்துக்கும்[16] மதச் சபைக்கும் உரிய எல்லா நிலங்களும் இன்ன பிறவும் நஷ்ட ஈடு ஏதுமின்றி உடனே மக்கள் கைக்கு மாற்றப்பட வேண்டும்.

2) விவசாயிகள் தத்தமது வட்டாரங்களிலுள்ள எல்லா நிலங்களையும் பொருளாதார வழியில் பயன்படுத்திக் கொள்வதற்காக, தமது விவசாயிப் பிரதிநிதிகளது சோவியத்துகளின் மூலம் ஒழுங்கமைந்த முறையில் உடனே அவற்றைத் தம் கைக்குரியனவாக்கிக் கொள்ள வேண்டும்; ஆயினும் இதனால் அரசியல் நிர்ணயச் சபையோ, சோவியத்துகளின் அனைத்து ருஷ்யச் சபையோ—அரசின் மத்திய ஆட்சியதிகாரத்தை இத்தகைய சோவியத்துகளின் சபை ஒன்றிடம் ஒப்படைப்பதென மக்கள் தீர்மானிப்பார்களாயின்—நிலத் துறைச் சட்ட திட்டங்களை இறுதியாய் நிறுவுவதற்குப் பங்கம் ஏற்பட வேண்டியதில்லை.

3) நிலத்தில் தனியார் சொத்துடைமை அறவே நீக்கப் பட்டுவிட வேண்டும், அதாவது எல்லா நிலங்களும் ஒட்டு மொத்தமாய்த் தேசமக்களுக்கே உரியதாகிவிட வேண்டும். இந்நிலங்களைப் பட்டுவாடா செய்யும் பொறுப்பு உள்ளூர் ஜனநாயக நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

4) நிலங்களை உடனடியாய் எப்படிப் பட்டுவாடா செய்ய வேண்டுமென்பது குறித்து உள்ளூர் நிலப்பிரபுக்களுடன் ''ஓர் உடன்பாட்டுக்கு'' வர வேண்டுமென முதலாளிகளும்

நிலப்பிரபுக்களும் அவர்களுடைய இடைக்கால அரசாங்கமும் கூறும் ஆலோசனையை விவசாயிகள் நிராகரிக்க வேண்டும். எல்லா நிலங்களின் பட்டுவாடாவும் உள்ளூர் விவசாயிகளின் பெரும்பான்மையோரது ஒழுங்கமைந்த தீர்மானத்தால் நெறி செய்யப்பட்டு நடைபெற வேண்டுமே ஒழிய, பெரும்பான்மை யோரான விவசாயிகளுக்கும், சிறுபான்மையோரான, அதுவும் மிக மிகச் சிறுபான்மையோரான, நிலப்பிரபுக் களுக்கும் இடையிலாகிய ஓர் உடன்பாட்டால் அல்ல.

5) நிலப்பிரபுக்களின் எல்லா நிலங்களும் நஷ்டஈடின்றி விவசாயிகளுக்கு மாற்றப்படுவதை எதிர்த்து நிலப்பிரபுக் கள் மட்டுமின்றி முதலாளிகளும்கூட போராடுகின்றனர், தம்மால் இயன்ற முழு அளவுக்கும் தொடர்ந்து இனியும் போராடுவார். இந்த முதலாளிகள் தம்மிடமுள்ள பணத்தின் காரணமாகவும், இன்னமும் அறிவொளி பெறுத பெருந் திர ளினர் மீது செய்தியேடுகள் மூலமும் மூலதன ஆதிக்கத்துக்குக் கீழ்ப்பட்டுப் பழகிவிட்ட எண்ணிலடங்காத அதிகாரிகள், சிப்பந்திகள், ஏனைய பலரின் மூலமும் செலுத்தி வரும் செல் வாக்கின் காரணமாகவும் மிகுந்த பலம் படைத்தவர்களாய் இருக்கின்றனர். ஆகவே இந்த முதலாளிகளிடம் விவசாயி வெகுஜனங்களுக்குள்ள நம்பிக்கை தகர்க்கப்பட்டாலன்றி, விவசாயிகளுக்கும் நகரத் தொழிலாளர்களுக்குமிடையே நெருங்கிய கூட்டணி நிறுவப்பட்டாலன்றி, மற்றும் தொழி லாளர்கள், படைவீரர்கள், விவசாயிகள், இன்ன பிறவோரது பிரதிநிதிகளின் சோவியத்துகளால் அரசு ஆட்சியதிகாரம் பூராவும் மேற்கொள்ளப்பட்டாலன்றி, நிலப்பிரபுக்களின் நிலங்கள் எல்லாம் நஷ்டஈடின்றி விவசாயிகளுக்கு மாற்றப் படுதல் முழுநிறைவான, உறுதியான அடிப்படையில் செயல் படுத்தப்பட முடியாது. இத்தகைய சோவியத்துகளால் அரசு அதிகாரம் செலுத்தப்பட்டு, போலீசாலோ, அதிகார வர்க்கத்தாலோ, மக்களிடமின்றி தனிமைப்பட்டு நிற்கும் நிரந்தர சேனையாலோ அல்லாமல், நாடு தழுவிய அளவில் சகலரையும் கொண்ட ஆயுதமேந்திய தொழிலாளர்கள், விவ சாயிகளது படைவரிசையால் அரசு நிர்வாகிக்கப்படுகையில் தான் விவசாயிகள் அனைவரும் கோரும் மேற்கூறிய நிலச் சீர்திருத்தங்களின் நிறைவேற்றத்துக்கு உத்தரவாதம் ஏற்படும்.

6) விவசாயத் தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும், அதாவது போதிய நிலமும் கால்நடைகளும் உழுபடைக் கருவிகளும் இல்லாத காரணத்தால் கூலி வேலை செய்வதன் மூலம் பகுதியளவுக்குத் தமக்குப் பிழைப்பு தேடிக் கொள்வோர், சுயேச்சையாய்த் தம்மை தனி சோவியத்துகளிலோ, பொதுவான விவசாயிகளது சோவியத்துகளில் தனிக் குழுக்களிலோ ஒழுங்கமைத்துக் கொள்ள முழு முனைப்புடன் பாடுபட வேண்டும்; அப்பொழுதுதான் அவர்கள் முதலாளிகளுடனும் நிலப்பிரபுக்களுடனும் கூட்டணி கொள்வதற்காகத் தவிர்க்கமுடியாதபடி முயலும் பணக்கார விவசாயிகளை எதிர்த்துத் தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

7) போரிடும் ஏனைய நாடுகளையும் நடுநிலை (போரிடாத) நாடுகள் பலவற்றையும் போல ருஷ்யா, யுத்தத்தின் விளைவாய், தொழிலாளர்களும் மற்றும் நிலக்கரியும் இரும்பும் பிறவும் பற்றுக்குறையாகி, பொருளாதாரத் தகர்வையும் விபத்தையும் பஞ்சத்தையும் எதிர்நோக்குகிறது. தொழிலாளர்கள், விவசாயிகளது பிரதிநிதிகள் அனைத்துப் பொருளுற்பத்திக்கும் பண்ட வினியோகத்துக்குமான கட்டுப்பாட்டையும் நிர்வாகத்தையும் தாமே ஏற்றுக் கொள்வதுதான் நாட்டைப் பாதுகாப்பதற்குள்ள ஒரே வழியாகும். ஆகவே தானியத்தையும் ஏனைய கிராம உற்பத்திப் பொருள்களையும் முதலாளிகளுடைய தரப்பு இல்லாமலே—ஆலைகளின் நிர்வாகத்திலிருந்து இவர்களை நீக்கிவிட வேண்டும்—உற்பத்திக் கருவிகளுக்காகவும் பாத அணிகள், துணிமணிகள், பிறவற்றுக்காகவும் பரிவர்த்தனை செய்து கொள்வது குறித்து விவசாயிப் பிரதிநிதிகளது சோவியத்துகளுக்கும் தொழிலாளர் பிரதிநிதிகளது சோவியத்துகளுக்குமிடையே உடனே ஒப்பந்தங்கள் முடித்துக் கொள்ள முற்படுவது அவசியமாகும். இதே நோக்கத்துடன் விவசாயிகளது கமிட்டிகள் நிலப்பிரபுக்களுடைய கால்நடைகளையும் உழுபடைக் கருவிகளையும் தம் கையில் எடுத்துக் கொள்ளும்படி ஊக்கமளிக்க வேண்டும்; இந்தக் கால்நடைகளும் கருவிகளும் பொதுவில் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். இதே போல, நிலப்பிரபுக்களின் பெரிய பண்ணைகள் யாவும் முன்மாதிரியான பண்ணைகளாய் மாற்றப்பட்டு, விவசாய நிபுணர்களுடைய மேற்பார்வை

யிலும், உள்ளூர் விவசாயத் தொழிலாளர்களது பிரதிநிதி களுடைய சோவியத்துகளின் தீர்மானத்துக்கு ஏற்பவும், இந் நிலங்கள் சிறந்த கருவிகளைக் கொண்டு கூட்டாய்ச் சாகுபடி செய்யப்படுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும்.

1917 மே 17 (30)க்கு முன்பு எழுதப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி 32,
பக்கங்கள் 165-67

கருத்துரையாளரின் குறிப்புகளிலிருந்து

விவசாயிகளும் தொழிலாளர்களும்

விவசாயிப் பிரதிநிதிகளது அனைத்து ருஷ்யக் காங்கிரசின் இஸ்வேஸ்தியா,[17] இதழ் 88ல் (ஆகஸ்டு 19) மிகவும் சுவையான ஒரு கட்டுரை வெளிவந்திருக்கிறது. விவசாயிகளுடன் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்ட கட்சிப் பிரசார, கிளர்ச்சி ஊழியர் ஒவ்வொருவருக்கும், மற்றும் கிராமப்புறத்துக்குச் செல்லும் அல்லது விவசாயிகளுடன் தொடர்பு கொள்ளும் வர்க்க உணர்வுள்ள தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாய் இதைக் கருத வேண்டும்.

இந்தக் கட்டுரையின் தலைப்பு வருமாறு: ''1917ல் பெத்ரொகிராதில் கூடிய விவசாயிப் பிரதிநிதிகளது முதலாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசுக்கு வட்டாரப் பிரதிநிதிகள் சமர்ப்பித்த 242 கோரிக்கைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட மாதிரிக் கோரிக்கை.''

இந்தக் கோரிக்கைகள் யாவற்றையும் விவசாயிப் பிரதிநிதிகளது காங்கிரஸ் அப்படியே முழுமையாய் வெளியிடுவது அறவே அசாத்தியமெனில் (முழுமையாய் வெளியிடுவதே யாவற்றிலும் உசிதம்), இவற்றைப்பற்றி கூடுமான அளவுக்கு மிகவும் விவரமான தகவலை வெளியிடுவதுதான் நல்லது. உதாரணமாய், ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் எத்தனை கோரிக்கைகள் கிடைத்தன, அவை எப்பொழுது வகுக்கப்பட்டன அல்லது தெரிவிக்கப்பட்டன என்பதைப் புலப்படுத்தும்படி குபேர்னியாக்கள், உயெஸ்துகள், வோலொஸ்துகளின்* முழுப் பட்டியலைப் பெறுவதும், அடிப்படை கோரிக்கை

* குபேர்னியா மாநிலத்தையும், உயெஸ்து மாவட்டத்தையும், வோலொஸ்து தாலுக்காவையும் போன்ற நிர்வாகப் பிரிவுகள்; புரட்சிக்கு முன்பும் சோவியத் ஆட்சியில் 1929 வரையிலும் இவை இருந்து வந்தன. — [மொழி பெயர்ப்பாளர்.]

களையாவது பகுத்து ஆராய்ந்து பார்ப்பதும் நமக்கு மிகவும் அவசியமாகும். இப்படிப் பகுத்து ஆராய்ந்து பார்த்தால் தான் வெவ்வேறு அம்சங்களும் பிரதேச வாரியாய் மாறுபடுகின்றனவா, **விவசாயி** நிலங்கள் யாவற்றிலும் தனியார் சொத்துரிமை நீக்கப்படுதல், காலத்துக்குக் காலம் நிலத்தை மறு வினியோகம் செய்தல், கூலியுழைப்புக்குத் தடை விதித்தல், நிலப்பிரபுக்களுடைய சாகுபடிக் கருவிகளையும் கால் நடைகளையும் பறிமுதல் செய்தல் முதலான பல பிரச்சினைகளும் வெவ்வேறு பிரதேசங்களிலும் — உதாரணமாய், விவசாயி நிலவுடைமைப் பிரதேசங்களிலும் கிராமச் சமுதாய நிலவுடைமைப் பிரதேசங்களிலும், ருஷ்யர்கள் வாழும் பிரதேசங்களிலும் ருஷ்யர்களல்லாதோர் வாழும் பிரதேசங்களிலும், மத்தியப் பிரதேசங்களிலும் தொலைதூரப் பிரதேசங்களிலும், பண்ணையடிமை முறை இருந்திராத பிரதேசங்களிலும்—வெவ்வேறு விதமாய் அணுகப்படுகின்றனவா என்பன போன்ற பலவும் குறித்து நாம் கூற முடியும். இப்படிப்பட்ட விவரங்கள் தெரியவில்லையெனில், விவசாயிக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள அளவிலா மதிப்பு வாய்ந்த விவரப் பொருளைத் தீர்க்கமாய் ஆராய்வது சாத்தியமன்று. மார்க்சிய வாதிகளாகிய நாம் நமது கொள்கைக்கு அடிநிலையாயிருக்கும் உண்மைகளைத் தீர்க்கமாய் ஆராய்வதற்கு முழு முயற்சி செய்தாக வேண்டும்.

இதனிலும் சிறந்த விவரப்பொருள் கிடைக்காத வரையில், மற்றும் இது எந்த அம்சத்திலும் உண்மை நிலவரங்களுக்குப் புறம்பாய் இருப்பதாய் நிரூபிக்கப்படாதவரையில், இந்தக் **கோரிக்கைகளின் தொகுப்புரை** (''மாதிரிக் கோரிக்கையை'' தொடர்ந்து இனி இவ்வாறே இங்கு குறிப்பிடுகின்றோம்) நம்மிடமுள்ள இவ்வகைப்பட்ட ஒரே விவரப் பொருளாகும். கட்சி உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் இது இன்றியமையாத ஒன்றாகும் என்று திரும்பவும் கூறுகிறோம்.

இந்தத் தொகுப்புரையின் முதற் பகுதி பொது அரசியல் கோட்பாடுகள் பற்றியது, அரசியல் ஜனநாயகத்துக்கான கோரிக்கைகள் பற்றியது. இரண்டாவது பகுதி நிலப் பிரச்சினை பற்றியது. (யுத்தத்தைப் பற்றிய விவசாயிகளது கோரிக்கைகளையும் தீர்மானங்களையும் விவசாயிகள் பிரதிநிதிகளது அனைத்து ருஷ்யக் காங்கிரசோ, அல்லது வேறொரு

அமைப்போ தொகுத்துத் தருமென்று எதிர்பார்ப்போமாக.) முதற் பகுதியின் விவரங்களினுள் புகாமல், அதில் காணப் படும் இரு அம்சங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்பு கிறோம்: §6, அரசாங்கப் பதவி வகிப்போர் எல்லோரும் தேர்ந் தெடுக்கப்பட வேண்டுமென்று கோருகிறது; §11, யுத்தம் முடிவுற்றதும் நிரந்தர சேனை நீக்கப்பட்டுவிட வேண்டு மென்று கோருகிறது. இந்த அம்சங்கள் விவசாயிகளுடைய அரசியல் வேலைத்திட்டத்தை **எதையும்விட** போல்ஷிவிக் கட்சி யின் வேலைத்திட்டத்தை **மிக நெருங்கி** வரச் செய்கின்றன. இந்த அம்சங்களை அடிப்படையாய்க் கொண்டு நம்முடைய பிரசாரம், கிளர்ச்சி அனைத்திலும் மென்ஷிவிக் தலைவர்களும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சித் தலைவர்களும் சோஷ லிசத்துக்கு மட்டுமின்றி, ஜனநாயகத்துக்கும் துரோகிகளாய் இருப்பதை நாம் வலியுறுத்தவும் நிரூபிக்கவும் வேண்டும். உதாரணமாய், கிரான்ஷ்தாத்தில் அவர்கள் அங்கே வசிக்கும் மக்களின் சித்தத்துக்கும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் விரோதமாய்ச் சென்று, முதலாளிகளைத் திருப்தி செய்யும் பொருட்டு, ஒரு கமிசாரின் பதவியை அரசாங்க **அங்கீகாரத்** துக்கு உட்பட்டதாக்க வேண்டும், அதாவது முற்றிலும் தேர்தலுக்குரியதாய் இராத பதவியாய் ஆக்க வேண்டும் என்ற நிலையை ஏற்றனர். பெத்ரொகிராத் நகர வட்டாரக் கவுன்சில்களிலும் ஏனைய ஊராட்சி மன்றங்களிலும் சோஷ லிஸ்டு-புரட்சியாளர் கட்சித் தலைவர்களும் மென்ஷிவிக் தலைவர்களும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு விரோதமாய்ச் சென்று, தொழிலாளர்களாலான காவற் படையை உடனடி யாய் நிறுவ வேண்டும், பிறகு இது பொது மக்களது காவற் படையாக்கப்பட வேண்டுமென்ற போல்ஷிவிக் கோரிக் கையை எதிர்த்துப் போராடுகின்றனர்.

இந்தத் தொகுப்புரையின்படி, நிலத் துறையில் விவசாயி களுடைய கோரிக்கைகள் பிரதானமாய் என்னவெனில்: விவசாயிகளது நிலங்களும் அடங்கலாய் எல்லா வகை நிலங் களிலும் தனியார் உடைமையை நஷ்டஈடின்றி ஒழித்தலும், உயர்தர விஞ்ஞானச் சாகுபடி முறைகள் கையாளப்படும் நிலங்கள் அரசுக்கோ கிராமச் சமுதாயத்துக்கோ மாற்றப் படுதலும், பறிமுதல் செய்யப்படும் நிலங்களில் (சொற்ப நிலமே பெற்றிருக்கும் விவசாயிகளது நிலங்கள் நீங்கலாய்)

எல்லாக் கால்நடைகளும் உழுபடைக் கருவிகளும பறி முதல் செய்யப்பட்டு அரசுக்கோ கிராமச் சமுதாயத்துக்கோ மாற்றப்படுதலும், கூலியுழைப்புக்குத் தடை விதித்தலும், சம அளவில் நிலம் உழைப்பாளி மக்களிடையே வினியோகிக் கப்படுதலும், காலத்துக்குக் காலம் மறுவினியோகம் செய்யப் படுதலும், இன்ன பிறவுமாகும். அரசியல் நிர்ணயச் சபை கூட்டப்படுவதற்கிடையிலான காலத்தில் நில விற்பனையையும் வாங்கலையும் தடை செய்து உடனே சட்டங்கள் இயற்றப் பட வேண்டுமென்றும், கிராமச் சமுதாயத்திலிருந்து பிரிவது பற்றிய சட்டமும் தனி நிலபுலன்களைப் பற்றிய சட்டமும்[18] ரத்து செய்யப்பட வேண்டுமென்றும், காடுகள், மீன் துறைகள் முதலானவற்றைப் பாதுகாக்கும் சட்டங்களும், நீண்ட காலக் குத்தகைகளை நீக்கும் சட்டங்களும், குறுங் காலக் குத்தகைகளைத் திருத்தும் சட்டங்களும், இன்ன பிறவும் வேண்டுமென்றும் விவசாயிகள் கோருகின்றனர்.

முதலாளிகளுடன் கூட்டணி கொண்டு இந்தக் கோரிக்கை களை நிறைவேற்ற முடியவே முடியாது; அவர்களிட மிருந்து அறவே முறித்துக் கொள்ளாமல், முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து மிகவும் வைராக்கியமான, ஈவிரக்க மில்லாப் போராட்டம் நடத்தாமல், இவ்வர்க்கத்தின் ஆட்சியை வீழ்த்தாமல், இவற்றை நிறைவேற்ற முடியவே முடியாது — இந்தக் கோரிக்கைகள் குறித்து ஆழ்ந்த சிந்தனை செய்ய வேண்டிய அவசியமின்றியே புலப்படும் ஒன்று இது.

முதலாளித்துவ ஆட்சியை வீழ்த்தாமலே, அரசு அதிகாரம் அனைத்தும் பாட்டாளி வர்க்கத்துக்கு மாற்றப்படாமலே, பாட்டாளி வர்க்க அரசு அதிகாரம் முதலாளிகளுக்கு எதி ராய் எடுக்கும் வைராக்கியமான புரட்சி நடவடிக்கைகளுக்கு ஏழை விவசாயிகள் ஆதரவளிக்காமலே இந்தச் சீர்திருத்தங் கள், அல்லது இவற்றையொத்த சீர்திருத்தங்கள் சாத்தியம் என்பதாய்க் கற்பனை செய்து, இக்கருத்தைப் பரப்புவதன் மூலம், சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியினர் தம்மை ஏமாற்றிக் கொண்டு விவசாயிகளையும் ஏமாற்றுகின்றனர். ''சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரிடையே'' ஓர் இடதுசாரி தோன்றியிருப்பதன் முக்கியத்துவம், இந்த ஏமாற்றைப் பற்றிய உணர்வு இவர்களுடைய கட்சியில்

வளர்ந்து வருவதை இது நிரூபிக்கிறது என்பதில்தான் அடங்கி யிருக்கிறது.

தனியார் நிலங்கள் யாவற்றையும் பறிமுதல் செய்வதென் பது, இந்த நிலங்களில் பெரும் பகுதி அடமானம் செய்யப் பட்டிருக்கும் பாங்கிகளுக்கு உரித்தான கோடானு கோடி யான மூலதனம் பறிமுதல் செய்யப்படுவதையே குறிக் கின்றது. புரட்சிகர வர்க்கம் புரட்சிகர முறைகளைக் கொண்டு முதலாளிகளுடைய எதிர்ப்பைத் தோற்கடிக்காமல், இதைப் போன்ற ஒரு நடவடிக்கையை எடுப்பது சாத்தியமா? தவிரவும், இது யாவற்றிலும் மிகவும் கூடுதலாய் மத்தியத் துவமடைந்த மூலதனமாகிய பாங்கி மூலதனத்தை, ஒரு பெரிய நாட்டின் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் எல்லா மூலக் கேந்திரங்களுடனும் கோடிக் கணக்கான இழைகளால் இணைக்கப்பட்டதாகிய, நகரப் பாட்டாளி வர்க்கத்தினுடைய இதே அளவுக்கு மத்தியத்துவமடைந்த வலிவால் மட்டுமே தோற்கடிக்கப்படக் கூடியதாகிய பாங்கி மூலதனத்தைப் பற்றிய பிரச்சினையாகும்.

மேலும், உயர் திறனுள்ள பண்ணைகள் அரசுக்கு மாற்றப் படுவதை எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றைத் தன் கைக்குக் கொண்டு வந்து, அதிகாரிகள், முதலாளிகளின் நலன் களுக்கு அல்லாமல், மெய்யாகவே உழைப்பாளி மக்களின் நலன்களுக்கு ஏற்ப இவற்றை நடத்திச் செல்லக் கூடிய ''அரசு'', பாட்டாளி வர்க்கப் புரட்சிகர அரசாகவே இருக்க முடியுமென்பது தெளிவு.

குதிரை வளர்ப்புப் பண்ணைகளையும் பிறவற்றையும், பிறகு பண்ணைகளின் கால்நடைகளையும் உழுபடைக் கருவி களையும் பறிமுதல் செய்வதென்பதன் அர்த்தம், உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமையைத் திணறடிக்கும்படி அதற்கு அடிமேல் அடி கொடுப்பது மட்டுமல்ல. சோஷ லிசத்தை நோக்கி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதே இதன் அர்த்தம். ஏனெனில் கால்நடைகளையும் உழு படைக் கருவிகளையும் ''முற்றிலும் அரசு அல்லது கிராமச் சமு தாயத்தின் உபயோகத்துக்கு'' மாற்றுவது என்பது பெருவீத, சோஷலிச விவசாயத்தைக் குறிக்கிறது; அல்லது குறைந்தது ஒருசேர இணைந்த சிறு பண்ணைகள் மீதான சோஷலிசக்

கட்டுப்பாட்டை, அவற்றின் பொருளாதாரம் சோஷலிச வழியில் ஒழுங்கியக்கப்படுவதைக் குறிக்கிறது.

பிறகு கூலியுழைப்புக்குத் ''தடை விதித்தல்'' என்பது என்ன? இது அர்த்தமற்றத் தொடராகும்; மிதித்து நசுக்கப் படும் சிறு உடைமையாளர்கள் திக்கற்றவர்களாய், அறியாச் சிறு பிள்ளைகளாய்த் தாம் நினைப்பதெல்லாம் நடக்கு மென நினைக்கும் நினைப்பே ஆகும். கிராமப்புறத்தில் கூலி யுழைப்பு ரிசர்வ் பட்டாளம் இல்லையேல், முதலாளித்துவத் தொழில் துறையே முழுதும் ஸ்தம்பித்து நின்றுவிடும் என்பதையும், கிராமங்களில் கூலியுழைப்புக்குத் ''தடை விதித்து'', அதேபோதில் நகரங்களில் இதற்கு அனுமதியளிப் பது சாத்தியமல்ல என்பதையும், முடிவில் கூலியுழைப்புக்குத் ''தடை விதிப்பது'' சோஷலிசத்தை நோக்கி எடுக்கப்படும் நடவடிக்கையே ஆகுமென்பதையும் புரிந்து கொள்ளாதவர் கள் இவர்கள்.

இங்கு நாம் விவசாயிகள் பால் தொழிலாளர்கள் அனுசரிக்க வேண்டிய போக்கு பற்றிய அடிப்படைப் பிரச்சினைக்கு வருகின்றோம்.

ருஷ்யாவில் வெகுஜன சமூக-ஜனநாயகத் தொழிலாளர் இயக்கம் இருபது ஆண்டுகளுக்கு மேலாய் (1896ஆம் ஆண் டின் பெரிய வேலைநிறுத்தங்களிலிருந்து தொடங்கிலே மாஸ்) இருந்து வந்திருக்கிறது. இந்த நீண்ட நெடுங் காலம் பூராவிலும், இரு பெரும் புரட்சிகளினூடாகவும், ருஷ்யா வின் அரசியல் வரலாறு முழுவதனூடாகவும், பிரச்சினையாய் இருந்து வருவது தொழிலாளி வர்க்கம் விவசாயிகளை முன்னேக்கி, சோஷலிசத்தை நோக்கி, இட்டுச் செல்லப் போகிறதா; அல்லது மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தார் இவர்களைப் பின்னேக்கி, முதலாளித்துவத்துடனை இணக்கத்தை நோக்கி இழுத்துச் செல்லப் போகிறார்களா என்பதுதான்.

சமூக-ஜனநாயகவாதிகளில் சந்தர்ப்பவாதப் பிரிவினர் எப்பொழுதும் பின்வரும் தன்னல நாட்ட சூத்திரத்துக்கு ஏற்பவே வாதாடி வந்துள்ளனர்: சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் குட்டிபூர்ஷுவாக்களாய் இருப்பதால், சோஷ லிசத்தைப் பற்றிய அவர்களுடைய குட்டிபூர்ஷுவா அற்ப வாதக் கருத்துக்களை ''நாங்கள்'' நிராகரிக்கிறோம், சோஷ

விசத்தை நிராகரிக்கும் முதலாளித்துவத்தின் பெயரில் நிராகரிக்கிறோம். மார்க்சியத்துக்குப் பதிலாய் ஸ்துரூவேயிசத்தைக்[19] கச்சிதமான மாற்றமைப்பாய்க் கொண்டு, மென்ஷிவிசமானது காடேட்டு அடிவருடியாய்ப் பணி புரியும் பாதையிலே சரிந்தோடி விவசாயிகளை முதலாளித்துவ ஆட்சிக்கு ''இணங்க வைக்க'' முயலுகிறது. மென்ஷிவிசத்தின் இந்தப் பணிக்கு மிகவும் சமீப காலத்திய, மிகவும் எடுப்பான சான்றுகள், திசெரெத்தேலியும் ஸ்கோபெலெவும் செர்னேவுடனும் அவ்க்சேன்தியெவுடனும்[20] கூடிக் கொண்டு காடேட்டுகளுடைய பிற்போக்கு நிலப்பிரபு அரசாணைகளில், ''புரட்சிகர ஜனநாயகவாதிகளின்'' பெயரில், அவசர அவசரமாய்க் கையெழுத்திட்டதைக் குறிப்பிடலாம்.

புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் — சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் குட்டிபூர்ஷுவாப் பிரமைகளை விமர்சனம் செய்தலை ஒருபோதும் இவர்கள் கைவிடாதவர்கள், காடேட்டுகளுக்கு **எதிராய்** அமைந்ததைத் தவிர்த்து அவர்களுடன் வேறு **எந்தக் கூட்டணியிலும் சேர்ந்து கொள்ளாத வர்கள்**—காடேட்டுகளது செல்வாக்கிலிருந்து விவசாயிகளைப் **பிரித்தெழுப்பதற்காக** அயராது பாடுபடுகின்றனர், மிதவாத வழியில் முதலாளித்துவத்துடன் இணக்கம் காண்பதை முன்வைப்பதற்குப் பதில் சோஷலிசத்தை அடைவதற்குரிய புரட்சிகரப் பாட்டாளி வர்க்கப் பாதையைப் பறைசாற்றி, சோஷலிசத்தைப் பற்றிய குட்டிபூர்ஷுவா அற்பவாதியின் கற்பனாவாதக் கருத்தை எதிர்க்கின்றனர்.

யுத்தமானது நம்ப முடியாதவாறு வளர்ச்சிகளைத் துரிதப்படுத்தி, முதலாளித்துவத்தின் நெருக்கடியை உச்ச அளவுக்குத் தீவிரமாக்கி, அழிந்துபடுவது அல்லது உடனடியாய் சோஷலிசத்தை நோக்கி வைராக்கியமாய் நடைபோடுவது என்னும் இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்ளும் தேர்வினைப் பல்வேறு தேச மக்களையும் எதிர்நோக்கும்படிச் செய்துள்ள தற்போதைய நிலைமையில், அரைமிதவாத மென்ஷிவிசத்துக்கும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்க போல்ஷிவிசத்துக்கும் இடையிலுள்ள அகழியின் அதலபாதாள வேறுபாட்டின் முழு ஆழமும், கோடிக் கணக்கான விவசாயிகள் செய்ய வேண்டியது என்ன என்கிற நடைமுறைப் பிரச்சினையில் தெளிவாய்ப் புலனாகிவிடுகிறது.

மூலதனத்தின் ஆட்சியை ஏற்றுக் கொள்ளுங்கள், ஏனெனில் இன்னமும் ''நாம்'' சோஷலிசத்துக்குப் பக்குவ நிலை அடைந்தாகவில்லை என்று விவசாயிகளிடம் மென்ஷிவிக்குகள் கூறுகிறார்கள்; இதனுடன் கூடவே சந்தடியின்றி இவர்கள், சோஷலிசத்தை நோக்கித் தீர்மானமாய் முன்னேறிச் செல்லாமல் யுத்தத்தால் ஏற்பட்ட காயங்களை ஆற்ற முடியுமா என்னும் ஸ்தூலமான பிரச்சினையைப் பொதுப்பட ''சோஷலிசம்'' என்பதான கருத்தியலான பிரச்சினையாய் மாற்றிப் புரட்டுகிறார்கள்.

முதலாளித்துவத்தை ஏற்றுக் கொள்ளுங்கள், ஏனெனில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் குட்டிபூர்ஷுவாக் கற்பனாவாதிகளாவர் என்று விவசாயிகளிடம் கூறிவிட்டு இந்த மென்ஷிவிக்குகள் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினருடன் கூடிக் கொண்டு காடேட்டு அரசாங்கத்தை ஆதரித்து நிற்கின்றனர்.

இந்நிலையில், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் சூரர்களாய் மார் தட்டி விவசாயிகளிடம் முழங்குகிறார்கள், முதலாளிகளுடன் எந்த சமாதானத்தையும் எதிர்க்கிறோம் என்றும் ருஷ்யப் புரட்சியை ஒருபோதும் தாம் முதலாளித்துவப் புரட்சியாய்க் கருதியதில்லை என்றும் அடித்துப் பேசுகிறார்கள்—**ஆகவே** அவர்கள் **சந்தர்ப்பவாத** சமூக-ஜனநாயகவாதிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு முதலாளித்துவ அரசாங்கத்துக்கு ஆதரவாய் அணிதிரளுகிறார்கள். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் விவசாயிகளது வேலைத்திட்டங்கள் யாவற்றிலும்—எவ்வளவுதான் அவை புரட்சிகரமாய் இருந்த போதிலும்—தயங்காமல் கையொப்பமிடுகிறார்கள், ஆனால் இவர்கள் இதைச் செய்வது கவனியாது மூலையில் போடுவதற்கே அன்றி இவற்றை நிறைவேற்றிச் செயல்படுத்துவதற்காக அல்ல. சிறிதும் பிடி கொடுக்காமல் தட்டிக் கழிக்கும் வாக்குறுதிகளை அளித்து, இவர்கள் விவசாயிகளை ஏமாற்றுகின்றனர்; அதேபோது உண்மையில் கூட்டணி அரசாங்கத்தில் காடேட்டுகளுடன் கூடிக் கொள்ளும் சமரசக் கொள்கையை மாதக் கணக்காய்த் தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர்.

விவசாயிகளுடைய நலன்களுக்கு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் இப்படிப் படுமோசமாய், நேரடியாய்,

நடைமுறைச் செயல் வழியில், அப்பட்டமாய்ப் புரியும் இந்தத் துரோகமானது நிலைமையை அடியோடு மாற்றிவிடுகிறது. இந்த மாற்றத்தை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினருக்கு எதிராய்ப் பழைய வழியில், 1902க்கும் 1903க்குமிடையிலும் 1905க்கும் 1907க்குமிடையிலும் நாம் நடத்திய அந்தப் பழைய வழியில், கிளர்ச்சி நடத்தி வந்தால் போதாது. ''நிலத்தைச் சமூகவுடைமையாக்குதல்'', ''சரிசமமான நிலவுடைமை'',''கூலியுழைப்புக்குத் தடை விதித்தல்'' முதலான பல குட்டிபூர்ஷுவாப் பிரமைகளை அம்பலம் செய்வது மட்டும் போதாது.

இதை நாம் செய்தது முதலாளித்துவப் புரட்சியின் தறுவாயில், அல்லது முதலாளித்துவப் புரட்சி நிறைவுறுவதற்கு முன்னர். முடியரசின் வீழ்ச்சியை நிறைவுறச் செய்வதே அப்பொழுது நம் முன்னிருந்த பிரதானப் பணி.

இப்பொழுது முடியரசு வீழ்த்தப்பட்டுவிட்டது. ருஷ்யாவானது காடேட்டுகள், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் ஆகியோரது அரசாங்கத்தைக் கொண்ட ஒரு ஜனநாயகக் குடியரசாகிவிட்டதால், முதலாளித்துவப் புரட்சி அந்த அளவுக்கு நிறைவுற்றுவிட்டது. அதோடு கடந்த மூன்று ஆண்டுகளாய் நடைபெற்று வரும் யுத்தம் நம்மை நன்றாய் ஒரு முப்பது ஆண்டுகளுக்கு முன்னே தள்ளிச் சென்றிருக்கிறது. இந்த யுத்தம் ஐரோப்பாவில் வலுக்கட்டாயமாய்ச் சகலருக்குமான உழைப்புச் சேவையையும், தொழில் முயற்சிகளது கட்டாய ஒருங்கிணைவுக் கூட்டுகளையும் திணித்திருக்கிறது; மிகவும் முன்னேறிய நாடுகளில் பசியையும் முன்பின் கண்டிராத சேதங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது; இவ்விதம் சோஷலிசத்தை நோக்கியமைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்படியான கட்டாயத்தை உண்டாக்கியிருக்கிறது.

தொழிலாளர்கள், விவசாயிகளால் மட்டும்தான் முடியரசை வீழ்த்த முடியுமென்பதே அப்பொழுது நமது வர்க்கக் கொள்கையின் அடிப்படை நிர்ணயிப்பாய் இருந்தது. இந்த நிர்ணயிப்பு பிழையற்றதுதான். 1917ஆம் ஆண்டு பிப்ரவரி, மார்ச் மாதங்கள் மீண்டும் இதை நிரூபித்துக் காட்டின.

இன்று நமது வர்க்கக் கொள்கையின் அடிப்படை நிர்ணயிப்பு என்னவெனில், பாட்டாளி வர்க்கத்தால் மட்டும் தான் ஏழை விவசாயிகளுக்கு (நமது வேலைத்திட்டம் கூறுவது போல அரைப் பாட்டாளிகளுக்கு) தலைமை தாங்கி, ஜனநாயக சமாதானத்துடன் யுத்தத்தை முடிவுறச் செய்யவும், யுத்தத்தால் ஏற்பட்ட காயங்களை ஆற்றவும், அத்தியாவசியமான வையும் மிகவும் அவசரமானவையும் ஆகிவிட்ட சோஷலிச நடவடிக்கைகளைத் துவக்கி வைக்கவும் முடியும் என்பதே.

இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களுக்கு எதிரான நமது பிரசாரத்திலும் கிளர்ச்சியிலும் வலியுறுத்தலானது, விவசாயிகளுக்கு அவர்கள் துரோகமிழைத்துவிட்டனர் என்கிற இந்த உண்மையைக் கோடிட்டுக் காட்டும் வண்ணம் மாற்றப்பட்டாக வேண்டும். இவர்கள் பிரதிநிதித்துவம் செய்வது சிறுபான்மையோராகிய பணக்கார விவசாயிகளையே தவிர, பெருந்திரளினரான ஏழை விவசாயிகளை அல்ல. விவசாயிகளை இவர்கள் முதலாளிகளுடனை கூட்டணிக்கு, அதாவது முதலாளிகளுக்குக் கீழ்ப்பட்டுவிடுவதற்கு, இட்டுச்செல்கிறார்களே தவிர, தொழிலாளர்களுடனை கூட்டணிக்கு அல்ல. உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமாகிய மக்களுடைய நலன்களை இவர்கள் அமைச்சர் பதவிகள் பெறுவதற்காகவும், மென்ஷிவிக்குகளோடும் காடேட்டுகளோடும் கூட்டு சேர்வதற்காகவும் வேண்டி விலைபேசி விற்றுவிட்டனர்.

யுத்தத்தால் துரிதப்படுத்தப்பட்டிருக்கும் வரலாறு, பழைய சூத்திரங்கள் புதிய பொருள் பெற்றுவிடும்படி அவ்வளவு நெடுந் தொலைவுக்கு முன்னேறிச் சென்றுவிட்டது. ''கூலியுழைப்புக்குத் தடை விதிப்பது'' என்பது முன்பு குட்டி பூர்ஷுவா அறிவுத்துறையினரால் ஆர்ப்பாடமாய் எடுத்தாளப்பட்ட ஒரு வெற்றுத் தொடராக மட்டுமே இருந்தது. இன்றைய நிலைமையின் ஒளியில் இது வேறொன்றைக் குறிக்கிறது: கோடிக் கணக்கான ஏழை விவசாயிகள் தமது 242 கோரிக்கைகளில், கூலிக்கு ஆட்களை அமர்த்திக் கொள்வது ஒழிக்கப்பட வேண்டுமெனத் தாம் விரும்புவதாய்க் கூறுகின்றனர், ஆனால் இதை எப்படிச் செய்வதென்று இவர்களுக்குத் தெரியவில்லை. இதை எப்படிச் செய்வதென்று நமக்குத் தெரியும். முதலாளிகளுடன் சமரசம் செய்து கொண்டு அல்ல,

முதலாளிகளுக்கு எதிராய்த் தொழிலாளர்களுடன் கூட்டணி கொண்டு, தொழிலாளர்களுடைய தலைமையில் அணிதிரண்டால்தான் இதைச் செய்ய முடியுமென்பதை நாம் அறிவோம்.

சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினருக்கு எதிரான நமது பிரசாரம், கிளர்ச்சியின் அடிப்படைக் கொள்கை வழியில், விவசாயிகள் மத்தியில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படைக் கொள்கை வழியில், தற்போது ஏற்பட வேண்டிய மாற்றங்கள் இவையே.

விவசாயித் தோழர்களே, சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி உங்களுக்குத் துரோகமிழைத்துவிட்டது. குடிசைகளை விட்டுத் துறந்து துரோகம் புரிந்து மாடமாளிகைகளுக்கு ஓடிவிட்டது. மன்னர் மாளிகைகளுக்கு இல்லையேல், புரட்சியின், முக்கியமாய் விவசாயிகளது புரட்சியின் ஜன்மப் பகைவர்களாகிய காடேட்டுகள் செர்னேவ்களோடும் பெஷெஹோனவ்களோடும் அவ்க்சேன்தியெவ்களோடும் ஒரே அரசாங்கத்தில் வீற்றிருக்கிறார்களே அம்மாளிகைகளுக்கு ஓடிச்சென்றுவிட்டது.

புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தால் மட்டும்தான், இவ் வர்க்கத்தை ஒன்றுபடச் செய்யும் முன்னணிப் படையான போல்ஷிவிக் கட்சியால் மட்டும்தான் 242 கோரிக்கைகளில் முன்வைக்கப்படும் ஏழை விவசாயிகளது வேலைத்திட்டத்தை **உண்மையில்** செயல்படுத்த முடியும். ஏனெனில் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் கூலியுழைப்பின் ஒழிப்பை நோக்கி **மெய்யாகவே** முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது; கூலிக்கு ஆட்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வதற்குத் தடை விதிப்பதன் மூலமல்ல, கூலியுழைப்புக்குத் தடை விதிப்பதன் மூலமல்ல, பிழையற்ற ஒரே வழியின் மூலம், அதாவது மூல தனத்தை வீழ்த்துவதன் மூலம் கூலியுழைப்பின் ஒழிப்பை நோக்கி முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் நிலத்தையும் உழுபடைக் கருவிகளையும் விவசாயத் தொழில்நுட்ப நிலையங்களையும் பறிமுதல் செய்வதை நோக்கி, விவசாயிகள் எதை விரும்புகிறார்களோ, சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரால் எதை அவர்களுக்குத் தர முடியாதோ அதை நோக்கி மெய்யாகவே முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது.

விவசாயிகள் மத்தியில் தொழிலாளர்கள் பின்பற்றி வரும் அடிப்படைக் கொள்கை வழி இவ்விதம்தான் இப்பொழுது

மாறியாக வேண்டும். ஏழை விவசாயிகள் எதை விரும்புகிறார்களோ, எங்கே, எப்படி இதைத் தேடிப் பெறுவதென்று பல சந்தர்ப்பங்களிலும் அறியாதோராகவே தேடிக் கொண்டிருக்கிறார்களோ, அதைத் தொழிலாளர்களாகிய நாங்கள் உங்களுக்கு அளித்திட முடியும், அளித்திடவும் செய்வோம். தொழிலாளர்களாகிய நாங்கள் **முதலாளிகளுக்கு எதிராய்** எங்களுடைய நலன்களையும், அதேபோது மிகப் பெருவாரியான விவசாயிகளுடைய நலன்களையும் பாதுகாத்துப் போராடுகிறோம்; ஆனால் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் முதலாளிகளுடன் கூடிக்கொண்டு இந்த நலன்களுக்குத் துரோகம் புரிகின்றனர்.

* * *

இறப்பதற்குச் சிறிது காலம் முன்பு எங்கெல்ஸ் விவசாயிப் பிரச்சினை குறித்துக் கூறியதை நினைவு கூர்வோமாக. சிறு விவசாயிகளை எவ்வகையிலும் உடைமை நீக்கம் செய்யும் நோக்கம் சோஷலிஸ்டுகளுக்குக் கிடையாது, இயந்திரச் சாதன சோஷலிச விவசாயத்தின் அனுகூலங்கள் **முன்னுதாரணத்தின் சக்தியை** மட்டுமே கொண்டு அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்படும் என்று அவர் வலியுறுத்தினார்.

இதே மாதிரியான ஒரு பிரச்சினையை யுத்தம் இப்பொழுது நடைமுறையில் ருஷ்யாவின் முன்னே எழச் செய்திருக்கிறது. உழுபடைக் கருவிகள் பற்றுக்குறையாய் இருக்கின்றன. அவை பறிமுதல் செய்யப்பட வேண்டும், அதிகதிறனுள்ள பண்ணைகள் ''துண்டாடப்படக் கூடாது''.

விவசாயிகள் இதை உணரத் தலைப்பட்டுவிட்டனர். அவசியத்தின் நிர்ப்பந்தம் அவர்களை இதை உணரும்படிக் கட்டாயப்படுத்தியிருக்கிறது. யுத்தம் அவர்களைக் கட்டாயப்படுத்தியிருக்கிறது, **ஏனெனில்** உழுபடைக் கருவிகளுக்கு எங்கும் தட்டுப்பாடாயிருக்கிறது. கையில் இருப்பவற்றைச் சிக்கனமாய்ச் செவ்வனே பயன்படுத்தியாக வேண்டும். பெருவீதச் சாகுபடியானது கருவிகளையும் மற்றும் பலவற்றையும் பயன்படுத்தி உழைப்பைச் சிக்கனமாக்குதலையே குறிக்கின்றது.

விவசாயிகள் தமது சிறு நிலங்களைத் தம்மிடமே வைத்துக் கொள்ளவும், எல்லோருக்கும் சமமான தரங்களை நிறுவவும், சரிசமமான அடிப்படையில் காலத்துக்குக் காலம்

திருத்திச் சரிசெய்து கொள்ளவும் விரும்புகிறார்கள். நல்லது. யோசனையுள்ள எந்த சோஷலிஸ்டும் இது குறித்து ஏழை விவசாயிகளுடன் வேற்றுமை கொள்ள மாட்டார். நிலம் பறிமுதல் செய்யப்பட்டால், பாங்கிகளின் ஆதிக்கத்துக்குக் குழி பறிக்கப்பட்டுவிட்டது என்று அர்த்தம்; உழுபடைக் கருவிகள் பறிமுதல் செய்யப்பட்டால், மூலதனத்தின் ஆதிக்கத்துக்குக் குழி பறிக்கப்பட்டுவிட்டது என்று அர்த்தம்— அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில், மத்திய ஆட்சி அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தினரின் கையில் இருக்கும் பட்சத்தில், அரசியல் ஆட்சியதிகாரம் பாட்டாளி வர்க்கத்தால் மேற்கொள்ளப் பட்டுவிடும் பட்சத்தில், ''முன்னுதாரணத்தினுடைய சக்தியின்'' விளைவாய், அனுபவத்தால் உந்தப்பட்டு ஏனைய யாவும் தாமாகவே நடந்தேறும்.

அரசியல் ஆட்சியதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கைகளுக்கு மாறிச் செல்வதில்தான் இந்த விவகாரத்தின் உயிர்க் கூறு அடங்கியிருக்கிறது. இது நடைபெறுமாயின், 242 கோரிக்கைகளில் குறிக்கப்படும் வேலைத்திட்டத்தில் அடங்கியுள்ள அத்தியாவசிய, ஆதார, அடிப்படைக் கூறு ஒவ்வொன்றும் நடைமுறை சாத்தியமானதாகிவிடும். இந்த வேலைத் திட்டம் செயல்படுத்தப்படும்போது அது எப்படிப்பட்ட திருத்தமைவுகளுக்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்பதை வாழ்க்கை தெளிவுபடுத்தும். இது இரண்டாந்தர முக்கியத்துவம் கொண்ட ஒரு பிரச்சினை. நாங்கள் வறட்டுச் சூத்திரவாதிகளல்ல. எங்களுடைய தத்துவம் செயலுக்கான வழிகாட்டியே அன்றி வறட்டுச் சூத்திரமல்ல.

சோஷலிசத்துக்கான பாதையை, கடைசிச் சிறுவிவரமும் அடங்கலாய் மார்க்ஸ் தெரிந்து வைத்திருந்தார், அல்லது மார்க்சியவாதிகள் தெரிந்து வைத்திருக்கின்றனர் என்பதாய் நாங்கள் கூறிக் கொள்ளவில்லை. இம்மாதிரிக் கூறுவோமாயின் அது அபத்தமேயாகும். எங்களுக்குத் தெரிந்ததெல்லாம் இந்தப் பாதையின் திசையும், இதைக் கடைப்பிடித்துச் செல்லும் வர்க்க சக்திகளும்தான்; தனிப்பட்ட, நடைமுறை விவரங்கள் கோடானு கோடியானோரின் அனுபவத்தின் வாயிலாகவே, அவர்கள் யாவற்றையும் தாமே தம் கைகளில் எடுத்துக் கொள்ளும் போதுதான் தெளிவாய்த் தெரிய வரும்.

விவசாயித் தோழர்களே, தொழிலாளர்களை நம்புங்கள்; முதலாளிகளிடமிருந்து முறித்துக் கொள்ளுங்கள்! தொழிலாளர்களுடன் நெருங்கிய கூட்டணி கொண்டால்தான் 242 கோரிக்கைகளில் குறிக்கப்பட்டிருக்கும் வேலைத்திட்டத்தை உங்களால் செயல்படுத்த முற்பட முடியும். முதலாளிகளுடன் கூட்டணி கொண்டிருப்பீர்களாயின், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரால் இட்டுச் செல்லப்படுவீர்களாயின், இந்த வேலைத்திட்டத்தின் மனபாங்கில் அமைந்த வைராக்கியமான, தீவிரமான நடவடிக்கை எந்தவொன்றும் எடுக்கப்படுவதை எந்நாளும் நீங்கள் காணமாட்டீர்கள்.

ஆனால் நகரத் தொழிலாளர்களுடன் கூட்டணி கொண்டு மூலதனத்தை எதிர்த்து ஈவிரக்கமில்லாக் கடும் போராட்டம் நடத்தி 242 கோரிக்கைகளின் வேலைத்திட்டத்தை நீங்கள் சித்திபெறச் செய்யத் தொடங்கும் போது, அனைத்து உலகும் முன்வந்து உங்களுக்கும் எங்களுக்கும் துணை புரியும். அப்பொழுது அந்த வேலைத்திட்டம்—தற்போது அது பெற்றிருக்கும் வடிவில் அல்ல, ஆனால் அதன் சாராம்சத்தில்—வெற்றி பெறுவது உறுதியாகிவிடும். அது நடந்தேறும் போது மூலதனத்தின் ஆதிக்கத்துக்கும் கூலியடிமைக்கும் முடிவு கட்டப்பட்டுவிடும். சோஷலிசத்தின் ஆட்சி, சமாதானத்தின் ஆட்சி, உழைப்பாளி மக்களின் ஆட்சி ஆரம்பித்துவிட்டதை அது பறைசாற்றும்.

ரபோச்சி, இதழ் 6,
1917, செப்டம்பர் 11 (ஆகஸ்டு 29)

நூல் திரட்டு,
தொகுதி 34,
பக்கங்கள் 108-16

சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி திரும்பவும் விவசாயிகளை ஏமாற்றுகிறது

சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி அதன் பிரதான செய்தியேடான **தியேலோ நரோதாவில்** *(அக்டோபர் 18-19)* புனிதமாகவும் பகிரங்கமாகவும் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது. விவசாய அமைச்சருடைய புதிய நில மசோதா ''கட்சியின் நிலத் துறை வேலைத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு எடுக்கப்பட்டிருக்கும் பிரதான நடவடிக்கை'' ஆகுமென்றும், ''இந்த மசோதாவுக்கு ஆதரவாய் மும்முரமான இயக்கம் துவக்கி இதை வெகுஜனங்களுக்கு வெகுவாய்த் தெரியப்படுத்தும்படி கட்சியின் மத்தியக் குழு கட்சியின் எல்லா நிறுவனங்களையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது'' என்றும் இந்த அறிவிப்பு கூறுகிறது.

ஆனால் உண்மை என்னவெனில், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினரான அமைச்சர் எஸ். எல். மாஸ்லவ் தயாரித்திருக்கும் இந்த மசோதா— **தியேலோ நரோதாவில்** இதன் முக்கியப் பகுதிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன — **விவசாயிகளுக்குப் புரியப்பட்டிருக்கும் ஒரு மோசடி** யாகும். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி விவசாயிகளை ஏமாற்றியிருக்கிறது: இது தனது **நில** மசோதாவை விட்டு ஓடிச் சென்று, ''நியாயமான மதிப்பீட்டுக்கும்'', நிலப் பிரபுக்களின் நில உடைமையைப் பழுதின்றிப் பாதுகாப்பதற்குமான நிலப்பிரபுக்கள், காடேட்டுகளுடைய திட்டத்தை ஏற்றுக் கொண்டுவிட்டது. சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி முதல் ருஷ்யப் புரட்சியின் போதும் *(1905)* இரண்டாவது ருஷ்யப் புரட்சியின் போதும் *(1917)* நடைபெற்ற அதன் காங்கிரஸ்களில், நிலப் பிரபுக்களின் நிலங்கள் **பறிமுதல் செய்யப்பட** வேண்டுமென்ற, அதாவது **நஷ்டஈடின்றி** இவை விவசாயி

களுக்கு மாற்றப்பட வேண்டுமென்ற விவசாயிக் கோரிக்கையை ஏற்று பகிரங்கமாய்ப் புனித வாக்குறுதி அளித்தது. ஆனால் திருவாளர் மாஸ்லவின் தற்போதைய திட்டத்தில் நிலப் பிரபுக்களின் நிலவுடைமை அப்படியே விட்டு வைக்கப் பட்டிருப்பதோடு அன்னியில், ''குத்தகைக்கு விடப்பட்ட'' நிலங்களுக்கு விவசாயிகளிடமிருந்து கிடைக்கும் வாரத்தின் ''நியாய'' மதிப்பீட்டுத் தொகையையும் **நிலப்பிரபுக்கள் பெற்றுக் கொள்வார்கள்.**

திருவாளர் மாஸ்லவின் இந்த மசோதா சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி விவசாயிகளுக்குப் புரியும் அப்பட்டமான துரோகமே ஆகும். நிலப்பிரபுக்களுக்கு இக்கட்சி முழுநிறை வாய் அடிபணிந்துவிட்டதையே இம்மசோதா குறிக்கின்றது. விவசாயிகளில் கூடுமான வரை மிகவும் விரிவான பகுதியோருக்கு இந்த உண்மையை மனதிற் பதியும்படி தெளிவாய்த் தெரியப்படுத்துவதற்கு அனைத்தும் செய்தாக வேண்டும், முழு முயற்சி மேற்கொள்ளப்பட்டாக வேண்டும்.

மாஸ்லவின் மசோதாவினுடைய 25-40ஆம் பிரிவுகள் அக்டோபர் 18 **தியேலோ நரோதாவில்** வெளிவந்திருந்தன. இதன் பிரதான அம்சங்கள் வருமாறு:

(1) திட்டமிடப்பட்டிருக்கும் ''தற்காலிகக் குத்தகை நிலச் சங்கமத்தில்'' சேர்க்கப்படப் போகிறவை நிலப் பிரபுக்களின் பண்ணைகள் **யாவும் அல்ல.**

(2) **நிலப்பிரபுக்களினது** அரசாங்கமாகிய கோமகன் லுவோவின் அரசாங்கத்தால் இயற்றப்பட்ட 1917 ஏப்ரல் 21ஆம் தேதிய சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட **நிலக் கமிட்டிகளால்** இந்த நிலப்பிரபுக்களின் நிலங்கள் நிலச் சங்கமத்தில் சேர்க்கப்படும்.

(3) இந்த நிலங்களுக்காக விவசாயிகள் கொடுக்க வேண்டிய வாரம் ''நிகர வருமானத்துக்கு ஏற்ப'' நிலக் கமிட்டிகளால் நிர்ணயிக்கப்படும்; செலுத்தப்பட வேண்டிய தொகைகள் கழிக்கப்பட்டபின் இந்த வாரம் அதன் ''நியாயமான உடைமையாளருக்கு'', **அதாவது நிலப் பண்ணையாருக்குப்** போய்ச் சேரும்.

இது சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் விவசாயிகளுக்குப் புரிந்திடும் மூன்று படிவ மோசடியே ஆகும். இந்த

மூன்று அம்சங்களையும் ஒவ்வொன்றாய் விவரமாய்ப் பரிசீலித்தாக வேண்டும்.

விவசாயிப் பிரதிநிதிகளது அனைத்து ருஷ்யக் காங்கிரசின் இஸ்வேஸ்தியா, இதழ் 88ல் (ஆகஸ்டு 19ஆம் தேதியிட்டது) ''1917ல் பெத்ரொகிராதில் கூடிய விவசாயிகள் பிரதிநிதிகளது முதலாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசுக்கு வட்டாரப் பிரதிநிதிகள் சமர்ப்பித்த 242 கோரிக்கைகளின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட மாதிரிக் கோரிக்கை'' வெளிவந்தது.

வட்டாரங்களிலிருந்து விவசாயிகளின் பிரதிநிதிகள் சமர்ப்பித்த 242 கோரிக்கைகளின் இந்தத் தொகுப்புரை விவசாயிகள் என்ன விரும்புகிறார்கள் என்பதை மிகவும் சிறப்பாய் எடுத்துரைக்கிறது. தொகுத்துத் தரப்பட்டிருக்கும் இந்தக் கோரிக்கை, மாஸ்லவும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியும் தயாரித்திருக்கும் திட்டமானது ஒரு மோசடியே ஆகுமென்பதை மிக நன்றாய்த் தெளிவுபடுத்துகிறது.

விவசாயிகள் கோருவது என்னவெனில்: தனியார் நிலவுடைமை ஒழிக்கப்படுதல்; எல்லாத் தனியார் நிலவுடைமைகளும் இன்ன பிறவும் நஷ்டஈடின்றி மக்கள் அனைவருக்கும் உரித்தான சொத்துக்களாக்கப்படுதல்; உயர் திறனுடன் சாகுபடி செய்யப்படும் நிலப் பரப்புகள் (தோட்டக் காடுகள், கனிச் சோலைகள் முதலானவை) ''முன்மாதிரிப் பண்ணைகளாய்'' ஆக்கப்படுதலும், ''முற்றிலும் அரசாங்கத்தின், கிராமச் சமுதாயங்களின் உபயோகத்துக்குக்காக'' மாற்றப்படுதலும்; ''எல்லாக் கால்நடைகளும் பண்ணை உழுபடைக் கருவிகளும்'' பறிமுதல் செய்யப்படுதலும் இன்ன பிறவும்.

நேரடியாய் விவசாயிகளே சமர்ப்பித்த 242 வட்டாரக் கோரிக்கைகளின் அடிப்படையிலான விவசாயிக் கோரிக்கைகளைப் பற்றிய தெட்டத் தெளிவான வாசகமாகும் இது.

ஆனால் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியானது முதலாளித்துவ வர்க்கத்தாருடனும் (முதலாளிகளுடனும்) நிலப் பிரபுக்களுடனும் ''கூட்டணி'' கொண்டு (அதாவது கூட்டு சேர்ந்து கொண்டு, அல்லது ஒப்பந்தம் செய்து கொண்டு), முதலாளிகள், நிலப்பிரபுக்களது அரசாங்கத்தில் பங்கேற்று, தற்போது தயாரித்திருக்கும் மசோதா நிலப்பிரபுக்களின் நிலவுடைமையை ஒழிக்கவில்லை, அதற்குப் பதில் நிலப்பிரபுக்

களின் நிலங்களில் ஒரு பகுதியை மட்டும் தற்காலிகக் குத்தகை நிலச் சங்கமத்திற்கு மாற்றுகிறது!

இந்த மசோதாவின்படி, தோட்டக்காடுகள், கனிச் சோலைகள், சர்க்கரை வள்ளி வயல்கள் முதலானவை எவையும் குத்தகை நிலச் சங்கமத்தில் சேர்க்கப்பட முடியாது! ''உடைமையாளர், அவருடைய குடும்பம், சிப்பந்திகள், தொழிலாளர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யவோ, இருப்பிலுள்ள கால்நடைகளின் பராமரிப்புக்கு வகை செய்யவோ'' தேவைப்படும் நிலங்களும் இந்தச் சங்கமத்தில் சேர்க்கப்பட முடியாது!

இதன் பொருள் என்னவெனில், சர்க்கரைச் சுத்தியாலை, உருளைக் கிழங்கு பதன ஆலை, எண்ணெய் ஆலை, தானிய அறவை ஆலை, தோட்டக்காடுகள், கனிச் சோலைகள் ஆகிய பலவும், நூற்றுக் கணக்கில் கால்நடைகளும் டஜன் கணக்கில் சிப்பந்திகளும் தொழிலாளர்களும் பெற்றுள்ள செல்வந்த நிலப்பிரபு முதலாளித்துவ வழியில் சாகுபடி செய்யப்படும் ஒரு பெரும் பண்ணையைத் தொடர்ந்து தாமே வைத்துக் கொண்டிருக்கலாம் என்பதுதான். அளவு கடந்த ஆணவத்தோடுதான் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி விவசாயிகளை ஏமாற்றியிருக்கிறது.

நிலப் பிரபுக்களின் நிலங்கள், அல்லது இந்த மசோதாவில் குறிப்பிடப்படுவது போல ''தனியார் உடைமையிலுள்ள'' நிலங்கள், கோமகன் லுவோவ் கும்பலின் தலைமையிலிருந்த நிலப்பிரபுக்களுடைய அரசாங்கத்தால் 1917 ஏப்ரல் 21ஆம் தேதி சட்டத்தின்படி நிறுவப்பட்ட நிலக் கமிட்டிகளால் குத்தகை நிலச் சங்கமத்துக்கு மாற்றப்பட வேண்டுமாம்—தொழிலாளர்கள், விவசாயிகளது இயக்கத்தால் பெத்ரொகிராதில் ஏப்ரல் 20லும் 21லும், அதாவது முழுதாய் ஆறு மாதங்களுக்கு முன்பு, முறியடிக்கப்பட்ட ஏகாதிபத்தியவாதிகளும், வெகுஜனங்களைச் சூறையாடும் கொள்ளையருமான அதே மில்யுக்கோவ், குச்கோவ் அரசாங்கத்தால் நிறுவப்பட்ட நிலக் கமிட்டிகளால் மாற்றப்பட வேண்டுமாம்.

நிலப் பிரபுக்களுடைய இந்த அரசாங்கம் பிறப்பித்த நிலக் கமிட்டிச் சட்டத்தை ஜனநாயக சட்டமாய் (மக்களது சட்டமாய்) கருத முடியவே முடியாது. மாறுக, இதில் ஜனநாயகத்துக்கு மூர்க்கமாய்ப் பங்கம் விளைவிக்கும் எத்தனையோ

அம்சங்கள் முடிவின்றி வரிசையாய் இருக்கின்றன. அதன் பிரிவு 11ஐ எடுத்துக் கொள்ளுங்கள். இது ''மத்திய நிலக் கமிட்டி இறுதித் தீர்ப்பு அளிக்கும் வரையில், வோலொஸ்து, உயெஸ்துக் கமிட்டிகளின் முடிவுகளைச் செயல்படாது நிறுத்தி வைப்பதற்குக் குபேர்னியாக் கமிட்டிகளுக்கு அதிகாரம்'' அளிக்கிறது. நிலப்பிரபுக்களது இந்த மோசடிச் சட்டத்தின்படி, உயெஸ்துக் கமிட்டி வோலொஸ்துக் கமிட்டியைவிடக் குறைவாகவும், குபேர்னியாக் கமிட்டி உயெஸ்துக் கமிட்டியைவிடக் குறைவாகவும், மத்தியக் கமிட்டி குபேர்னியாக் கமிட்டியைவிடக் குறைவாகவும் ஜனநாயக முடைத்ததாய் இருக்குமாறு அமைக்கப்பட்டிருக்கின்றன.

வோலொஸ்து நிலக் கமிட்டி முற்றிலும் வோலொஸ்தின் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவது. ஆனால் உயெஸ்துக் கமிட்டி, இச்சட்டத்தின்படி, இப்பிரிவின் மாஜிஸ்திரேட்டையும், ''தற்காலிக நிர்வாகக் கமிட்டிகளைச்'' சேர்ந்த (புதிய ஊராட்சி அமைப்பு நிறுவப்படுவதற்கு முன்னதான இடைக்காலத்தில்) ஐந்து உறுப்பினர்களும் கொண்டதாய் இருக்க வேண்டும். குபேர்னியாக் கமிட்டியில் சுற்றுலா நீதிமன்றத்தின் உறுப்பினர் ஒருவர், ஒரு மாஜிஸ்திரேட், மற்றும் அமைச்சரால் நியமிக்கப்படும் அமைச்சகப் பிரதிநிதி முதலானோர் அடங்கியதாய் இருக்க வேண்டும். மத்திய நிலக் கமிட்டி ''இடைக்கால அரசாங்கத்தால் இதில் அமரும்படி அழைக்கப்படும்'' 27 உறுப்பினர்களைக் கொண்டதாகும்! ஒவ்வொன்றிலிருந்தும் ஒருவர் வீதம் 11 அரசியல் கட்சிகளிலிருந்து எடுக்கப் பட்டவர்கள் இவ்வுறுப்பினர்களில் அடங்குவர்; இப்படி எடுக்கப்படுவோரில் பெரும்பாலோர் (11ல் 6 பேர்) காடேட்டுகளையும் அவர்களையும்விட வலதுசாரியினராய் இருப்போரையும் சேர்ந்தவர்கள். இம்மசோதாவில் கையெழுத்திட்ட லுவோவும் ஷின்கரியோவும் இவர்களது நண்பர்களும் புரிந்த மோசடி அல்லவா இது? நிலப் பிரபுக்களை மகிழ வைக்கும் பொருட்டு ஜனநாயகத்தை இழித்துப் பழிக்கும் செயல் தானே இது?

விவசாயிப் பிரதிநிதிகளது சோவியத்துகளால் மட்டுமே, உழைப்பாளி மக்கட் பெருந்திரளினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு எந்நேரத்திலும் திருப்பியழைக்கப்படக் கூடியோரான

இப்பிரதிநிதிகளது சோவியத்துகளால் மட்டுமே, விவசாயி களுடைய சித்தம் பிழையின்றி ஒழுங்காய் வெளியிடப்பட்டுச் செயல்படுத்தப்பட முடியுமென மீண்டும் மீண்டும் போல்ஷி விக்குகள் கூறிவந்திருப்பதைத்தானே மெய்ப்பிக்கிறது இது?

பெரும்பான்மை அளவில் விவசாயிப் பிரதிநிதிகளது சோவியத்துகளின் அனைத்து ருஷ்யச் செயற் குழுவுக்கு இவர் களை நம்பிக்கையுடன் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்த விவசாயிகளுக்கு சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் இப் பொழுது துரோகமிழைத்துவிட்டனர். விவசாயி சோவியத்துகளை விலை பேசி **விற்றுவிட்டு நிலப்பிரபுக்களின் பக்கம் சேர்ந்து கொண்டு விட்டனர்,** நிலப்பிரபுவாகிய கோமகன் லுவோவின் நிலக் கமிட்டிச் சட்டத்தை ஏற்றுக் கொண்டுவிட்டனர். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் விவசாயிகளுக்குப் புரிந்திருக்கும் இரண்டாவது பெரிய மோசடி இதில்தான் அடங்கியிருக்கிறது.

கிராமப்புறத்தில் ஆட்சியதிகாரம் அனைத்தும் விவசாயி கள் பிரதிநிதிகளது, விவசாயத் தொழிலாளர் பிரதிநிதி களது சோவியத்துகளுக்கே என்னும் போல்ஷிவிக் கோரிக் கையை மீண்டும் வற்புறுத்துவது, தொழிலாளர் கட்சியின ராகிய நமக்கு இதனுல் முன்னிலும் அதிக அவசர அவசிய மானதாகிவிடுகிறது.

விவசாயிகளுடைய கோரிக்கைகள் நிலப்பிரபுக்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்றும், அதாவது **நஷ்டஈடின்றி** பறிக்கப்பட வேண்டுமென்றும், குதிரை வளர்ப்புப் பண்ணைகளும் தனியார் ஜாதிக் கால்நடை வளர்ப்புப் பண்ணைகளும் கோழிப் பண்ணைகளும் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்றும், உயர் திறன் கொண்ட பண்ணைகள் யாவும் அரசின் உபயோகத்துக்கு மாற்றப்பட வேண்டுமென்றும், நிலப்பிரபுக்களுடைய எல்லாக் கால் நடைகளும் உழுபடைக் கருவிகளும் பறிமுதல் செய்யப்பட வேண்டுமென்றும் கோருகின்றன.

இதற்குப் பதிலாய் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி அமைச்சரது மசோதா **வாரத்தைப் பாதுகாத்துத்** தொடர்ந்து இந்த வாரம் நிலப்பிரபுக்களின் பணப் பெட்டிக்குப் போய்ச் சேரும்படியான ஏற்பாட்டை விவசாயிகளுக்கு வழங்கு கிறது.

''வாரம் இந்தக் கமிட்டிகளிடம் செலுத்தப்பட வேண்டும், இவை'' [அரசாங்க கஜானவுக்கும் பிறவற்றுக்கும் தரப்பட வேண்டிய பல தொகைகள் போக] ''எஞ்சுவதை நியாயமான உடைமையாளரிடம் சேர்ப்பிக்கும்'' என்று கூறுகிறது, சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரது மசோதாவின் 33ஆம் பிரிவு.

தித்திக்கும் வாக்குறுதிகள் தந்து விவசாயிகளை ஏமாற்றி வந்திருக்கும் ''சோஷலிஸ்டு-புரட்சியாளர்'' கட்சியினர் இவ்வாறு இப்பொழுது **நிலப்பிரபு**—காடேட்டு நில மசோதாவை விவசாயிகளுக்கு அன்பளிக்கின்றனர்!

இது கலப்பற்ற தூய மோசடியே அன்றி வேறல்ல.

பறிமுதல் செய்ய வேண்டுமென்ற விவசாயிகளது கோரிக்கையில் எதுவுமே எஞ்சியிருக்கவில்லை. இது நிலப்பிரபுக்களினது சொத்துக்கள் ஒரு ''குடியரசு'' அரசாங்கத்தால் **உறுதியாக்கப்படுதல்** ஆகுமே அன்றி, அவை பறிமுதல் செய்யப்படுதல் அல்ல. இந்த அரசாங்கம் நிலப்பிரபுக்களுக்கு அவர்களுடைய ''சிப்பந்திகள், தொழிலாளர்களுடைய'' பராமரிப்புக்காக உழுபடைக் கருவிகளையும் மற்றும் நிலத்தையும் தாமே **இருத்திக் கொள்ளவும்**, ''சர்க்கரை வள்ளியும் பிற தொழிற் துறைப் பயிர்களும் பயிரிடுவதற்கானவை என்று நிலப்பிரபுவால் குறிக்கப்படும் நிலத்தை'' [அந்த அளவுக்கு எளிதினும் எளிதாக்கப்பட்டுவிடுகிறது!] தாமே **இருத்திக் கொள்ளவும்**, குத்தகை நிலச் சங்கமத்தில் சேர்க்கப்படும் எஞ்சிய நிலங்களுக்கு **வாரத்தொகை** பெறவும் **உறுதியானபடி** ஏற்பாடு செய்கிறது. நிலக் கமிட்டிகள் நில முடைத்த பிரபுக்களுக்கு **வாரம் வசூலித்துக்** கொடுக்கும் சேவகர்களாய் மாற்றப்படுகின்றன!

சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் நிலச் சொத்துகளை ஒழிக்கவில்லை, உறுதி பெறவே செய்கின்றனர். அவர்கள் விவசாயிகளுக்குத் துரோகமிழைத்து நிலப்பிரபுக்களோடு சேர்ந்து கொண்டுவிட்டனர் என்பது இப்பொழுது தெக்கத் தெளிவாய்த் தெரிகிறது.

தந்திரக்காரக் காடேட்டுகள், முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் விசுவாசமிக்க நண்பர்களாய் இருக்கும் இவர்கள், புரிந்து வரும் சூழ்ச்சி வெற்றி பெற அனுமதிக்கலாகாது. சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரது மசோதா பயங்

கரமாய்ப் ''புரட்சிகரமாக'' இருக்கிறதெனக் காடேட்டுகள் பாசாங்கு செய்கின்றனர். இம்மசோதாவை எதிர்த்து முதலாளித்துவப் பத்திரிகைகள் யாவும் பெருங் கூச்சல் எழுப்புகின்றன; இந்தப் ''பயங்கர'' மசோதாவை முதலாளித்துவ அமைச்சர்கள் (கேரென்ஸ்கி போன்ற இவர்களது நேரடியான தாசர்களும் கூடத்தான்) ''எதிர்ப்பதாய்'' இவை அறிவிக்கின்றன. எல்லாம் கபட நாடகம், பித்தலாட்டம். திடமில்லாத சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரை மிரட்டிப் பேரத்தை மேலும் தனக்குச் சாதகமாய் முடித்துக் கொள்ளலாமெனப் பார்க்கும் வர்த்தகரின் வியாபர முயற்சியே இது. உண்மையில் மாஸ்லவின் மசோதா நிலப்பிரபுக்களது மசோதாவே ஆகும்; இவர்களுடன் உடன்பாட்டுக்கு வர வேண்டும், இவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற திட்டவட்டமான நோக்கத்துடன் தயாரிக்கப்பட்ட மசோதாவே ஆகும்.

தியேலோ நாரோதா இந்த இதழ்களில் இது ''ஒப்புயர்வற்ற நில மசோதா, நிலத்தைச் சமூகமயமாக்கும்(!) பொருட்டு மாபெரும்(!!) சீர்திருத்தத்தைத் துவக்கி வைக்கிறது(!!!)'' என்பதாய் எழுதுவது முழுக்க முழுக்கப் பொய்க் கூற்றாகும். இந்த மசோதாவில் ''சமூகமயமாக்குதலின்'' சாயலை (நிலப்பிரபுவுக்கு அவருடைய வாரம் கிடைக்கும்படி உறுதி செய்வதற்காக அவருக்கு அளிக்கப்படும் ''சமூக'' உதவியைத் தவிர்த்து வேறு எதையும்) மருந்துக்குக்கூட காண முடியவில்லை. ''புரட்சிகரமானது அல்லது ஜனநாயகமானது'' எதனுடைய சாயலும் துளியளவுகூட இதில் இல்லை. ஐரோப்பிய முதலாளித்துவச் சீர்திருத்தவாதத்துக்குரிய பொது இயல்பாகிய ஐயர்லாந்து ரகச் ''சீர்திருத்தங்களே''[21] அன்னியில் இதில் வேறு எதுவுமே இருக்கவில்லை.

மீண்டும் இதைக் கூறுகிறேன்: இந்த மசோதா அற்ப விவகாரங்களில் விவசாயிகளுக்கு விட்டுக்கொடுத்து, முக்கிய மானவற்றை நிலப்பிரபுக்கள் தொடர்ந்து தாமே வைத்துக் கொள்ளும்படி விடுவதன் மூலம் நிலப்பிரபுக்களைப் பாதுகாப்பதற்கும், முற்றி வரும் விவசாயி எழுச்சியை ''சாந்தப்படுத்தி அடங்கச் செய்வதற்கு''மான ஒரு மசோதாவாகும்.

இவ்வளவு இழிவான ஒரு மசோதாவை சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்திருப்பதானது, ஆட்சியதிகாரம் சோவியத்துகளுக்கு மாற்றப்பட வேண்டுமென்ற திட்டங்களைக் கொண்டு போல்ஷிவிக்குகள் அரசியல் நிர்ணயச் சபை கூட்டப்படுவதைக் ''குலைப்பதாய்'' குற்றம் சாட்டுவோருடைய நம்ப முடியாத கபடத் தனத்தைத்தான் உண்மையில் கண்கூடாக்குகிறது. ''அரசியல் நிர்ணயச் சபை கூடுவதற்கு 40 நாட்கள்தான் உள்ளன''— இந்தக் கபட வேடதாரிக் கூச்சலில் காடேட்டுகள், முதலாளிகள், நிலப்பிரபுக்கள், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் ஆகிய எல்லோரும் சேர்ந்து கொள்கின்றனர். இதற்கிடையில் விவசாயிகளை ஏய்த்து, அவர்கள் முதுகில் நிலப்பிரபுக்களை அமர்த்தி, நிலப்பிரபுக்களின் நிலவுடைமையை வலுப்பெறச் செய்யும் விஸ்தாரமான ஒரு நில மசோதாவை அரசாங்கம் அவசரமாய்க் கொண்டு வருவதற்குச் சதி புரிகின்றனர்.

மூண்டு வரும் விவசாயி எழுச்சிக்கு எதிராய் நிலப்பிரபுக்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்னும் போது, அரசியல் நிர்ணயச் சபை கூடுமுன் 40 நாட்களிலேயே, ஏன் 30 நாட்களிலுங்கூட விஸ்தாரமான ஒரு மசோதாவை அவசர அவசரமாய்க் கொண்டு வந்துவிட முடியும்.

ஆனால் எல்லா நிலங்களும் விவசாயிகளுக்கு மாற்றப்பட வேண்டும், நிலப்பிரபுக்களின் நிலவுடைமை உடனே ஒழிக்கப்பட வேண்டும், நேர்மையான சமாதானத்துக்கு உடனே பிரேரணை செய்ய வேண்டும் என்னும் பொருட்டு, ஆட்சியதிகாரம் அனைத்தும் சோவியத்துகளுக்கு மாற்றப்பட வேண்டும் என்னும்போது, காடேட்டுகள், முதலாளிகள், நிலப்பிரபுக்கள், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் எல்லோருமாய் ஒன்றுகூடிக் கொண்டு, போல்ஷிவிக்குகளை எதிர்த்துக் காட்டுக் கூச்சல் போடுகிறார்கள்.

சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரால் தாம் எப்படி ஏமாற்றப்பட்டு, நிலப்பிரபுக்களுக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டு துரோகமிழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

தொழிலாளர்களுடைய கட்சி மட்டும்தான், போல்ஷிவிக்குகள் மட்டும்தான் இறுதி வரை, முதலாளிகளுக்கும் நிலப்

பிரபுக்களுக்கும் **எதிராய்,** ஏழை விவசாயிகளின் நலன்களுக் காகவும் உழைப்பாளி மக்கள் **அனைவரின்** நலன்களுக்காகவும் நிற்கத் தயாராய் இருப்பவர்கள் என்பதை விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும்.

1917 அக்டோபர் 20ல்
(நவம்பர் 2) எழுதப்பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 34,
பக்கங்கள் 428-33

நிலத்தைப் பற்றிய உரை

தொழிலாளர்கள், படைவீரர்கள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்தியது 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8)

நிலப் பிரச்சினை தெளிவாய் எடுத்துரைக்கப்படுவது எவ் வளவு முக்கியமென்பதைப் புரட்சியானது நிரூபித்தும் கண் கூடாக்கியும் இருக்கிறதென நாம் கருதுகின்றோம். ஆயுத மேந்திய எழுச்சி, அதாவது இரண்டாவது அக்டோபர் புரட்சி மூண்டதானது, நிலங்கள் விவசாயிகளுக்கு மாற்றப்பட வேண்டுமென்பதைத் தெளிவாய் நிரூபிக்கிறது. வீழ்த்தப்பட்டிருக்கும் அரசாங்கமும், மென்ஷிவிக்குகளின், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் சமரசவாதக் கட்சிகளும் பல நொண்டிக் காரணங்களைக் கூறி நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமல் ஒத்திப் போட்டு வந்தும், இதனால் நாட்டில் பொருளாதாரக் குழப்படியையும் விவசாயிகளது கலகத்தை யும் உண்டாக்கியும் கொடுங் குற்றம் புரிந்தன. கிராமப் புறத்தில் கலகங்களும் அராஜகமும் ஏற்படுமென அவை பேசுவதெல்லாம் பொய்யும் கோழைத்தனமும் ஏய்ப்புமே ஆகும். விவேகமான நடவடிக்கைகளின் மூலம் எங்கே, எப் பொழுது கலகங்களும் அராஜகமும் ஏற்பட்டன? அரசாங்கம் விவேகத்தோடு நடந்து கொண்டிருக்குமானால், அதன் நடவடிக்கைகள் ஏழை விவசாயிகளுடைய தேவைகளுக்கு உகந்தவையாய் இருந்திருந்தால், விவசாயி வெகுஜனங் களிடையே கலவரம் ஏற்பட்டிருக்குமா? ஆனால் அவ்சேன்தி யெவ், டான்[22] சோவியத்துகளின் ஆமோதிப்புடன் அர சாங்கம் மேற்கொண்ட எல்லா நடவடிக்கைகளுமே விவசாயி களுடைய நலன்களுக்கு விரோதமாய் இருந்தன; விவசாயி களே அவைக் கலகம் புரியுமாறு கட்டாயப்படுத்தின.

கலகத்தை மூட்டிவிட்டுக் கலவரங்கள் என்பதாகவும், அராஜகம் என்பதாகவும்அரசாங்கம் ஏகக் கூச்சல் எழுப்பிற்று.

இந்தக் கலவரங்களுக்கும் அராஜகத்துக்கும் அரசாங்கமே தான் பொறுப்பாளி. இந்தக் கலகத்தை அரசாங்கம் இரும்புக் கரங்கொண்டு இரத்த வெள்ளத்தில் மூழ்க்கடிக்கப் பிரயத்தனம் செய்தது, ஆனால் புரட்சிகரப் படையாட்கள், மாலுமிகள், தொழிலாளர்களது ஆயுதமேந்திய எழுச்சியால் அந்த அரசாங்கமே துடைத்தெறியப்பட்டது. தொழிலாளர்கள், விவசாயிகளது புரட்சியினுடைய அரசாங்கத்தின் முதலாவது கடமை நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுதான். இதன் மூலம்தான் மிகப் பெருந்திரளினரான ஏழை விவசாயிகளைச் சாந்தப்படுத்தவும் திருப்திப்படுத்தவும் முடியும். உங்களுடைய சோவியத் அரசாங்கம் பிறப்பிக்க வேண்டிய அரசாணையின் ஷரத்துக்களை உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன். வட்டார விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளுடைய 242 கோரிக்கைகளின் அடிப்படையில் நிலக் கமிட்டிகளுக்காகத் தொகுக்கப்பட்ட கோரிக்கை இந்த அரசாணையின் ஷரத்து ஒன்றில் அடங்கியிருக்கிறது.

நிலத்தைப் பற்றிய அரசாணை

(1) நிலப்பிரபுக்களினது நிலவுடைமை நஷ்டஈடின்றி உடனடியாய் ஒழிக்கப்படுகிறது.

(2) நிலப்பிரபுக்களுடைய பண்ணைகளும் மற்றும் அரச குடும்ப, மடாலய, மதச்சபை நிலங்கள் யாவும், அவற்றின் எல்லாக் கால்நடைகள், உழுபடைக் கருவிகள், கட்டிடங்கள், மற்றும் சம்பந்தப்பட்ட யாவற்றுடன், அரசியல் நிர்ணயச் சபை கூடி முடிவு செய்யும் வரை வோலொஸ்து நிலக் கமிட்டிகளிடமும் உயெஸ்து விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.

(3) பறிமுதல் செய்யப்படும் சொத்துக்களுக்கு—இனி இவை மக்கள் அனைவருக்கும் உரித்தானவை—புரியப்படும் எல்லா விதமான சேதமும் புரட்சி நீதி மன்றங்களால் தண்டிக்கப்பட வேண்டிய கடுங் குற்றங்களாகுமென்று பிரகடனம் செய்யப்படுகிறது. நிலப்பிரபுக்களுடைய பண்ணைகள் பறிமுதல் செய்யப்படுகையில் கண்டிப்பான ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படும்படி உறுதி செய்து கொள்வதற்கும்,

பறிமுதலுக்கு உள்ளாக்கப்பட வேண்டியவை எந்த பரிமாணத்துக்குரிய பண்ணைகள், எந்தெந்த பண்ணைகள் என்பதை நிர்ணயிப்பதற்கும், பறிமுதல் செய்யப்படும் எல்லாச் சொத்துக்களையும் பற்றிய கறாரான பட்டியல்களைத் தயாரிப்பதற்கும், மற்றும் எல்லாக் கட்டிடங்கள், உழுபடைக் கருவிகள், கால்நடைகள், விளைபொருள் கையிருப்புகள் முதலானவற்றுடன் மக்கள் உரிமைக்கு மாற்றப்பட்ட எல்லா விவசாய நிலையங்களையும் கண்டிப்பான புரட்சிகர வழியில் பாதுகாப்பதற்கும் அவசியமான எல்லா நடவடிக்கைகளையும் உயெஸ்து விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(4) 242 வட்டார விவசாயிக் கோரிக்கைகளிலிருந்து **விவசாயிகள் பிரதிநிதிகளது அனைத்து ருஷ்யக் காங்கிரசின் இஸ்வெஸ்தியா** என்பதன் ஆசிரியர் குழுவினால் தொகுக்கப்பட்டு, இந்தப் பத்திரிகையின் 88ஆவது இதழில் (பெத்ரொகிராத், இதழ் 88, 1917 ஆகஸ்டு 19) வெளியிடப்பட்ட பின்வரும் விவசாயிக் கோரிக்கையானது மாபெரும் நிலச் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்படுவதற்கு, இச்சீர்திருத்தங்கள் குறித்து அரசியல் நிர்ணயச் சபை இறுதி முடிவெடுக்கும் வரையில், எங்கும் வழிகாட்டியாய்ப் பயன்பட வேண்டும்.

நிலம் குறித்து விவசாயிகளின் கோரிக்கை

''நிலப் பிரச்சினை அதன் முழு அளவிலும் அனைத்து மக்களது அரசியல் நிர்ணயச் சபையால் மட்டுமே தீர்க்கப்பட முடியும்.

''நிலப் பிரச்சினைக்கு மிகவும் நியாயமான தீர்வு பின்வருமாறு அமைந்திருக்க வேண்டும்:

''(1) **தனியார் நிலவுடைமை என்றென்றுக்குமாய் ஒழிக்கப்பட்டுவிட வேண்டும்.** நிலம் விற்கப்படுதலோ, வாங்கப்படுதலோ, குத்தகைக்கு விடப்படுதலோ, அடமானம் வைக்கப்படுதலோ, வேறு எந்த வழியிலும் பராதீனமாக்கப்படுதலோ கூடாது.

''எல்லா நிலங்களும், **அரசினுடையவையும், அரச குடும்பத்தினுடையவையும், மடாலத்தினுடையவையும், மதச் சபையினுடையவையும், ஆலயினுடையவையும்,**[23] நீங்காச் சாசுவத உரிமையாக்கப்பட்டவையும், தனியுடைமையானவையும், பொதுத் துறைக்குரியவையும், விவசாயினுடையவையும், இன்ன பிறவும் ஆகிய எவையாயினும், நஷ்ட

ஈடின்றி பறிமுதல் செய்யப்பட்டு, மக்கள் அனைவருக்குமாகிய சொத்தாக்கப்பட்டு, அவற்றை உழுது பயிரிடுவோர் அனைவரின் உபயோகத்துக்கு மாற்றப்பட வேண்டும்.

''சொத்துத் துறையிலான இந்தப் புரட்சியால் இழப்புக்குள்ளாவோர் புதிய வாழ்க்கை நிலைமைகளுக்குத் தம்மைத் தகவமைத்துக் கொள்வதற்கு அவசியமான காலத்துக்கு மட்டுமே பொதுக் காப்பாதரவுக்கு உரிமையுடையோராய்க் கருதப்பட வேண்டும்.

''(2) கனி வளங்கள் யாவும்—இரும்புத் தாது, எண்ணெய், நிலக்கரி, உப்பு முதலானவை—மற்றும் அரசு முக்கியத்துவமுள்ள எல்லாக் காடுகளும் நீர் வளங்களும் முற்றிலும் அரசு உபயோகத்துக்கு மாற்றப்பட வேண்டும். எல்லாச் சிறு அருவிகளும் ஏரிகளும் தோப்புகளும் பிறவும் கிராமச் சமுதாயங்களது உபயோகத்துக்கு மாற்றப்பட்டு, ஊராட்சி மன்றங்களால் நிர்வகிக்கப்பட வேண்டும்.

''(3) **உயர்தர விஞ்ஞானச்** சாகுபடி முறைகள் கையாளப்படும் நிலங்கள்—கனிச் சோலைகள், தோட்டக் காடுகள், விதை நிலங்கள், நாற்றங்கால்கள், சேமப் பண்ணைகள் முதலானவை—**பங்கிடப்படலாகாது; இவை முன்மாதிரிப் பண்ணைகளாய்** மாற்றப்பட்டு, இந்நிலங்களின் பரிமாணத்துக்கும் முக்கியத்துவத்துக்கும் ஏற்ப முற்றிலும் **அரசு அல்லது கிராமச் சமுதாயங்களின்** உபயோகத்துக்கு விடப்பட வேண்டும்.

''நகரங்களிலும் கிராமங்களிலுமுள்ள வீட்டுக் கொல்லை நிலங்கள், கனி, காய்கறித் தோட்டங்களைக் கொண்டவை, இவற்றின் தற்போதைய உடைமையாளர்களுடைய உபயோகத்துக்காக ஒதுக்கப்பட்டு, இந்த நிலவுடைமைகளின் பரிமாணமும் இவற்றின் உபயோகத்துக்காக விதிக்கப்பட வேண்டிய வரியின் அளவும் சட்டப்படி நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

''(4) குதிரைப் பண்ணைகளும், அரசாங்க, மற்றும் தனியார் ஜாதிக் கால்நடை வளர்ப்புப் பண்ணைகளும், கோழிப் பண்ணைகளும், இன்ன பிறவும் பறிமுதல் செய்யப்பட்டு, அனைத்து மக்களின் சொத்தாக்கப்பட்டு, இந்தப் பண்ணைகளின் பரிமாணத்துக்கும் முக்கியத்துவத்துக்கும் ஏற்ப முற்றிலும் அரசு அல்லது கிராமச் சமுதாயத்தின் உபயோகத்துக்கு விடப்பட வேண்டும்.

''நஷ்டஈட்டுப் பிரச்சினை அரசியல் நிர்ணயச் சபையால் பரிசீலிக்கப்பட வேண்டும்.

''(5) பறிமுதல் செய்யப்பட்ட பண்ணைகளுடைய எல்லாக் கால்நடைகளும் உழுபடைக் கருவிகளும்

அவற்றின் பரிமாணத்துக்கும் முக்கியத்துவத்துக்கும் ஏற்ப முற்றிலும் அரசு அல்லது கிராமச் சமுதாயத்தின் உபயோகத்துக்கு விடப்பட வேண்டும்; இவற்றுக்கு நஷ்டஈடு எதுவும் கொடுக்கப்படலாகாது.

''சொற்ப அளவே நிலமுடைய விவசாயியின் உழுபடைக் கருவிகள் பறிமுதலுக்கு உள்ளாக்காப்படக் கூடாது.

''(6) நிலத்தை உபயோகித்துக் கொள்வதற்கான உரிமை, தமது சொந்த உழைப்பைக் கொண்டும், தமது குடும்பத்தாரின் துணை கொண்டும், அல்லது கூட்டு சேர்ந்தும் இதைச் சாகுபடி செய்ய விரும்பும் ருஷ்ய அரசுக் குடிமக்கள் எல்லோருக்கும் (ஆடவர், பெண்டிர் என்னும் பேதமின்றி) தரப்பட வேண்டும்; ஆனால் அவர்கள் இந்நிலத்தைச் சாகுபடி செய்யக் கூடியோராய் இருக்கும் வரையில்தான் அவர்களுக்கு இவ்வுரிமை தரப்பட வேண்டும். கூலியுழைப்பை அமர்த்திக் கொள்ளுதல் அனுமதிக்கப்படலாகாது.

''கிராமச் சமுதாயத்தின் உறுப்பினர் எவரும் இரண்டு ஆண்டுகளுக்கு உட்பட்ட காலத்துக்குத் தற்காலிகமாய் உடல் இயலாமைக்கு இலக்காவாராயின், அவர் மீண்டும் வேலை செய்யும் திறனுடையவராகும் வரையில் இந்தக் காலத்துக்கு அவருடைய நிலத்தைக் கூட்டாய்ச் சாகுபடி செய்து அவருக்கு உதவ கிராமச் சமுதாயம் கடமைப்பட்டதாகும்.

''முதிய வயது காரணமாகவோ, உடல் நலக் குறைவு காரணமாகவோ நிரந்தரமாய் ஏலாதோராகி, தாமே நிலத்தைச் சாகுபடி செய்ய முடியாமற் போன விவசாயிகள், இந்நிலத்தை உபயோகிக்கும் உரிமையை இழந்துவிட வேண்டும். இதற்குப் பதில் இவர்கள் அரசிடமிருந்து பென்ஷன் பெற்றுக் கொள்வார்கள்.

''(7) நிலவுரிமை சமத்துவ அடிப்படை கொண்டதாய் இருக்க வேண்டும்; அதாவது வட்டார நிலமை கணிப் பொறுத்து, உழைப்புத் தரம் அல்லது பிழைப்புத் தரத்துக்கு ஏற்ப, நிலம் உழைப்பாளி மக்களிடையே விநியோகிக்கப்பட வேண்டும்.

''நிலவுரிமையின் வடிவங்கள் குறித்து எவ்விதமான தடை வரம்பும் இருக்கலாகாது—அந்தந்த கிராமம் அல்லது குடியேற்றம் தீர்மானித்துக் கொள்வதற்கேற்ப குடும்பம், துண்டிக்கப்பட்ட நிலவுடைமை, சமுதாயம், அல்லது கூட்டுறவு வடிவத்தில் இருக்கலாம்.

''(8) உடைமை நீக்கம் செய்யப்படும் எல்லா நிலங்களும் தேசிய நில நிதியைச் சேர்ந்தவையாகிவிட

வேண்டும். விவசாயிகளிடையே இந்நிலங்களை வினியோகிக்கும் பொறுப்பு, ஜனநாயக முறையில் அமைக்கப்பட்ட கிராம, நகரச் சமுதாயங்களிலிருந்து—இவற்றில் சமூகப் படி நிலைப் பாகுபாடுகள் எவையும் இருக்கக் கூடாது—மத்தியப் பிராந்திய அரசாங்க உறுப்புக்கள் வரையிலான உள்ளூர், மத்திய சுயாட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

''இந்நில நிதியானது மக்கள் தொகையின் பெருக்கத்தையும், பொருளுற்பத்தித் திறனின் அதிகரிப்பையும், சாகுபடி வேலைகளின் விஞ்ஞான வளர்ச்சி நிலையையும் பொறுத்து, காலத்துக்குக் காலம் மறுவினியோகம் செய்யப்படும்.

''விவசாயிகளுக்குப் பிரித்தளிக்கப்பட்ட நிலங்களின் எல்லைகள் மாற்றப்படுகையில், ஆதியில் பிரித்தளிக்கப்பட்டதன் மையக் கூறு மாற்றமின்றி அப்படியே விடப்படும்.

''கிராமச் சமுதாயத்தை விட்டுச் செல்லும் உறுப்பினர்களுடைய நிலம் நில நிதிக்குத் திரும்பி வந்து சேர்ந்துவிடும். விட்டுச் செல்லும் உறுப்பினர்களுடைய நெருங்கிய உறவினர்களுக்கு, அல்லது இவ்வுறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொல்லுவோருக்கு இப்படிப்பட்ட நிலத்தில் முன்னுரிமை தரப்படும்.

''நிலத்துக்கு இடப்பட்ட தாது உரங்களுக்கும், செய்யப்பட்ட அபிவிருத்திகளுக்கும் ஆன செலவுக்காக—பிரித்தளிக்கப்பட்ட இந்நிலம் நில நிதிக்குத் திருப்பித் தரப்படும் காலத்துக்குள் எந்த அளவுக்கு முழுதும் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லையோ அந்த அளவுக்கு—ஈடு அளிக்கப்பட வேண்டும்.

''குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தில் இருக்கக் கூடிய நில நிதி அப்பகுதியில் வாழும் மக்களின் தேவைகளுக்குப் போதுமானதாய் இல்லாமற் போனால், உபரி மக்கள் தொகையினர் வேறெங்கேனும் குடியேற்றப்பட வேண்டும்.

''இந்தக் குடிப் பெயர்ச்சிக்கு ஏற்பாடு செய்யும் பணிக்கு அரசு பொறுப்பேற்று, இதற்கு ஆகும் செலவையும், மற்றும் உழுபடைக் கருவிகளையும் பிறவற்றையும் வழங்குவதற்கு ஆகும் செலவையும் தானே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

''குடிப் பெயர்ச்சி பின்வரும் வரிசையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்: பிறதோர் இடத்தில் குடியேற விரும்பும் நிலமில்லா விவசாயிகள், கிராமச் சமுதாய

உறுப்பினர்களில் தீய பழக்கங்கள் கொண்டோர், துறந் தோடுவோர் முதலானோர், முடிவில் சீட்டுக் குலுக்கி யோ, உடன்பாட்டின் மூலமோ முடிவு செய்யப்படு வோர்.''

அனைத்து ருஷ்யாவிலுமுள்ள வர்க்க உணர்வு படைத்த விவசாயிகளில் மிகப் பெருவாரியானோரின் முடிவான சித்தத்தை வெளியிடுவதாய் இருக்கும் இந்தக் கோரிக்கையின் முழு உள்ளடக்கமும் இடைக்காலச் சட்டமாய்ப் பிரகடனம் செய்யப்படுகிறது. அரசியல் நிர்ணயச் சபை கூட்டப்படும் வரையிலான இடைக்காலத்தில் இது கூடுமான அளவுக்கு உட னடியாகவும், இதன் குறிப்பிட்ட சில பிரிவுகளைப் பொறுத்த மட்டில், உயெஸ்து விவசாயிப் பிரதிநிதிகளது சோவியத்து களால் நிர்ணயிக்கப்படும் பிரகாரம் தக்க அளவுக்குப் படிப் படியாகவும் செயல்படுத்தப்பட வேண்டும்.

(5) சாதாரண விவசாயிகளின் நிலங்களும் சாதாரண கோசாக்குகளின் நிலங்களும் பறிமுதல் செய்யப்பட லாகாது.

* * *

இந்தக் கோரிக்கைகளும், இந்த அரசாணையுங்கூட சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரால் வகுக்கப்பட்டவை என்பதாய் இங்கே குரல்கள் எழுப்பப்படுகின்றன. அதனால் என்ன? இவற்றை வகுத்தோர் யாராய் இருந்தால் என்ன? மக்களில் பெருந் திரளானோரின் முடிவை, அதனுடன் நாம் உடன்பாடு கொண்டிராவிடினும், ஜனநாயக அரசாங்கம் என்ற முறையில் நாம் உதாசீனம் செய்ய முடியாது. விவ சாயிகள் இந்த அரசாணையை நடைமுறையில் அனுசரித்தும் ஆங்காங்கே வட்டாரங்களில் இதைச் செயல்படுத்தியும் சென்று, அனுபவம் என்னும் நெருப்பிலிட்டுப் பார்க்கையில், எங்கே உண்மை இருக்கிறதென்பதைத் தாமே உணர்ந்து கொள்வார்கள். விவசாயிகள் இனியும் தொடர்ந்து சோஷ லிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரைப் பின்தொடர்ந்து செல்

வார்களாயினும், இந்தக் கட்சிக்கு அரசியல் நிர்ணயச் சபையில் பெரும்பான்மை அளிப்பார்களாயினும், அப்பொழுதும் நாம் அதனுல் என்னவாம் என்றேதான் கூறுவோம். அனுபவமே சிறந்த ஆசான், யார் சரி என்பதை அது புலப்படுத்திக் காட்டும். விவசாயிகள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முனையிலிருந்து தீர்வு காணட்டும், நாம் மற்றொரு முனையிலிருந்து தீர்வு காண்போம். அனுபவமானது புரட்சிகர ஆக்கப் பணியின் பொதுவான நீரோட்டத்தில், புதிய அரசு முறையின் வடிவங்களை உருவாக்கி வளர்த்துச் செல்கையில், நம்மை ஒருசேர வந்து இணையும்படிச் செய்யும். நாம் அனுபவத்தால் வழிகாட்டப்பட வேண்டும்; வெகுஜனங்களுடைய ஆக்கத் திறன்களுக்கு நாம் முழுநிறை சுதந்திரம் அளித்திட வேண்டும்; ஆயுதமேந்திய எழுச்சியால் வீழ்த்தப்பட்ட பழைய அரசாங்கம் எந்த மாற்றமுமில்லாப் பழைய ஜாரிஸ்டு அதிகார வர்க்கத்தின் துணை கொண்டு நிலப் பிரச்சினையைத் தீர்க்க விரும்பிற்று. ஆனுல் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதில் அதிகாரவர்க்கமானது விவசாயிகளை எதிர்த்துப் போர்தான் புரிந்தது. நமது புரட்சியின் இந்த எட்டு மாதங்களின் போது விவசாயிகள் கற்றுத் தெரிந்து கெண்டுதான் இருக்கிறார்கள்; நிலப் பிரச்சினைகள் யாவற்றையும் அவர்கள் தாமே தீர்த்துக் கொள்ள விரும்புகிறார்கள். ஆகவே இந்த நகல் சட்டத்துக்குக் கூறப்படக் கூடிய எல்லாத் திருத்தங்களையும் நாம் எதிர்க்கின்றோம். இதில் விவரங்கள் குறிக்கப்பட வேண்டுமென நாம் விரும்பவில்லை, ஏனென்றுல் நாம் வரைவது அரசாணையே அன்றி, செயலின் வேலைத்திட்டமல்ல. ருஷ்யா மிகப் பெரியது, ஸ்தல நிலைமைகள் வேறுபடுகின்றன. விவசாயிகள் தாமே இந்தப் பிரச்சினைக்குப் பிழையற்றவாறும், ஒழுங்காகவும், நாம் செய்யக் கூடியதைக் காட்டிலும் சிறப்பாகவும் தீர்வு காணக் கூடியவர்களென நம்புகிறோம். இதை அவர்கள் நம்முடைய மனப்பாங்குடன் செய்கிறார்களா, அல்லது சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் மனப்பாங்குடன் செய்கிறார்களா என்பதல்ல முக்கிய விவகாரம். விவசாயிகள் ஐயப்பாட்டுக்கு இடமின்றி உறுதியளிக்கப்பட வேண்டுமென்பதுதான், கிராமப்புறத்தில் இனி நிலப்பிரபுக்கள் யாருமில்லை, தாமே இனி எல்லாப் பிரச்சினைகள் குறித்தும் முடிவு செய்து கொள்ளலாம், தமது வாழ்க்கையைத் தாமே

வகுத்துக் கொள்ளலாம் என்று திடமாய் அவர்கள் உறுதி யளிக்கப்பட வேண்டுமென்பதுதான் முக்கிய விவகாரம். (பலத்த வாழ்த்தொலி முழக்கம்.)

இஸ்வெஸ்தியா, இதழ் 209,
1917, அக்டோபர் 28,
பிராவ்தா, இதழ் 171,
1917, நவம்பர் 10 (அக்டோபர் 28)

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 23-27

விவசாயிகள் கேள்விகளுக்குப் பதில்[24]

விவசாயிகள் கேட்கும் எண்ணற்ற கேள்விகளுக்குப் பதி லளிக்கும் முறையில் தெரிவிப்பது என்னவெனில், நாட்டில் ஆட்சியதிகாரம் அனைத்தும் இனி தொழிலாளர்கள், படை வீரர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளுக்கே முற்றிலும் உரியதாகும். தொழிலாளர்களுடைய புரட்சி பெத் ரொகிராதிலும் மாஸ்கோவிலும் வெற்றி பெற்றுவிட்டது, ருஷ்யாவின் ஏனைய எல்லா இடங்களிலும் வெற்றி பெற்று வருகிறது. தொழிலாளர்கள், விவசாயிகளுடைய அரசாங்கம் நிலப்பிரபுக்களுக்கு எதிராய், முதலாளிகளுக்கு எதிராய்த் தொழிலாளர்களுடன் விவசாயிப் பெருந்திரளினரது, ஏழை விவசாயிகளது, பெரும்பான்மை விவசாயிகளது கூட்டணிக்கு வகை செய்கிறது.

எனவே விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகள், பிரதானமாய் உயெஸ்து சோவியத்துகளும், பிறகு குபேர்னியா சோவியத்துகளும் இப்பொழுதிலிருந்து, அரசியல் நிர்ணயச் சபை கூடி முடிவு செய்வதற்கிடையில், அவையவற்றின் பிரதேசப் பிரிவுகளில் முழு அரசாங்க அதிகாரத்துக்கும் உரிமையுடையனவாக்கப்படுகின்றன. நிலப்பிரபுக்களினது நிலவுடைமையானது சோவியத்துகளின் இரண்டாம் அனைத்து ருஷ்யக் காங்கிரசால் ஒழிக்கப்பட்டிருக்கிறது. தற் போதுள்ள தொழிலாளர்கள், விவசாயிகளது இடைக்கால அரசாங்கம் நிலத்தைப்பற்றிய அரசாணை ஒன்றை ஏற்கனவே பிறப்பித்திருக்கிறது. இந்த அரசாணைக்கேற்ப நிலப் பிரபுக் களின் எல்லா நிலங்களும் முற்றிலும் விவசாயிகள் பிரதி நிதிகளது சோவியத்துகளின் கைக்கு மாறிவிடுகின்றன.

வோலொஸ்து நிலக் கமிட்டிகள் உடனே நிலப் பிரபுக்களுடைய எல்லா நிலங்களின் நிர்வாகத்தையும் மேற்கொண்டு, மிகவும் கண்டிப்பான கணக்குப் பதிவுக்கு ஏற்பாடு செய்து, குறையற்ற ஒழுங்கு முறையைப் பேணிக் காக்கவும், முன்பு நிலப்பிரபுக்களது சொத்துக்களாய் இருந்தவற்றை மிகுந்த கண்டிப்புடன் பாதுகாக்கவும் வேண்டும். இனி இந்தச் சொத்துக்கள் மக்கள் அனைவரின் சொத்துக்களாகும், ஆகவே மக்கள் தாமே இவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

உயெஸ்து விவசாயிகள் பிரதிநிதிகளது சோவியத்துகளின் ஆமோதிப்புடன் வோலொஸ்து நிலக் கமிட்டிகள் வெளியிடும் எல்லாத் தீர்வு ஆணைகளும் சட்டத்துக்கு உரிய வலிமையுடையனவாகும்; இவை நிபந்தனையின்றியும் தாமதமின்றியும் நிறைவேற்றப்பட்டாக வேண்டும்.

சோவியத்துகளின் இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசால் நியமிக்கப்பட்ட தொழிலாளர்கள், விவசாயிகளது அரசாங்கம் மக்கள் கமிசாரவை என்பதாய்ப் பெயரிடப்பட்டிருக்கிறது.

விவசாயிகளைத் தத்தமது வட்டாரத்திலும் ஆட்சி யதிகாரம் அனைத்தையும் தாமே மேற்கொள்ளுமாறு மக்கள் கமிசாரவை அவர்களுக்கு அறைகூவல் விடுக்கிறது. விவசாயிகளுக்குத் தொழிலாளர்கள் தமது குறைவிலாத, முழுநிறைவான, சர்வாம்ச ஆதரவை அளிக்கின்றனர்; சாகுபடி இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றின் உற்பத்திக்கு அவர்கள் ஏற்பாடு செய்கின்றனர்; தானியம் வழங்கித் துணை புரியும்படி விவசாயிகளை அவர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

வி. உலியானவ் (லெனின்),
மக்கள் கமிசாரவைத் தலைவர்

பெத்ரொகிராத்,
1917, நவம்பர் 5

நூல் திரட்டு,
தொகுதி 35,
பக்கங்கள் 68-69

இஸ்வேஸ்தியா, *இதழ் 219,*
1917, நவம்பர் 8

மத்தியக் குபேர்னியாக்களின் ஏழை விவசாயிகள் கமிட்டிகளுடைய பிரதிநிதிகளின் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு 1918 நவம்பர் 8

தோழர்களே, ஏழை விவசாயிகளை நிறுவன ஒழுங்கமைப்பு பெறச் செய்ய வேண்டியது நமது உள் நாட்டு நிர்மாணப் பணியிலும், நமது புரட்சி அனைத்திலுங்கூட மிகவும் முக்கியப் பிரச்சினையாய் நம்மை எதிர்நோக்கிறது.

உற்பத்திச் சாதனங்களை மக்கள் அனைவருக்குமான சொத்தாக்கும் பொருட்டு ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் முதலாளிகளுடைய கைகளிலிருந்து பறித்திடுவதும், நிலங்கள் யாவற்றையும் விவசாயிகள் கைக்கு மாற்றுவதன் மூலம் விவசாயத்தைச் சோஷலிச வழிகளில் புனரமைப்பதும்தான் அக்டோபர் புரட்சியின் குறிக்கோளாய் இருந்தது.

இந்தக் குறிக்கோளின் முதற் பாதியை இரண்டாவது பாதியைக் காட்டிலும் மிகவும் சுலபமாகவே நிறைவேற்ற முடிந்தது. நகரங்களில் புரட்சியானது லட்சக் கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கும் பெருவீதத் தொழில்துறை சம்பந்தமாய் நடவடிக்கை எடுத்துச் செயல்பட வேண்டியிருந்தது. ஆலைகளும் தொழிற்சாலைகளும் எண்ணிக்கையில் சொற்பமேயான முதலாளிகளுக்குச் சொந்தமாயிருந்தன, தொழிலாளர்கள் இவர்களைச் சிரமமின்றி சமாளித்துவிட முடிந்தது. முதலாளிகளுக்கு எதிராய் நீண்ட போராட்டம் நடத்தித் தொழிலாளர்கள் இதில் ஏற்கனவே அனுபவம் பெற்றிருந்தனர். இந்தப் போராட்டம் அவர்களுக்கு ஒன்று பட்டு நின்று வைராக்கியத்தோடும் ஒழுங்கமைந்த முறையிலும் செயல்படுவதற்குக் கற்றுத் தந்திருந்தது. தவிரவும் ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் பங்கிட்டுப் பிரிக்க வேண்டியிருக்கவில்லை; தேவையாய் இருந்ததெல்லாம் பொரு

ளுற்பத்தியைத் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் விவசாயிகளுடைய நலன்களுக்கும் சேவை புரிய வைத்து, உழைப்பின் உற்பத்திப் பொருள்கள் முதலாளிகளுடைய கையில் அகப்பட்டுவிடாதபடிச் செய்வதுதான்.

ஆனால் நிலம் சம்பந்தமாய் விவகாரம் முற்றிலும் மாறுனதாய் இருக்கிறது. இங்கு சோஷலிசம் வெற்றி பெறுவதற்கு, இடைக் காலத்துக்குரிய பல நடவடிக்கைகளும் தேவைப்படுகின்றன. ஏராளமான சிறுவீத விவசாயிச் சாகுபடிகளைப் பெருவீதப் பொருளுற்பத்தியாய் மாற்றுவதென்பது உடனடியாய் நடைபெறும் காரியமல்ல. இதுகாறும் தனியாரின் தனிப்பட்ட முறையில் நடைபெற்று வந்துள்ள விவசாயத்தை உடனடியாய் சமூகமயமாக்கிப் பெருவீத அரசுத் தொழில் முயற்சியாய் மாற்றி, சகலருக்குமாகிய சரிசமமான உழைப்பு ஒழுங்கமைப்பின்படி உற்பத்திப் பொருள்கள் உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் சமத்துவ அடிப்படையில் நியாயமாய் வினியோகமாவதற்கான முறையாய்த் திருத்தியமைத்துவிட முடியாது. உடனடியாகவோ, குறுகிய காலத்துக்குள்ளாகவோ இதைச் செய்வது சாத்தியமல்ல என்பது தெளிவு.

நகரங்களில் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்கள் முதலாளிகளை வீழ்த்தி, சுரண்டலின் ஒடுக்குமுறையைத் தகர்த்திடுவதில் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டனர். ஆனால் விவசாய வட்டாரங்களில் சுரண்டலுக்கு எதிராய் இப்பொழுதுதான் மெய்யான போராட்டம் ஆரம்பித்திருக்கிறது.

அக்டோபர் புரட்சிக்குப் பிற்பாடு நாம் நிலப்பிரபுவைத் தோற்கடித்து நிலத்தை அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டோம். ஆனால் விவசாய வட்டாரங்களில் போராட்டம் அதோடு முடிவுற்றுவிடவில்லை. நிலத்தைப் பெறுவதில் கிட்டியிருக்கும் வெற்றியானது, உழைப்பாளர்களது ஏனைய எல்லா வெற்றிகளையும் போலவே, நேரடியாய் உழைப்பாளர்களுடைய சுயேச்சையான செயலையும், அவர்களுடைய சொந்த நிறுவன ஒழுங்கமைப்பையும், அவர்களுடைய கட்டுப்பாட்டையும், புரட்சிகர வைராக்கியத்தையும் ஆதாரமாய்க் கொண்டிருக்கையில் மட்டுமே நிலையானதாய் இருக்க முடியும்.

உழைக்கும் விவசாயிகள் இப்படிப்பட்ட நிறுவன ஒழுங்கமைப்பு பெற்றிருக்கிறார்களா?

துரதிர்ஷ்டவசமாய்ப் பெற்றிருக்கவில்லை, போராட்டம் இவ்வளவு கடினமாய் இருப்பதற்கு இதுவேதான் மூல காரணம்.

ஏனையோரது உழைப்பைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளாத, ஏனையோரை வருத்தி லாபமடிக்காத விவசாயிகள் சரிசமமாய் நிலம் எல்லோருக்கும் பங்கிடப்படுவதை நிச்சயமாய் எப்பொழுதும் ஆதரிப்பவர்கள்; எல்லோரும் வேலை செய்யவேண்டுமென்பதையும், நிலவுடைமையானது சுரண்டலுக்கு ஓர் ஆதாரமாகி விடாமல் இருக்க வேண்டுமென்பதையும், ஆகவே ஏராளமான நிலங்கள் தனிப்பட்ட சிலரிடம் ஒன்றுகுவிந்துவிடக் கூடாதென்பதையும் எப்பொழுதுமே ஆதரிப்பவர்கள். ஆனால் யுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு செல்வம் திரட்டியோரும் பஞ்சத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு கொள்ளை விலைகளுக்குத் தானியம் விற்றோரும், மேலும் உயர்ந்த விலைகள் கிடைக்குமென்று எதிர்பார்த்துத் தானியத்தைப் பதுக்கி வைத்தோரும், இப்பொழுது மக்களது துர்பாக்கியத்தையும் ஏழை விவசாயிகளும் நகரங்களில் தொழிலாளர்களும் பசியால் அவதியுறுவதையும் பயன்படுத்திச் செல்வம் சேர்க்க எல்லா வழிகளிலும் முயலுவோருமாகிய குலாக்குகளும் புல்லுருவிகளும் இப்படியல்ல, வேறு விதமானவர்கள்.

இவர்கள்—இந்தக் குலாக்குகளும் புல்லுருவிகளும்—முதலாளிகளையும் நிலப்பிரபுக்களையும் போல் அதே அளவுக்கு மிகக் கொடும் பகைவர்களே ஆவர். குலாக்குகளுக்குக் கடிவாளமிடவில்லை என்றால், புல்லுருவிகளை நாம் சமாளிக்கவில்லை என்றால், ஜாரும் முதலாளிகளும் திரும்பி வருவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

குலாக்குகளுடைய ஆதிக்கத்தை விவசாயிகள் வீழ்த்தவில்லையானால், புரட்சி தவிர்க்க முடியாதபடி தோல்வியுற்று விடும் என்பதை ஐரோப்பாவில் இதுகாறும் நடைபெற்றிருக்கும் ஒவ்வொரு புரட்சியின் அனுபவமும் கண்கூடாய் நிரூபிக்கின்றது.

விவசாயிகளால் தமது பகைவர்களைச் சமாளிக்க முடியாமற் போனதால் ஐரோப்பியப் பரட்சி ஒவ்வொன்றும்

தோல்வியில் முடிவுற்றது. நகரங்களில் தொழிலாளர்கள் தமது அரசர்களை வீழ்த்தினர் (இங்கிலாந்திலும் பிரான்சிலும் அவர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே தமது அரசர்களைச் சிரச்சேதம் செய்தனர், நாம்தான் நமது ஜார் குறித்து கால தாமதம் செய்தோம்), ஆயினும் சிறிது காலத்திற்கெல்லாம் பழைய அமைப்பே மீண்டும் நிலைநாட்டப்பட்டது. இதற்குக் காரணம் என்னவெனில் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் லட்சக் கணக்கான தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி, விவசாயி களுடைய ஆதரவு இல்லாமலுங்கூட முதலாளிகள், குலாக்கு களின் தாக்குதலை எதிர்த்து நின்று சமாளிப்பதற்குப் போதிய வல்லமை கொண்ட சேனையாய் அவர்களை உறுதி பெறச் செய்யக் கூடிய பெருவீதத் தொழில் துறை அந்நாட் களில் நகரங்களிலுங்கூட இருக்கவில்லை.

ஏழை விவசாயிகள் நிறுவன ஒழுங்கமைப்பின்றி இருந் தனர், குலாக்குகளை எதிர்த்து அவர்கள் சரிவரப் போராட வில்லை. இதன் விளைவாய்ப் புரட்சியானது நகரங்களிலுங்கூட தோற்கடிக்கப்பட்டுவிட்டது.

ஆனால் தற்போதுள்ள நிலைமை வேறு. கடந்த இருநூறு ஆண்டுகளில் பெருவீதப் பொருளுற்பத்தி பிரமாதமாய் வளர்ச்சி பெற்று, ஆயிரக் கணக்கிலும் பத்தாயிரக் கணக்கிலு மான தொழிலாளர்களைக் கொண்ட ஆலைகளாலும் தொழிற் சாலைகளாலுமாகிய வலையமைவை எல்லா நாடுகளிலும் நிறுவிவிட்டது. ஆகவே தற்போது நகரங்களில் எங்கும் நிறு வன ஒழுங்கமைப்பு பெற்ற தொழிலாளர்களை, பாட்டாளி வர்க்கத்தினரைக் கொண்ட பெரிய ஊழியர் படைகள் தோன்றிவிட்டன. இவை முதலாளித்துவ வர்க்கத்தாரின் மீது, முதலாளிகள் மீது இறுதி வெற்றி கொள்ளும்படியான வலு மிகுந்த சக்தியாய் இருந்து வருகின்றன.

முந்திய புரட்சிகளில் ஏழை விவசாயிகள் குலாக்குகளுக்கு எதிராய் நடத்திய கடினப் போராட்டத்தின் போது அவர் களுக்கு ஆதரவளிப்பார் யாரும் இருக்கவில்லை.

நிறுவன ஒழுங்கமைப்பு பெற்ற பாட்டாளி வர்க்கம்— விவசாயிகளைக் காட்டிலும் இவ்வர்க்கத்தினர் அதிகப் பல மும் அனுபவமும் பெற்றிருக்கின்றனர் (இதற்கு முன்பு நடத் திருக்கும் போராட்டங்களில் இவர்கள் இந்த அனுபவத் தைப் பெற்றுக் கொண்டனர்)—இப்பொழுது ருஷ்யாவில்

ஆட்சியதிகாரம் செலுத்துகிறது; ஆலைகள், தொழிற்சாலைகள், ரயில்வேக்கள், கப்பல்கள் முதலான எல்லா உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளனுய் இருக்கிறது.

குலாக்குகளுக்கு எதிராய் ஏழை விவசாயிகள் நடத்தும் போராட்டத்தில் இப்பொழுது இவர்கள் நம்பகமான, சக்தி வாய்ந்த கூட்டாளியைப் பெற்றிருக்கிறார்கள். நகரம் தமக்கு ஆதரவாய் நிற்கிறது, பாட்டாளி வர்க்கம் தமக்குத் துணை புரியும் என்பதை, மெய்யாகவே பாட்டாளி வர்க்கம் தன்னுல் இயன்ற எல்லா வழிகளிலும் ஏற்கனவே தமக்கு உதவி வருகிறது என்பதை ஏழை விவசாயிகள் அறிவர். அண்மைக் கால நிகழ்ச்சிகள் இதைத் தெளிவுபட காட்டியிருக்கின்றன.

தோழர்களே, நடப்பு ஆண்டில் ஜூலை மாதத்தில் புரட்சிக்கு எவ்வளவு அபாயகரமான நிலைமை ஏற்பட்டதென்று உங்களுக்கு நினைவிருக்கும். செக்கோஸ்லோவாக் கலகம்[25] பரவி வந்தது, நகரங்களில் உணவுத் தட்டுப்பாடு மேன் மேலும் கடுமையாகிச் சென்றது, கிராமங்களில் குலாக்குகள் நகரங்கள் மீதும் சோவியத் அரசாங்கத்தின் மீதும் ஏழை விவசாயிகள் மீதும் மேலும் மேலும் ஆணவமாகவும், மேலும் மேலும் மூர்க்கமாகவும் தாக்கி வருகின்றனர்.

ஏழை விவசாயிகளை நிறுவன ஒழுங்கமைப்பு பெறுமாறு நாம் அறைகூவினேம். ஏழை விவசாயிகள் கமிட்டிகளை[26] அமைக்கவும், தொழிலாளர் உணவுப் படைப்பிரிவுகளை வகுத்து ஏற்பாடு செய்யவும் முற்பட்டோம். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் கலகம் புரிய முற்பட்டனர். ஏழை விவசாயிகள் கமிட்டிகள் வேலையற்ற வீணர்களைக் கொண்டதாகுமென்றும், உழைக்கும் விவசாயிகளிடமிருந்து தொழிலாளர்கள் தானியத்தைச் சூறையாடுகின்றனர் என்றும் அவர்கள் பறைசாற்றினர்.

அவர்கள் குலாக்குகளைப் பாதுகாப்பவர்கள் என்று நாங்கள் பதிலளித்தோம்; குலாக்குகள் சோவியத் அரசாங்கத்தை ஆயுதங்களைக் கொண்டு மட்டுமின்றி, பட்டினியைக் கொண்டும் போராடலாம் என்பதை உணர்ந்து கொண்டு விட்டனர் என்றோம். அவர்கள் ''வேலையற்ற வீணர்கள்'' என்பதாய்ப் பேசினர். நாங்கள் கேட்டோம்: ''குறிப்பிட்ட எந்த ஆளும் 'வேலையற்ற வீணர்' ஆவானேன், சீரழிவானேன், வறுமையுறுவானேன்? ஏன் அவர் குடிகாரராக வேண்டும்?

இதற்குக் காரணம் குலாக்குகள்தானே?'' இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரைப் போலவே குலாக்குகளும் ''வேலையற்ற வீணர்கள்'' என்னும் கூச்சலைக் கிளப்பினர். ஆனால் குலாக்குகள் தானியத்தை மூட்டை கட்டிக் கொண்டு விடுகின்றனர்; அதை ஒளித்து வைத்து, கொள்ளை லாபத்துக்கு விற்று, தொழிலாளர்களுடைய பசியையும் துன்பத்தையும் கொண்டு செல்வந்தர்களாகிவிட விரும்புகின்றனர்.

குலாக்குகள் ஏழை விவசாயிகளைக் கசக்கிப் பிழிகின்றனர். ஏனையோரது உழைப்பைக் கொண்டு ஆதாயமடைந்து கொண்டு, அதேபோது ''வேலையற்ற வீணர்கள்'' என்பதாய்க் கூச்சல் போடுகின்றனர்.

அடங்காத ஆவலோடு குலாக்குகள் செக்கோஸ்லோவாக்கியர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அச்சமின்றி தமது சுரண்டலைத் தொடர்ந்து நடத்திச் செல்லும் பொருட்டு, கூலித் தொழிலாளர்கள் மீது தொடர்ந்து ஆதிக்கம் புரியும் பொருட்டு, தொடர்ந்து மேலும் செல்வந்தர்களாகும் பொருட்டு, முற்றும் மனமிசைந்து அவர்கள் ஒரு புதிய ஜாரை அரியாசனத்தில் அமர்த்தியிருப்பார்கள்.

இதிலிருந்து தப்ப முடிந்ததற்கு முற்றிலும் ஒரேயொரு உண்மைதான் காரணம்—கிராமம் நகரத்துடன் ஒன்று பட்டது, கிராமத்தின் பாட்டாளி, அரைப்பாட்டாளிப் பகுதியினர் (அதாவது, ஏனையோரது உழைப்பைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளாதவர்கள்) நகரத்துத் தொழிலாளர்களுடன் ஒன்றுசேர்ந்து குலாக்குகளுக்கும் புல்லுருவிகளுக்கும் எதிராய் இயக்கம் ஆரம்பித்தனர் என்ற ஒரேயொரு உண்மைதான் காரணம்.

இந்த ஒற்றுமையைச் சாதிப்பதற்காக, குறிப்பாய் உணவு நிலைமை சம்பந்தமாய் மிகுதியாய்ப் பலவும் செய்ய வேண்டியிருந்தது. நகரங்களில் தொழிலாளி வர்க்க மக்கட் பகுதியோர் உணவின்றிப் பசியால் வதைபட்டு வந்தனர். ஆனால் குலாக்குகள் ''இன்னும் சிறிது காலம் என்னுடைய தானியத்தை இருத்தி வைத்திருந்தால், மேலும் கூடுதலாய் விலை கொடுத்தாலும் கொடுப்பார்கள்'' என்று கூறிக் கொண்டிருந்தனர்.

குலாக்குகளுக்கு அவசரமில்லைதான், அவர்களிடம் நிறைய பணம் இருந்தது. கேரென்ஸ்கி நோட்டுகளை[27] ராத்தல்

கணக்கில் சேமித்து வைத்திருப்பதாய் அவர்களே சொல் கிறார்கள்.

பஞ்ச காலத்தில் தானியத்தைப் பதுக்கி வைத்துச் சேமிக்கக் கூடியவர்கள் மிகக் கொடும் குற்றமிழைக்கிற வர்கள் ஆவர். மக்களுடைய மிகக் கொடும் பகைவர்களாய்க் கருதி அவர்களே எதிர்த்துப் போராடியாக வேண்டும்.

கிராமப்புறங்களில் இந்தப் போராட்டத்தை நாம் தொடங்கிவிட்டோம்.

ஏழை விவசாயிகள் கமிட்டிகளே அமைப்பதன் மூலம் விவ சாயிகளிடையே நாம் பிளவை ஏற்படுத்துவதாய்ச் சொல்லி மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் நம்மை பீதியுறச் செய்யலாமெனப் பார்த்தனர். விவசாயி களிடையே பிளவை ஏற்படுத்தாமல் இருப்பதென்பதன் அர்த்தம் என்ன? அவர்களைக் குலாக்குகளின் தயவில் விடுவ தென்பதே அதன்அர்த்தம். நாம் விரும்பாதது இதுவேதான்; ஆகவே நாம் விவசாயிகளிடையே பிளவை ஏற்படுத்துவ தெனத் தீர்மானம் செய்தோம். நாங்கள் கூறினோம்: மெய் தான், குலாக்குகளை நாம் இழக்கவே செய்கிறோம், இந்தத் துர்பாக்கியத்தை மூடிமறைக்கமுடியாதுதான் (சிரிப்பு); ஆனால் லட்சோப லட்சக் கணக்கான ஏழை விவசாயிகளை நம்முடன் சேர்ந்து கொள்ளும்படிக் கவர்ந்திழுப்போம், இவர்கள் தொழிலாளர்களுடைய பக்கத்துக்கு வந்துவிடுவார்கள். (கையொலி முழக்கம்.)

இதுவேதான் நடை பெற்று வருகிறது, விவசாயி களிடையே உண்டான பிளவு யார் ஏழை விவசாயிகள், யார் பிறர் உழைப்பைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளாத நடுத்தர விவசாயிகள், புல்லுருவிகளும் குலாக்குகளுமாகியோர் யார் என்பதை இது மேலும் தெளிவாய்த் தெரியப்படுத்துவதற்கு உதவி புரிந்தது.

ஏழை விவசாயிகள் குலாக்குகளுக்கு எதிராய் நடத்தும் போராட்டத்தில் அவர்களுக்குத் தொழிலாளர்கள் உதவி யுள்ளனர்; தொடர்ந்து உதவியும் விருகின்றனர். கிராமப்புறத் தில் மூண்டிருக்கும் உள்நாட்டுப் போரில் தொழிலாளர்கள் ஏழை விவசாயிகளின் பக்கம் நிற்கின்றனர். நிலத்தை சமூகமயமாக்கும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் சட்டத்தை அவர்கள் நிறைவேற்றிய போது செய்தது

போலவே, இப்பொழுதும் தொழிலாளர்கள் ஏழை விவசாயிகளுக்கு உதவியாய் நிற்கின்றனர்.

நிலத்தை சமூகமயமாக்கும் சட்டத்தை போல்ஷிவிக்குகளாகிய நாம் எதிர்த்தோம், ஆயினும் நாம் இச்சட்டத்தில் கையெழுத்திட்டோம். ஏனென்றால் பெரும்பான்மையான விவசாயிகளது சித்தத்துக்கு மாறுய்ச் செல்ல நாங்கள் விரும்பவில்லை. பெரும்பான்மையோரின் சித்தத்துக்கு எப்பொழுதுமே நாங்கள் கட்டுப்பட்டவர்கள், பெரும்பான்மையோரின் சித்தத்தை எதிர்ப்பது புரட்சிக்குத் துரோகமிழைப்பதாகும்.

நிலத்தைச் சரிசமனமாய்ப் பிரித்துக் கொள்வது பயனற்றதாகுமென்ற கருத்தை, விவசாயிகளுக்கு ஒவ்வாததாயிருந்த இக்கருத்தை, நாங்கள் பலவந்தமாய் விவசாயிகள் மீது திணிக்க விரும்பவில்லை. உழைக்கும் விவசாயிகள் தமது அனுபவத்தின் வாயிலாய், தமது துயரத்தின் வாயிலாய், சரிசமனப் பங்கீடு அபத்தமாகும் என்பதைத் தாமே உணர்ந்து கொள்வதுதான் நல்லதெனக் கருதினோம். அப்பொழுதுதான் நாம் அவர்களிடம் கேட்க முடியும்: நிலத்தைப் பங்கிட்டுப் பிரித்துக் கொள்வதால் உண்டாகும் அழிபாட்டிலிருந்தும், குலாக்கு ஆதிக்கத்திலிருந்தும் தப்பிக்கும் வழிதான் என்ன என்று அவர்களிடம் கேட்க முடியும்.

நிலத்தைப் பங்கிட்டுப் பிரித்துக் கொள்வது ஒரு தொடக்கம் என்ற அளவில் நல்லதுதான். நிலமானது நிலப்பிரபுக்களிடமிருந்து எடுக்கப்பட்டு, விவசாயிகளின் கைக்கு மாற்றப்படுகிறதென்று காட்டுவதே அதன் நோக்கம். ஆனால் இது போதாது. நிலத்தைச் சமூக முறையில் சாகுபடி செய்வதுதான் தீர்வு காண்பதற்குரிய ஒரே வழி.

இதை நீங்கள் அன்று உணர்ந்து கொள்ளவில்லை. ஆனால் அனுபவத்தின் சக்தியானது மறுக்கமுடியாத இந்த உண்மையை நோக்கி உங்களை இட்டுச் செல்கிறது. சிறுவீதச் சாகுபடியின் குறைபாடுகளிலிருந்து மீள்வதற்குரிய வழி கம்யூன்கள் தான், கூட்டு நிறுவனங்கள் அல்லது விவசாயிக் கூட்டிணைவுகள் மூலம் சாகுபடி செய்வதுதான். அதுவே விவசாயம் உயர்ந்தோங்கி மேம்படுவதற்கும், சக்திகளது சிக்கன ஒழுங்குக்கும், குலாக்குகளையும் புல்லுருவிகளையும் சுரண்டலாளர்களையும் எதிர்த்துப் போராடுவதற்கும் உரிய வழி.

விவசாயிகள் நிலத்துடன் கட்டுண்டு வாழ்கிறவர்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். புதுமுறைகளைக் கையாள அவர்கள் அஞ்சுகிறவர்கள், பழைய பழக்கங்களை விடாப்பிடியாய்ப் பற்றிக் கொள்கிறவர்கள். குறிப்பிட்ட எந்தவொரு நடவடிக்கையாலும் ஏற்படும் நன்மைகளை அவர்கள் தமது சொந்த புத்தியால் உந்தப்பட்டுப் புரிந்து கொள்ளவும் மதித்துப் போற்றவும் நேரும் போதுதான் இந்த நடவடிக்கையின் நன்மைகளில் நம்பிக்கை கொள்கிறவர்கள் என்பது நமக்குத் தெரியும். ஆதலால்தான் நாம் நிலப் பங்கீட்டால் தீர்வு ஏற்படாது என்று உணர்ந்திருந்த போதிலும், நிலம் பங்கிட்டுப் பிரிக்கப்படுவதற்கு உதவி செய்தோம்.

ஆனால் இப்பொழுது ஏழை விவசாயிகள் தாமாகவே நம்முடன் கருத்து உடன்பாடு கொள்ளத் தலைப்பட்டுள்ளனர். நிலம் நூறு சிறு துண்டுகளாய்க் கூறு போடப்பட்டுத் தனித் தனியே சாகுபடி செய்யப்படுகையில் பத்து ஏர்கள் வேண்டியிருக்கிறதெனில், சமூகக் கூட்டுச் சாகுபடியில் இதைவிடக் குறைவான ஏர்களே போதும், ஏனெனில் நிலம் இப்பொழுது அவ்வளவு சின்னஞ் சிறு துண்டுகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. இதை அவர்கள் தமது அனுபவ வாயிலாய்க் கற்றுக் கொண்டு வருகிறார்கள். தனிப்பட்ட சிறு உடைமையாளர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்ட அபிவிருத்திகளை விவசாயத்தில் கொண்டுவருவதற்கு கம்யூனானது ஒரு பெரிய கூட்டு நிறுவனம் அல்லது கூட்டிணைவு மூலம் வகை செய்கிறது. இதையன்றி மற்றும் பல அனுகூலங்களும் இருக்கின்றன.

உடனடியாகவே எங்கும் நிலத்தைச் சமூக முறையில் சாகுபடி செய்ய முற்பட்டுவிட முடியாதுதான். குலாக்குகள் இதை எல்லா வழிகளிலும் எதிர்ப்பார்கள்—அதோடு, விவசாயிகளுங்கூட சமூகக் கூட்டுக் கோட்பாடுகள் விவசாயத்தில் அனுசரிக்கப்படுவதைப் பிடிவாதமாய் எதிர்ப்பார்கள். ஆனால் உதாரணத்தின் மூலமும், தமது சொந்த அனுபவத்தின் மூலமும் கம்யூன்களது அனுகூலங்களை எவ்வளவுக்கு எவ்வளவு ஐயமற விவசாயிகள் உணர்ந்து கொள்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு வெற்றிகரமாய் முன்னேற்றம் கைவரப் பெறும்.

இத்துறையில் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் அளவு கடந்த முக்கியத்துவம் வாய்ந்த பங்காற்றும். ஏழை விவசாயிகள் கமிட்டிகள் ருஷ்யாவெங்கும் பரவலாய்த் தோன்றியாக வேண்டும். நீண்ட காலமாய் ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் வளர்ச்சி மும்முரமாய் நடைபெற்று வந்திருக்கிறது. வட பிராந்தியத்தின் ஏழை விவசாயிகள் கமிட்டிகளது காங்கிரஸ் அன்று பெத்ரொகிராதில் நடைபெற்றது. ஏழாயிரம் பிரதிநிதிகள் வருவார்களென எதிர்பார்க்கப்பட்டது, உண்மையில் இருபதாயிரம் பேர் வந்துவிட்டனர். காங்கிரசுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மண்டபம் வந்திருந்தோர் எல்லோரும் அமருவதற்குப் போதவில்லை. பருவநிலை நல்லபடியாய் இருந்ததால், குளிர்கால அரண்மனைக்கு வெளியே சதுக்கத்தில் கூட்டத்தை நடத்த முடிந்தது, சங்கட நிலைமையிலிருந்து தப்ப முடிந்தது.

கிராமப்புறத்தில் உள்நாட்டு யுத்தத்தைப் பற்றி சரிவர புரிந்து கொண்டு வருகிறார்கள், ஏழை விவசாயிகள் ஒன்று பட்டு வருகிறார்கள், குலாக்குகளுக்கும் செல்வந்தர்களுக்கும் புல்லுருவிகளுக்கும் எதிராய் உறுதியான அணிவரிசைகளாய்த் திரண்டிருக்கிறார்கள் என்பதை இந்தக் காங்கிரஸ் புலப்படுத்திற்று.

நமது கட்சியின் மத்தியக் கமிட்டி ஏழை விவசாயிகள் கமிட்டிகளைத் திருத்தியமைப்பதற்கு ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. சோவியத்துகளின் ஆறுவது காங்கிரசினுடைய அங்கீகாரத்துக்காக இத்திட்டம் சமர்ப்பிக்கப்படும். கிராம வட்டாரங்களில் ஏழை விவசாயிகள் கமிட்டிகளும் சோவியத்துகளும் தனித் தனி அமைப்புகளாய் இருக்கக் கூடாது, அப்படி இருக்கும் வரை பூசலும் மிதமிஞ்சிய வீண் பேச்சும் இருக்கவே செய்யும் என்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். ஏழை விவசாயிகள் கமிட்டிகளை நாம் சோவியத்துகளுடன் இணைக்கப் போகிறோம், ஏழை விவசாயிகள் கமிட்டிகளை சோவியத்துகளாய் மாற்றப் போகிறோம்.

குலாக்குகள் சில சமயங்களில் ஏழை விவசாயிகள் கமிட்டிகளினுள்ளும் ஊடுருவிக் கொண்டு விடுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். இது தொடர்ந்து நடைபெறுமாயின் ஏழை விவசாயிகள் முன்பு கேரென்ஸ்கி, அவ்க்சேன்தியெவின் குலாக்கு சோவியத்துகளின் பால் கொண்டிருந்த அதே

மாதிரியான போக்கைத்தான் ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் பாலும் அனுசரிப்பார்கள். பெயரின் மாற்றத்தைக் கண்டு யாரும் ஏமாந்துவிட மாட்டார்கள். ஆகவே ஏழை விவசாயிகள் கமிட்டிகளுக்குப் புதிய தேர்தல்கள் நடத்த வேண்டுமென்று பிரேரணை செய்யப்படுகிறது. ஏனையோரது உழைப்பைச் சுரண்டாதவர்கள் மட்டுமே, கொள்ளையடிப்பதற்கான ஒரு ஆதாரமாய் மக்களுடைய பசியைப் பயன்படுத்தாதவர்கள் மட்டுமே, உபரி தானியத்தைக் கொண்டு கொள்ளை லாபமடிக்காதோரும் இந்த உபரி தானியத்தைப் பதுக்காதவர்களும் மட்டுமே ஏழை விவசாயிகள் கமிட்டிகளுக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை பெறுவார்கள். குலாக்குகளுக்கும் புல்லுருவிகளுக்கும் பாட்டாளி வர்க்க ஏழை விவசாயிகள் கமிட்டிகளில் இடமளிக்கலாகாது.

விவசாய அபிவிருத்திக்காக சோவியத் அரசாங்கம் நூறு கோடி ரூபிளை ஒரு தனி நிதியாய் ஒதுக்குவதென்று முடிவு செய்திருக்கிறது. தற்போதுள்ள எல்லாக் கம்யூன்களுக்கும் மற்றும் புதிதாய் அமைக்கப்படும் எல்லாக் கம்யூன்களுக்கும் பண உதவியும் தொழில்நுட்ப உதவியும் அளிக்கப்படும்.

பயிற்சி பெற்ற வித்தகர்கள் தேவைப்படுவார்களாயின் அவர்களை நாங்கள் அனுப்பி வைப்போம். இவர்களில் பெரும்பான்மையோர் எதிர்ப்புரட்சியாளர்களே என்றாலும், ஏழை விவசாயிகள் கமிட்டிகளால் இவர்களுக்குக் கடிவாளமிட்டு இவர்களை உபயோகித்துக் கொள்ள முடியும். சுரண்டலாளர்களுக்காக முன்பு எப்படி வேலை செய்தார்களோ, அதைவிட மோசமாய் இல்லாதபடி மக்களுக்காக இப்பொழுது அவர்கள் வேலை செய்வார்கள். பொதுவாய் நமது அறிவுத் துறையினர் சீர்குலைவின் மூலமும், வேண்டுமென்றே வேலைக்குக் குந்தகம் செய்வதன் மூலமும் தொழிலாளர்களுடைய அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட முடியாதென ஐயமற ஏற்கனவே கண்டு கொண்டுவிட்டனர்.

அந்நிய ஏகாதிபத்தியமும் நம்மைக் கிலிகொள்ளச் செய்யவில்லை. ஜெர்மனி ஏற்கனவே உக்ரேனில் சூடுபட்டிருக்கிறது. உக்ரேனிலிருந்து ஆறு கோடி பூடு* தானியத்தை

---

* 16.38 கிலோகிராமுக்குச் சமமான பழைய ருஷ்ய நிறுத்தல் அளவை.—[பதிப்பாசிரியர்.]

அள்ளிச் சென்று விடலாமென நினைத்திருந்த ஜெர்மனிக்கு 90 லட்சம் பூடுகளே கிடைத்திருக்கின்றன, இவற்றுடன் கூடவே ருஷ்ய போல்ஷிவிசமும் அதற்குக் கிடைத்திருக்கிறது, இதன் பால் அதற்குக் குறிப்பிடத்தக்க அபிமானம் இருப்பதாய்ச் சொல்வதற்கில்லை. **(இடியென அதிரும் கையொலி முழக்கம்.)** பிரிட்டிஷ்காரர்கள் இதே நிலைமை தமக்கும் ஏற்படாதபடி கவனித்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு நாம், சொல்லக் கூடியது இதுதான்: ''ஜாக்கிரதை! கழுத்தை முறித்துக் கொள்ளாதீர்கள்!'' **(சிரிப்பும் கையொலி முழக்கமும்.)**

ஆயினும் வெளிநாடுகளில் நமது சோதரர்கள் எங்கும் கிளர்ந்தெழாத வரை, தொடர்ந்து நம்மை அபாயம் எதிர் நோக்கவே செய்கிறது. ஆகவே நாம் நமது செஞ்சேனையைத் தொடர்ந்து ஒழுங்கமைத்து வன்மையும் திண்மையும் பெறச் செய்தாக வேண்டும். முக்கியமாய் ஏழை விவசாயிகள் இந்த விவகாரத்தில் அக்கறை கொண்டாக வேண்டும், ஏனெனில் நமது சேனையின் பாதுகாப்பிலேதான் அவர்கள் தமக்குரிய பொருளாதார வேலைகளை நடத்திச் செல்ல முடியும்.

தோழர்களே, புதிய வடிவிலான விவசாயத்துக்கு மாறிச் செல்லுதல் மெல்லவே நடந்தேறுவதாய் இருக்கலாம், ஆயினும் சமூக முறையிலான சாகுபடிக்குரிய துவக்கங்களைத் தளராத உறுதியோடு நடைமுறைக்குக் கொண்டுவந்தாக வேண்டும்.

குலாக்குகளுக்கு எதிரான போராட்டம் முழு மூச்சுடன் நடத்தப்பட்டாக வேண்டும், அவர்களுடன் எவ்விதச் சமரசங்களும் வேண்டியதில்லை.

நாம் நடுத்தர விவசாயிகளுடன் சேர்ந்து வேலை செய்ய முடியும், அவர்களுடன் சேர்ந்து குலாக்குகளை எதிர்த்துப் போராட முடியும். நடுத்தர விவசாயிகள் நமக்கு எவ்விதத் திலும் எதிரானவர்கள் அல்ல. அவர்கள் சோஷலிஸ்டுகளாய் இல்லாமலிருக்கலாம், என்றுமே அவர்கள் சோஷலிஸ்டுகளாகாமலும் இருக்கலாம். ஆனால் நிலத்தைச் சமூக முறையில் சாகுபடி செய்வதன் அனுகூலங்களை அனுபவமானது அவர்களுக்குக் கற்றுத் தரும், அவர்களில் பெரும்பான்மையோர் இதை எதிர்த்து நிற்க மாட்டார்கள்.

குலாக்குகளிடம் நாம் சொல்வது இதுதான்: உங்களுக்கும் நாங்கள் எதிரானவர்கள் அல்ல; ஆனால் உங்களுடைய

உபரி தானியத்தைக் கொடுத்துவிடுங்கள்; கொள்ளை லாபம் அடிக்காதீர்கள்; ஏனையோரது உழைப்பைச் சுரண்டாதீர்கள். இவ்வாறன்றி நீங்கள் வேறு விதமாய்ச் செய்கிற வரை உங்கள்மீது ஈவிரக்கமில்லாப் போர் நடத்தவே செய்வோம்.

உழைப்பாளர்களிடமிருந்து நாம் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை, ஆனால் கூலிக்கு உழைப்பை அமர்த்திக் கொள்வோரை, ஏனையோரை வருத்தித் திரவியம் திரட்டுவோரை நாம் அறவே உடைமை நீக்கம் செய்வோம். (பேரார்வமிக்க கையொலி முழக்கம்.)

பெத்னத்தா, இதழ் 185,
1918, நவம்பர் 10

நூல் திரட்டு,
தொகுதி 37
பக்கங்கள் 175-82

நில இலாகாக்கள், ஏழை விவசாயிகள் கமிட்டிகள், கம்யூன்களின் முதலாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசில் நிகழ்த்திய சொற்பொழிவு 1918 டிசம்பர் 11

(பேரார்வமிக்க கரகோஷம், வாழ்த்தொலி முழக்கம். எல்லோரும் எழுகின்றனர்.) தோழர்களே, சோஷலிச நிர்மாணப் பணியில், குறிப்பாய் நமது நாட்டுக்கு மிகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த விவசாய உறவுகளின் துறையில் ஏற்பட்டிருக்கும் ஆழ்ந்த மாற்றத்துக்கும், நாம் — நமது சோவியத் குடியரசு—கண்டிருக்கும் மாபெரும் முன்னேற்றத்துக்கும், என்னுடைய அபிப்பிராயத்தில், இந்தக் காங்கிரசின் இயைபே ஓர் அறிகுறியாகும். நில இலாகாக்கள், ஏழை விவசாயிகள் கமிட்டிகள், விவசாயக் கம்யூன்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டதாகும் தற்போதைய காங்கிரஸ். இந்த இணைவானது நமது புரட்சி விவசாய உறவுகளைத் திருத்தியமைப்பதில் எவ்வளவு பிரமாத முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது—திருத்தியமைப்பதற்கு இவ்வுறவுகள்தான் எளிதில் திருத்தியமைக்கப்பட முடியாத படி மிகவும் கடினமானவை; முந்திய எல்லாப் புரட்சிகளிலும் இவைதாம் சோஷலிச இலட்சியத்துக்கு மிகப் பெரிய முட்டுக்கட்டையாய் இருந்துள்ளவை; ஆனால் சோஷலிசத்தின் வெற்றியை உறுதி செய்ய இவைதாம் அடியோடு பூரணமாய்த் திருத்தியமைக்கப்பட வேண்டியவை.

நமது புரட்சியின் வளர்ச்சியில் அக்டோபருக்குப் பிற்பாடான முதலாவது கட்டமானது—முதலாவது காலக்கூறானது—விவசாயிகள் எல்லோருக்கும் பொதுப் பகைவர்களாகிய நிலப்பிரபுக்களைத் தோற்கடிப்பதில் பிரதானமாய் ஈடுபட்டிருந்தது.

தோழர்களே, பிப்ரவரிப் புரட்சியுங்கூட—முதலாளித்துவ வர்க்கத்தாரின் இந்தப் புரட்சியுங்கூட, சமரசவாதிகளது

இந்தப் புரட்சியுங்கூட—நிலப்பிரபுக்கள் மீது விவசாயிகளுக்கு வெற்றி கிட்டச் செய்யப் போவதாய் வாக்குறுதி செய்ததென்பதையும், இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லையென்பதையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். அக்டோபர் புரட்சியால் மட்டுமே, நகரங்களில் தொழிலாளி வர்க்கத்துக்குக் கிட்டிய வெற்றியால் மட்டுமே, சோவியத்துகளின் அரசாங்கத்தால் மட்டுமே ருஷ்யா அனைத்தையும், ஒரு முனையிலிருந்து மறு முனை வரையில், பழைய பிரபுத்துவ மர புரிமையெனும் கொடும் பிணியிலிருந்து—பழைய பிரபுத்துவச் சுரண்டலிலிருந்தும், பிரபுத்துவ நிலவுடைமையிலிருந்தும், ஒட்டுமொத்தமாய் விவசாயிகள் மீதான, பேதமின்றி எல்லா விவசாயிகளின் மீதான நிலப்பிரபுக்களது ஒடுக்குமுறையிலிருந்தும்—விடுவிக்க முடிந்தது.

நிலப்பிரபுக்களுக்கு எதிரான இந்தப் போராட்டம் விவசாயிகள் எல்லோரும் நிச்சயமாய்ப் பங்கெடுக்க வேண்டிய ஒன்றாய் இருந்தது, அவ்வாறே இவர்கள் பங்கெடுக்கவும் செய்தனர். ஏனையோரது உழைப்பைச் சுரண்டி வாழாதோராகிய உழைக்கும் ஏழை விவசாயிகளே இந்தப் போராட்டம் ஒன்றுபடச் செய்தது. ஆனால் அது விவசாயிகளில் மிகவும் வசதி படைத்த பகுதியையும், செல்வந்தப் பகுதியையுங் கூட—கூலி ஆட்களின்றி வாழ முடியாத இப்பகுதியையும்—ஒன்றுபடச் செய்தது.

நமது புரட்சி இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த வரை, நிலப்பிரபுக்களுடைய ஆதிக்கத்தைத் துடைத்தகற்றி அறவே ஒழித்துக் கட்டுவதற்காக, நகரத் தொழிலாளர் இயக்கத்தின் துணையுடன் நடைபெற்ற விவசாயிகளது சுயேச்சையான இயக்கத்துக்காக நாம் முழு மூச்சுடன் முனைந்து பாடுபட வேண்டியிருந்த வரை, புரட்சியானது பொதுவான விவசாயிப் புரட்சியாகவே இருந்து வந்தது; ஆகவே அதனால் முதலாளித்துவ வரம்புகளுக்கு அப்பால் செல்ல முடியவில்லை.

இன்னமும் அது, அனைத்து உழைப்பாளி மக்களின் மேலும் சக்தி வாய்ந்த, மேலும் நவீன காலத்திய பகையாகிய மூலதனத்தைத் தொடாமலே இருந்தது. ஆகவே அது மேற்கு ஐரோப்பாவின் பெரும்பாலான புரட்சிகளைப் போலவே, பாதி வழியிலேயே நின்றுவிடும் அபாயம் இருக்கவே செய்தது. இந்த மேற்கு ஐரோப்பியப் புரட்சிகளில் நகரத்துத்

தொழிலாளர்களுக்கும் விவசாயிகள் அனைவருக்கும் இடையிலான தற்காலிகக் கூட்டணியானது முடியரசையும் மத்திய காலத்திய மீதமிச்சங்களையும் துடைத்தகற்றுவதில், பிரபுத்துவ நிலவுடைமையையும் நிலப்பிரபுக்களது அதிகாரத்தையும் ஓரளவுக்குப் பூரணமாகவே துடைத்தகற்றுவதில் வெற்றி பெற்றது; ஆனால் மூலதனத்தினுடைய அதிகாரத்தின் மெய்யான அடித்தளங்களுக்குக் குழி பறிப்பதில் அது சிறிதும் வெற்றி பெறவில்லை.

முன்னதைவிட மிகவும் முக்கியமான, மிகவும் கடினமான இந்தப் பணியில் நமது புரட்சி இந்த ஆண்டின் கோடையிலும் இலையுதிர் காலத்திலும் இறங்கிற்று. நடப்பு ஆண்டின் கோடையில் மூண்டெழுந்த எதிர்ப்புரட்சிக் கலகங்களது அலையானது—ருஷ்யாவின் மீது மேற்கு ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளும், அவர்களது செக்கோஸ்லோவாக் கைக்கூலிகளும் தொடுத்த தாக்குதலுடன் ருஷ்ய வாழ்க்கையில் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்குமான எல்லாக் கூறுகளும் சேர்ந்துகொண்டுவிட்டன—கிராமப்புறத்தில் ஒரு புதிய மனப்பான்மையையும் புது வாழ்வையும் கிளர்ந்தெழச் செய்தது.

நடைமுறையில் இந்தக் கலகங்கள் ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகளையும் அவர்களது செக்கோஸ்லோவாக் கைக்கூலிகளையும், ருஷ்யாவில் நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் தரப்பினராய் இருந்து வந்தோர் எல்லோரையும் ஒன்றுசேரச் செய்தன, சோவியத் அரசாங்கத்துக்கு எதிராய் மூர்க்கமான ஒரு போராட்டத்தில் ஒன்றுசேரச் செய்தன. இந்தக் கலகங்களை அடுத்து கிராமக் குலாக்குகள் அனைவரும் கலகம் புரிந்தனர்.

கிராமம் இனி ஒன்றுபட்டதாய் இருக்கவில்லை. நிலப்பிரபுக்களை எதிர்த்து அனைவரும் ஒருவராய் ஒன்றுசேர்ந்து போராடிய விவசாயிகள் இப்பொழுது இரு முகாம்களாய்—விவசாயிகளில் ஏனையோரைவிட அதிக செல்வம் படைத்தோரின் முகாமாகவும், உழைக்கும் ஏழை விவசாயிகளின் முகாமாகவும்—பிளவுண்டனர். உழைக்கும் ஏழை விவசாயிகள், தொழிலாளர்களுடன் சேர்ந்து, தொடர்ந்து முன்பு போல உறுதியுடன் சோஷலிசத்தை நோக்கி நடைபோட்டனர்; நிலப்பிரபுக்களுக்கு எதிரான போராட்டத்திலிருந்து, மூலதனத்துக்கும் பணத்தின் அதிகாரத்துக்கும் மாபெரும் நிலச்

சீர்திருத்தம் குலாக்குகளுடைய ஆதாயத்துக்காகப் பயன்படுத்தப்படுவதற்கும் எதிரான போராட்டத்துக்கு மாறிச் சென்றனர். இந்தப் போராட்டம் சொத்துடைத்த, சுரண்டும் வர்க்கங்களைப் புரட்சியிலிருந்து அறவே துண்டித்துவிட்டது. இது நமது புரட்சியை சோஷலிசப் பாதையிலே செலுத்திற்று —நகரத் தொழிலாளி வர்க்கம் அக்டோபரில் அத்தனைத் திட உறுதியோடு எந்தப் பாதையில் நமது புரட்சியைச் செலுத்த முயன்று, கிராமப்புறத்தின் உறுதியான, உணர்வு படைத்த, வலுமிக்க ஆதரவில்லாமல் அப்பாதையில் வெற்றி கரமாய் அதை நடபோட வைக்க முடியாமற் போயிற்றே, அந்த சோஷலிசப் பாதையிலே செலுத்திற்று.

ருஷ்யாவின் தொலைக் கோடியிலுள்ள கிராமங்களிலுங் கூட இந்தக் கோடையிலும் இலையுதிர் காலத்திலும் நடைபெற்ற புரட்சியின் முக்கியத்துவம் இதில்தான் அடங்கியுள்ளது. இப்புரட்சி கடந்த ஆண்டின் அக்டோபர் புரட்சியைப் போல அப்படிக் கோலாகலமாகவும் எடுப்பாகவும் கண்கூடாகவும் இருக்கவில்லை; ஆனால் ஒப்பிட முடியாத அளவுக்கு அதனிலும் ஆழமான பிரம்மாண்டமான முக்கியத்துவம் வாய்ந்திருந்தது.

கிராம வட்டாரங்களில் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் நிறுவப்பட்டதானது திரும்பு முனையாய் அமைந்தது. உழைப்பாளி மக்களின் சுதந்திர, சோஷலிச ருஷ்யாவின் தலைமையான பகைவர்களாகிய நிலப்பிரபுக்களைத் தகர்ப்பதற்காக அக்டோபரில் அனைத்து விவசாயிகளுடனும் ஒன்றுபட்ட நகரத் தொழிலாளி வர்க்கமானது இப்பணியிலிருந்து மேலும் மிகவும் கடினமான, வரலாற்று வழியில் மிகவும் புனிதமான, மெய்யான சோஷலிசப் பணிக்கு—அதாவது உணர்வு பூர்வமான சோஷலிசப் போராட்டத்தை கிராம வட்டாரங்களுக்கு எடுத்துச் சென்று விவசாயிகளுடைய உணர்வையும் தட்டியெழுப்பும் பணிக்கு—முன்னேறிச் சென்றுவிட்டது என்பதை இது காட்டிற்று. நகரத் தொழிலாளர்கள் கிராமப் பாட்டாளி வர்க்கத்தை, ஏழை விவசாயிகளை, மிக பெருவாரியோராகிய இந்த உழைக்கும் விவசாயிகளைத் தட்டியெழுப்பி இயங்கச் செய்திராவிடில், மாபெரும் நிலத் துறைப் புரட்சியானது—நிலத்தில் தனியார் சொத்துடைமையை ஒழித்து அக்டோபரில் வெளியிடப்பட்ட பிரகடனமானது, நிலத்தை

சமூகவுடைமையாக்கிய அந்தப் பிரகடனமானது—தவிர்க்க முடியாதபடி வெறும் ஏட்டுப் புரட்சியாகவே இருந்திருக்கும். உழைக்கும் ஏழை விவசாயிகளும், அதே போல நடுத்தர விவசாயிகளும், ஏனையோரது உழைப்பைச் சுரண்டாதவர்கள்; சுரண்டலில் நாட்டம் இல்லாதவர்கள்; ஆகவே நிலப்பிரபுக்களுக்கு எதிரான கூட்டுப் போராட்டத்துக்கு அப்பாலும் போய் மூலதனத்துக்கு எதிரான, பணத்தையும் சங்கமச் சொத்தின் பலத்தையும் ஆதாரமாய்க் கொண்ட சுரண்டலாளர்களின் ஆட்சியதிகாரத்துக்கு எதிரான போராட்டத்துக்கு முன்னேறிச் செல்லக் கூடியவர்கள், இவ்வாறு ஏற்கனவே முன்னேறிச் சென்றுமுள்ளவர்கள். ருஷ்யாவிலிருந்து நிலப்பிரபுக்களே அறவே துடைத்தெறியும் பணியிலிருந்து சோஷலிச அமைப்பு ஒன்றை நிறுவும் பணிக்கு இவர்கள் முன்னேறிச் சென்றுள்ளனர்.

தோழர்களே, இந்த முன்னேற்ற அடியை எடுத்து வைப்பது மிக மிகக் கடினமாகும். நமது புரட்சி சோஷலிசத் தன்மை கொண்டதென்பதை நம்பாதிருந்தோர், இந்த அடியை எடுத்து வைக்கும் நாம் தவிர்க்க முடியாதவாறு தோல்வியே அடைவோமென்று ஆருடம் கூறினர். ஆனால் கிராமப்புறத்தில் இன்று சோஷலிச நிர்மாணம் முற்றிலும் இந்த அடி எடுத்து வைக்கப்பட்டதையே பொறுத்திருக்கிறது. ஏழை விவசாயிகள் கமிட்டிகள் அமைக்கப்பட்டுவிட்டன; ருஷ்யாவெங்கும் இக்கமிட்டிகள் விரிவான பின்னலமைவு போல அமைந்திருக்கின்றன; சோவியத் ஒழுங்கமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகளே, உழைப்பாளி மக்களின் ஆட்சியதிகாரத்தை, கிராம வட்டாரங்களில் செயல்படச் செய்யப் போகும் முழு அதிகாரம் படைத்த கிராமத்துப் பிரதிநிதிகளது சோவியத்துகளாய் இந்தக் கமிட்டிகள் மாற்றப்படப் போகின்றன, பகுதியளவுக்கு ஏற்கனவே இந்த மாற்றம் ஏற்படத் தொடங்கிவிட்டது. இவையெல்லாம் நாம் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் சாதாரண முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிகள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்ட பணிகளுக்குள் நம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிடவில்லை என்பதற்கு மெய்யான உத்தரவாதமாய்த் திகழ்கின்றன. முடியரசையும் நிலப்பிரபுக்களுடைய மத்திய காலத்திய ஆட்சியதிகாரத்தையும் நாம் அழித்தொழித்துவிட்டோம்; மெய்யான சோஷலிச

நிர்மாணப் பணிக்கு இப்பொழுது நாம் மாறிச் சென்று கொண்டிருக்கிறோம். கிராமப்புறத்தில் இது யாவற்றிலும் மிகவும் கடினமான, அதேபோது மிகவும் முக்கியமான பணியாகும்; தவிரவும் இது மிகுந்த வெகுமதிக்குரிய பணியுமாகும். நேரடியாய்க் கிராமங்களில் நாம் உழைக்கும் விவசாயிகளுடைய உணர்வை உசுப்பிவிட்டிருக்கிறோம். அலையென மூண்டெழுந்த முதலாளித்துவக் கலகங்கள் இவர்களை முதலாளித்துவ வர்க்கத்தின் நலங்களிலிருந்து பூரணமாய்த் துண்டித்துப் பிரித்துவிட்டது. ஏழை விவசாயிகள் கமிட்டிகளிலும் தற்போது மாற்றியமைக்கப்பட்டு வரும் சோவியத்துகளிலுமுள்ள விவசாயிகள் நகரத் தொழிலாளர்களுடன் மேலும்மேலும் நெருங்கிய முறையில் அணி சேர்ந்துவருகிறார்கள். ருஷ்யாவின் சோஷலிச வளர்ச்சி இப்பொழுது அசைக்க முடியாதபடி மேலும் நிலைபெற்றுவிட்டது என்பதற்கும், விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் தேச மக்களது மிகப் பெருந் திரளினரிடையே இப்பொழுது ஓர் அடித்தளத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டது என்பதற்குமான மெய்யான, சந்தேகத்துக்கு இடமின்றி நிரந்தரமான உத்தரவாதத்தை இவை யாவற்றிலும் நாம் காண்கிறோம்.

ருஷ்யாவைப் போன்றதொரு விவசாயி நாட்டில் சோஷலிச நிர்மாணம் மிகவும் கடினமான பணியாகும், இதில் சந்தேகமில்லை. ஜாரிசத்தைப் போன்ற ஒரு பகைவனை, நிலப் பிரபுக்களின் ஆட்சியதிகாரத்தை, பிரபுத்துவ நிலவுடைமையைத் துடைத்தொழிப்பது சந்தேகத்துக்கு இடமின்றி ஒப்பளவில் எளிதாகவே இருந்தது. மத்தியில், இந்தப் பணியை ஒரு சில நாட்களில் செய்துவிட முடிந்தது; நாடெங்கிலும் ஒரு சில வாரங்களில் செய்துவிட முடிந்தது. ஆனால் இப்பொழுது நாம் ஈடுபட்டிருக்கும் பணி, அதற்குரிய தன்மையின் காரணமாய், மிகவும் விடாப்பிடியான, நீண்ட நெடும் பிரயத்தனத்தின் மூலம் மட்டுமே செய்து முடிக்கப்படக் கூடியது. இங்கே நாம் ஒவ்வோர் அடியாக, ஒவ்வோர் அங்குலமாய்ப் போராடி முன்செல்ல வேண்டியிருக்கிறது. புதிய, சோஷலிச ருஷ்யா வென்று கொண்ட ஒவ்வொரு சாதனைக்காகவும் நாம் போராட வேண்டியிருக்கிறது. நிலத்தின் கூட்டுச் சாகுபடிக்காகப் போராட வேண்டியிருக்கிறது.

இவ்வகைப்பட்ட ஒரு புரட்சிக்கு, தனிப்பட்ட விவசாயியின் சிறு சாகுபடியிலிருந்து நிலத்தின் கூட்டுச் சாகுபடிக்கு மாறிச் செல்வதற்கு நீண்ட காலம் வேண்டியிருக்கும், எப்படியும் இதை ஒரே அடியில் செய்து முடித்துவிட முடியாது என்பதைக் கூறத் தேவையில்லை.

சிறு விவசாயியின் சாகுபடியே பெருவழக்காய் இருந்து வரும் நாடுகளில் சோஷலிசத்துக்கான மாற்றத்தை வரிசையாய்ப் படிப்படியாய் அமைந்த பூர்வாங்கக் கட்டங்களின் வாயிலாகவே அன்றி வேறு எவ்விதமாகவும் கொண்டு வர முடியாதென்பது நாம் நன்கு அறிந்ததே. எனவேதான் அக்டோபர் புரட்சியானது நிலப்பிரபுக்களின் அதிகாரத்தை வீழ்த்தி அதை ஒழித்திடுவதை மட்டுமே தனது முதற் குறிக்கோளாய் வகுத்துக் கொண்டது. நிலத்தைச் சமூகவுடைமையாக்கிய பிப்ரவரி அடிப்படைச் சட்டம்—இது கம்யூனிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளுடைய கருத்தோட்டத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களான சோவியத் அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களும் ஏகமனதாய் அளித்த வாக்கின் பேரில் நிறைவேற்றப்பட்ட சட்டமென்பது உங்களுக்குத் தெரியும்—ஒருங்கே விவசாயிகளில் மிகப் பெருவாரியானோரின் மனப்பூர்வமான சித்தமாகவும், மற்றும் தொழிலாளி வர்க்கமானது, தொழிலாளர்களின் கம்யூனிஸ்டுக் கட்சியானது தனது பணியை நன்குணர்ந்து, புதிய சோஷலிச நிர்மாணத்தை நோக்கி விடாப்பிடியாகவும் பொறுமையுடனும் முன்னேறுகின்றது—வரிசையாய் அமைந்த படிப்படியான நடவடிக்கைகள் மூலமும், உழைக்கும் விவசாயிகளை விழித்தெழச் செய்வதன் மூலமும், அவர்கள் விழித்தெழுவதற்கு இணைவாகவும், விவசாயிகள் எந்த அளவுக்குச் சுயேச்சையான நிறுவன ஒழுங்கமைப்பு பெறுகிறார்களோ அந்த அளவுக்கு மட்டும் முன்செல்வதன் மூலமும் முன்னேறுகிறது—என்பதற்குரிய நிரூபணமாகவும் விளங்கிற்று.

தனிப்பட்ட விவசாயியின் சிறு சாகுபடியிலிருந்து நிலத்தின் கூட்டுச் சாகுபடிக்கு மாறிச் செல்வதிலுள்ளவற்றைப் போன்ற பிரம்மாண்ட மாறுதல்களைக் கோடானு கோடியான மக்களின் வாழ்வில் உண்டாக்குவதென்பது இம்மக்களது வாழ்க்கை முறையில் ஆழப் பதிந்த வேர்களையும் அவர்களது பழக்கவழக்க நெறிமுறைகளையும் பாதிக்கும்படியான இப்

படிப்பட்ட பிரம்மாண்ட மாறுதல்களை உண்டாக்குவதென்பது, நீண்ட நெடும் முயற்சிகளால் மட்டுமே முடியும் காரியம், பொதுவாய் அவசியத்தின் காரணமாய் மக்கள் தமது வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்தப்படும்போது மட்டுமே நடைபெறக் கூடிய காரியம் என்பதைப் பூரணமாய் உணருகிறோம்.

உலகெங்கும் நடைபெற்றிருக்கும் மிகவும் மூர்க்கமான நெடியதோர் யுத்தத்துக்குப் பிற்பாடு, சோஷலிசப் புரட்சியின் தொடக்கங்களை உலகில் எங்கும் தெளிவாய்க் கண்ணுறுகிறோம். மிகவும் பிற்பட்ட நாடுகளுக்குங்கூட இப்புரட்சி அத்தியாவசியமாகியுள்ளது; பழைய வழியில் வாழ முடியாதென்பதை எல்லோர் மனதிலும்—தத்துவார்த்தக் கருத்தோட்டங்கள் அல்லது சோஷலிஸ்டுப் போதனைகள் எப்படியிருப்பினும்—சக்தி வாய்ந்த முறையில் இது ஆழப் பதியவைத்து வருகிறது.

நாடு அப்படி அளவு கடந்த அழிவுக்கும் தகர்வுக்கும் இலக்காகியிருக்கிறது. இந்தத் தகர்வு உலகெங்கும் பரவுவதைக் காண்கிறோம். கலாசாரத்திலும் விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் பல நூறு ஆண்டுக் கால மனித சாதனைகள் கொலைபாதகத்துக்கும் கொள்ளை வெறிக்கும் நாசத்துக்குமான இந்த நான்கு ஆண்டுக் கால யுத்தத்தால் துடைத்தெறியப்பட்டு, ருஷ்யா மட்டுமல்ல, ஐரோப்பா அனைத்துமே காட்டுமிராண்டு நிலைக்குத் திரும்பி வரக் காண்கிறோம். இந்த உண்மைகளை நேருக்கு நேர் காணும் விரிவான வெகுஜனப் பகுதியோர், இன்னும் விவசாயிகள்—யாவரினும் கூடுதலாய் இந்த யுத்தத்தால் துன்புற்றவர்களாய் இவர்களைச் சொல்லலாம்—அழிவையும் இல்லாமையையும் தவிர்த்து எதையும் நமக்கு விட்டுவைக்காத இந்தக் கேடுகெட்ட யுத்தத்தால் விளைந்திருக்கும் கொடுமைகளை அகற்ற பிரம்மாண்ட முயற்சிகள் தேவைப்படும், நம் சக்தி அனைத்தையும் கொண்டு பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும் என்பதைத் தெளிவாய் உணர்ந்து வருகிறார்கள். பழைய வழியில், யுத்தத்துக்கு முன்பு நாம் வாழ்ந்து வந்த அந்த வழியில் தொடர்ந்து வாழ முடியாது. தனிப்பட்ட விவசாயியின் சிறுவீதச் சாகுபடியுடன் இணைந்த மனித உழைப்பு விரயமும் முயற்சிக் கேடும் தொடர்ந்து நீடிக்கலாகாது. ஒருங்கிணையாத இந்தச்

சிறுவீதச் சாகுபடியிலிருந்து கூட்டுச் சாகுபடிக்கு மாறிச் சென்றால் உழைப்பின் பொருளுற்பத்தித் திறன் இரண்டு அல்லது மூன்று மடங்காய் அதிகரித்துவிடும், விவசாயத்திலும் பொதுவாய் மனிதச் செயற்பாட்டிலும் மனித உழைப்பை இரண்டு அல்லது மூன்று மடங்கு மிச்சப்படுத்தலாம்.

யுத்தம் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் நாசமானது விவசாயியின் பழைய சிறுவீதச் சாகுபடிக்கும் புத்துயிர் அளித்து அப்படியே அதை நிலைநாட்ட இடம் தரவில்லை. இந்த யுத்தம் பெருந் திரளான விவசாயிகளை விழித்தெழச் செய்திருப்பதோடல்லாமல், எப்படிப்பட்ட தொழில்நுட்ப விந்தைகள் தற்போது இருந்து வருகின்றன, எப்படி இவை மக்களை அழித்தொழிப்பதற்காகத் தகவமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்களுக்கு இந்த யுத்தம் தெரியப்படுத்தியிருப்பதோடல்லாமல், இந்தத் தொழில்நுட்ப விந்தைகள், யாவற்றுக்கும் முதலாய் விவசாயத்தில்—நாட்டில் யாவற்றினும் சகஜமானதும் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் மக்கள் ஈடுபட்டுள்ளதும் அதேபோது மிகவும் பிற்பட்டதுமாகிய இந்தப் பொருளுற்பத்தித் துறையில் — பயன்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தையும் இந்த யுத்தம் உதித்தெழச் செய்திருக்கிறது. இந்தக் கருத்து தூண்டிவிடப்பட்டிருப்பதோடல்லாமல், நவீன தொழில்நுட்பமானது எப்படிப்பட்ட சக்திகளைத் தோற்றுவித்திருக்கிறது, எப்படி இந்த சக்திகள் பயங்கரமான, அர்த்தமற்ற யுத்தத்தில் விரயமாக்கப்படுகின்றன, இத்தகைய கொடூரங்களிலிருந்து தப்புவதற்குரிய ஒரே சாதனமாய்த் தொழில்நுட்பத்தின் இதே சக்திகள் அமைந்திருக்கின்றன என்பதையும் நவீனப் போர் முறைகளும் படு பயங்கரங்களும் மக்களை உணரச் செய்திருக்கின்றன. மிகவும் பிற்பட்ட பொருளுற்பத்தித் துறையாகிய விவசாயத்துக்குப் புத்துயிரும் புத்துருவமும் அளித்து, கண்மூடித்தனமான, அறிவொளியூட்டப்பெறுத பழைய முறையிலே நடந்தேறும் பொருளுற்பத்தியாய் இருக்கும் அதை விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளை அடிப்படையாய்க் கொண்ட பொருளுற்பத்தியாய் மாற்றியமைப்பதற்கு இந்த சக்திகளைப் பயன்படுத்துவது நமக்குரிய பொறுப்பும் கடமையுமாகும். நாம் யாரும் கற்பனை செய்து பார்க்கக்கூடியதைக் காட்டிலும் மிக அதிக அளவுக்கு யுத்தமானது மக்களுக்கு இதை உணர்த்தி

யிருக்கிறது. இது மட்டுமன்றி, பொருளுற்பத்தியைப் பழைய வழியில் அப்படி மீண்டும் மீட்டமைத்து வைப்பதை இந்த யுத்தம் முடியாத காரியமாக்கியிருக்கிறது.

இந்த யுத்தத்துக்குப் பிற்பாடு யுத்த முற்கால நிலைமையை அப்படியே திரும்பவும் தோன்றிவிடச் செய்யலாம், பழைய அமைப்பையும் பழைய சாகுபடி முறைகளையும் அப்படியே திரும்பவும் கைக்கொண்டு விடலாம் என்பதாய் நம்பிக் கொண்டிருப்போர் தவறிழைப்போர் ஆவர், இவர்கள் தமது தவறினை நாளுக்கு நாள் மேலும் மேலும் உணர்ந்து வருகின்றனர். சில சிறு விவசாயிகளிடம் இப்பொழுது இழுவைக் கால்நடைகளோ, அல்லது உழுபடைக் கருவிகளோ இல்லாதவாறு இந்த யுத்தம் அப்படிப் பயங்கர நாசம் விளைவித்திருக்கிறது. மக்களுடைய உழைப்பு தொடர்ந்து விரயமாவதற்கு நாம் இடம் தர முடியாது. புரட்சிக்காக மிகப் பெருந் தியாகங்கள் புரிந்துள்ளோரும் யுத்தத்தால் ஏனைய யாவரையும்விட கூடுதலாய்த் துன்பத்துக்கு உள்ளாகியுள்ளோருமான உழைக்கும் ஏழை விவசாயிகள் நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தை எடுத்துக் கொண்டது, இந்த நிலம் புதிய குலாக்குகளின் கைக்குச் சென்றுவிடும் பொருட்டு அல்ல. மிகவும் அண்மைக் காலத்திய வளர்ச்சிகள் இப்பொழுது இந்த உழைக்கும் விவசாயிகளின் முன்னால், நிலத்தைக் கூட்டாய்ச் சாகுபடி செய்வதை நோக்கித் திரும்பும் பிரச்சினையை எழுப்பி வருகின்றன. யுத்தத்தால் சிதைத்து நாசமாக்கப்பட்டிருக்கும் கலாசாரத்தை மீட்டமைப்பதற்குரிய ஒரே வழியாய், முதலாளித்துவம் விவசாயிப் பெருங் குடிமக்கள் திரளினர் அனைவரையும் வதையும்படி இருத்தி வைத்திருந்த அறியாமையிலிருந்தும் வலுக்கட்டாய நிலையிலிருந்தும் ஒடுக்கு முறையிலிருந்தும் தப்புவதற்குரிய ஒரே வழியாய் நிலத்தின் கூட்டுச் சாகுபடியை நோக்கி இவ்வளர்ச்சிகள் இவர்களைத் திரும்பச் செய்து வருகின்றன. இந்த அறியாமையிலிருந்தும் ஒடுக்குமுறையிலிருந்தும் (நான்கு ஆண்டுக் காலமாய் மனிதகுலத்தின்மீது முதலாளிகள் யுத்தத்தைத் திணிக்க முடிந்ததற்கு இவையேதான் காரணம்) எப்படியாவது தம்மை விடுவித்துக்கொண்டுவிட வேண்டுமென்று எல்லா நாடுகளிலும் உழைப்பாளர்கள் புரட்சிகர முனைப்போடும் ஆர்வத்தோடும் முழு முயற்சி செய்து வருகின்றனர்.

இவையேதாம், தோழர்களே, இந்த மிகக் கடினமான, அதேபோது மிக முக்கியமான சோஷலிசச் சீர்திருத்தத்துக்கு உலகு தழுவிய அளவில் உண்டாக்கப்பட வேண்டியிருந்த நிலைமைகள். இந்த மிக முக்கியமான, அடிப்படையான சோஷலிசப் புனரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்குக் கொண்டு வரப்படுவதற்குத் தேவையாயிருந்த நிலைமைகள் இவையே. ருஷ்யாவில் இந்நடவடிக்கை ஏற்கனவே நிகழ்ச்சி நிரலுக்கு வந்துவிட்டது. ஏழை விவசாயிகளது கமிட்டிகள் அமைக்கப் பட்டிருப்பதும், நில இலாகாக்கள், ஏழை விவசாயிகள் கமிட்டிகள், விவசாயக் கம்யூன்கள் ஆகியவற்றின் இந்தக் கூட்டுக் காங்கிரசும், இவ்வாண்டின் கோடையிலும் இலையுதிர் காலத்திலும் கிராமப்புறத்தில் நடைபெற்ற போராட்டத்துடன் இவற்றையும் சேர்த்துப் பார்க்கையில், உழைக்கும் விவசாயிகளின் மிக விரிவான பகுதியோர் விழித்தெழுந்துவிட்டனர், நிலத்தைக் கூட்டு முறையில் சாகுபடி செய்வதை நோக்கிச் செல்வதற்காக விவசாயிகள் தாமே, பெருவாரியான உழைக்கும் விவசாயிகள் முயன்று வருகிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. இந்த மாபெரும் புனரமைப்பைப் படிப்படியாகவேதான் நாம் செய்து முடிக்க வேண்டும் என்று திரும்பவும் கூறுகிறேன். இத்துறையில் எதையும் ஒரே அடியில் செய்துவிட முடியாது. ஆனால் நிலத்தைச் சமூகவுடைமையாக்குவது பற்றிய அடிப்படைச் சட்டம்—அக்டோபர் 25ஆம் நாள் புரட்சியைத் தொடர்ந்து முதல் தினத்தன்றே, சோவியத் ஆட்சியதிகாரத்தின் முதலாவது உறுப்பாய் அமைந்த சோவியத்துகளின் இரண்டாவது அனைத்து ருஷ்யக் காங்கிரசின் முதலாவது அமர்விலேயே இச்சட்டம் ஏற்கப் பட்டதானது, முன்பே உறுதியாகிவிட்ட ஒரு நிகழ்ச்சியாய் அமைந்தது—நிலத்தின் தனியார் சொத்துடைமையை என்றென்றுக்குமாய் ஒழித்ததோடு, பிரபுத்துவ நிலவுடைமையை இல்லாதொழியச் செய்ததோடு, வேறு பலவற்றுக்குமிடையில், பண்ணைச் சொத்துக்களும், இழுவைக் கால்நடைகளும் பண்ணை உழுபடைக் கருவிகளும் மக்களுடைய உடைமைக்கும் உழைக்கும் விவசாயிகளது உடைமைக்கும் மாறிச் செல்லும் இவையும்கூட, பொதுச் சொத்தாகிவிட வேண்டும், தனிப்பட்ட பண்ணைகளின் தனிச் சொத்தாய் இருப்பது ஒழிய வேண்டும் என்று விதித்ததை உங்களுக்கு நினைவுபடுத்த

விரும்புகிறேன். நமது தற்போதைய குறிக்கோள்கள் என்ன, செய்யப்படவேண்டுமென நாம் விரும்பிய நிலப் பட்டுவாடாப் பணிகள் யாவை, சோவியத் அரசாங்கத்தின் ஆதரவாளர்களாகிய உழைக்கும் விவசாயிகள் இத்துறையில் என்ன செய்ய வேண்டுமென அழைப்பு விடுக்கிறோம் என்கிற அடிப்படைப் பிரச்சினை குறித்து, 1918 பிப்ரவரியில் ஏற்கப்பட்ட நிலச் சமூகவுடைமைச் சட்டத்தின் 11ஆவது பிரிவு, தனிப்பட்ட முறையிலான சாகுபடிக்குப் பதிலாகவும் சோஷலிசப் பொருளாதார அமைப்புக்கு மாறிச் செல்லும் நோக்கத்துடனும் கூட்டுச் சாகுபடி முறையை வளர்த்துச் செல்வதே குறிக்கோள் என்றும், உழைப்பிலும் உற்பத்திப் பொருள்களிலுமான சிக்கனத்தின் கண்ணோட்டத்தில் கூட்டுச் சாகுபடி முறையே மிகவும் அனுகூலமானது என்றும் கூறுகிறது.

தோழர்களே, நாம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய போது கம்யூனிஸ்டுகளுக்கும் ஏனைய கட்சிகளுக்குமிடையே முழு அளவுக்கு ஏகோபித்த கருத்தும் உடன்பாடும் இருக்கவில்லை. மாறாக, கம்யூனிஸ்டுகளும் கம்யூனிஸ்டுக் கருத்துக்களைக் கொண்டிராத இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியும் சோவியத் அரசாங்கத்தில் ஐக்கியப்பட்டிருந்த போது நாம் இச்சட்டத்தை நிறைவேற்றினோம். என்றாலும் நாம் ஏகமனதாய்த் தீர்மானித்தோம்; இந்தத் தீர்மானத்தை இது நாள் வரையிலாய்ப் பற்றியொழுகி வருகிறோம். அதேபோதில் நிலத்தின் தனிப்பட்ட முறையிலான சாகுபடியிலிருந்து கூட்டு முறையிலான சாகுபடிக்குரிய மாற்றத்தை ஒரே அடியில் நிகழச் செய்துவிட முடியாது, நகரங்களில் வளர்ச்சியடைந்த போராட்டம் இதனிலும் மிகச் சுலபமாகவே தீர்வு பெறலாயிற்று என்பதையும் நாம் நினைவில் கொண்டிருக்கிறோமென மீண்டும் குறிப்பிடுகிறேன். நகரங்களில் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஒரு முதலாளியை எதிர்நோக்கினர், அவரை அகற்ற அதிக முயற்சி தேவைப்படவில்லை. ஆனால் கிராம வட்டாரங்களில் வளர்ச்சியடைந்த போராட்டம் மிகவும் சிக்கலானது. ஆரம்பத்தில் நிலப்பிரபுக்களை எதிர்த்து விவசாயிகள் எல்லோரதும் பொதுவான தாக்குதல் நடைபெற்றது; நிலப்பிரபுக்களின் ஆட்சியதிகாரம் திரும்பவும் தலைதூக்க முடியாதபடி அறவே ஒழித்துக்கட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு

இடையிலேயே ஒரு போராட்டம் மூண்டது. விவசாயி களிடம் குலாக்குகள், சுரண்டலாளர்கள், லாபவெறியர்கள் ஆகியோரின் வடிவில் புதிய முதலாளிகள் தோன்றினர். இவர் கள் ருஷ்யாவின் விவசாயப் பகுதியோரல்லாத பட்டினி கிடந்த பிற பகுதியோரை வருத்தித் தம்மைச் செல்வந்தர் களாக்கிக் கொள்வதற்காகத் தமது உபரி தானியத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். இங்கே ஒரு புதிய போராட்டம் ஆரம்பமாயிற்று, இவ்வாண்டின் கோடையில் பல கலகங்கள் மூண்டதை நீங்கள் அறிவீர்கள். முதலாளியிடமிருந்தும் நிலப் பிரபுவிடமிருந்தும் சொத்து அனைத்தையும் பறித்துவிட வேண்டுமென்று கூறுவது போல குலாக்கு சம்பந்தமாய் நாம் கூறவில்லை. தானியத்தில் ஏகபோகம் போன்ற அத்தியாவசிய நடவடிக்கைகளுக்குக் குலாக்கு காட்டும் எதிர்ப்பை நாம் முறியடிக்க வேண்டுமென்றுதான் கூறுகிறோம். விவசாயப் பகுதிகளல்லாத பிற பகுதிகளில் தொழிலாளர்களும் விவசாயி களும் பசியால் வருந்தும் போது உபரி தானியத்தை அடாத விலைகளுக்கு விற்றுச் செல்வம் திரட்டும் பொருட்டு தானிய ஏகபோகத்தைக் குலாக்கு மீறி நடக்கிறார். நிலப்பிரபுக்களுக் கும் முதலாளிகளுக்கும் எதிராய் நடத்தப்பட்டதைப் போல வே ஈவிரக்கமில்லாப் போராட்டத்தை இங்கும் நடத்து வதே நமது கொள்கையாய் இருந்தது. இதன்றி, உழைக்கும் விவசாயிகளது ஏழைப் பகுதியோர் நடுத்தர விவசாயி குறித்து அனுசரிக்க வேண்டிய போக்கு என்னவென்னும் பிரச்சினையும் இருந்தது. நடுத்தர விவசாயியுடன் கூட்டணி கொள்வதுதான் எப்பொழுதுமே நமது கொள்கையாய் இருந்துள்ளது. அவர் சோவியத் நிறுவனங்களின் பகையல்ல; பாட்டாளி வர்க்கத்தின், சோஷலிசத்தின் பகையல்ல. அவர் ஊசலாடுவார்தான்; சோஷலிசம் அவசியமென்று திட்டவட்ட மான, மறுக்க முடியாத உதாரணத்தின் மூலம் காணும் போது மட்டுமே அவர் சோஷலிசத்தை ஏற்றுக் கொள்ள இசை வார். தத்துவார்த்த வாதங்களின் மூலமோ, கிளர்ச்சிகர சொற்பொழிவுகள் மூலமோ நடுத்தர விவசாயிக்கு நம்பிக்கை உண்டுபண்ணிவிட முடியாதுதான், நாம் முடியுமென்று நினைத்துச் செயல்படவுமில்லை. ஆனால் உதாரணத்தைக் கொண்டும், விவசாயிகளில் உழைக்கும் பகுதியோரது உறுதி யானஅணிவரிசையைக் கொண்டும் அவருக்குத் திட நம்பிக்கை

உண்டாகும்படிச் செய்யலாம். உழைக்கும் விவசாயிகளுக்குப் பாட்டாளி வர்க்கத்துடனுள்ள கூட்டணியைக் கொண்டு அவரைத் திட நம்பிக்கை பெற செய்யலாம். நயமாய் உணர்த்தி மெய்ப்பித்துக் காட்டி இணங்கச் செய்வதென்னும் நீடித்தும் படிப்படியாகவும் இயங்கும்படியான செயல்முறையையும் பல இடைக்கால நடவடிக்கைகளையுமே இங்கு நமக்கு ஆதாரமாய்க் கொண்டுள்ளோம். இந்த இடைக்கால நடவடிக்கைகள் தேச மக்களின் பாட்டாளி வர்க்க, சோஷலிசப் பிரிவுக்கும், மூலதனத்தின் எல்லா வடிவங்களையும் எதிர்த்து வைராக்கியமான போராட்டம் நடத்தும் கம்யூனிஸ்டுகளுக்கும், நடுத்தர விவசாயிகளுக்கும் இடையிலான உடன்பாட்டைப் பிரதிபலிப்பனவாய் இருக்கும்.

இந்த நிலைவரங்களைக் கருத்தில் கொண்டு, கிராமப் புறங்களில் நம்மை எதிர்நோக்கும் பணி ஒப்பிட முடியாத அளவுக்கு மிகவும் கடினமானதென்பதைக் கருத்தில் கொண்டு, நிலத்தைச் சமூகவுடைமையாக்கும் சட்டத்தில் எடுத்துரைக்கப்பட்ட விதத்தில் நாம் பிரச்சினையை எடுத்துரைக்கிறோம். இந்தச் சட்டம் நலத்தில் தனியார் சொத்துடைமையின் ஒழிப்பையும், நிலத்தின் சரிசமமான வினியோகத்தையும் பிரகடனம் செய்தது உங்களுக்குத் தெரிந்ததே. அதே மனப்பாங்கில் இந்தச் சட்டத்தின் நடைமுறைச் செயலாக்கம் துவக்கப்பட்டது என்பதும், கிராமப்புறங்கள் பெரும்பாலானவற்றில் செயல்படுத்தப்பட்டுள்ளது என்பதும் உங்களுக்குத் தெரியும். தவிரவும் இந்தச் சட்டம் சோஷலிச முறையிலான சாகுபடிக்கும் கூட்டு நிலவுரிமைக்கும் நிலத்தின் கூட்டு முறையிலான சாகுபடிக்கும் மாறிச் செல்வதே நமது பொதுவான பணியென்றும், பொதுவான குறிக்கோளென்றும் அறிவிக்கும் சற்றுமுன் நான் படித்துக் காட்டிய உரையும் கோட்பாட்டையும்—கம்யூனிஸ்டுகள், அக்காலத்தில் இன்னும் கம்யூனிஸ்டுக் கருத்துக்களை ஏற்காதிருந்தவர்கள் ஆகிய இரு சாராரின் ஏகோபித்த உடன்பாட்டுடன்—தன்னுள் கொண்டிருக்கிறது. ஒழுங்கமைப்பு வளர்ந்தோங்குவதைத் தொடர்ந்து, ஏற்கனவே நிலத்தில் குடியேறியிருக்கும் விவசாயிகளும் ஒடுங்கிக் களைத்துப் போய் வெளிநாடுகளில் கைதி முகாம்களிலிருந்து பத்தாயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலும் இப்பொழுது திரும்பி வரும் போர்க் கைதிகளும்

விவசாயத்தை மீண்டும் தலைதூக்கச் செய்வதற்காகவும், விவசாயியை அவரது பழைய, மிதித்து நசுக்கப்பட்ட, பரா முகமான, அறியாமை இருளடர்ந்த நிலையிலிருந்து என் றென்றுக்குமாய் விடுதலை பெறச் செய்வதற்காகவும் நடந்தேற வேண்டிய பணியின் பிரம்மாண்ட வீச்சை மேலும் மேலும் தெளிவாய் உணர்ந்து வருகின்றனர். நிலத்தைக் கூட்டு முறையில் சாகுபடி செய்வதுதான் தப்புவதற்கான நிச்சயமான ஒரே வழி என்பதும், விவசாயிப் பெருந்திரளி னரைக் கலாசார வளர்ச்சிக்குரிய வாழ்வுக்கு அருகாமை யில் கொண்டு வந்து, ஏனைய குடிமக்களுடன் சமத்துவமான ஒரு நிலையில் அமர்த்தக் கூடிய ஒரே வழி என்பதும் இவர் களுக்கு மேலும் மேலும் தெளிவாகி வருகிறது. படிப்படி யான நடவடிக்கைகள் மூலம் இதைச் செயல்படுத்துவதற் காக சோவியத் அரசாங்கம் இப்பொழுது ஒழுங்கு முறை தவறாமல் பாடுபட்டு வருகிறது. இதன் பொருட்டு, நிலம் கூட்டு முறையில் சாகுபடி செய்யப்படும் பொருட்டு, கம்யூன்களும் அரசாங்கப் பண்ணைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. நிலத்தைச் சமூகவுடைமையாக்கும் சட்டத்தில் இவ்வகைச் சாகுபடியின் முக்கியத்துவம் சுட்டிக் காட்டப்படு கிறது. இச்சட்டத்தில், நிலத்தை உபயோகித்துக் கொள்ளும் உரிமை யார் யாருக்கு உண்டென்பதைக் குறிப்பிடும் பிரிவில், இப்படி உரிமை பெறும் ஆட்களிலும் நிறுவனங்களி லும் முதலிடம் அரசுக்கும், இரண்டாவது பொது நிறுவனங் களுக்கும், மூன்றாவது விவசாயக் கம்யூன்களுக்கும், நான் காவது விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அளிக்கப்படு வதை காணலாம். நிலத்தைச் சமூகவுடைமையாக்கும் சட்டத்தின் இந்த அடிப்படை கோட்பாடுகள், கம்யூனிஸ்டுக் கட்சியானது முற்றிலும் தன்னுடைய சித்தத்தையே செயல் படுத்திக் கொண்டிராத போது, நடுத்தர விவசாயிகளுடைய கருத்துக்களையும் சித்தத்தையும் ஏதேனும் ஒரு வகையில் வெளியிட்டு வந்தோருக்கு அது வேண்டுமென்றே திட்ட மிட்டு விட்டுக்கொடுத்து வந்தபோது வகுக்கப்பட்டவை என் பதை மீண்டும் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். இப்படி நாம் விட்டுக்கொடுத்தோம், இனியும் விட்டுக் கொடுத்து வருகிறோம். இவ்விதமான உடன்பாடு செய்து கொண்டோம், இப்பொழுதும் செய்துவருகிறோம். ஏனென்றால்

கூட்டு வடிவிலான நிலவுடைமைக்கு, நிலத்தின் கூட்டு முறையிலான சாகுபடிக்கு, அரசாங்கப் பண்ணைகளுக்கு, கம்யூன்களுக்கான மாற்றத்தை ஒரே அடியில் ஏற்படுத்திவிட முடியாது. இதற்கு சோவியத் அரசாங்கத்தின் வைராக்கியமான, விடாப்பிடியான செயல் தேவைப்படுகிறது. நிலத்தின் கூட்டு முறையிலான சாகுபடிகைக்கொள்ளப்படும் பட்சத்தில் விவசாய அபிவிருத்திக்கென்று சோவியத் அரசாங்கம் நூறு கோடி ரூபிள் ஒதுக்கியிருக்கிறது. நடுத்தர விவசாயிகளது பெருந் திரளினரை நாம் பிரதானமாய் முன்னுதாரணத்தின் சக்தியைக் கொண்டே, அவர்கள் தமது விவசாயத்தை மேம்படுத்திக் கொள்ளுமாறு செய்வதன் மூலமே வயப்படுத்தி மாற்ற விரும்புகிறோம், ருஷ்யாவில் விவசாயப் பொருளுற்பத்தியில் இந்த ஆழமான, மிக முக்கியமான புரட்சியை உண்டாக்குவதற்கு இத்தகைய நடவடிக்கைகளால் படிப்படியாய் ஏற்படக் கூடிய பலாபலன்களையே ஆதாரமாய்க் கொண்டுள்ளோம் என்பதை இச்சட்டம் தெளிவுபடுத்துகிறது.

இக்காங்கிரசில் ஏழை விவசாயிகள் கமிட்டிகளுக்கும், விவசாயக் கம்யூன்களுக்கும் நில இலாகாக்களுக்கும் இடையிலான இந்தக் கூட்டணி, நிலத்தின் கூட்டு முறையிலான சாகுபடிக்குரிய மாற்றத்தை நோக்கிப் பிழையற்றவாறும் மெய்யாகவே சோஷலிச அளவிலும் வேலைகள் நடைபெறத் தொடங்கிவிட்டன என்று காட்டி நமக்கு நம்பிக்கையூட்டுகிறது. இந்த இடைவிடாத, முறையான பணி உழைப்பின் பொருளுற்பத்தித் திறன் அதிகரிக்கும்படி உறுதி செய்தாக வேண்டும். இதன் பொருட்டு நாம் சிறந்த சாகுபடி முறைகளைக் கையாள வேண்டும்; ருஷ்யாவின் விவசாய விஞ்ஞான சக்திகளை அப்பணியில் ஈடுபடச் செய்தாக வேண்டும்; இதுகாறும் தனிப்பட்ட சிலர் தம்மைச் செல்வச் சீமான்களாக்கிக் கொள்வதற்கும், முதலாளித்துவம் புத்துயிர் பெறுவதற்கும், கூலியுழைப்பாளர்களுக்குப் புதிய கட்டுக்களையும் புதிய அடிமைத் தளைகளையும் இடுவதற்குமான ஒரு ஆதாரமாய்ப் பயன்பட்ட சிறந்த பண்ணைகள், இப்பொழுது, நிலத்தை சமூகவுடைமையாக்கும் சட்டத்தின் கீழும், நிலத்தில் தனியார் சொத்துடைமை அறவே ஒழிக்கப்பட்டிருக்கும் நிலைமையிலும், விவசாய அறிவுக்கும் கலாசாரத்துக்கும் கோடிக்

கணக்கான உழைப்பாளி மக்களின் பொருளுற்பத்தித் திறன் உயர்வதற்குமான ஆதாரமாய்ப் பயன்பட வேண்டும். நகரத் தொழிலாளர்களுக்கும் உழைக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான இந்தக் கூட்டணியும், ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் உதயமும், சோவியத்துகளுடனான அவற்றின் இணைவும் விவசாய ருஷ்யாவானது மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒன்றின்பின் ஒன்றாய் மேற்கொள்ளப் போகும் பாதையில் இறங்கிவிட்டது என்பதற்கான உத்தரவாதமாய் விளங்குகின்றன. மேற்கு ஐரோப்பிய நாடுகள் நமக்குப் பிற்பாடே இந்தப் பாதையை மேற்கொண்டாலும்கூட, நம்மைக் காட்டிலும் கூடுதலான நிச்சயத்துடன் இப்பாதையில் நடைபோடும். இந்நாடுகளில் புரட்சியைத் துவக்குவது மிகவும் கடினமாயிருந்துள்ளது, ஏனெனில் இவற்றின் பகைவன் உளுத்துப் போன எதேச்சாதிகாரமல்ல; உயர்ந்த கலாசார வளர்ச்சி பெற்ற ஒன்றுபட்ட முதலாளித்துவ வர்க்கம் இவற்றின் பகைவனாய் இருக்கிறது. ஆயினும் இந்தப் புரட்சி ஆரம்பமாகிவிட்டது என்று உங்களுக்குத் தெரியும். புரட்சியானது ருஷ்யாவுடன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டுவிடவில்லை; மேலைய ஐரோப்பாவின் மிகவும் முன்னேறிய நாடுகளிலுள்ள பாட்டாளி வர்க்கம் நமது பிரதான நம்பிக்கையாகவும் பிரதான ஆதாரமாகவும் இருப்பதும், உலகப் புரட்சியின் பிரதான ஆதாரமாய்த் திகழும் பாட்டாளி வர்க்கம் செயல்படத் தொடங்கிவிட்டதும் உங்களுக்குத் தெரிந்ததே. இந்நாடுகளில் சோஷலிச சாகுபடிக்கான மாற்றமும், அதிக அளவு முன்னேறிய வேலைநுட்பங்களின் பிரயோகமும் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களது நிறுவன ஒழுங்கமைப்பும் நம் நாட்டில் நடைபெற்றதைக் காட்டிலும் மிகவும் வேகமாகவும் சுலபமாகவும் நடைபெறும் என்று நாம் சந்தேகத்துக்கு இடமின்றி உறுதியாய் நம்புகிறோம், நடந்தேறி வரும் ஜெர்மன் புரட்சி நடைமுறையில் இதைத் தெளிவுபடுத்துகிறது.

ருஷ்யாவின் உழைக்கும் விவசாயிகள் நகரத் தொழிலாளர்களுடனும் அனைத்து உலகின் சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்துடனும் கூட்டணி கொண்டு, தமது இன்னல்களைச் சமாளிப்பார்கள், ஏகாதிபத்தியவாதிகளது தாக்குதல்களை எதிர்த்தடிப்பார்கள், நிலத்தைக் கூட்டு முறையில் சாகுபடி செய்யும் பணியை, தனிப்பட்டோரது சிறு சாகுபடி

யிலிருந்து படிப்படியாகவும் இடையறுதும் கூட்டு முறை யிலான சாகுபடிக்கு மாறிச் செல்லும் பணியை நிறை வேற்றுவார்கள் என்று இப்பொழுது சந்தேகத்துக்கு இட மின்றி நிச்சயமாய் நம்பலாம். (பேரார்வமிக்க நெடுநேரக் கையொலி முழக்கம்.)

பிராவ்தா, இதழ் 272,
1918, டிசம்பர் 14

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 352-64

கிராமப்புறத்திலான வேலை பற்றிய உரை

ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது (போல்ஷிவிக்குகள்) எட்டாவது காங்கிரசில் நிகழ்த்தியது 1919, மார்ச் 23

(நெடுநேரக் கையொலி முழக்கம்.) தோழர்களே, கிராமப் புறத்திலான வேலை பற்றிய பிரச்சினையைப் பரிசீலிப்பதற்காக இந்தக் காங்கிரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டியின் எல்லாக் கூட்டங்களிலும் என்னால் கலந்து கொள்ள முடியாமற் போனதற்காக நான் மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டும். ஆகவே தொடக்கத்திலிருந்தே இந்தக் கமிட்டியின் வேலைகளில் பங்கு கொண்ட தோழர்கள் தமது பேச்சுக்களில் எனது இந்த உரைக்குரிய கூடுதல் விவரங்களை அளிப்பார்கள். இந்தக் கமிட்டி முடிவில் அடிப்படைக் கோட்பாடுகளை வகுத்தது. அவை ஒரு கமிஷனிடம் ஒப்படைக்கப்பட்டன. அவற்றைப் பற்றி உங்களுக்கு உரை சமர்ப்பிக்கப்படும்.[28] இந்தக் கமிட்டியின் வேலைகளைத் தொடர்ந்து நம்மை எதிர்நோக்கும், என் கருத்துப்படி கட்சி அனைத்தையுமே எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினையின் பொது முக்கியத்துவம் குறித்துப் பேச விரும்புகிறேன்.

தோழர்களே, பாட்டாளி வர்க்கப் புரட்சி வளர்ந்து செல்லுகையில் சமுதாய வாழ்வின் மிகவும் சிக்கலான, மிகவும் முக்கியமான பிரச்சினைகளில் இப்பொழுது ஒன்றையும் பிறகு இன்னென்றையும் நாம் முன்னிலையிலே வைக்க வேண்டி வருவது முற்றிலும் இயற்கையே. வாழ்க்கையின் ஆழ்ந்தமைந்த அடித்தளங்களையும் தேச மக்களில் மிகவும் விரிவான திரள்களையும் பாதிக்கும், நிச்சயம் பாதிக்கவே செய்யும் ஒரு புரட்சியின் போது எந்த ஒரு கட்சியாலும், எந்த ஒரு அரசாங்கத்தாலும், எவ்வளவுதான் அது மக்களுக்கு நெருங்கிய தாய் இருந்த போதிலும், வாழ்க்கையின் எல்லாக் கூறுகளையும் ஒருங்கே ஏககாலத்தில் தழுவும்படியான அளவில் செயல்

பட முடியாமற் போவது முற்றிலும் இயற்கையே. இப் பொழுது நாம் கிராமப்புறத்திலான வேலை பற்றிய பிரச்சினையை எடுத்துக்கொள்ளும்படியாகி, இந்தப் பிரச்சினை சம்பந்தமாய் நடுத்தர விவசாயிகளுடைய நிலைக்கு முதன்மையான முக்கியத்துவம்அளிக்க வேண்டியிருப்பின், பொதுவாய்ப் பாட்டாளி வர்க்கப் புரட்சியினது வளர்ச்சியின் கண்ணோட்டத்தில் இதில் விந்தையானதோ, அசாதாரணமானதோ எதுவும் இல்லை. பாட்டாளி வர்க்கம், முதலாளித்துவ வர்க்கம் இவ்விரு பகை வர்க்கங்களுக்கு இடையிலான அடிப்படை உறவிலிருந்தே பாட்டாளி வர்க்கப் புரட்சி தொடங்க வேண்டியிருந்தது, இது இயற்கையே. ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு மாறும்படிச் செய்வதும், தொழிலாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை உறுதி செய்து கொள்வதும், முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி, இவ்வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தின் பொருளாதார ஆதாரங்களை — பொதுவாய் சோஷலிச நிர்மாணம் அனைத்துக்குமே சந்தேகத்துக்கு இடமின்றி தடையாய் அமைந்த இந்த ஆதாரங்களை—இதனிடமிருந்து பறித்திடுவதும்தான் தலையாய பணியாய் இருந்தது. முதலாளித்துவச் சமுதாயத்துக்குரிய அந்தப் பொருளாதாரக் கட்டமைப்பின் காரணத்தால் பாட்டாளி வர்க்கமோ அல்லது முதலாளித்துவ வர்க்கமோதான் இச்சமுதாயத்தில் முடிவுகட்டும் காரணியாய் இருக்க முடியும்—மார்க்சியத்தில் பரிச்சயமுள்ளவர்களாகிய நம்மில் யாருக்குமே எந்நாளும் இவ்வுண்மை குறித்து கணப் பொழுதுங்கூட சந்தேகம் இருந்ததில்லை. முன்னாள் மார்க்சிய வாதிகள் பலரும்—உதாரணமாய் மென்ஷிவிக் முகாமினர்—பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்குமிடையே முடிவுகட்டும்படியான போராட்டம் நடைபெறும் ஒரு காலகட்டத்தில் **பொதுப்பட ஜனநாயகம்** நிலவ முடியும் என்பதாய் அடித்துப் பேசுவதை இப்பொழுது கேட்கிறோம். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினருடன் முழுநிறை உடன் பாட்டுக்கு வந்துவிட்ட மென்ஷிவிக்குகள் இப்படிப் பேசுகிறார்கள்—முதலாளித்துவ வர்க்கத்தார் தமது வசதிக்கு ஏற்ப ஜனநாயகத்தை வேண்டும் போது ஆக்கியும் வேண்டாத போது அழித்தும் செல்லாமல் இருப்பவர் போல பேசுகிறார்கள்! உண்மை இவ்வாறு இருக்கையில், முதலாளித்துவ

வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் உக்கிரமான போராட்டம் நடைபெறும் ஒரு நேரத்தில் பொதுப்பட ஜன நாயகம் என்பதான பேச்சுக்கு இடமே இல்லை. இந்த மார்க்சிய வாதிகள் அல்லது போலி மார்க்சியவாதிகள்—உதாரணமாய் நமது மென்ஷிவிக்குகள்—எவ்வளவு சடுதியில் தம்மை அம் பலப்படுத்திக் கொண்டுவிடுகிறார்கள் என்பதையும், இவர் களது உண்மை இயல்பு, அதாவது குட்டிபூர்ஷுவா ஜனநாயக வாதிகளது இயல்பு, எவ்வளவு சடுதியில் தன்னை வெளிப் படுத்திக் கொண்டுவிடுகிறது என்பதையும் பார்க்கையில் வியப்பாகவே இருக்கிறது.

மார்க்ஸ் தமது வாழ்நாள் முழுதும் யாவற்றுக்கும் முத லாய்க் குட்டிபூர்ஷுவா ஜனநாயகம், முதலாளித்துவ ஜன நாயகம் இவற்றின் பிரமைகளோடுதான் எதிர்த்துப் போராடி வந்தார். தொழிலாளி பட்டினி கிடந்து மடிவதற்குரிய சுதந்திரத்தையும், உழைப்பு சக்தியை விற்பவர் ஒருவருக்கு முதலாளியுடன், இந்த உழைப்பு சக்தியைப் பகிரங்கச் சந்தை யில் சுதந்திரச் சூழலில் தனக்குச் சரிசமமானவரிடமிருந்து வாங்குவது போல வாங்குகிறவராய்ச் சொல்லப்படும் முத லாளியுடன் இருக்கக்கூடிய சமத்துவத்தையும் மூடிமறைக் கும் திரையாய்ப் பயன்படும் சுதந்திரம், சமத்துவம் என்ப தான வெற்றுப் பேச்சை மார்க்ஸ் யாவற்றையும்விட அதிக மாய் எள்ளி நகையாடினார். மார்க்ஸ் தமது பொருளாதார நூல்கள் யாவற்றிலும் இதை விளக்கிக் கூறுகிறார். **முதலாளித் துவச் சமுதாயத்தின் அடிப்படை சக்திகளாய் இருப்பவையும், இருக்க முடியும்படியானவையும் முதலாளித்துவ வர்க்கமும் பாட்டாளி வர்க்கமும் மட்டுமேதான்** — இந்த முதலாளித்துவச் சமுதாயத்தின் படைப்பாளனுகவும் இதன் தலைவனுகவும் இதன் இயங்கு சக்தியாகவும் இருப்பதாகிய முதலாளித்துவ வர்க்கமும், இதற்குச் சவக்குழி தோண்டுவனுகவும் இதை அகற்றி இதற்குப் பதிலாய் அமைய வல்லவனுகவும் இருப்பதாகிய பாட்டாளி வர்க்கமும் மட்டும்தான்— என்னும் உண்மையை விளக்குவதற்காகவே மார்க்சின் மூல தனம் முழுதுமே பணிக்கப்பட்டிருப்பதாய்ச் சொல்லலாம். இதற்காகப் பணிக்கப்படாத ஓர் அத்தியாயத்தை மார்க்சின் எந்தவொரு நூலிலுமே காண்பது அரிது. உலகெங்கும் இரண் டாவது அகிலத்தின் சோஷலிஸ்டுகள் இந்த உண்மையைத்

தாம் புரிந்து கொள்வதாகவே மீண்டும் மீண்டும் தொழிலாளர்களிடம் அறுதியிட்டுக் கூறி வந்துள்ளனர், சத்தியம் செய்து வந்துள்ளனர் என்பதாகவே சொல்லலாம். ஆயினும், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு மிடையே ஆட்சியதிகாரத்துக்கான மெய்யான, மற்றும் முடிவு கட்டக் கூடியதான போராட்டத்துக்குரிய கட்டம் வந்து விடும்படி விவகாரங்கள் முற்றியதும், நமது மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும், மற்றும் அனைத்து உலகிலும் பழைய சோஷலிஸ்டுக் கட்சிகளின் தலைவர்களும் இந்த உண்மையை மறந்துவிட்டு, பொதுப்பட ஜனநாயகம் என்பதான அற்பவாதச் சொல்லடுக்குகளைக் கிளிப் பிள்ளை போல திரும்பத் திரும்பக் கூற முற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

''ஜனநாயகச் சர்வாதிகாரம்'' என்பதாய்ப் பேசி இந்தச் சொல்லடுக்குகளுக்கு அதிகப்படியான வலுவளிக்கலாமென்று சில நேரங்களில் முயற்சி செய்யப்படுகிறது. இது சுத்த அபத்தமே அன்றி வேறல்ல. ஜனநாயக முதலாளித்துவ வர்க்கத்தின் சர்வாதிகாரமென்பது கிளர்ந்தெழுந்துவிட்ட தொழிலாளர்களை நசுக்குவதையே அன்றி வேறு எதையும் குறிக்கவில்லை என்பதை நாம் வரலாற்றிலிருந்து நன்கு அறிவோம். 1848 முதலாய்—அதற்குப் பிற்பாடல்ல, இது நிச்சயம், அது முதலாய்—இப்படியேதான் நடந்து வந்திருக்கிறது, தனிப்பட்ட உதாரணங்கள் சில அதற்கு முன்பேயுங்கூட இருக்கக் கூடும். முதலாளித்துவ ஜனநாயகத்தில்தான் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு மிடையே மிகக் கடுமையான போராட்டம் விரிவாகவும் தங்கு தடையின்றியும் நடந்தேறுகிறது என்பதை வரலாறு தெளிவாய்க் காட்டுகிறது. நடைமுறையில் இந்த உண்மையை ஐயமறக் கண்டுணர்ந்து கொள்ள நமக்குச் சந்தர்ப்பம் கிடைத்து வந்திருக்கிறது. நாம் இந்த உண்மையிலிருந்து ஒருபோதும் விலகாமலும் இதை ஒருபோதும் மறக்காமலும் இருப்பதால் தான், 1917 அக்டோபர் முதலாய் சோவியத் அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கைகள் எல்லா அடிப்படைப் பிரச்சினைகளிலும் உறுதிமிக்கனவாய் இருந்துள்ளன. மேலாண்மை பெறுவதற்காக முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய் நடைபெறும் போராட்டத்தில் பிரச்சினைக்கு முடிவு கட்டக்

கூடியது ஒரேயொரு வர்க்கத்தின்—பாட்டாளி வர்க்கத்தின்—சர்வாதிகாரம் ஒன்றேதான். பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தால் மட்டுமே முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடிக்க முடியும். பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தமுடியும். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தால் மட்டும்தான் மக்களை அணிதிரளச் செய்து செயல்பட வைக்க முடியும்.

எனினும், முதலாளித்துவ வர்க்கம் வீழ்த்தப்பட்டு, அரசியல் அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கைக்கு வந்து விட்ட பிறகு, மேலும் தொடர்ந்து கம்யூனிசத்தைக் கட்டியமைத்துச் செல்வதில், நடுத்தர, இடைநிலைப் பகுதியோரின் பங்கு இல்லாமலே நம்மால் செயல்பட்டுச் செல்ல முடியும் என்பதாய் எவ்வகையிலும் இதிலிருந்து பெறப்படவில்லை—அப்படிப் பெறுப்படுவதாய் நினைத்தால் அது மிகப் பெருந் தவருகிவிடும்.

புரட்சியின்—பாட்டாளி வர்க்கப் புரட்சியின்—ஆரம்பத்தில், அதில் செயல் முனைப்போடு பங்கு கொள்வோரின் கவனமெலாம் பிரதானமான, அடிப்படையான பிரச்சினையில்—அதாவது பாட்டாளி வர்க்கத்தின் மேலாண்மையிலும், முதலாளித்துவ வர்க்கத்தின் மீது வெற்றி பெறுவதன் மூலம் இந்த மேலாண்மையை உறுதி செய்து கொள்வதிலும், முதலாளித்துவ வர்க்கத்தால் திரும்பவும் ஆட்சியதிகாரம் பெற முடியாதபடி உறுதி செய்து கொள்வதிலும்—ஒன்றுகுவிந்திருப்பது இயற்கையே. முதலாளித்துவ வர்க்கத்தார் பிற நாடுகளில் தமக்கு இருக்கும் செல்வத்திலிருந்து, அல்லது சில சந்தர்ப்பங்களில் நமது நாட்டிலேயேகூட இருக்கும்படியான தமது பணச் செல்வத்திலிருந்து தொடர்ந்து இன்னமும் அனுகூலங்கள் பெற்று வருவதை நாம் நன்கறிவோம். பாட்டாளி வர்க்கத்தினரைக் காட்டிலும் அனுபவம் வாய்ந்த சமூகப் பகுதியோர் இருப்பதையும், இவர்கள் முதலாளித்துவ வர்க்கத்துக்குத் துணை புரிவதையும் நாம் நன்கறிவோம். முதலாளித்துவ வர்க்கம் ஆட்சியதிகாரத்தைத் திரும்பவும் பெறும் எண்ணத்தை விட்டொழித்துவிடவில்லை என்பதையும், தமது மேலாண்மையை மீட்டமைக்கும் முயற்சியைக் கைவிட்டுவிடவில்லை என்பதையும் நன்கறிவோம்.

அது மட்டுமல்ல. ''எவ்விடம் எனக்கு ஏற்றதோ அவ்விடம் எந்தன் நாடே'' என்னும் கோட்பாட்டை முதலாளித்துவ வர்க்கம் விடாப்பிடியாய் முன்வைத்து வருகிறது; பணத்தைப் பொறுத்தவரை இவ்வர்க்கம் எப்பொழுதுமே சர்வதேச இயல்புடையதாய் இருந்துள்ளது. இந்த முதலாளித்துவ வர்க்கம் தற்போது சர்வதேச அளவில் இன்னமும் நம்மைக் காட்டிலும் பலமுடைத்ததாகவே இருக்கிறது. இதன் மேல் நிலைக்கு விரைவாய்க் குழி பறிக்கப்பட்டு வருகிறது, ஹங்கேரியப் புரட்சியைப்[29] போன்ற உதாரணங்களே இவ்வர்க்கத்தினர் எதிர்நோக்க வேண்டி வருகிறது—ஹங்கேரியில் புரட்சி நடந்தது குறித்து மகிழ்ச்சியுற்று உங்களுக்கு நேற்று அறிவித்தோம், இதை ஊர்ஜிதம் செய்யும் தகவல்கள் இன்று தொடர்ச்சியாய் வந்து கொண்டிருக்கின்றன. தம் முடைய மேலாண்மை ஆட்டங் கண்டு விட்டது என்பதை முதலாளித்து வவர்க்கத்தினர் உணரத் தொடங்குகின்றனர். முன்பு போல இப்பொழுது இவர்களால் தம் இஷ்டப்படி செயல்பட முடியவில்லை. என்றுமுள உலக அளவிலான பொருளாயத சாதனங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்வோமாயின், பொருளாயதத் துறையில் முதலாளித்துவ வர்க்கத்தார் தற்போது நம்மைக் காட்டிலும் பலம் படைத்தோராகவே இருக்கிறார்கள் என்பதை நாம் ஒத்துக் கொண்டே ஆக வேண்டும்.

எனவேதான் இந்த அடிப்படைப் பிரச்சினையில்—முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவது, பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை நிறுவுவது, முதலாளித்துவ வர்க்கம் மீண்டும் ஆட்சியதிகாரம் பெறும் சாத்தியப்பாடு அனைத்தையும் இல்லாதொழிப்பது என்னும் இந்த அடிப்படைப் பிரச்சினையில்—நமது கவனத்திலும் நமது நடைமுறைச் செயற்பாட்டிலும் பத்தில் ஒன்பது பகுதி ஈடுபடுத்தப்பட்டிருந்தது, ஈடுபடுத்தப்படுவது அவசியமாகவும் இருந்தது. முற்றிலும் இது இயற்கையான, நியாயமான, தவிர்க்க முடியாத ஒன்று. இப்பணியை மிகப் பெரிய அளவுக்கு நாம் வெற்றிகரமாய் நிறைவேற்றியிருக்கிறோம்.

ஆனால் இப்பொழுது நாம் தேச மக்களில் பிற பகுதிகளைப் பற்றிய பிரச்சினையை எடுத்துக் கொண்டாக வேண்டும். நடுத்தர விவசாயிகள் பற்றிய பிரச்சினையை இப்பொழுது

நாம் அதன் முழுப் பரிமாணத்திலும் எடுத்துக் கொண்டாக வேண்டும் — நிலக் கமிட்டியில் ஒருமனதாய் நாங்கள் வந்தடைந்திருக்கும் முடிவாகும் இது; கட்சி உறுப்பினர்கள் எல்லோருமே இது குறித்து உடன்பாடு தெரிவிப்பார்கள் என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை, ஏனெனில் கட்சி உறுப்பினர்கள் கண்டறிந்த விவரங்களைத்தான் நாங்கள் தொகுத்துரைக்கின்றோம்.

ஆம், சிலர் இருக்கவே செய்கிறார்கள், நமது புரட்சியின் நடப்பு குறித்து சிந்திப்பதற்குப் பதிலாய், தற்போது நம் முன்னுள்ள பணிகள் குறித்து ஆழ்ந்த ஆலோசனை செய்வதற்குப் பதிலாய், மென்ஷிவிக்குகளும் வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினருமாகிய அந்தக் கனவான்களிடமிருந்து கேட்கிறோமே அவ்வகையில் சோவியத் அரசாங்கத்தின் ஒவ்வொரு நடவடிக்கை குறித்தும் இவர்கள் ஏளனமாய்ப் பேசியும் குற்றம் கூறியும் வருகிறார்கள். இந்தக் கனவான்கள், நம் பக்கம் சேர்வதா அல்லது முதலாளித்துவ வர்க்கச் சர்வாதிகாரத்தின் பக்கம் சென்றுவிடுவதா என்று தாம் தேர்வு செய்து கொள்ள வேண்டுமென்பதை இன்னும் புரிந்து கொண்டாகவில்லை. இவர்கள் குறித்து நாம் மிகவும் பொறுமையாய் இருந்து வந்திருக்கிறோம், தயவுங்கூட காட்டி வந்திருக்கிறோம். மீண்டும் ஒரு முறை இவர்களுக்குத் தயவு காட்டுவோம். ஆனால் சீக்கிரத்தில் நமது பொறுமைக்கு, தயவு காட்டுவதற்கு முடிவு கட்டிவிடுவோம். இவர்கள் தொடர்ந்து தேர்வு செய்து கொள்ளாமலே இருப்பார்களாயின், கொல்ச்சாக்கிடம்[30] போய்த் தொலையும்படி தீர்மானமாய் இவர்களிடம் சொல்லவே செய்வோம். (கரகோஷம்.) இத்தகையவர்களிடமிருந்து நாம் அதிகப்படியான புத்திசாலித்தனத்தை எதிர்பார்க்கவில்லைதான். (சிரிப்பு.) இருந்தாலும் கொல்ச்சாக்கின் மிருகத்தனமான வன்முறைகளை அனுபவித்த பிற்பாடு, இவர்கள் நம் பக்கமா அல்லது கொல்ச்சாக்கின் பக்கமா என்பது பற்றி தேர்வு செய்துகொண்டுவிட வேண்டுமெனக் கோருவதற்கு நமக்கு உரிமை உண்டென்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்; புரிந்து கொண்டிருப்பார்களென்றுதான் எவரும் எதிர்பார்ப்பார். அக்டோபர் புரட்சியை அடுத்து வந்த முதலாவது சில மாதங்களில் வேண்டுமானால், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நிலையற்ற ஒன்றாய்,

அகஸ்மாத்தாய்த் தோன்றிய ஒன்ரூய் நினைக்கும் அளவுக்கு அசடர்களாய் இருக்கும்படியான பேதைகள் பலரும் இருந்திருக்கலாம். ஆனால் இன்று, சர்வதேச முதலாளித்துவ வர்க்கம் அனைத்தும் சேர்ந்து தொடுக்கும் தாக்குதலை எதிர்த்து நின்று நடைபெற்று வரும் போராட்டத்தில் தர்க்கவாத முறையில் அத்தியாவசிய இயல்புடையது இருக்கவே வேண்டுமென்பதை மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினருங்கூட புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

இரண்டே இரண்டு சக்திகள் மட்டுமே, முதலாளித்துவச் சர்வாதிகாரம், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் ஆகிய இரண்டும் மட்டுமே எழுந்துள்ளன. மார்க்சிடமிருந்து இதைக் கற்றறிந்து கொள்ளாதவர் எவரும், மாபெரும் சோஷலிச ஆசான்களது நூல்களிலிருந்து இதைக் கற்றறிந்து கொள்ளாதவர் எவரும் என்றுமே சோஷலிஸ்டாக இல்லாமல், சோஷலிசம் குறித்து ஏதும் புரிந்து கொள்ளாமல், தனக்கு சோஷலிஸ்டு என்ற பெயரை மட்டும் சூட்டிக் கொண்டவரே ஆவார். ஆலோசித்துப் பார்ப்பதற்காக இவர்களுக்கு நாம் சிறிது அவகாசம் அளிக்கிறோம், ஆலோசித்து இவர்கள் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டுமெனக் கோருகிறோம். இவர்களை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், ''போல்ஷிவிக்குகள் நடுத்தர விவசாயிகள் பற்றிய பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள்; நடுத்தர விவசாயிகளைத் தாஜா பண்ண விரும்புகிறார்கள்'' என்று இப்பொழுது இவர்கள் கூறுகின்றனர், அல்லது கூறுவார்கள். இம்மாதிரியான வாதங்களுக்கும் இன்னும் மோசமான பலவற்றுக்கும் மென்ஷிவிக்குகளுடைய பத்திரிகைகளில் கணிச அளவில் இடமளிக்கப்படுவதை நான் அறிவேன். இத்தகைய வாதங்களை நாம் கவனிப்பதில்லை, நமது எதிராளிகளுடைய பிதற்றல்களுக்கு நாம் முக்கியத்துவம் தருவதில்லை. முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்குமிடையே மாறி மாறி ஓடுவோராகவே இன்னமும் இருப்போர் எது வேண்டுமானாலும் கூறிக் கொண்டிருக்கட்டும். நாம் நமக்குரிய பாதையிலேதான் செல்வோம்.

யாவற்றுக்கும் முதலாய் வர்க்க சக்திகளுடைய நிலைகளைக் கொண்டே நமது பாதை நிர்ணயிக்கப்படுகிறது. முதலாளித்துவச் சமுதாயத்தில் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்குமிடையே ஒரு போராட்டம் வளர்ந்து

வருகிறது. இந்தப் போராட்டம் முடிவடையாத வரை, இதை இறுதி முடிவு கிட்டும்படி நடத்திச் செல்வதில் நாம் கூர்ந்து கவனம் செலுத்தவே செய்வோம். இப்போராட்டம் இன்னும் முடிவுற்றுகவில்லை. மிகுதியான பலவும் ஏற்கனவே இந்தப் போராட்டத்தில் சாதிக்கப்பட்டுள்ளன. இப்பொழுது சர்வதேச முதலாளித்துவ வர்க்கம் முன்பு போல தங்குதடையின்றி செயல்படக் கூடிய நிலையில் இல்லை. ஹங்கேரியப் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடைபெற்றிருப்பதானது இதற்குச் சிறந்த நிரூபணமாகும். ஆகவே கிராமப்புறத்தில் நமது ஆக்கப் பணி, முன்பு ஆட்சியதிகாரத்துக்கான போராட்டத்தின் அடிப்படைத் தேவைக்கு யாவும் கீழ்ப்படுத்தப்பட்டிருந்த போது அது இருத்தப்பட்டிருந்த வரம்புகளை ஏற்கனவே கடந்து சென்றுவிட்டதென்பது தெளிவாய் விளங்குகிறது.

இந்த ஆக்கப் பணி இரு பிரதான கட்டங்களைக் கடந்துள்ளது. 1917 அக்டோபரில் நாம் **விவசாயிகள் அனைவருடனும் ஒன்றுசேர்ந்து** ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினோம். கிராமப்புறத்தில் வர்க்கப் போராட்டம் இன்னும் வளர்ச்சி பெறுதிருந்ததால் இது முதலாளித்துவ புரட்சியாகவே இருந்தது. ஏற்கனவே நான் கூறியதுபோல, கிராமப்புறத்தில் மெய்யான பாட்டாளி வர்க்கப் புரட்சி 1918 கோடையிலேதான் ஆரம்பித்தது. இந்தப் புரட்சியைக் கிளர்ந்தெழச் செய்வதில் நாம் வெற்றி பெற்றிராவிடில், நமது பணி அரைகுறையானதாகவே இருந்திருக்கும். நகரங்களில் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி சோவியத் ஆட்சி முறையை நிறுவுவதே முதற் கட்டமாய் இருந்தது. இரண்டாவது கட்டம் எல்லா சோஷலிஸ்டுகளுக்கும் அடிப்படையானது, இது இல்லாமல் சோஷலிஸ்டுகள் சோஷலிஸ்டுகளாய் இருக்க முடியாது. கிராமப்புறத்தில் பாட்டாளி வர்க்கத்தினரையும் அரைப் பாட்டாளி வர்க்கக் கூறுகளையும் தனித்துப் பிரித்து, கிராமப்புற முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய்ப் போராட்டம் நடத்தும் பொருட்டு இவர்களை நகரத்துப் பாட்டாளி வர்க்கத்துடன் ஒருசேர இணைத்திடுவதே இந்த இரண்டாவது கட்டம். இந்தக் கட்டமும் பிரதானமாய் முடிவுற்றுவிட்டது. இதன் பொருட்டு நாம் தோற்றுவித்த நிறுவனங்களாகிய ஏழை விவசாயிகள் கமிட்டிகள் பெருமளவுக்கு உறுதி பெற்றுவிட்டதால், இவற்றுக்குப் பதிலாய் முறையாய்த் தேர்ந்

தெடுக்கப்பட்ட சோவியத்துகளை அமைப்பது சாத்தியமாகி விட்டது, அதாவது கிராம சோவியத்துகளை வர்க்க ஆட்சி உறுப்புக்களாய், கிராமப்புறத்தில் பாட்டாளி வர்க்க ஆட்சி உறுப்புக்களாய் மாறும்படி திருத்தியமைப்பது சாத்தியமாகி விட்டது. நிலப் பிரச்சினைக்கான சோஷலிசத் தீர்வையும் சோஷலிச விவசாயத்துக்கு மாறிச் செல்வதற்குரிய நடவடிக் கைகளையும் பற்றிய சட்டத்தைப் போன்ற—சிறிது காலத் துக்கு முன்பு மத்தியச் செயற் குழுவால் நிறைவேற்றப்பட்டு, யாவரும் நன்கு அறிந்த சட்டமாகிய இதைப் போன்ற— நடவடிக்கைகள் நமது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் கண் ணோட்டத்திலிருந்து நமது அனுபவத்தைத் தொகுத்தளிக் கின்றன.

பாட்டாளி வர்க்கப் புரட்சி சம்பந்தமான பிரதான விவ காரத்தை, அதன் முதன்மையான, அடிப்படையான பணியை ஏற்கனவே நாம் செய்து முடித்துவிட்டோம். இதை நாம் செய்து முடித்துவிட்டோம் என்ற அதே காரணத்தால், மேலும் சிக்கலான ஒரு பிரச்சினை — **நடுத்தர விவசாயிகள் குறித்து நாம் அனுசரிக்க வேண்டிய போக்கு** பற்றிய பிரச்சினை— முன்னிலைக்கு வந்திருக்கிறது. இந்தப் பிரச்சினை முன்னிலைக்கு வந்திருப்பதானது எவ்வகையிலேனும் நமது ஆட்சியதிகாரத் தின் தன்மை பலவீனமுற்றிருப்பதன் அறிகுறியாகுமென்று, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் பலவீனமுற்றிருப்பதன் அறிகுறியாகுமென்று, நமது அடிப்படைக் கொள்கையில் எவ்வளவுதான் அரைகுறையானதாயினும், எவ்வளவு தான் சொற்பமேயாயினும் ஏதோ மாறுதல் ஏற்பட்டிருப் பதன் அறிகுறியாகுமென்று யாவராவது நினைப்பாராஞல், அவர் பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோள்களை, கம்யூனிசப் புரட்சியின் குறிக்கோள்களைப் புரிந்து கொள்ளாதவரே ஆவார். நமது கட்சியில் இத்தகையோர் இல்லை என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. தொழிலாளர் கட்சியைச் சேராதவர்களில் இப்படிப் பேசுவோர் இருப்பதால், இவர் களைப் பற்றி தோழர்களை எச்சரிக்கை செய்ய வேண்டுமென விரும்பினேன். கருத்தமைப்பு அடிப்படையிலான எந்தப் பரிசீலனையையும் கொண்டு இப்படி ஒரு முடிவுக்கு வந்து இவர்கள் இவ்வாறு பேசவில்லை; நிலைமையை நமக்கு மோச மாக்கி வெள்ளைப் படையினருக்கு உதவ வேண்டுமென்றே

இவ்வாறு பேசுகிறார்கள்—அல்லது இதையே எளிதாய்ப் புரியும்படிச் சொல்வதெனில், நடுத்தர விவசாயியை நமக்கு எதிராய்த் தூண்டிவிடும் பொருட்டு இவ்வாறு பேசுகிறார்கள். நடுத்தர விவசாயி எப்பொழுதுமே ஊசலாடுகிறவர், ஊசலாடாமல் இருக்க முடியாதவர், இனியும் அதிக காலத்துக்குத் தொடர்ந்து இவர் ஊசலாடவே செய்வார். இந்த நடுத்தர விவசாயியை நமக்கு எதிராய்த் தூண்டிவிடும் பொருட்டு இவர்கள் ''பார்த்தாயா, உன்னைத் தாஜா பண்ண முயலுவதை! நீ செய்த கலகங்கள் அவர்களைப் பணிய வைத்திருக்கின்றன, அவர்கள் நிலை குலைந்து போய்த் தடுமாறுகிறார்கள்'' என்றும் இன்ன பலவாறுகவும் கூறுவார்கள். நம் தோழர்கள் எல்லோரும் இவ்வகைக் கிளர்ச்சியை எதிர்க்கும் திறனுடையோராக வேண்டும். வர்க்கப் போராட்டத்தின் கண்ணோட்டத்திலிருந்து இப்பிரச்சினையை ஆராய்வதில் இப் பொழுது நாம் வெற்றி பெறும் பட்சத்தில், நம் தோழர்கள் இக்கிளர்ச்சியை எதிர்க்கும் திறனுடையோராகிவிடுவர் என்பதில் ஐயமில்லை.

அடிப்படையான இந்தப் பிரச்சினை — **நடுத்தர விவசாயிகள் பால் பாட்டாளி வர்க்கத்தின் போக்கைத் திட்டவட்டமாய் வரையறுப்பது**—மேலும் சிக்கலானதும், அதேபோதில் அதே அளவுக்கு அவசர அவசியமானதும் ஆகுமென்பது வெளிப் படையாய்த் தெரியும் ஒன்று. தோழர்களே, தத்துவார்த்தக் கண்ணோட்டத்தில் — மிகப் பெருவாரியான தொழிலாளர்கள் இதைக் கற்றுத் தேர்ந்துள்ளனர்—மார்க்சியவாதிகளுக்கு எவ்விதத்திலும் இது கடுமையான பிரச்சினையல்ல. உதாரணமாய், காவுத்ஸ்கி மார்க்சின் போதனைகளைப் பிழையற்றவாறு எடுத்துரைப்பவராய் இருந்து, இத்துறையில் மறுக்க முடியாத ஆதாரமாய்க் கருதப்பட்டு வந்த காலத்தில், நிலத் துறைப் பிரச்சினை குறித்து அவர் எழுதிய புத்தகத்தில், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வது சம்பந்தமாய்ப் பேசுகையில் எடுத்துரைப்பதை உங்களுக்கு நினைவு படுத்துகிறேன். **விவசாயிகளை நடுநிலைப்படுத்துவதே**, அதாவது பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்குமிடையே நடைபெறும் போராட்டத்தில் விவசாயியை நடுநிலை வகிக்க வைத்து, நமக்கு எதிராய் முதலாளித்துவ வர்க்கத்துக்கு முனைப்பான ஆதரவளிக்

காதபடி செய்வதே சோஷலிஸ்டுக் கட்சிக்குள்ள பணியாகுமென்று காவுத்ஸ்கி இப்புத்தகத்தில் எடுத்துரைக்கின்றார்.

முதலாளித்துவ வர்க்கத்தாரின் ஆட்சிக்குரிய நீண்ட நெடுங் காலம் முழுதும் விவசாயிகள் இவ்வர்க்கத்தாரின் ஆட்சியதிகாரத்துக்கு ஆதரவளித்து வந்தனர். முதலாளித்துவ வர்க்கத்தாரின் பொருளாதார பலத்தையும் அவர்களது ஆட்சியின் அரசியல் கருவிகளையும் மனதிற் கொண்டு பார்ப்போமாஞல் இந்த நிலைமை புரிந்து கொள்ளக் கூடியதே என்பது விளங்கும். நடுத்தர விவசாயிகள் உடனடியாகவே நம் பக்கத்துக்கு வந்துவிடுவார்கள் என்று நாம் எதிர் பார்க்க முடியாதுதான். ஆனல் நாம் பிழையற்ற கொள்கையைப் பின்பற்றுவோமாயின், சிறிது காலத்துக்கெல்லாம் இவர்களுடைய ஊசலாட்டங்கள் முடிவுற்று இந்த விவசாயிகள் நம் பக்கத்துக்கு வர முடியும்.

நமது கட்சி எக்காலத்திலுமே, இன்னும் முக்கியமாய்ப் புரட்சிக் காலத்தில், தனக்கு வழிகாட்டியாய்க் கொண்டிருக்கும் போதனையாகிய விஞ்ஞான மார்க்சியத்தின் அடித்தளங்களை மார்க்சுடன் சேர்ந்து அமைத்திட்டவராகிய எங்கெல்ஸ் அன்றே விவசாயிகளைச் சிறு விவசாயிகள் என்றும், நடுத்தர விவசாயிகள் என்றும், பெரிய விவசாயிகள் என்றும் பிரித்திடும் பாகுபாட்டை வரையறுத்து நிலைநாட்டினர். மிகப் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளுக்கு இந்தப் பாகுபாடு இன்றுங்கூட சரியான ஒன்றாய் இருந்து வருகிறது. ''பெரிய விவசாயிகளையுங்கூட எங்குமே பலாத்காரத்தைக் கொண்டு அடக்க வேண்டிய அவசியம் ஏற்படாமற் போகலாம்'' என்று எங்கெல்ஸ் கூறினர். நடுத்தர விவசாயிகள் சம்பந்தமாய் எக்காலத்திலும் நாம் பலாத்காரத்தைப் பிரயோகிக்க நேரலாம் என்னும் எண்ணம் (சிறு விவசாயி நமது நண்பராவார்)சிந்தனையுள்ள எந்த சோஷலிஸ்டுக்கும் ஒருபோதும் உதித்ததில்லை. எங்கெல்ஸ் 1894ல், அதாவது இறப்பதற்கு ஓராண்டு முன்னதாய், நிலப் பிரச்சினை முன்னிலைக்கு வந்த போது இவ்வாறுதான் கூறினர்.* இந்தக் கண்ணோட்டம்

---

* ஃபிரீட்ரிஹ் எங்கெல்சின் **பிரான்சிலும் ஜெர்மானியிலும் விவசாயிப் பிரச்சினை.**—[பதிப்பாசிரியர்.]

வெளியிடும் உண்மையானது சில நேரங்களில் மறக்கப்பட்டு விட்டது உண்டு, ஆனால் தத்துவார்த்தத்தில் நாம் எல்லோருமே ஏற்றுக் கொள்ளும் உண்மையாகும் இது. நிலப்பிரபுக்களையும் முதலாளிகளையும் பொறுத்த வரை முழுமையாய்ப் பறிமுதல் செய்வதே நமது குறிக்கோள். **ஆனால் நடுத்தர விவசாயிகள் குறித்து எவ்வகையிலும் பலாத்காரம் கையாளப்படுவதற்கு நாம் சிறிதும் இடமளியோம்.** பணக்கார விவசாயிகள் சம்பந்தமாகவுங்கூட நாம் முதலாளித்துவ வர்க்கம் குறித்துக் கூறுவது போல அவ்வளவு வைராக்கியமாய்ச் சொல்லவில்லை; பணக்கார விவசாயிகளையும் குலாக்குகளையும் அறவே பறிமுதல் செய்வோம் என்பதாய்ச் சொல்லவில்லை. நமது வேலைத்திட்டத்தில் இந்தப் பாகுபாடு செய்யப்படுவதைக் காணலாம். பணக்கார விவசாயிகளுடைய எதிர்ப்பையும் புரட்சி-எதிர்ப்பு முயற்சிகளையும் அடக்கியாக வேண்டும் என்றே நாம் கூறுகிறோம். இது முழுநிறைவான பறிமுதல் அல்ல.

முதலாளித்துவ வர்க்கத்தின் பாலும் நடுத்தர விவசாயிகளின் பாலும் நமது போக்கை நிர்ணயிக்கும் இந்த அடிப்படைப் பாகுபாடு—முதலாளித்துவ வர்க்கத்தின் முழுமையான பறிமுதல், ஏனையோரைச் சுரண்டாத நடுத்தர விவசாயிகளுடன் கூட்டணி என்னும் இந்த அடிப்படைக் கொள்கை வழி தத்துவார்த்தத்தில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஆனால் நடைமுறையில் இந்தக் கொள்கை வழி முரணின்றிக் கடைப்பிடிக்கப்படுவதில்லை; கிராம வட்டாரங்களில் இதைக் கடைப்பிடிக்க இன்னும் அவர்கள் கற்றுக் கொண்டாகவில்லை. முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி விட்டு தனது ஆட்சியதிகாரத்தை உறுதியாக்கிக் கொண்ட பின் பாட்டாளி வர்க்கம் பல்வேறு கோணங்களிலிருந்தும் புதிய சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தொடங்கிய போது, நடுத்தர விவசாயி பற்றிய பிரச்சினை முன்னிலைக்கு வரலாயிற்று. கம்யூனிசத்தைக் கட்டியெழுப்பும் பணியானது, பெருவீத விவசாயம் இருந்து வரும் நாடுகளில் ஒரு வழியிலும், சிறுவீத விவசாயத்துக்குரிய நாடுகளில் வேறொரு வழியிலும் நடைபெறும் என்பதை உலகில் எந்தவொரு சோஷலிஸ்டும் மறுத்ததில்லை. இது ஆரம்ப அறிவைக் குறிக்கும் உண்மையாகும், அரிச்சுவடிப் பாடமாகும். கம்யூனிச நிர்மாணப் பணியை நாம் அணுகும் போது நமது பிரதான கவனம் ஓரள

வுக்கு இந்த நடுத்தர விவசாயியின் மீதே குவிய வேண்டு மென்பது இந்த உண்மையிலிருந்துதான் பெறப்படுகிறது.

நடுத்தர விவசாயி பால் நமது போக்கை எப்படி வரை யறுக்கிறோம் என்பதையே மிகப் பலவும் பொறுத்திருக் கின்றன. தத்துவார்த்தத்தில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டது. ஆனால் ஒரு பிரச்சினைக்குத் தத்து வார்த்த வழியில் தீர்வு காண்பதற்கும், அந்தத் தீர்வை நடை முறையில் செயல்படுத்துவதற்கும் வித்தியாசம் உண்டென் பதை நமது நேரடி அனுபவத்தின் வாயிலாய் நாம் நன்கு அறிவோம். இந்த வித்தியாசத்தைதான் இப்பொழுது நாம் நேருக்கு நேர் எதிர்நோக்குகிறோம். மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியின் ஒரு குணாதிசயமாய் அமைந்துவிட்ட வித்தியாச மாகும் இது. பிரெஞ்சுப் பேராண்மை மன்றம் மிகப் பரவ லான நடவடிக்கைகளை மேற்கொள்ள முற்பட்டது; ஆனால் இவற்றைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய ஆதார ஆதர வுக்கான அடித்தளத்தை அது பெற்றிருக்கவில்லை; குறிப் பிட்ட ஒரு நடவடிக்கையைச் செயல்படுத்துவதற்கு எந்த வர்க்கத்தை ஆதாரமாய்க் கொள்வதென்பதுகூட அதற்குத் தெரிந்திருக்கவில்லை.

நமது நிலை சொல்ல முடியாத அளவுக்கு இதைக் காட்டி லும் சிறப்புடைத்தது. ஒரு முழு நூற்றாண்டு கண்டிருக்கும் வளர்ச்சியின் பயனாய், நாம் எந்த வர்க்கத்தை நமக்கு ஆதார மாய்க் கொண்டுள்ளோம் என்பதை நன்கு அறிந்திருக் கிறோம். இந்த வர்க்கத்தின் நடைமுறை அனுபவம் மிகவும் பற்றாக்குறையாய் இருப்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை வீழ்த்தித் தொழிலாளர்களுடைய கைக்கு ஆட்சியதிகாரத்தை மாறச் செய்வது — இந்த அடிப்படைக் குறிக்கோள் தொழிலாளி வர்க்கத்துக்கும் தொழிலாளர் கட்சிக்கும் தெளிவாய்த் தெரி கிறது. ஆனால் **எப்படி** இதைச் செய்வது? தொழில் துறை மீதான தொழிலாளர் கண்காணிப்பிலிருந்து தொழிலாளர் நிர்வாகத்துக்கு நாம் மாறிச் சென்ற போது எவ்வளவு இன்ன லுக்கு ஆளானோம், எத்தனை தவறுகளைச் சமாளித்து முன் னேறினோம் என்பது ஒவ்வொருவருக்கும் நினைவிருக்கும். ஆயி னும் அது நமது வர்க்கத்தினுள், பாட்டாளி வர்க்கத்தினுள் எப்பொழுதுமே நாம் செய்ய வேண்டியிருந்த வேலையாகும்.

ஆனால் இப்பொழுது நாம் ஒரு புதிய வர்க்கத்தின் பால், நகரத் தொழிலாளி அறியாத ஒரு வர்க்கத்தின் பால் நமது போக்கை வரையறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. திட்ட வட்டமான, உறுதியான ஒரு நிலையைப் பெற்றிராத ஒரு வர்க்கத்தின் பால் நமது போக்கை வரையறுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. பாட்டாளி வர்க்கம் அதன் பெருந் திரளில் சோஷலிசத்தை ஆதரிக்கிறது; முதலாளித்துவ வர்க்கத்தினர் அவர்களது பெருந் திரளில் சோஷலிசத்தை எதிர்க்கின்றனர். இவ்விரு வர்க்கங்களிடையே உறவுகளைச் சுலபமாய் வரை யறுக்க முடிகிறது. ஆனால் நடுத்தர விவசாயிகளைப் போன்ற ஒரு பிரிவுக்குச் செல்லும் போது, **இது ஊசலாடும் வர்க்க மாய் இருப்பதைக்** காண்கிறோம். நடுத்தர விவசாயி பகுதி யளவுக்குச் சொத்துடைத்த உடைமையாளராகவும் பகுதி யளவுக்கு உழைப்பாளியாகவும் இருக்கிறார். ஏனைய உழைப் பாளி மக்களை இவர் சுரண்டுவதில்லை. இந்த நடுத்தர விவ சாயி எந்தனையோ பத்தாண்டுகளாய் அரும்பாடு பட்டு தமது நிலையைத் தற்காத்துக் கொண்டார்; நிலப்பிரபுக்கள், முத லாளிகளுடைய சுரண்டலுக்கு ஆளாகி அவதிப்பட்டார்; யாவற்றையும் சகித்துக் கொண்டார். ஆயினும் இவர் உடை மையாளர். ஆகவே, இந்த ஊசலாடும் வர்க்கத்தின் பால் நமது போக்கில் பெருஞ் சிக்கல்கள் எழுகின்றன. ஓராண் டுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டு பார்க்கையில், கிராமப்புறத்தில் ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட பாட்டாளி வர்க்கப் பணியைக் கொண்டு பார்க்கையில், மற்றும் ஏற்கன வே கிராமப்புறத்தில் ஏற்பட்டிருக்கும் வர்க்க வேறுபாட்டு வளர்ச்சியைக் கொண்டு பார்க்கையில், யாவற்றுக்கும் முத லாய் நாம் இங்கு மிதமிஞ்சிய அவசரமோ, தத்துவார்த்தப் பற்றுக்குறையோ, சாதிக்கப்பட்டு வருவதாயினும் இன்னும் சித்தி பெற்றுவிடாத ஒன்றை சித்தி பெற்றுவிட்டதாய்க் கருதிக் கொண்டுவிடும் நிலைமையோ ஏற்படாதபடி எச்சரிக்கை யுடன் இருக்க வேண்டும். கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிஷனுல் உங்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் தீர்மானம்— எனக்குப் பிற்பாடு பேசப் போகிறவர் உங்களுக்கு இந்தத் தீர்மானத்தைப் படித்துக் காட்டுவார்—இது குறித்து போதிய அளவுக்கு எச்சரிக்கை செய்வதைக் காண் பீர்கள்.

நடுத்தர விவசாயிக்கு நாம் உதவி புரிய வேண்டுமென் பது பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து மிகவும் தெளி வாய்த் தெரியும் ஒன்று. தத்துவார்த்தத்தில், இது குறித்து ஐயப்பாட்டுக்கு இடமில்லை. ஆனால் நமது பழக்கங்களின், நமது கலாசார நிலையின் காரணமாகவும், கிராமப்புறத்தின் உபயோகத்துக்காக நாம் உதவக் கூடிய கலாசார, தொழில் நுட்ப சக்திகளின் பற்றுக்குறை காரணமாகவும், மற்றும் அடிக்கடி நாம் செயல் திறனில்லாத, ஏலாத முறையிலேயே கிராமப்புறத்தை அணுகி வரும் காரணத்தாலும், தோழர் கள் அடிக்கடி பலவந்த முறைகளைக் கையாண்டு யாவற்றை யும் கெடுத்துவிடுகிறார்கள். நேற்று ஒரு தோழர் ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது (போல்ஷிவிக்குகள்) நீழ்னி நோவ்கரத் கமிட்டியால் வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்றை என்னிடம் தந்தார். **நீழ்னி நோவ்கரத் குபேர்னியாவில் கட்சிப் பணி பற்றிய தாக்கீதுகளும் ஒழுங்குமுறைகளும்** என்பதான இந்தப் பிரசுரத்தில், உதாரணமாய் 41ஆம் பக்கத்தில் நான் காண்பதாவது: ''விசேஷ வரி விதிப்பு அரசாணையின் முழுச் சுமையும் கிராமக் குலாக்குகள், லாபவெறியர்கள், மற்றும் **பொதுவாய் விவசாயிகளின் நடுத்தரப் பகுதியின்** மீது சுமத்தப் பட வேண்டும்''. சபாஷ்! ரொம்ப நன்றாய்ப் ''புரிந்து கொண்டுவிட்டார்கள்'' இவர்கள்! ஒன்று, இது அச்சுப் பிழை யாய் இருக்க வேண்டும்—இப்படிப்பட்ட அச்சுப் பிழைகளை ஒருபோதும் அனுமதிக்கலாகாது. அல்லது அவசர கோலமாய், அடித்து மோதிக்கொண்டு செய்து முடிக்கப்படும் வேலையாய் இருக்க வேண்டும்—இந்தத் துறையில் அவசரம் எவ்வளவு அபாயகரமானது என்பதற்கு இது எடுத்துக்காட்டு. அல்லது, புரிந்துகொள்ள இவர்கள் அறவே தவறியிருக்க வேண்டும்—எல்லா ஊகங்களிலும் இதுவே மிகவும் மோசமானது; நீழ்னி நோவ்கரத் தோழர்களைப்பற்றி இப்படி நினைக்க நான் விரும்ப மாட்டேன். கவனக் குறைவால் நேர்ந்த ஒன்றாகவே இருக்கும்.

கமிஷனில் ஒரு தோழர் கூறிய நிகழ்ச்சியைப் போன்றவை நடைமுறையில் இருக்கக் காண்கிறோம். அவரைச் சுற்றிலும் விவசாயிகள் கூடியிருந்தனர், இந்த விவசாயிகளில் ஒருவர் அவரிடம் கேட்டார்: ''இதைச் சொல்லுங்கள், நான் நடுத் தர விவசாயியா, என்ன? என்னிடம் இரண்டு குதிரைகளும் ஒரு பசுவும் இருக்கின்றன.... இரண்டு பசுக்களும், ஒரு

குதிரையும்....'' இந்தத் தோழர் உயெஸ்துகளில் சுற்றுப் பயணம் செய்து கிளர்ச்சி புரிகிறவர், ஒவ்வொரு விவசாயியையும் மதிப்பீடு செய்து, நடுத்தர விவசாயியா, இல்லையா என்று சொல்லும்படியான பிழைபாடற்ற அளவைக் கருவி இவரிடம் இருப்பதாய் எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி மதிப்பீடு செய்வதற்கு அந்த விவசாயியினுடைய பயிர்த்தொழிலின் சரித்திரம் பூராவும் தெரிந்திருக்க வேண்டும், அவரைவிட மேம்பட்ட நிலையிலும் தாழ்ந்த நிலையிலுமுள்ள விவசாயிப் பிரிவினருக்கும் அவருக்கும் இருக்கும் உறவு என்ன என்று தெரிந்திருக்க வேண்டும்—பிழையின்றி கருராய் இவற்றை நாம் தெரிந்து கொள்ள முடியாது.

கணிச அளவிலான நடைமுறைத் திறனும் வட்டார நிலைமைகளைப் பற்றிய ஞானமும் இங்கு தேவைப்படுகின்றன. இன்னமும் நாம் இவற்றைப் பெற்றுகவில்லை. இதை ஒத்துக் கொள்ள நாம் வெட்கப்பட வேண்டியதில்லை; பகிரங்கமாய் ஒத்துக்கொள்ளப்பட வேண்டியது இது. எக்காலத்திலும் நாம் கற்பனாவாதிகளாய் இருந்ததில்லை; அப்பழுக்கற்ற கம்யூனிச சமுதாயத்தில் பிறந்து வளர்ந்து ஆளான அப்பழுக்கற்ற கம்யூனிஸ்டுகளின் அப்பழுக்கற்ற கரங்களைக் கொண்டு கம்யூனிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோமென ஒரு நாளும் நாம் நினைத்ததில்லை. அப்படிக் கட்டியெழுப்பமுடியுமென்பது வெறும் கட்டுக் கதை. முதலாளித்துவத்தின் இடிபாடுகளிலிருந்து தொடங்கியே நாம் கம்யூனிசத்தைக் கட்டியெழுப்பியாக வேண்டும். முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தில் புடம் போடப்பட்ட வர்க்கத்தால்தான் இதைச் செய்ய முடியும். பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவச் சமுதாயத்தின் குறைபாடுகளிலிருந்தும் பலவீனங்களிலிருந்தும் விடுபட்டுவிடவில்லை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். இந்த வர்க்கம் சோஷலிசத்துக்காகப் போராடுகிறது, அதே போதில் தனது குறைபாடுகளை எதிர்த்தும் போராடுகிறது. பாட்டாளி வர்க்கத்தின் சிறந்த, முன்னணியான பிரிவு, நகரங்களில் பல பத்தாண்டுகளாய்க் கடும் போராட்டம் புரிந்த இப்பிரிவு, அந்தப் போராட்டத்தின் போது நகரத்துக்கும் தலைநகரத்துக்குமான கலாசாரத்தை அது பெற்றுக் கொள்ளும் நிலையில் இருந்தது, அவ்வாறு அது ஓரளவுக்குப் பெற்றுக் கொள்ளவும் செய்தது. முன்னேறிய நாடுகளிலுங்கூட

கிராமப்புறமானது அறியாமை இருளிலேதான் வதைபடுகிறது. இது உங்களுக்குத் தெரிந்ததே. நாம் கிராமங்களில் கலாசார நிலையை உயரச் செய்யவே போகிறோம், ஆனால் மிகப் பல ஆண்டுகள் தேவைப்படும் ஒரு பணி இது. எங்கும் நமது தோழர்கள் இதை மறந்துவிடுகிறார்கள். கிராமங்களிலிருந்து வருவோர் கூறும் ஒவ்வொரு சொல்லும் இதை நமக்கு எடுப்பான முறையில் தெரியப்படுகிறது; இங்கே வேலை செய்யும் அறிவுத் துறையினரோ, அதிகாரிகளோ கூறுவது அல்ல—இவர்களது பேச்சுகளை நாம் நிறைய கேட்டிருக்கிறோம்—கிராமங்களில் நடந்தேறும் வேலைகளை நடைமுறையில் கண்டறிந்துள்ளவர்கள் கூறுவது இதை நமக்கு அறிவுறுத்துகிறது. இந்த அபிப்பிராயங்கள்தான் நிலக் கமிட்டியில் எங்களுக்கு மிகவும் குறிப்பிடத்தக்க மதிப்புக்குரியனவாய் இருக்கக் கண்டோம். இந்த அபிப்பிராயங்கள்தான் இன்று கட்சிக் காங்கிரஸ் அனைத்துக்கும் மிகவும் குறிப்பிடத்தக்க மதிப்புக்குரியனவாய் இருக்கும்—இதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை—ஏனெனில், இவை புத்தகங்களிலிருந்தும் அரசாணைகளிலிருந்தும் அல்லாமல் அனுபவத்திலிருந்து பெறப்பட்டவை.

நடுத்தர விவசாயியின் பால் நமக்குள்ள போக்கை மிகக் கூடுதலான அளவுக்குத் தெளிவாய்த் தெரியப்படுத்தும்படி இவை யாவும் நம்மை வற்புறுத்துகின்றன. இது மெத்தக் கடினமான வேலையாகும், ஏனெனில் **இத்தகைய தெளிவு எதார்த்தத்தில் இருக்கவில்லை.** இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாத ஒன்று என்பதோடு, நீங்கள் **உடனடியாகவும் ஒரே அடியிலும்** இதைத் தீர்க்க வேண்டுமென விரும்பினால் தீர்க்கப்பட முடியாத ஒன்றும் ஆகும். ''இத்தனை அரசாணைகளை எழுதியிருக்க வேண்டியதில்லை'' என்று கூறுவோரும் இருக்கின்றனர். அரசாணைகளை எப்படிச் செயல்படுத்துவதென்று அறியாமலே அரசாணைகளை எழுத முற்பட்டதற்காக சோவியத் அரசாங்கத்தை இவர்கள் குறை கூறுகின்றனர். உண்மையில் இவர்கள் தாம் வெள்ளைப் படையினரின் நிலைக்குச் சரிந்து செல்வதை உணர்வதில்லை. நூற்றுக் கணக்கில் அரசாணைகளை எழுதிக் கிராம வட்டாரங்களில் வாழ்க்கையை அடியோடு மாற்றிவிடலாமென்று நாம் எதிர்பார்த்திருந்தால் அது முழு முட்டாள்தனமாகவே இருந்திருக்கும். ஆனால் பின்பற்ற வேண்டிய பாதை எது என்பதை நாம் குறிப்பிட்டுக் காட்

டாமல் இருந்திருந்தால், நாம் சோஷலிசத்துக்குத் துரோகம் புரிந்தவர்கள் ஆகியிருப்போம். இந்த அரசாணைகள் நடைமுறையில் முழுமையாகவும் உடனடியாகவும் செயல்படுத்தப்பட முடியாதவையே என்றாலும், பிரசாரத் துறையில் முக்கிய பங்காற்றியவையாகும். முன்பெல்லாம் நாம் பொது உண்மைகளை எடுத்துரைத்து நமது பிரசாரப் பணியை நடத்தி வந்தோம், ஆனால் இப்பொழுது **நமது வேலையின் மூலமாய் நமது பிரசாரப் பணியை நடத்தி வருகிறோம்.** இதுவும் அறிவுரை போதமேயாகும்—செயல் மூலமான அறிவுரை போதமாகும். ஆனால் செயல் என்னும் போது, சில தறுதலைகளின் தனிப்பட்ட சாகசச் செயல்கள் என்கிற அர்த்தத்தில், அராஜகவாதிகளுக்கும் பழைய ரக சோஷலிசத்துக்குமான சகாப்தத்தில் நாம் எள்ளி நகையாடினோமோ அந்தச் செயல்கள் என்கிற அர்த்தத்தில், சொல்லவில்லை. நமது அரசாணை ஓர் அழைப்பு முழக்கமாகும். ஆனால் ''தொழிலாளர்களே வீறு கொண்டு எழுவீர், முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவீர்!'' என்னும் பழைய அழைப்பு முழக்கமல்ல. இல்லை, இது வெகுஜனங்களுக்கு நடைமுறை வேலையில் இறங்குமாறு விடுக்கப்படும் அழைப்பு முழக்கம். **அரசாணைகள் வெகுஜன அளவில் நடைமுறை வேலையை மேற்கொள்ளும்படி விடுக்கப்படும் ஆணைகளாகும்.** முக்கியமானது இதுதான். அரசாணைகளில் உபயோகமற்றவையும், நடைமுறையில் செயல்படுத்த முடியாதவையும் பலவும் இருப்பதாகவே வைத்துக் கொள்வோம். ஆனால் நடைமுறைச் செயலுக்கு வேண்டியவையும் அவற்றில் இருக்கின்றன. சோவியத் அரசாங்கத்தின் குரலுக்குச் செவி மடுக்கும் நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான, லட்சக் கணக்கான மக்களுக்கு நடைமுறை நடவடிக்கைகளை எடுக்கப் போதிப்பதே அரசாணையின் நோக்கம். கிராமப் புறத்தில் சோஷலிச நிர்மாணத் துறையில் நடைமுறைச் செயலுக்கான ஒரு சோதனையாகும் இது. இந்த விவகாரத்தை இவ்வழியில் அணுகுவோமாயின், நமது சட்டங்கள், அரசாணைகள், அவசரப் பிரகடனங்களின் ஒட்டுமொத்தத் தொகுப்பிலிருந்து நாம் மிகப் பலவும் பெற்றுக் கொள்வோம். இவற்றை நாம் உடனடியாகவும், என்ன நேர்வதாயினும் செயல்படுத்தியாக வேண்டிய முழுமுதலான கட்டளைகளாய்க் கொள்ள மாட்டோம்.

தனிப்பட்ட துஷ்பிரயோகங்களுக்கு நடைமுறை ஊக்கமளிக்கக்கூடியவை யாவற்றையும் நாம் தவிர்த்துக் கொண்டாக வேண்டும். பதவி வேட்டையாடுவோரும் அடாத செயலினரும் சில இடங்களில் அட்டைகள் போல் நம்முடன் ஒட்டிக் கொண்டுவிடுகிறார்கள், கம்யூனிஸ்டுகள் என்பதாய்க் கூறிக் கொண்டு இவர்கள் நம்மை ஏமாற்றுகிறார்கள். கம்யூனிஸ்டுகள் இப்பொழுது அதிகாரத்தில் இருக்கின்றனர் என்பதாலும், அதிக நேர்மையுடைய அரசாங்கச் சிப்பந்திகள் தமது பிற்போக்குக் கருத்துக்களின் காரணமாய் நம்முடன் சேர்ந்து வேலை செய்ய வர மறுவிட்டதாலும், ஆனால் பதவி வேட்டையாளர்கள் இவ்வாறின்றி எந்தக் கருத்துக்களும் இல்லாதவர்கள், நேர்மையற்றவர்கள் என்பதாலும் இவர்கள் நமது அணிகளினுள் ஊடுருவி வந்துவிடுகிறார்கள். பதவி ஒன்றையே நோக்கமாய்க் கொண்ட இவர்கள் வட்டாரங்களில் பலவந்த முறைகளைக் கையாளுகின்றனர், தாம் நல்ல காரியம் செய்வதாய் நினைத்துக் கொள்கின்றனர். ஆனால் உண்மையில் இதன் விளைவு என்னவெனில், சில சமயங்களில் விவசாயிகள் ''சோவியத் ஆட்சி வாழ்க! ஆனால் **வீழ்க கம்யூனியா!**''(அதாவது,கம்யூனிசம்) என்கிறார்கள். இது புனைந்துரையல்ல; இவ்வுண்மைகள் மெய்யான வாழ்க்கையிலிருந்து, வட்டாரங்களிலுள்ள தோழர்கள் அளிக்கும் அறிக்கைகளிலிருந்து எடுக்கப்பட்டவை. நிதானம் தவறுவதால், எல்லாவிதமான கண்மூடித்தனத்தாலும் அவசர கோலத்தாலும் எப்பொழுதுமே பெருத்த சேதமே ஏற்படுகிறது என்பதை நாம் மறக்கலாகாது.

நாம் அவசரப்பட வேண்டியிருந்தது, நம்மைப் நாசப் படுகுழிக்கு இழுத்து வந்துவிட்ட ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து எப்படியாவது தப்பி வெளியேறும் பொருட்டு நாம் எதற்கும் துணிந்து தாவிப் பாய வேண்டியிருந்தது. முதலாளித்துவ வர்க்கத்தையும் நம்மைத் தகர்த்தொழிக்க முனைந்த சக்திகளையும் தகர்த்திடுவதற்காக நாம் துணிந்து ஆவேசப் பிரயத்தனங்கள் செய்ய வேண்டியிருந்தது. இவையாவும் அவசியமாயிருந்தன, இப்படிச் செய்யாமல் நாம் வெற்றி பெற்றிருக்க முடியாது. ஆனால் நடுத்தர விவசாயியின் பாலும் இதே முறையில் நடந்து கொண்டிருந்தால், பகைவனின் கையாட்களே திட்டமிட்டு இம்முறையில் செயல்

பட்டிருக்கவேண்டுமெனச் சொல்லும்படியான அளவுக்கு அது படுமோசமான அறிவற்ற செயலாய், அசட்டுத்தனமாய், நமது இலட்சியத்துக்கு நாசம் விளைவிப்பதாய் இருந்திருக்கும். இங்கு நமது நோக்கம் முற்றிலும் மாறுனதாகும். இங்கு நமது நோக்கம் பட்டவர்த்தனமான சுரண்டலாளர்களின் எதிர்ப்பை முறியடிப்பதல்ல, அவர்களைத் தோற்கடித்து வீழ்த்துவதல்ல—இதற்கு முன்பு நாம் இந்நோக்கத்தைதான் வகுத்திருந்தோம். இப்பொழுது நமது நோக்கம் இதுவல்ல; இந்தப் பிரதான நோக்கம் நிறைவேற்றப்பட்டுவிட்டது; இப்பொழுது மேலும் சிக்கலான பிரச்சினைகள் எழுகின்றன. இங்கு பலவந்தத்தால் எதையும் நீங்கள் படைத்தமைத்து விட முடியாது. நடுத்தர விவசாயி சம்பந்தமாய்ப் பலவந்தத்தைக் கையாளுவதானது சொல்ல முடியாத பெருந் தீங்கிழப்பதாகவே இருக்கும். இந்தப் பகுதி எண்ணிக்கையில் பிரம்மாண்டமானது. கோடிக் கணக்கான தனியாட்களால் ஆனது இது. ஐரோப்பாவிலுங்கூட, இந்தப் பகுதி இந்த அளவுக்கு எங்குமே பலம் பெற்றிராத, தொழில்நுட்பமும் கலாசாரமும் நகர வாழ்க்கையும் ரயில்வேக்களும் பிரமாதமாய் வளர்ச்சியுற்றுவிட்ட ஐரோப்பாவிலுங்கூட, நடுத்தர விவசாயி சம்பந்தமாய் பலவந்த நடவடிக்கைகள் எடுக்கலாமென நினைப்பது வேறு எங்கையும் விட மிகவும் சுலபமான இங்கேயுங்கூட, யாரும், சோஷலிஸ்டுகளில் மிகவும் புரட்சிகரமானோருங்கூட இந்த நடவடிக்கைகளை எடுக்கலாமென்று என்றுமே பிரேரணை செய்ததில்லை.

நாம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய போது ஒட்டு மொத்தமாய் விவசாயிகள் அனைவரின் ஆதரவையும் ஆதரமாய்க் கொண்டிருந்தோம். அக்காலத்தில் எல்லா விவசாயிகளுக்கும் நோக்கம் ஒன்றுகவே இருந்தது—நிலப்பிரபுக்களை எதிர்த்துப் போராடுவதே அந்த நோக்கம். ஆனால் பெருவீதச் சாகுபடிக்கு எதிராய் அவர்களுக்கு இருந்த தப்பெண்ணம் இது நாள் வரையில் மறையாமலே அப்படியே இருந்து வந்திருக்கிறது. ''பெரிய பண்ணை என்றால் திரும்பவும் நான் பண்ணை ஆளாக அல்லவா ஆகும்படி நேர்ந்துவிடும்'' என்பதாய் விவசாயி நினைக்கிறார். இது தவறுதான். ஆனால் பெருவீதச் சாகுபடி குறித்து விவசாயிக்குள்ள கருத்து வெறுப் புணர்ச்சியுடனும், நிலப்பிரபுக்கள் முன்பு மக்களை எப்படி

ஒடுக்கி வந்தனர் என்ற அந்த நினைவுடனும் இணைந்த ஒரு கருத்து. அந்த வெறுப்புணர்ச்சி இன்னமும் இருந்து வருகிறது, அது மறைந்துவிடவில்லை.

இங்கே, இந்த விவகாரத்தின் இயற்கையான தன்மை காரணமாகவே, பலவந்த முறைகளால் எதையும் சாதிக்க முடியாதென்ற உண்மையை நாம் குறிப்பாய் வலியுறுத்திக் கூற வேண்டும். இங்குள்ள பொருளாதாரப் பணி முற்றிலும் மாறுன ஒன்று. அடித்தளத்துக்கும் கட்டிடத்துக்கும் சேதம் இல்லாமல் துண்டித்து எடுத்துவிடக் கூடிய மேல்மட்டத்து அடுக்கு இங்கு கிடையாது. நகரங்களில் முதலாளிகள் இந்த மேல்மட்டத்து அடுக்கின் பிரதிநிதிகளாய் இருந்து வந்தனர்; இப்படிப்பட்ட அடுக்க இங்கே கிடையாது. **பலவந்தமானது இங்கே இலட்சியம் அனைத்தையுமே பாழ்படுத்திவிடும்.** இங்கு தேவைப்படுவது நீடித்த கல்வி போதப் பணி. விவசாயி நம் நாட்டில் மட்டுமின்றி, உலகெங்குமே காரிய நோக்குடைய வராகவும் எதார்த்தவாதியாகவும் இருப்பவர்; ''கம்யூனியா தான்'' சிறந்த பயனளிக்க வல்லது என்பதை இவருக்கு நாம் கண்கூடான உதாரணங்கள் மூலம் நிரூபித்துக் காட்டியாக வேண்டும். அவசரக்காரர்கள் சிலர் நகரிலிருந்து திடுதிப்பென கிராமத்தில் வந்திறங்கி வாய்ப்பேச்சு பேசி, அறிவுத்துறைப் பாணியிலும் சில நேரங்களில் அறிவிலாத பாணியிலுமான சண்டப் பிரசண்டங்களைக் கிளப்பி, முடிவில் எல்லோருடனும் சண்டை போட்டுவிட்டு வந்த வழியிலே போய்ச்சேர்வதால் பயன் ஏதுமில்லை. இப்படிச் சில சமயங்களில் நடப்பதுண்டு. தம்மை மதிப்புக்குரியோராக்கிக் கொள்வதற்குப் பதில், இவர்கள் ஏளனத்துக்கு உள்ளாக்கிக் கொள்கின்றனர்.

இந்தப் பிரச்சினையில், கம்யூன்களுக்கு ஊக்கமளிக்கிறோம் என்றே நாம் கூற வேண்டும்; ஆனால் **விவசாயிகளுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் முறையில்** கம்யூன்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். அது வரையில் நாம் விவசாயிகளின் மாணாக்கர்களே அன்றி அவர்களுடைய ஆசிரியர்கள் அல்ல. விவசாயத்தையும் அதன் பிரத்தியேகப் பிரச்சினைகளையும் பற்றி ஏதும் அறியாதோர், சமூக முறையிலான சாகுபடியால் கிடைக்கக் கூடிய அனுகூலங்களைப் பற்றிச் சொல்லக் கேட்டிருக்கும் காரணத்தாலும் நகரில் வாழ்ந்து அலுத்துப் போய் கிராம வட்டாரங்களுக்குச் சென்று வேலை செய்ய

விரும்பும் காரணத்தாலும் கிராமங்களுக்கு விரைந்தோடி வருவோர், தம்மை எல்லாத் துறைகளிலும் விவசாயிகளுக்கு ஆசிரியர்களாய்க் கருதிக் கொள்வதைக் காட்டிலும் அசட்டுத் தனம் எதுவும் இருக்க முடியாது. நடுத்தர விவசாயி யுடனை பொருளாதார உறவுகளில் பலவந்தத்தைக் கையாள நினைப்பதைக் காட்டிலும் அசட்டுத்தனம் எதுவும் இருக்க முடியாது.

இங்கு நமது நோக்கம் நடுத்தர விவசாயியின் உடைமை களைப் பறிமுதல் செய்வதல்ல; விவசாயி வாழ்ந்து வரும் பிரத்தியேக நிலைமைகளை மனதிற் கொண்டு செயல்படுவதும், சிறப்பான ஓர் அமைப்புக்கு மாறிச் செல்வதற்கான வழி முறைகளை விவசாயியிடமிருந்து கற்றறிந்து கொள்வதும், கட்டளையிட்டு அதிகாரம் பண்ணத் துணியாதிருப்பதும்தான் நமது நோக்கமாகும்! இதுதான் நமக்கு நாம் வகுத்திருக்கும் விதி. (எல்லோரும் கையொலி முழக்கம் செய்கிறார்கள்.) நமது நகல் தீர்மானத்தில் நாம் எடுத்துரைக்க முயலும் விதி இதுவேதான். ஏனெனில், தோழர்களே, இத்துறையில் நாம் நிறைய தவறிழைத்துவிட்டோம். இதை ஒப்புக் கொள்ள எவ்வகையிலும் நாம் வெட்கப்படவில்லை. நமக்கு அனுபவம் இருக்கவில்லை. சுரண்டலாளர்களுக்கு எதிரான நமது போராட்டமே அனுபவத்திலிருந்து பெறப்பட்டதுதான். இந்தப் போராட்டத்துக்காகச் சில சமயம் நாம் நிந்திக்கப்பட்டிருக்கிறோம்; இதற்கு நாம் கூறும் பதில் இதுவே: ''முதலாளித்துவக் கனவான்களே, இந்தக் குற்றம் முற்றிலும் உங்களையே தான் சாரும். அப்படி மதிகெட்ட முறையில் காட்டுத்தனமாய் ஆணவமாகவும் வெறித்தனமாகவும் நீங்கள் எதிர்ப்பு காட்டியிராவிடில், உலக முதலாளித்துவ வர்க்கத்துடன் கூட்டு சேர்ந்திராவிடில், புரட்சி சற்று அமைதியான வடிவங்களில் நடந்தேறியிருக்கும்''. எல்லாத் திசைகளிலிருந்தும் தொடுக்கப்பட்ட காட்டுத்தனமான தாக்குதலை இப்பொழுது நாம் எதிர்த்தடித்துவிட்டதால், இனி நாம் பிற முறைகளுக்கு மாறிச் செல்ல முடியும். ஏனெனில் நாம் ஒரு குறுகிய குழுவாய்ச் செயல்படவில்லை, லட்சோப லட்சக் கணக்கானோருக்குத் தலைமைதாங்கும் ஒரு கட்சியாய்ச் செயல்படுகிறோம். லட்சோப லட்சக் கணக்கானோர் பாதை மாற்றத்தை உடனடியாகவே புரிந்து கொண்டுவிட முடியாது; ஆகவே குலாக்கு

களைக் குறியாய்க் கொண்டு ஏவப்படும் அடிகள் நடுத்தர விவசாயிகள் மீது விழும்படியாய் அடிக்கடி நேர்ந்துவிடு கிறது. இதில் வியப்பில்லை. இது வரலாற்று நிலைமைகளால் ஏற்பட்டது என்பதையும், இந்த வரலாற்று நிலைமைகள் இப் பொழுது காலங் கடந்தனவாகிவிட்டன, புதிய நிலைமைகளும் இந்த வர்க்கம் சம்பந்தமான புதிய பணிகளும் ஒரு புதிய மனோபாவத்தை அவசியமாக்குகின்றன என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

விவசாயிகளின் சாகுபடி பற்றிய நமது அரசாணைகள் பிரதானமாய்ப் பிழையற்றவையே. இவற்றில் எந்த ஒன்றை யும் நாம் நிராகரிப்பதற்கோ, எந்த ஒன்றையும் பற்றி வருத்தப்படுவதற்கோ எக்காரணமும் இல்லை. அரசாணைகள் பிழையற்றவையே என்றாலும், **பலாத்காரத்தைக் கையாண்டு அவற்றை விவசாயிகளின் மீது திணிப்பது** தவறாகும். எந்த அரசாணையிலும் இப்படி எதுவும் அடங்கியிருக்கவில்லை. இந்த அரசாணைகள் பின்பற்றப்பட வேண்டிய பாதைகளைச் சுட்டிக் காட்டுகின்றன, நடைமுறை நடவடிக்கைகள் எடுக்கும்படி அழைப்பு விடுக்கின்றன, அந்த அளவுக்கு இவை சரியான வையே. ''கூட்டு இணைவுகளுக்கு ஊக்கமளிக்கும்படி'' கூறு கிறோம் என்றால், நாம் சில தாக்கீதுகளை அளிக்கிறோம், இவற்றைப் பன்முறை சோதித்துப் பார்த்தபின், இவற்றைச் செயல்படுத்துவதற்கான இறுதி **வடிவத்தைக்** கண்டறிந்து கொள்ள வேண்டுமென்பதே இதன் பொருள். விவசாயி களுடைய மனமுவந்த இசைவைப் பெற நாம் முயலவேண்டும் என்னும் போது, விவசாயிகளுக்கு அறிவுறுத்தி, நடைமுறைச் செயல்களின் வாயிலாய் அறிவுறுத்தி அவர்களது இசைவைப் பெற வேண்டும் என்றே அதற்கு அர்த்தம். வெறும் சொற் களால் அறிவுறுத்தப்பட்டு தாம் திடநம்பிக்கை ஊட்டப்படு வதற்கு விவசாயிகள் அனுமதிப்பதில்லை; அவர்கள் இதற்கு அனுமதிக்காதிருப்பது முற்றிலும் நியாயமானதே. அரசாணை களையும் கிளர்ச்சித் துண்டுப் பிரசுரங்களையும் படித்துவிட்டு தாம் முழு நம்பிக்கை கொண்டுவிட அவர்கள் அனுமதிப்பார் களாயின், அதனால் தீங்கே ஏற்படும். பொருளாதார வாழ்க் கையை இந்த வழியில் புத்தமைப்பது முடியுமாயின், இப்படிப் பட்ட புத்தமைப்பு சல்லிக் காசுக்கு உதவாத ஒன்றாகவே இருக்கும். கூட்டு இணைவு பயனுடையது என்பது—மக்கள்

ஒருவரோடொருவர் முட்டி மோதிக் கொள்ளாத முறையில், மெய்யாகவே ஒன்றுபடும் விதத்தில், கூட்டு இணைவு கொள்ள வேண்டும்—இப்படிப்பட்ட கூட்டு இணைவு அனுகூலமானது என்பது நிரூபிக்கப்பட வேண்டும். விவசாயி இந்தப் பிரச்சினையை இவ்விதம்தான் எடுத்துரைக்கிறார்; நமது அரசாணைகளும் இதை இவ்விதம்தான் எடுத்துரைக்கின்றன. இது வரை நம்மால் இதைச் செய்ய முடியவில்லை என்றால், அது பற்றி நாம் வெட்கப்பட வேண்டியதில்லை, அதை நாம் பகிரங்கமாய் ஒத்துக் கொண்டாக வேண்டும்.

ஒவ்வொரு சோஷலிசப் புரட்சிக்குமுரிய அடிப்படைப் பணியையே—முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடிக்கும் பணியையே—இது வரை நாம் செய்து முடித்திருக்கிறோம். பிரதானமாய் இது செய்து முடிக்கப்பட்டுவிட்டது; ஆயினும் நம்மை நசுக்குவதற்காக உலகின் ஏகாதிபத்தியவாதிகள் ஒரு கடைசி முயற்சி மேற்கொண்டிருக்கும் மிகமிகக் கடினமான ஒரு அரையாண்டு இப்பொழுது தொடங்கியிருக்கிறது. **இந்த அரையாண்டுக்குப் பிற்பாடு தமது இலட்சியம் அறவே அதோ கதியாகிவிடும் என்பதை ஏகாதிபத்தியவாதிகளே நன்கு உணருகின்றனர்** என்று கிஞ்சித்தும் மிகைப்பாடின்றி இப்பொழுது நாம் கூறலாம். களைத்துப் போய் நலிவுற்றிருக்கும் நமது நிலையை இப்பொழுது அவர்கள் பயன்படுத்திக் கொண்டு, தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நாட்டிலுள்ள நம்மைத் தோற்கடிக்க முயல வேண்டும்; இல்லையேல் நாம் வெற்றி வாகை சூடிவிடுவோம்—நம் நாடு ஒன்றுக்கு மட்டுமானதாய் இராது நமது இந்த வெற்றி. உணவு நெருக்கடியானது போக்கு வரத்து நெருக்கடியால் மேலும் கடுமையாக்கப்பட்டும், ஏகாதிபத்தியவாதிகள் நம்மீது பல முனைகளிலும் தாக்குதல் தொடுக்க முயன்றும் வரும் இந்த அரையாண்டில் நமது நிலை மிக மிகக் கடுமையானது. ஆனால் **கடைசியான கடுமையான அரையாண்டு** இது. நம்மைத் தாக்கி வரும் வெளிநாட்டுப் பகைவனுக்கு எதிரான போராட்டத்தில் நமது சக்திகள் யாவற்றையும் நாம் தொடர்ந்து ஒன்றுதிரட்டியாக வேண்டும்.

ஆனால் இந்த எல்லா இன்னல்களும் இருந்தபோதிலும், நமது அனுபவமெல்லாம் சுரண்டலாளர்களைத் தகர்த்திடும் உடனடிப் பணி சம்பந்தப்பட்டதாகவே இருந்துள்ளது என்ற போதிலும், கிராமப்புறத்தில் நமது பணியின் நோக்கங்கள்

குறித்துப் பேசும் இச்சந்தர்ப்பத்தில், கிராமப்புறத்தில் நமது நோக்கங்கள், நடுத்தர விவசாயி சம்பந்தமாய், முற்றிலும் வேறு விதமானவை என்பதை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும், ஒருபோதும் மறக்கலாகாது.

கிராமப்புறங்களுக்குச் சென்று வந்திருக்கும் வர்க்க உணர்வு படைத்த எல்லாத் தொழிலாளர்களும்—பெத்ரொ கிராதையோ, இவானவொ-வொஸ்னெசேன்ஸ்கையோ, மாஸ்கோவையோ சேர்ந்தவர்கள்—அகற்ற முடியாதவையாய்த் தோன்றிய பல தவறுன எண்ணங்களும், மிகவும் கடுமையான வையாய்த் தோன்றிய பல மோதல்களும் எப்படி அகற்றப் பட்டன அல்லது தணிக்கப்பட்டன என்பதற்கு உதாரணங் களை எடுத்துரைத்தனர். விவேகமுள்ள தொழிலாளர்கள் முன்வந்து பேசியதும்—புத்தக மொழியிலல்ல, விவசாயிகள் புரிந்து கொள்ளும்படியான ஒரு மொழியில் பேசியதும்—இந்தத் தவறுன எண்ணங்கள் அகற்றப்பட்டதற்கும் மோதல் கள் தணிக்கப்பட்டதற்கும் அவர்கள் உதாரணங்கள் தந்தனர். கிராம வாழ்க்கையைப் பற்றி ஏதும் அறியாமலே கட்டளை யிட முற்பட்டுவிடும் அதிபர்களாய் அவர்கள் பேசவில்லை; நிலைமையை விளக்கிச் சொல்லி, சுரண்டலாளர்களுக்கு எதிரான உழைப்பாளர்களாய் அவர்களுடைய உள்ளத்து உணர்ச்சிகளை ஈர்க்கும்படியான தோழர்களாய் அவர்களுடன் பேசினர். அதிபர்களாகவும் மேல் நிலையாளர்களாகவும் நடந்து கொண்ட நூற்றுக் கணக்கானோரால் செய்ய முடி யாத ஒரு காரியத்தை இவர்கள் தோழமை உணர்வோடு கூடிய இத்தகைய விளக்கத்தின் மூலம் சாதித்தனர்.

இப்பொழுது உங்களுக்கு நாங்கள் சமர்ப்பிக்கும் இந்தத் தீர்மானத்திலும் இதே உணர்வுதான் குடிகொண்டிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தின் அடிநிலையான கோட்பாடுகளை, இதன் பொதுவான அரசியல் முக்கியத்துவத்தை சுருக்கமான எனது இந்த உரையில் எடுத்துரைக்க முயற்சி செய்துள் ளேன். ஒட்டு மொத்தமாய் நமது புரட்சியின் நலங்களது கண்ணோட்டத்தில் நாம் கொள்கை மாற்றம் செய்துவிட வில்லை, நமது கொள்கை வழியை மாற்றிக் கொண்டுவிட வில்லை என்பதைத் தெளிவுபடுத்த முயன்றிருக்கிறேன்—இதில் வெற்றி பெற்றிருக்கிறேன் என்றே நினைக்க விரும்புகிறேன். நாம் கொள்கை மாற்றம் செய்வதாய் வெள்ளைப் படை

யினரும் அவர்களது கையாட்களும் கூச்சலிடுகின்றனர், இனியும் கூச்சலிடுவார்கள். அவர்கள் கூச்சலிடட்டும், நாம் கவலைப்படவில்லை. சிறிதும் முரணில்லாத முறையில் நாம் நமது நோக்கங்களை வளர்ந்து ஓங்கும்படி செய்து வருகிறோம். முதலாளித்துவ வர்க்கத்தை அடக்கும் நோக்கத்திலிருந்து நடுத்தர விவசாயினுடைய வாழ்க்கைக்கு வகை செய்யும் நோக்கத்துக்கு நமது கவனத்தைத் திருப்பிக் கொண்டாக வேண்டும். நடுத்தர விவசாயியுடன் நாம் சமாதானமாய் வாழவேண்டும். நடுத்தர விவசாயிகளுடைய பொருளாதார நிலைமைகளை இலகுவாக்கிச் சீர்படச் செய்தால்தான் கம்யூனிச சமுதாயத்தில் அவர்கள் நம் பக்கத்தில் சேர்ந்து கொள்வார்கள். நாளைக்கு நம்மால் ஒரு லட்சம் டிராக்டர்களை வழங்கி அவற்றுக்கு வேண்டிய பெட்ரோலையும் அவற்றை ஓட்டுவதற்காக டிரைவர்களையும் கொடுக்க முடியுமானால்—தற்போது இது ஆகாயக் கோட்டையே என்பது உங்களுக்குத் தெரிந்ததுதான்—நடுத்தர விவசாயி உடனே ''நான் கம்யூனியாவை ஆதரிக்கிறேன்'' (அதாவது கம்யூனிசத்தை ஆதரிக்கிறேன்) என்பார். இதைச் செய்யும் பொருட்டு முதலில் நாம் சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடிக்க வேண்டும், இந்த டிராக்டர்களை நமக்குத் தரும்படி அவர்களை வலுக்கட்டாயம் செய்ய வேண்டும், அல்லது நாமே இவற்றை உற்பத்தி செய்து கொள்ளும்படியான அளவுக்கு நமது பொருளுற்பத்தி சக்திகளை நாம் வளர்ச்சி பெறச் செய்தாக வேண்டும். இதுதான் இப்பிரச்சினையைச் சரியானபடி வகுத்து உரைப்பதற்குரிய ஒரே வழி.

விவசாயிக்கு நகரங்களிலுள்ள தொழில் துறை அவசியம் தேவைப்படுகிறது. அது இல்லாமல் விவசாயி வாழ முடியாது. இந்தத் தொழில் துறை நம் கையில் இருக்கிறது. நாம் சரியானபடி இந்தப் பணியைச் செய்வோமாயின், விவசாயி நகரங்களிலிருந்து இந்தப் பண்டங்களையும் இந்தக் கருவிகளையும் இந்தக் கலாசாரத்தையும் தமக்குக் கிடைக்கச் செய்வதற்காக நமக்கு நன்றி செலுத்துவார். இவற்றை அவருக்குக் கிடைக்கச் செய்வது சுரண்டலாளர்கள் அல்ல, நிலப்பிரபுக்கள் அல்ல, அவருடைய சக உழைப்பாளர்களே கிடைக்கச் செய்வார்கள். இந்தச் சக உழைப்பாளர்களை அவர் உயர்வாய் மதித்துப் போற்றுகிறார்; ஆனால் காரியவாத முறை

யில், உண்மையில் இவர்கள் அளிக்கும் உதவிக்காக உயர் வாய் மதித்துப் போற்றுகிறார். அதேபோதில், மேலிருந்து வரும்படியான அதிகார தோரணையிலான எல்லாக் ''கட்டளைகளையும்'' அவர் நிராகரிக்கின்றார், முற்றிலும் நியாய மாகவே நிராகரிக்கின்றார்.

முதலில் உதவி புரிந்து பிறகு நாம் அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக வேண்டும். இந்தப் பணியை நாம் சரியானபடி செய்ய முற்படுவோமாயின், உயெஸ்துகளிலும் வோலொஸ்துகளிலும் உணவுப் படைப் பிரிவுகளிலும் ஏனைய எல்லா நிறுவனங்களிலுமுள்ள நமது குழு ஒவ்வொன்றும் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் சரிவர அமையுமாயின், நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் இந்தக் கண்ணோட்டத்திலிருந்து கவனமாய்ச் சோதிக்கப்பட்டு சரி செய்யப்படுமாயின், நாம் விவசாயியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகிவிடுவோம். அப்பொழுதுதான் நாம் மேலும் தொடர்ந்து முன்னேறிச் செல்ல முடியும். அவ ருக்கு உதவுவதும் ஆலோசனை கூறுவதும்தான் இப்பொழுது நாம் செய்ய வேண்டிய காரியம். இது அதிபரின் கட்டளை யாய் இல்லாமல், தோழனின் ஆலோசனையாய் இருக்கும். அப்பொழுது விவசாயி பூரணமாய் நம் பக்கத்துக்கு வந்து விடுவார்.

தோழர்களே, நமது தீர்மானத்தின் உள்ளடக்கம் இதுவேதான். என் அபிப்பிராயத்தில் இது இந்தக் காங்கிரசின் தீர்மானமாய் ஏற்கப்பட வேண்டும். இந்தத் தீர்மானத்தை நாம் ஏற்போமாயின், நமது கட்சி நிறுவனங்கள் யாவற்றின் வேலையும் இதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுமாயின், நம்முன்னுள்ள இரண்டாவது பெரும் பணியை நாம் நிறை வேற்ற முடியும்.

முதலாளித்துவ வர்க்கத்தாரை எப்படி வீழ்த்துவது, அவர்களை எப்படி அடக்குவது என்பதைக் கற்றுக் கொண்டு விட்டோம், இது குறித்துப் பெருமிதம் கொள்கிறோம். ஆனால் லட்சோப லட்சக் கணக்கான நடுத்தர விவசாயிகளுடன் நமது உறவுகளை எப்படி ஒழுங்கு செய்து கொள்வது, எவ் வழியில் அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாவது என்பதை இனிமேல்தான் நாம் கற்றுக் கொள்ள வேண்டும் —இதை நாம் ஒளிவுமறைவின்றி ஒத்துக் கொண்டாக

வேண்டும். ஆனால் நாம் இந்தப் பணியைப் புரிந்துகொண்டுவிட்டோம், இதை நமக்கு வகுத்தமைத்துக் கொண்டுவிட்டோம், ஆகவே இந்தப் பணியை நாம் செய்து முடிப்போம், அதன் பின் சோஷலிசத்தின் வெற்றி பூரணமாய் உறுதியாகிவிடும் என்று முழு நம்பிக்கையோடும் தெளிவறிவோடும் உறுதியோடும் கூறுகின்றோம். (நீடித்த கையொலி முழக்கம்.)

ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது (போல்ஷிவிக்குகள்) எட்டாவது காங்கிரஸ்—சுருக்கெழுத்துப் பதிவுரைகள் என்னும் புத்தகத்தில் *1919*ல் வெளிவந்தது

நூல் திரட்டு, தொகுதி *38*, பக்கங்கள் *187-205*

நடுத்தர விவசாயிகள் சம்பந்தமான போக்கு குறித்து ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது (போல்ஷிவிக்குகள்) எட்டாவது காங்கிரசின் தீர்மானம்

கிராமப்புறத்திலான வேலை குறித்து எட்டாவது காங்கிரஸ், 1919 மார்ச் 22ல் ஏற்கப்பட்ட கட்சி வேலைத்திட்டத்தை அடிப்படையாய்க் கொண்டும்; நிலப் பிரச்சினைக்கான சோஷலிசத் தீர்வு குறித்தும் சோஷலிச விவசாயத்துக்கு மாறிச் செல்வதற்குரிய நடவடிக்கைகள் குறித்தும் சோவியத் அரசாங்கம் பிறப்பித்த சட்டத்துக்கு முழு ஆதரவு அளித்தும்; நடுத்தர விவசாயிகள் சம்பந்தமாய் கட்சியின் கொள்கை வழியைக் கண்டிப்பான முறையில் பற்றிச்செல்வது, அதாவது இவர்களுடைய தேவைகள் குறித்து மேலும் கருத்துள்ள போக்கை அனுசரிப்பதும், வட்டார அதிகாரிகளது மனம் போன போக்கிலான செயல்களுக்கு முடிவுகட்டி நடுத்தர விவசாயிகளுடன் உடன்பாட்டுக்கு வருவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்வதும், தற்போது குறிப்பான முக்கியத்துவம் வாய்ந்ததென்பதை அங்கீகரிக்கிறது.

1) நடுத்தர விவசாயிகளைக் குலாக்குகளுடன் சேர்த்துக் குழப்படி செய்வதும், குலாக்குகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அதிக அளவுக்கோ, குறைந்த அளவுக்கோ இவர்களையும் கட்டுப்படுத்தும் படியாய் விரித்துச் செல்வதும், சோவியத் அரசாங்கத்தின் அரசாணைகளையும் அதன் கொள்கை அனைத்தையுமே மட்டுமல்லாது கம்யூனிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் யாவற்றையுமே அப்பட்டமாய் மீறுவதாகும். கம்யூனிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகளின்படி, முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்காகப் பாட்டாளி வர்க்கம் தீர்மானகரமான போராட்டம் நடத்தும் காலகட்டத்தில் பாட்டாளி வர்க்கத்துக்கும் நடுத்தர விவசாயிகளுக்கு மிடையே உடன்பாடு இருக்க வேண்டியது, சுரண்டல்

எல்லாம் ஒழிக்கப்பட்டுவிடும் நிலைக்குக் கடுந்துன்பமின்றி மாறிச் செல்வதற்கு அவசியமான நிலைமைகளில் ஒன்றுகும்.

2) விவசாய வினைநுட்பம் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலுங்கூட (ருஷ்யாவைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை) தொழில் துறை வினைநுட்பத்துக்குப் பிற்பட்டதாகவே இருப்பதால் ஒப்பளவில் வலுவான பொருளாதார வேர்கள் கொண்டுள்ள நடுத்தர விவசாயிகள் பாட்டாளி வர்க்கப் புரட்சி தொடங்கிய பிறகும் ஓரளவு நீண்ட காலத்துக்கு நீடித்திருப்பார்கள். ஆகவே கிராமங்களில் சோவியத்துகளின் பணித்துறையினரும், மற்றும் கட்சி ஊழியர்களும் அனுசரிக்கும் செயல் வழியானது நடுத்தர விவசாயிகளுடன் நீண்ட கால ஒத்துழைப்புக்கு வகை செய்வதாய் இருக்க வேண்டும்.

3) நடுத்தர விவசாயிகள் சுரண்டலாளர்களல்ல, ஏனெனில் ஏனையோரது உழைப்பைக் கொண்டு அவர்கள் லாபம் பெறவில்லை—விஞ்ஞான சோஷலிசத்தின் இந்த அடிநிலையான வெளிப்படை உண்மையைக் கட்சியானது தவறுமல் கிராமப் புறத்தில் சோவியத்துகளின் எல்லாப் பணித்துறையினரும் தெளிவாகவும் தீர்க்கமாகவும் கிரகித்துக் கொள்ளும்படி செய்தாக வேண்டும். நடுத்தர விவசாயிகளைப் போன்ற சிறு உற்பத்தியாளர்களின் ஒரு வர்க்கம் சோஷலிசத்தால் நஷ்ட மடைந்துவிட முடியாது; மாறுக, மிகவும் ஜனநாயகமான குடியரசிலுங்கூட வெவ்வேறு வகையிலான ஆயிரம் வழிகளில் சுரண்டி வரும் மூலதனத்தின் ஆதிக்கம் வீழ்த்தப்படுவதால் வெகுவாய் நன்மையே அடையும்.

கிராமப்புறத்தில் சோவியத் ஆட்சியதிகாரத்தின் சிறிதும் பிழையற்ற இந்தக் கொள்கை இவ்விதம் வெற்றிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கும் நடுத்தர விவசாயிகளுக்கு மிடையே கூட்டணியையும் உடன்பாட்டையும் உறுதி பெறச் செய்கிறது.

4) எல்லா வகையான கூட்டுறவுகளுக்கும், நடுத்தர விவசாயிகளுடைய விவசாயக் கம்யூன்களுக்கும் ஊக்கமளிக்கும் அதே நேரத்தில், சோவியத் ஆட்சியதிகாரத்தின் பிரதிநிதிகள் இவற்றை நிறுவுவதற்காக இம்மியளவும் பலவந்தம் பிரயோகிக்கப்படுவதற்கு அனுமதிக்கலாகாது. விவசாயிகள் தமது சொந்த முன்முயற்சியைக் கொண்டு தாமே அமைத்

துக் கொள்ளும் கூட்டமைப்புகள்தான், பயனுண்டு என்பதை நடைமுறையில் சோதித்துப் பார்த்து அமைத்துக் கொள்ளப் பட்டவைதான் மதிப்புக்குரியவை. இந்த விவகாரத்தில் அளவு மீறிய அவசரம் தீமையே பயக்கும், ஏனென்றால் புது முறைகள் குறித்து நடுத்தர விவசாயிகளிடத்தே இருக்கும் தப்பெண்ணங்களை இந்த அவசரம் மேலும் வலுப் பெறவே செய்யும்.

விவசாயிகளைக் கம்யூன்களில் சேர வைப்பதற்காக நேரடி யாகவோ, அல்லது மறைமுகமாகவோ பலவந்தம் கையாளப் படுவதற்கு அனுமதிக்கும் சோவியத் ஆட்சியதிகாரப் பிரதிநிதிகளைக் கண்டிப்பான முறையில் பொறுப்பு ஏற்கச் செய்து, கிராமப்புறத்துப் பணியிலிருந்து அவர்களை நீக்கிவிட வேண்டும்.

5) மனம் போன போக்கிலான எல்லா விதக் கட்டாயக் கொள்முதலும், அதாவது மத்திய அதிகார அமைப்புக் களால் வெளியிடப்பட்ட சட்டங்களின் திட்டவட்டமான விதிகளுக்கு இணங்க அமையாத கட்டாயக் கொள்முதல் எதுவாயினும், ஈவிரக்கமின்றி தண்டிக்கப்பட வேண்டும். இத்துறையில் விவசாய மக்கள் கமிசாரகம், உள் துறை மக்கள் கமிசாரகம், அனைத்து ருஷ்யாவின் மத்தியச் செயற் குழு ஆகியவற்றின் கண்காணிப்பு வலுவாக்கப்பட வேண்டு மென்று இக்காங்கிரஸ் வற்புறுத்துகிறது.

6) முதலாளிகளுடைய கொள்ளைவெறி நலன்களை முன்னிட்டு நான்கு ஆண்டுகளாய் நடைபெற்றிருக்கும் ஏகாதிபத்திய யுத்தத்தால் உலகில் எல்லா நாடுகளிலும் ஏற்பட்டிருக்கும் அளவுகடந்த சீர்குலைவினால், குறிப்பாய் ருஷ்யாவில் மிகவும் கடுமையாகியுள்ள இந்தச் சீர்குலைவினால் தற்போது நடுத்தர விவசாயிகள் மெத்தக் கடினமான ஒரு நிலையில் இருத்தப்பட்டிருக்கிறார்கள்.

இதன் காரணமாய், அவசர வரி குறித்து சோவியத் அரசாங்கம் பிறப்பித்திருக்கும் சட்டமானது, உலகின் முத லாளித்துவ அரசாங்கங்கள் யாவும் பிறப்பிக்கும் எல்லாச் சட்டங்களுக்கும் மாறாய், இந்த வரியின் சுமையை முற்றிலும் குலாக்குகளின் மீதே இருத்த வேண்டுமென்று வலியுறுத்து கிறது. குலாக்குகள் யுத்த காலத்தில் குறிப்பான அளவுக்கு செல்வம் திரட்டிக் கொண்ட சொற்ப எண்ணிக்கையிலான

விவசாயிச் சுரண்டலாளர்களது பிரதிநிதிகளாவர். நடுத்தர விவசாயிகள் செலுத்த வேண்டிய தொகை இவர்களுடைய சக்திக்கு முற்றிலும் உள்ளடங்கியதாகவும், இவர்களுக்குப் பெருஞ் சுமையாகிவிடாததாகவும் இருக்கும்படி, மிதமான அளவில்தான் இவர்களுக்கு வரி விதிக்கப்பட வேண்டும்.

இதனால் மொத்த வரி வருமானம் குறைந்துவிடுவதாயினும், அவசர வரி வசூலில் நடுத்தர விவசாயிகளுக்கு எப்படியும் சலுகை காட்ட வேண்டுமென்று கட்சி கோருகின்றது.

7) சோஷலிச அரசு விவசாயத்தின் வினைத்திறனை உயரச் செய்யும் பொருட்டும், விவசாயிகளுடைய வேலை நிலைமைகளும் வாழ்க்கை நிலைமைகளும் மேம்படுமாறு உத்தரவாதம் செய்யும் பொருட்டும், பிரதானமாய் நடுத்தர விவசாயிகளுக்கு நகரத் தொழில்துறை உற்பத்திப் பொருள்களையும் இன்னும் முக்கியமாய் உயர் வகை விவசாயக் கருவிகளையும் விதையையும் மற்றும் பலதரப்பட்ட பொருள்களையும் வழங்குவதன் மூலம், மிகவும் விரிவான அளவில் விவசாயிகளுக்கு உதவி அளிக்க வேண்டும்.

பொருளாதாரம் தற்போது சீர்குலைவுற்று இருக்கும் காரணத்தால் இந்த நடவடிக்கைகள் உடனடியாகவும் முழு அளவிலும் செயல்படுத்தப்பட இயலாமற் போகுமாயின், மிகவும் ஏழ்மையானோரும் நடுத்தரமானோருமாகிய விவசாயிகளுக்குத் தற்போதைய கடினத் தருணத்தில் ஆதரவாய் அமையக் கூடிய மெய்யான எல்லா வித உதவியையும் அளிப்பதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து ஆவன செய்ய வட்டார சோவியத் அதிகார உறுப்புகள் கடமைப்பட்டிருக்கின்றன. இதன் பொருட்டு அரசு நிதியாய் ஒரு பெருந் தொகையை ஒதுக்குவது அவசியமென கட்சி கருதுகிறது.

8) குறிப்பாய், அரசாங்கப் பண்ணைகளும் விவசாயக் கம்யூன்களும் இவற்றையொத்த ஏனைய எல்லாக் கூட்டமைப்புகளும் தமது சுற்றுவட்டாரத்திலுள்ள நடுத்தர விவசாயிகளுக்கு உடனடியாகவும் எல்லா வகையிலும் உதவி புரிய வேண்டுமென்று வற்புறுத்தி சோவியத் அரசாங்கம் வெளியிட்டுள்ள சட்டத்தை முழு அளவில் மெய்யாகவே செயல்படுத்துவதற்கு முயற்சி செய்தாக வேண்டும். இப்படிப்பட்ட மெய்யான உதவியின் அடிப்படையில்தான் நடுத்தர விவசாயி

களுடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முடியும். இவ்வழியில்தான் அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரம் ஆக முடியும், ஆகவும் வேண்டும்.

கட்சியின் வேலைத்திட்டத்திலுள்ள நிலத் துறைப் பிரிவில் குறிக்கப்பட்டிருக்கும் எல்லாக் கோரிக்கைகளையும் உடனடியாய் நடைமுறையில் பூர்த்தி செய்வதன் அவசியத்தை இக்காங்கிரஸ் கட்சி ஊழியர்கள் எல்லோருடைய கவனத்துக்கும் கொண்டுவருகிறது. இக்கோரிக்கைகள் வருமாறு:

(அ) விவசாயிகள் நிலத்தை உபயோகித்துக் கொள்வதை ஒழுங்கு செய்தல் (சிதறுண்ட துண்டு நிலச் சாகுபடியையும் நீள்வரிப் பத்தி நிலச் சாகுபடியையும் இன்ன பிறவற்றையும் நீக்குதல்), (ஆ) விவசாயிகளுக்கு உயர் வகை விதைகளும் செயற்கை உரங்களும் வழங்குதல், (இ) விவசாயிகளுடைய கால்நடைகளின் சாதிவகைகளை மேம்படுத்தல், (ஈ) விவசாய விஞ்ஞான அறிவைப் பரப்புதல்,(உ) விவசாயிகளுக்கு விவசாய விஞ்ஞான உதவி அளித்தல், (ஊ) விவசாயிகளுடைய உழுபடைக் கருவிகளை சோவியத்துகளுக்குச் சொந்தமான ரிப்பேர் பட்டறைகளில் பழுது பார்த்துக் கொடுத்தல், (எ) உழுபடைக் கருவிகளை வாடகைக்குக் கொடுத்துதவும் நிலையங்களையும், சோதனை நிலையங்களையும், முன்மாதிரி வயல்களையும், பிறவற்றையும் நிறுவுதல், (ஏ) விவசாயிகளுடைய நிலங்களைப் பண்படுத்தி மீட்டல்.

9) விவசாய உற்பத்தியைப் பெருகச் செய்வதற்கும், இன்னும் முக்கியமாய் விளைபொருள்களைப் பதனம் செய்வதற்கும், விவசாயிகளது நிலங்களைப் பண்படுத்தி மீட்பதற்கும், கைத்தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்கும், பிறவற்றுக்குமான விவசாயிகளது கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசானது விரிவான அளவில் நிதி உதவியும் ஒழுங்கமைப்பு உதவியும் அளிக்க வேண்டும்.

10) நடுத்தர விவசாயிகளுடன் உடன்பாடு கொள்ளும் கொள்கை வழியிலிருந்து கட்சியின் தீர்மானங்களோ, அல்லது சோவியத் ஆட்சியதிகாரத்தின் அரசாணைகளோ ஒரு போதும் விலகிச் சென்றதில்லை என்பதை இக்காங்கிரஸ் நினைவுபடுத்திக் குறிப்பிடுகிறது. உதாரணமாய், கிராமப்புறத்தில் சோவியத் ஆட்சியதிகாரத்தை ஒழுங்கமைத்து நிறுவும் தலையாய விவகாரத்தில், மக்கள் கமிசாரவைத் தலைவரும்

உணவுத் துறை மக்கள் கமிசாரும் கையொப்பமிட்டு வெளியிட்ட சுற்றறிக்கை, முன்பு ஏழை விவசாயிகள் கமிட்டிகள் நிறுவப்பட்ட போது இக்கமிட்டிகளில் நடுத்தர விவசாயிகளின் பிரதிநிதிகளும் சேர்க்கப்படவேண்டிய அவசியத்தைச் சுட்டிக்காட்டிற்று. ஏழை விவசாயிகள் கமிட்டிகள் நீக்கப்பட்ட போது, வோலொஸ்து சோவியத்துகளில் நடுத்தர விவசாயிகளுடைய பிரதிநிதிகளும் சேர்க்கப்பட வேண்டிய அவசியத்தை சோவியத்துகளின் அனைத்து ருஷ்யக் காங்கிரஸ் மீண்டும் சுட்டிக்காட்டிற்று. தொழிலாளர், விவசாயிகளது அரசாங்கமும் கம்யூனிஸ்டுக் கட்சியும் கடைப்பிடிக்கும் கொள்கை இனி வருங் காலத்திலுங்கூட நடுத்தர விவசாயிகளுடன் பாட்டாளி வர்க்கத்துக்கும் ஏழை விவசாயிகளுக்கு முள்ள உடன்பாட்டின் மனப் பாங்கு நிறைந்ததாகவே இருக்க வேண்டும்.

ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது (போல்ஷிவிக்குகள்) எட்டாவது காங்கிரஸ்—சுருக்கெழுத்துப் பதிவுரைகள் என்னும் புத்தகத்தில் *1919*ல் வெளிவந்தது

நூல் திரட்டு, தொகுதி *38*, பக்கங்கள் *207-10*

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் சகாப்தத்தில் பொருளாதாரமும் அரசியலும்

இந்தத் தலைப்பு குறிக்கும் பொருள் பற்றி சோவியத் ஆட்சியதிகாரத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவின் போது ஒரு சிறு பிரசுரம் எழுத வேண்டுமென்று இருந்தேன். ஆனால் அன்றுட வேலையின் அவசரம் காரணமாய், என்னால் இது வரை சில பிரிவுகளுக்குரிய பூர்வாங்கத் தயாரிப்புகளுக்கு அப்பால் செல்ல முடியவில்லை. ஆகவே என் அபிப்பிராயத்தில் இப்பொருள் குறித்துக் கூறப்பட வேண்டிய அத்தியாவசியக் கருத்துக்களைத் தொகுத்துரைக்கும் சுருக்கமான ஒரு விளக்கத்தை அளிப்பதென முடிவு செய்துள்ளேன். சுருக்கமான தொகுப்புரையில் பல பாதகங்களும் குறைபாடுகளும் உண்டென்பது மெய்தான். ஆயினும் இந்தப் பிரச்சினையையும், பல்வேறு நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் இது பற்றி விவாதிப்பதற்கான அடிநிலையையும் எடுத்துரைப்பதென்ற அடக்கமான குறிக்கோளைப் பத்திரிகைக்குரிய சுருக்கமான கட்டுரை நிறைவேற்றக் கூடியதாய் இருக்கலாம்.

1

முதலாளித்துவத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையில் திட்டவட்டமான ஓர் இடைக்கால கட்டம் இருக்கிறது என்பது குறித்து தத்துவார்த்தத்தில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. இந்த இடைக்கால கட்டம் இவ்விரு சமூகப் பொருளாதார அமைப்புகளின் கூறுகளும் இயல்புகளும் சேர்ந்தமைந்ததாகவே இருக்கவேண்டும். மடிந்துகொண்டிருக்கும்

முதலாளித்துவத்துக்கும் உதித்தெழும் கம்யூனிசத்துக்கும் இடையிலான போராட்டத்துக்குரிய கட்டமாகவே—இதையே வேறு விதமாய்ச் சொல்வதெனில், தோற்கடிக்கப் பட்டதாயினும் இன்னும் ஒழிக்கப்பட்டுவிடாத முதலாளித் துவத்துக்கும், உதித்தெழுந்துவிட்டதாயினும் இன்னும் மிகவும் பலம் பெறுததாகவேஇருந்து வரும் கம்யூனிசத்துக்கும் இடையிலான போராட்டத்துக்குரிய கட்டமாகவே—இந்த இடைக்கால கட்டம் இருந்தாக வேண்டியிருக்கிறது.

இடைக்காலக் கட்டத்துக்குரிய இந்த இயல்புகளால் தனியே பிரித்துக் காட்டப்படும் ஒரு முழு வரலாற்றுச் சகாப் தம் அவசியமென்பது, மார்க்சியவாதிகளுக்கு மட்டுமின்றி, வளர்ச்சித் தத்துவம் குறித்து ஓரளவுக்கேனும் தெரிந்திருக் கும் கல்வியறிவுள்ள எவருக்கும் தெளிவாய் விளங்கும் ஒன்று. இருந்த போதிலும், இன்றைய குட்டிபூர்ஷுவா ஜனநாயக வாதிகள் (மக்டொனல்டு, ழான் லொங்கே, காவுத்ஸ்கி, ஃபிரீட்ரிஹ் ஆட்லர் போன்றோரும் அடங்கலாய்இரண்டாவது அகிலத்தின் எல்லாத் தலைவர்களும், சோஷலிஸ்டுகள் என்ப தாய்த் தமக்குப் போலிப் பெயர் சூட்டிக் கொண்டாலும், உண்மையில் இத்தகையோரே ஆவர்) சோஷலிசத்துக்கு மாறிச் செல்வது பற்றிய பொருள் குறித்துப் பேசும் பேச்சு அனேத்துமே இந்த வெளிப்படை உண்மையை அறவே உதா சீனம் செய்யும் பேச்சாகவே இருக்கிறது. வர்க்கப் போராட் டத்தின் பால் வெறுப்புணர்ச்சி, வர்க்கப் போராட் டத்தைத் தவிர்த்துக் கொண்டு விடலாமென்ற ஆசைக் கனவுகள், முரண்பாடுகளை மூடிமெழுகி இணக்கம் காண் பதற்கும் கூர் முனைகளை மழுங்கச் செய்வதற்குமான முயற்சிகள் ஆகிய இவைதாம் குட்டிபூர்ஷுவா ஜனநாயக வாதிகளுக்குரிய குணுதிசயம். ஆகவே இந்த ஜனநாயகவாதி கள் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்கு ஒரு முழு வரலாற்றுக் கட்டம் அவசியமாய் இருப்பதை அங்கீகரிக்காது தவிர்க்கப் பார்க்கிறார்கள்; அல் லது எதிரும் புதிருமாய் நின்று போரிடும் இரு சக்திகளில் ஒன்றுடன் சேர்ந்து அதன் போராட்டத்துக்குத் தலைமை தாங்குவதற்குப் பதில், இரு சக்திகளுக்குமிடையே இணக்கம் உண்டாக்குவதற்காகத் திட்டங்களைக் கற்பனை செய்வதே தமக்குரிய கடமையெனக் கருதுகிறார்கள்.

2

ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமானது, முன்னேறிய நாடுகளில் அது இருக்கக்கூடியதிலிருந்து சிற்சில விவரங்களில் தவிர்க்க முடியாதவாறு வேறுபடவே செய்யும்; நமது நாட்டின் மிகவும் பிற்பட்ட நிலையும் குட்டி பூர்ஷுவாத் தன்மையுமே இதற்குக் காரணம். ஆனால் அடிப்படை சக்திகளும், மற்றும் சமூகப் பொருளாதாரத்தின் அடிப்படை வடிவங்களும் ருஷ்யாவிலும் வேறு எந்த ஐரோப்பிய நாட்டிலும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன; ஆகவே தனித் தன்மைகளாய் இருப்பவை எல்லாம் அதிக முக்கியத்துவம் இல்லாத விவகாரங்கள் சம்பந்தமானவையாகவே இருக்க முடியும்.

சமூகப் பொருளாதாரத்தின் அடிப்படை வடிவங்களாய் இருப்பவை முதலாளித்துவமும், சிறுவீதப் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியும், கம்யூனிசமுமாகும். அடிப்படை சக்திகளாய் இருப்பவை முதலாளித்துவ வர்க்கமும், குட்டி பூர்ஷுவாக்களும் (குறிப்பாய் விவசாயிகள்), பாட்டாளி வர்க்கமுமாகும்.

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் சகாப்தத்தில் ருஷ்யாவின் பொருளாதார அமைப்பானது, கம்யூனிசக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு பெரிய அரசின் அளவில் ஒன்றுபட்டு, தனது முதலாவது நடவடிக்கைகளை எடுத்து வரும் உழைப்பின் போராட்டமாய்—சிறுவீதப் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்திக்கு எதிராகவும், இன்னமும் வாழ்ந்து வருவதும் சிறுவீதப் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியின் அடிப்படையில் புதிதாய் உதித்தெழுவதுமாகிய முதலாளித்துவத்துக்கு எதிராகவும் நடத்தும் போராட்டமாய்—அமைகிறது.

ருஷ்யாவில், முதலாவதாக, உற்பத்திச் சாதனங்களில் தனியார் உடைமை ஒழிக்கப்பட்டுவிட்டதாலும், இரண்டாவதாக, பாட்டாளி வர்க்க அரசு அதிகாரமானது அரசுக்குச் சொந்தமான நிலங்களிலும் அரசுக்குச் சொந்தமான தொழில் நிலையங்களிலும் தேசம் தழுவிய அளவில் பெருவீதப் பொருளுற்பத்திக்கு ஏற்பாடு செய்தும், பல்வேறு தொழிற் கிளைகளுக்கும் பல்வேறு தொழில் நிலையங்களுக்கும் உழைப்பு

சக்தியை வினியோகித்தும், அரசுக்குச் சொந்தமான நுகர்வுப் பண்டங்களைப் பெரிய அளவுகளில் உழைப்பாளி மக்களிடத்தே வினியோகித்தும் வருகிறபடியால், உழைப்பானது இங்கு கம்யூனிச முறையில் ஒன்றுபட்டிருக்கிறது.

ருஷ்யாவில் கம்யூனிசத்தின் ''முதலாவது நடவடிக்கைகள்'' எடுக்கப்படுவதாய்ச் சொல்கிறோம் (1919 மார்ச்சில் ஏற்கப்பட்ட நமது கட்சி வேலைத்திட்டத்திலும் இம்மாதிரிதான் இது குறிக்கப்பட்டிருக்கிறது); காரணம் என்னவெனில், மேற்கூறிய நிலைமைகள் யாவும் அரைகுறையான அளவுக்கே நம் நாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன; அல்லது வேறு விதமாய்க் கூறுவதெனில், இந்நிலைமைகளின் நிறைவேற்றம் ஆரம்பக் கட்டங்களிலேதான் இருந்து வருகிறது. பொதுவாய் நொடிப் பொழுதில் நிறைவேற்றப்படக் கூடியவை யாவற்றையும் நாம் நொடிப் பொழுதில், புரட்சிகரமான ஒரே அடியில், நிறைவேற்றிக் கொண்டுவிட்டோம்: உதாரணமாய், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் முதல் நாளன்றே, 1917 அக்டோபர் 26ல் (நவம்பர் 8), பெரிய நிலச்சுவான்தார்களுக்கு எந்த நஷ்டஈடும் அளிக்காமலே நிலத்தில் தனியார் உடைமை ஒழிக்கப்பட்டது; பெரிய நிலச்சுவான்தார்கள் உடைமை நீக்கம் செய்யப்பட்டனர். ஆலைகள், தொழிற்சாலைகள், கூட்டுப் பங்குக் கம்பெனிகள், பாங்கிகள், ரயில்வேக்கள், இன்ன பலவற்றின் உடைமையாளர்களான பெரிய முதலாளிகளில் அனேகமாய் எல்லோருமே ஒருசில மாதங்களுக்குள் இதேபோல நஷ்டஈடின்றி உடைமை நீக்கம் செய்யப்பட்டனர். தொழில் துறையில் பெருவீதப் பொருளுற்பத்தியை அரசு ஒழுங்கமைப்புச் செய்தலும், தொழிற்சாலைகளுக்கும் ரயில்வேக்களுக்குமான ''தொழிலாளர் கண்காணிப்'' பிலிருந்து ''தொழிலாளர் நிர்வகிப்பு''க்கு மாறிச் செல்லுதலும் முக்கியமான, தலையாயக் கூறுகளில் ஏற்கனவே சாதிக்கப்பெற்றுவிட்டன. ஆனால் விவசாயத்தில் இவை இப்பொழுதுதான் ஆரம்பமாகியிருக்கின்றன (''அரசுப் பண்ணைகள்'', அதாவது தொழிலாளர்களது அரசானது அரசுக்குச் சொந்தமான நிலங்களில் ஏற்பாடு செய்யும் பெரிய பண்ணைகள்). இதே முறையில் சிறுவீதப் பரிவர்த்தனைப் பண்டச் சாகுபடியிலிருந்து கம்யூனிச விவசாயத்துக்கு மாறிச் செல்வதற்கான ஒரு வழியாய்ச் சிறு விவசாயிகளது

பல்வேறு வகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் பணியையும் இப்பொழுதுதான் ஆரம்பத்திருக்கிறோம்.* தனியார் வர்த்தகத்துக்குப் பதிலாய் அரசால் ஒழுங்கமைக்கப் பட்ட பண்ட வினியோகத்துக்கு ஏற்பாடு செய்வது குறித்தும், அதாவது அரசு தானியத்தைக் கொள்முதல் செய்து நகரங்களுக்கு வழங்குதல், தொழில் துறைப் பண்டங்களைக் கிராமங்களுக்கு வழங்குதல் ஆகியவை குறித்தும், இவ் வாறேதான் கூற வேண்டும். இது சம்பந்தமாய்க் கைக்குக் கிடைத்திருக்கும் புள்ளிவிவரங்கள் கீழே தரப்படுகின்றன.

விவசாயியின் சாகுபடி சிறுவீதப் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாகவே தொடர்ந்து இருந்து வருகிறது. இங்கு முதலாளித்துவத்துக்கு மிகவும் விரிவான, வலு வாய்ந்த, ஆழ்ந்தமைந்த அடிப்படை இருந்து வருகிறது. இந்த அடிப் படையின் மீது முதலாளித்துவம் தொடர்ந்து நீடித்து வருகிறது, கம்யூனிசத்துக்கு எதிரான கடும் போராட்டத்தில் புதிதாய் உதித்தெழுகிறது. அரசின் தானியக் கொள்முத லுக்கும் (பிற பண்டங்களின் கொள்முதலுக்கும்) பொதுவாய் அரசின் பண்ட வினியோகத்துக்கும் எதிராய் நடைபெறும் தனியார் ஊக வாணிபமும் கொள்ளை லாபமும்தான் இந்தப் போராட்டத்துக்குரிய வடிவங்களாகும்.

3

கருத்தியலான இந்தத் தத்துவார்த்த நிர்ணயிப்புகளுக்கு விவர விளக்கமாய், ஸ்தூலமான புள்ளிவிவரங்களை எடுத் துரைக்கிறோம்.

உணவுத் துறை மக்கள் கமிசாரகத்தின் புள்ளிகளின்படி, ருஷ்யாவில் அரசின் தானியக் கொள்முதல் *1917* ஆகஸ்டு *1*க்கும், *1918* ஆகஸ்டு *1*க்கும் இடையில் *3,00,00,000* பூடு;

---

* சோவியத் ருஷ்யாவில் ''அரசுப் பண்ணைகள்'', ''விவசாயக் கம்யூன்கள்'' ஆகியவற்றின் எண்ணிக்கை முறையே சுமார் *3,536*ம், *1,961*ம்; விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை *3,696*ம் ஆகும். நமது மத்தியப் புள்ளி விவர வாரியம் தற்போது எல்லா அரசுப் பண்ணைகளையும் கம்யூன்களையும் எண்ணிக் கணக்கெடுத்து வருகிறது. கணக்கு முடிவுகள் *1919* நவம்பரிலிருந்து வரத் தொடங்கும்.

இதற்கு அடுத்த ஆண்டில் சுமார் 11,00,00,000 பூடு. அடுத்த கொள்முதல் இயக்கத்தின் (1919-20) முதல் மூன்று மாதங்களில் சுமார் 4,50,00,000 பூடுகள் கொள் முதலாகுமென்று தெரிகிறது; 1918ல் இதே காலத்தில் (ஆகஸ் டிலிருந்து அக்டோபர் வரை) 3,70,00,000 பூடுகளே கொள் முதலாயிற்று.

முதலாளித்துவத்தின் மீது கம்யூனிசம் வெற்றி பெறு வதன் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், நிலைவரங்கள் மெல்லவேதான் என்றாலும் இடையறாது மேம்பாட்டைந்து வருகின்றன என்பதை இந்தப் புள்ளிகள் தெளிவுபடுத்து கின்றன. உலகின் பெரும் பலம் படைத்த அரசுகளின் எல்லா சக்திகளையும் ஒன்றுதிரட்டி ருஷ்ய, வெளிநாட்டு முதலாளி கள் ஏற்பாடு செய்த உள்நாட்டு யுத்தத்தால் உலகம் கண்டிராத மிகக் கடுமையான இன்னல்களையும் மீறி இந்த மேம்பாடு சாதிக்கப் பெற்று வருகிறது.

ஆகவே, எல்லா நாடுகளையும் சேர்ந்த முதலாளித்துவ வர்க்கத்தாரும் பகிரங்கமாகவோ, மறைமுகமாகவோ அவர் களது அடிவருடிகளாய் இருப்போரும் (இரண்டாவது அகிலத்தின் ''சோஷலிஸ்டுகள்'') எவ்வளவுதான் பொய்யும் அவதூறும் பொழிந்து வந்த போதிலும், ஓர் உண்மை சர்ச்சைக்கு இடமின்றி விளங்குகிறது—பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினை யின் கண்ணோட்டத்திலிருந்து, நம் நாட்டில் முதலாளித்துவத் தின் மீது கம்யூனிசம் வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது. உலகெங்கும் முதலாளித்துவ வர்க்கமானது போல்ஷிவிசத் துக்கு எதிராய் வெகுண்டெழுந்து சீறுகிறது; போல்ஷிவிக்கு களுக்கு எதிராய்ப் படையெடுப்புகளுக்கும் சதிச் செயல் களுக்கும் பிறவற்றுக்கும் ஏற்பாடு செய்கிறது. காரணம் என்ன வென்றால், இராணுவ பலத்தைக் கொண்டு நாம் நசுக்கப் படாவிடில், சமூகப் பொருளாதாரத்தைத் திருத்தியமைப் பதில் நாம் வெற்றி பெறுவது தவிர்க்க முடியாததென்பதை முதலாளித்துவ வர்க்கம் நன்கு உணருகின்றது. ஆனால் நம்மை நசுக்குவதற்காக அது செய்யும் இந்தப் பிரயத் தனங்கள் வெற்றி பெறுவதாய் இல்லை.

நமக்குக் கிட்டிய இந்தக் குறுகிய காலத்துக்குள், நாம் செயல்பட வேண்டியிருந்துள்ள நம்ப முடியாத மிகக் கடின

நிலைமைகளிலுங்கூட, நாம் முதலாளித்துவத்தை எந்த அளவுக்கு ஏற்கனவே தோற்கடித்திருக்கின்றோம் என்பதைப் பின்வரும் சுருக்கமான புள்ளிவிவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மத்தியப் புள்ளிவிவர வாரியம் தானிய உற்பத்தியையும் நுகர்வையும் பற்றிய புள்ளிவிவரங்களை—சோவியத் ருஷ்யா பூராவுக்குமானவை அல்ல, இருபத்தாறு குபேர்னியாக்களுக்கு மட்டுமானவற்றை—பத்திரிகைகளில் வெளியிடுவதற்காக இப்பொழுதுதான் சேகரித்துத் தொகுத்திருக்கின்றது.

முடிவு விவரங்கள் வருமாறு:

சோவியத் ருஷ்யாவில் 26 குபேர்னியாக்களில்	மக்கள் தொகை பத்துலட்சத்தில்	தானிய உற்பத்தி (விதைக்காகவும் தீவனத்துக்காகவும் செலவிடப்பட்டதைச் சேர்க்காமல்) பத்துலட்சம் பூடுகளில்	கிடைத்துள்ள தானியம் பத்துலட்சம் பூடுகளில்		மக்களுக்குக் கிட்டியிருக்கும் தானியம் பத்துலட்சம் பூடுகளில்	தானிய நுகர்வு, பூடுகள், நபர் விகிதத்தில்
			உணவுத் துறை கமிசாரகம்	லாப வேட்டையாளர்கள்		
உற்பத்தி செய்யும் குபேர்னியாக்கள்	நகரங்களில் 4.4	—	20.9	20.6	41.5	9.5
	கிராமங்களில்28.6	625.4	—	—	481.8	16.9
நுகரும் குபேர்னியாக்கள்	நகரங்களில் 5.9	—	20.0	20.0	40.0	6.8
	கிராமங்களில் 13.8	114.0	12.1	27.8	151.4	11.0
மொத்தம் (26 குபேர்னியாக்கள்)	52.7	739.4	53.0	68.4	714.7	13.6

இவ்வாறு, நகரங்களுக்கு வழங்கப்படும் தானியத்தில் ஏறத்தாழ ஒரு பாதியானது உணவுத் துறை கமிசாரகத்தால் தரப்படுவதாகும்; எஞ்சிய பாதியானது லாப வேட்டைக் காரர்களால் தரப்படுவதாகும். நகரத் தொழிலாளர்கள் நுகரும் உணவைக் கணக்கிட்டு 1918ல் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளும் இதே விகிதாசாரத்தைத்தான் புலப்படுத்தின. அரசாங்கம் வழங்கும் தானியத்துக்குத் தொழிலாளர் தரும் விலை, கொள்ளை லாபக்காரர்களுக்கு அவர்கள் தருவதில் பத்தில் ஒரு பங்கே ஆகுமென்பதை மனதிற் கொள்ள வேண்டும். தானியத்துக்குக் கொள்ளைலாபக்காரர் பெறும் விலை, அரசு விலையைப் போல் பத்து மடங்கு அதிகமாகும். தொழிலாளர் களுடைய குடும்பச் செலவு விவரங்களைத் துல்லியமாய்ப் பரிசீலிக்கையில் தெரிய வரும் உண்மை இது.

4

மேலே தரப்பட்ட புள்ளிவிவரங்களைக் கவனமாய் ஆராய்கையில், ருஷ்யாவின் இன்றைய பொருளாதாரத்தின் அடிப்படை இயல்புகளைப் பற்றிய கறாரான சித்திரத்தை அவை தருகின்றன என்பது தெரிகிறது.

உழைப்பாளி மக்கள் அவர்களைத் தொன்னெடுங் காலமாய் ஒடுக்குமுறை செய்தும் சுரண்டியும் வந்திருக்கும் நிலப் பிரபுக்களிடமிருந்தும் முதலாளிகளிடமிருந்தும் விடுவிக்கப் பட்டிருக்கின்றனர். மெய்யான சுதந்திரத்தையும் மெய்யான சமத்துவத்தையும் நோக்கி எடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்த முன்னேற்ற அடியை, வீச்சிலும் பரிமாணங்களிலும் வேகத்திலும் உலகிலே ஒப்புயர்வற்றதான இந்த முன்னேற்ற அடியை, முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவாளர்கள் (குட்டிபூர்ஷுவா ஜனநாயகவாதிகளும் அடங்கலாய்) புறக்கணித்துவிட்டுப் பேசுகிறார்கள். சுதந்திரம் என்றும் சமத்துவம் என்றும் இவர்கள் பேசுகையில், பாராளுமன்ற முதலாளித்துவ ஜனநாயகத்தையே குறிப்பிடுகின்றனர். இந்தப் பாராளுமன்ற முதலாளித்துவ ஜனநாயகத்தைதான் இவர்கள் பொய்யான முறையில் பொதுவான ''ஜனநாயகம்'', அல்லது ''சுத்த ஜனநாயகம்'' (காவுத்ஸ்கி) என்பதாய்ப் பிரகடனம் செய்கிறார்கள்.

ஆனால் உழைப்பாளி மக்களுக்கு வேண்டியதாய் இருப்பது மெய்யான சமத்துவமும் மெய்யான சுதந்திரமும்தான் (நிலப்பிரபுக்கள், முதலாளிகளிடமிருந்தான சுதந்திரம்தான்); எனவேதான் அவர்கள் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு இவ்வளவு உறுதியான ஆதரவு அளித்து வருகின்றனர்.

இந்த விவசாயி நாட்டில், ஒட்டுமொத்தமாய் விவசாயிகள்தான் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்திலிருந்து எல்லோருக்கும் முதலாகவும், மிக அதிக அளவிலும், உடனடியாகவும் நன்மையடைந்தவர்கள். ருஷ்யாவில் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் ஆதிக்கம் புரிந்த போது விவசாயி பட்டினி கிடந்து வந்தார். நமது வரலாற்றின் நீண்ட நெடும் நூற்றாண்டுகள் முழுதுமே விவசாயி தனக்காகப் பாடுபடுவதற்கு வாய்ப்பு பெறவே இல்லை; நகரங்களுக்காகவும் ஏற்றுமதிக்காகவும் கோடானு கோடி பூடு தானியத்தை முதலாளிகளிடம் ஒப்படைத்துவிட்டு தான் உண்ண உணவின்றியே இருந்து வந்தார். இப்பொழுது முதன்முதலாய், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் விவசாயி தனக்காகப் பாடுபட்டு வருகிறார், நகரவாசியைக் காட்டிலும் நன்றாய் உண்டு வருகிறார். முதன்முதலாய் விவசாயி மெய்யான சுதந்திரம்—தனது உணவை உண்பதற்கான சுதந்திரம், பட்டினியின்றி வாழ்வதற்கான சுதந்திரம்—பெற்றிருக்கிறார். நில வினியோகத்தில் அதிகபட்ச சமத்துவம் நிலைநாட்டப் பெற்றுள்ளது என்பதை யாவரும் அறிவர்; பெரும்பாலான சந்தர்ப்பங்களிலும் விவசாயிகள் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நிலத்தைத் தம்மிடையே பகிர்ந்து கொள்கிறார்கள்.

சோஷலிசம் என்றால் வர்க்கங்களை ஒழித்தல் என்று பொருள்.

வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதற்கு, முதற்கண், நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் வீழ்த்தப்படுவது அவசியமாகும். நமது பணியின் இந்தப் பகுதி செய்து முடிக்கப்பட்டுவிட்டது. ஆனால் இது நமது பணியில் ஒரு பகுதியேதான், அதுவுங்கூட மிகவும் கடினமானதல்லாத ஒரு பகுதியேதான். வர்க்கங்கள் ஒழிக்கப்படுவதற்கு, இரண்டாவதாக, ஆலைத் தொழிலாளிக்கும் விவசாயிக்குமுள்ள வேறுபாடு ஒழிக்கப்படுவது, இவர்கள் எல்லோரும் உழைப்போராக்கப்படுவது அவசிய

மாகும். எடுத்தயெடுப்பிலே இதைச் செய்துவிட முடியாது. ஒப்பிட முடியாத அளவுக்கு மிகவும் கடினமான பணி இது. தவிர்க்க முடியாதபடி இதற்கு நீண்ட காலம் தேவையாயிருக்கும். ஒரு வர்க்கத்தை வீழ்த்துவதன் மூலம் தீர்க்கப்பட்டுவிடக் கூடிய பிரச்சினை அல்ல இது. சமூகப் பொருளாதாரம் அனைத்தையுமே திருத்தி ஒழுங்கமைப்பதன் மூலமே, ஒன்றுசேராது தனிப்பட்ட முறையில் நடைபெறும் சிறு வீதப் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியாய் இருப்பதிலிருந்து பெருவீத சமூகப் பொருளுற்பத்திக்கு மாறிச் செல்வதன் மூலமே இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இப்படி மாறிச் செல்வது தவிர்க்கமுடியாதபடி நீண்ட நெடியதொரு நிகழ்ச்சிப்போக்கு. போதிய கவனமில்லாமல் அவசர கோலமாய் மேற்கொள்ளப்படும் நிர்வாக, சட்டத் துறை நடவடிக்கைகள் இதை தாமதப்படுத்திச் சிக்கல்களையே உண்டாக்கும். விவசாயி தனது விவசாய வினைநுட்பம் அனைத்தையுமே மிகப் பெருமளவுக்கு மேம்படுத்திக் கொள்வதற்கு, அடிப்படையான முறையில் திருத்திக் கொள்வதற்கு வகை செய்யக் கூடிய முறையில் விவசாயிக்கு உதவி அளிப்பதன் மூலம் தான் இந்நிகழ்ச்சிப்போக்கைத் துரிதப்படுத்த முடியும்.

முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடித்த பின் பாட்டாளி வர்க்கமானது, பிரச்சினையின் மிகவும் சிக்கலான இந்த இரண்டாவது பகுதிக்குத் தீர்வு காணும் பொருட்டு, பின் வரும் அடிப்படை வழிகளில் விவசாயிகள் சம்பந்தமான தனது கொள்கையைப் பிறழாது அனுசரித்துச் செல்ல வேண்டும். பாட்டாளி வர்க்கமானது உழைக்கும் விவசாயியைச் சொத்துடைத்த விவசாயியிடமிருந்து, தொழிலாளியான விவசாயியை அங்காடிக்கார விவசாயியிடமிருந்து, உழைக்கும் விவசாயியைக் கொள்ளைலாப விவசாயியிடமிருந்து வேறுபடுத்திப் பிரித்தாக வேண்டும், வரையறை செய்து கொண்டாக வேண்டும்.

இப்படிப் பிரித்து வரையறை செய்து கொள்வதில்தான் சோஷலிசத்தின் சாரப் பொருள் அனைத்தும் அடங்கியுள்ளது.

சோஷலிசத்தின் இந்தச் சாரப் பொருளை, சொல்லில் சோஷலிஸ்டுகளாகவும் செயலில் குட்டிபூர்ஷுவா ஜனநாயகவாதிகளாகவும் இருப்பபோர் (மார்த்தவ்களும், செர்னேவ்

களும், காவுத்ஸ்கிகளும், ஏனையோரும்) புரிந்து கொள்ளாதது குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

இங்கு நாம் குறிப்பிடுவது போல பிரித்து வரையறை செய்து கொள்வது மிகவும் கடினமானதாகும்; ஏனெனில் உண்மை வாழ்வில் ''விவசாயியின்'' இந்த எல்லா இயல்புகளும்—அவை எவ்வளவுதான் பலதரப்பட்டனவயாய் இருப்பினும், எவ்வளவுதான் முரண்பாடாய் இருப்பினும்—ஒரே முழுமையாய் இணைந்துவிடுகின்றன. இருந்த போதிலும் இப்படிப் பிரித்து வரையறை செய்வது சாத்தியமே. இது சாத்தியமானது என்பதோடு, விவசாயி பயிர்த்தொழில் செய்து வரும் நிலைமைகளிலிருந்தும் விவசாயி வாழ்க்கை நிலைமைகளிலிருந்தும் தவிர்க்க முடியாதவாறு பெறப்படுவதுமாகும். உழைக்கும் விவசாயி தொன்னெடுங் காலமாய் நிலப்பிரபுக்களாலும் முதலாளிகளாலும் அங்காடிக்காரர்களாலும் கொள்ளைலாபக்காரர்களாலும் இவர்களது அரசாலும், மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளும் அடங்கலான அரசுகளாலும் ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறார். உழைக்கும் விவசாயி இத்தனைக் காலமாய் இந்த ஒடுக்குமுறையாளர்களையும் சுரண்டலாளர்களையும் வெறுக்கவும் துவேஷிக்கவும் தன்னைப் பயிற்றுவித்துக் கொண்டார். வாழ்க்கை நிலைமைகளால் அவசியமாக்கப்படும் இந்தப் ''பயிற்சி'', விவசாயியை முதலாளிக்கு எதிராகவும், கொள்ளைலாபக்காரருக்கும் அங்காடிக்காரருக்கும் எதிராகவும் தொழிலாளியுடன் கூட்டணி நாடும்படிக் கட்டாயப்படுத்துகிறது. அதேபோது பொருளாதார நிலைமைகள், பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி நிலைமைகள், தவிர்க்க முடியாதவாறு விவசாயியை (எப்பொழுதும் அல்ல, மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில்) அங்காடிக்காரராகவும் கொள்ளைலாபக்காரராகவும் மாறும்படிச் செய்கின்றன.

உழைக்கும் விவசாயிக்கும் கொள்ளைலாப விவசாயிக்கு முள்ள எடுப்பான வித்தியாசத்தை மேற்கூறிய புள்ளிவிவரங்கள் புலப்படுத்துகின்றன. 1918-19ல் நகரங்களில் பசியால் வதைந்த தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணய விலைகளில் 4,00,00,000 பூடு தானியத்தை அளந்தது எந்த விவசாயியோ—அரசுக் கொள்முதல் நிறுவனங்களின் எல்லாக் குறைபாடுகளையும் மீறி, தொழிலாளர் அரசாங்கம் நன்கு உணர்ந்

திருந்தவையும் சோஷலிசத்துக்கு மாறிச் செல்லுதலின் ஆரம்பக் காலத்தில் தவிர்க்க முடியாதவையாய் இருப்பவை யுமான அக்குறைபாடுகளையும் மீறி—இந்நிறுவனங்களிடம் அளந்தது எந்த விவசாயியோ—அந்த விவசாயிதான் உழைக் கும் விவசாயி; சோஷலிசத் தொழிலாளிக்குச் சரிசமத்துவ மாய்க் கருதப்படக் கூடிய ஒரு தோழர்; மூலதன ஆதிக்கத் துக்கு எதிரான போராட்டத்தில் சோஷலிசத் தொழிலாளி யின் நம்பகமான கூட்டாளி; உடன்பிறந்த சோதரர். ஆனால் நகரத் தொழிலாளியை வருத்திய இல்லாமையும் பசியையும் பயன்படுத்திக் கொண்டு, அரசை ஏமாற்றியும், எங்கும் ஏமாற்றையும் திருட்டையும் மோசடியையும் தோற்றுவித் தும் அதிகமாக்கியும் கள்ளத்தனமாய் 4,00,00,000 பூடு தானியத்தை அரசு நிர்ணய விலையைக் காட்டிலும் பத்து மடங்கான விலைக்கு விற்றவர் எவரோ—அந்த விவசாயி கொள்ளைலாபக்காரர்; முதலாளியின் கூட்டாளி; தொழி லாளியின் பகை வர்க்கத்தவர்; சுரண்டலாளர். ஏனெனில், அனைத்து அரசுக்கும் உரியதான நிலத்தில் விவசாயியினுடைய உழைப்பு மட்டுமின்றி தொழிலாளியின் உழைப்பும் ஏதேனும் ஒரு வழியில் உள்ளடங்கிய கருவிகளின் துணை கொண்டும், இவ்வாறான பிற நிலைமைகளிலும் சாகுபடி செய்யப்பட்ட உபரியான தானியத்தை வைத்துக் கொண்டு, இந்த தானியத் தின் மூலம் கொள்ளைலாபமடிப்பவர் எவரும், பசியால் வாடும் தொழிலாளியைச் சுரண்டுகிறவரே ஆவார்.

நம்முடைய அரசியல் சட்டத்தில் தொழிலாளிக்கும் விவ சாயிக்கும் சமத்துவம் அளிக்கப்படாததையும், அரசியல் நிர் ணயச் சபை கலைக்கப்பட்டதையும், உபரி தானியம் பலவந்த மாய்ப் பறிமுதல் செய்யப்படுவதையும், இன்ன பிறவற்றையும் சுட்டிக் காட்டி, நீங்கள் சுதந்திரத்தையும் சமத்துவத்தை யும் ஜனநாயகத்தையும் மீறுகிறீர்கள் என்பதாய், நாற் புறமிருந்தும் நம்மைப் பார்த்துக் கூச்சலிடுகின்றனர். இவர் களுக்கு நாம் அளிக்கும் பதில் இதுதான்: உழைக்கும் விவ சாயி பல நூறு ஆண்டுகளாய் மெய்ந் நடப்பில் இலக்காகி அவதியுற்று வந்திருக்கும் அசமத்துவத்தையும் சுதந்திர மின்மையையும் நீக்குவதற்காக, நம்மைப் போல் இவ்வளவு அதிகமாய்ச் செய்திருக்கும் ஓர் அரசு உலகில் என்றுமே இருந்த தில்லை. ஆனால் கொள்ளைலாப விவசாயியுடன் சமத்துவத்தை

நாம் ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டோம்—எப்படி சுரண்டுவோருக்கும் சுரண்டப்படுவோருக்கும் இடையே, மிதமிஞ்சி உண்டு சலிப்புறுவோருக்கும் உணவின்றி வாடுவோருக்கும் இடையே ''சமத்துவத்தையோ'', பின்னவர்களைக் கொள்ளையடிப்பதற்கு முன்னவர்களுக்குள்ள ''சுதந்திரத்தையோ'' நாம் அங்கீகரிப்பதில்லையோ, அதே போல. இந்த வித்தியாசத்தை அங்கீகரிக்க மறுக்கிறார்களே படித்த பெரியவர்கள், அவர்கள் தம்மை ஜனநாயகவாதிகள் என்றோ, சோஷலிஸ்டுகள் என்றோ, சர்வதேசியவாதிகள் என்றோ, காவுத்ஸ்கிகள், செர்னேவ்கள், அல்லது மார்த்தவ்கள் என்றோ அழைத்துக் கொண்ட போதிலுங்கூட, நாம் அவர்களை வெள்ளைப் படையினராகவே பாவித்து நடந்து கொள்வோம்.

5

சோஷலிசம் என்றால் வர்க்கங்களை ஒழித்தல் என்று பொருள். வர்க்கங்களை ஒழிப்பதற்காகப் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் தன்னால் இயன்றது அனைத்தும் செய்திருக்கிறது. ஆனால் வர்க்கங்களை எடுத்தெடுப்பில் ஒரே அடியில் ஒழித்துவிட முடியாது.

பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் சகாப்தத்திலும் வர்க்கங்கள் **இருக்கவே செய்கின்றன, இருக்கவே செய்யும்** வர்க்கங்கள் மறையும் போது சர்வாதிகாரம் தேவையற்றதாகிவிடும். பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் இல்லையேல் அவை மறையா.

வர்க்கங்கள் இருந்து வருகின்றன; ஆனால் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் சகாப்தத்தில் **ஒவ்வொரு** வர்க்கமும் மாற்றமடைந்திருக்கிறது; வர்க்கங்களுக்கு இடையிலான உறவுகளும் மாற்றமடைந்திருக்கின்றன. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் வர்க்கப் போராட்டம் மறைந்துவிடுவதில்லை; வேறு வடிவங்களையே ஏற்கிறது.

முதலாளித்துவத்தில் பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்பட்ட வர்க்கமாய், உற்பத்திச் சாதனங்களில் உடைமை ஏதும் இல்லாத வர்க்கமாய் இருந்தது; முதலாளித்துவ வர்க்கத்துக்கு நேரடியாகவும் முழுமையாகவும் எதிரான ஒரேயொரு வர்க்கமாகவும், ஆகவே இறுதி வரை புரட்சிகரமாய் இருக்கக்

கூடிய ஒரேயொரு வர்க்கமாகவும் இருந்தது. முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி அரசியல் அதிகாரம் வென்று கொண்டதும், பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாகியிருக்கிறது; இது அரசு அதிகாரம் செலுத்துகிறது; சமூகவுடைமையாக்கப்பட்டுவிட்ட உற்பத்திச் சாதனங்களைப் பயன்படுத்திச் செயல் புரிகிறது; ஊசலாடும் இடைத்தட்டுக் கூறுகளுக்கும் வர்க்கங்களுக்கும் வழிகாட்டுகிறது; சுரண்டலாளர்களது மேலும் மேலும் விடாப்பிடியான எதிர்ப்பை நசுக்குகிறது. இவை யாவும் வர்க்கப் போராட்டத்தின் **பிரத்தியேகப்** பணிகளாகும், முன்பெல்லாம் பாட்டாளி வர்க்கம் தனக்கு வகுத்துக் கொள்ளாத, வகுத்துக் கொள்ளவும் முடியாத பணிகளாகும்.

நிலப்பிரபுக்களும் முதலாளிகளுமான சுரண்டலாளர் வர்க்கம் இன்னும் மறைந்துவிடவில்லை, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் தோன்றியதுமே திடுதிப்பென மறைந்துவிடவும் முடியாது. சுரண்டலாளர்கள் தகர்க்கப்பட்டிருக்கின்றனர், ஆனால் இன்னும் ஒழிக்கப்பட்டுவிடவில்லை. சர்வதேச மூலதனத்தின் வடிவில் இன்னமும் இவர்களுக்கு சர்வதேசத் தளம் ஒன்று இருந்து வருகிறது; இந்த சர்வதேச மூலதனத்தின் கிளையே இவர்கள். சில உற்பத்திச் சாதனங்களில் ஒரு பகுதி இன்னமும் இவர்கள் கையில் இருந்து வருகிறது; இன்னமும் இவர்களிடம் பணமும் பரந்த அளவிலான சமூகத் தொடர்புகளும் இருக்கின்றன. இவர்கள் தோற்கடிக்கப்பட்டிருப்பதால், இவர்களுடைய எதிர்ப்பு நூறு மடங்கும் ஆயிரம் மடங்கும் கூடுதலாகியிருக்கிறது. அரசு, இராணுவ, பொருளாதார நிர்வாகக் ''கலையானது'', இவர்களுக்கு மேல்நிலை, மிகப் பெரும் மேல்நிலை கிடைக்கச் செய்துவிடுகிறது; ஆகவே இவர்களுடைய முக்கியத்துவம் மக்கள் தொகையில் இவர்களுக்குள்ள வீதாசாரத்தைக் காட்டிலும் ஒப்பிட முடியாத அளவுக்கு அதிகமாகும். வீழ்த்தப்பட்டிருக்கும் சுரண்டலாளர்கள் வெற்றி கண்டிருக்கும் சுரண்டப்படுவோரது முன்னணிப் படையாகிய பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராய் நடத்தும் வர்க்கப் போராட்டம், ஒப்பிட முடியாத அளவுக்கு முன்னிலும் மிகவும் உக்கிரமடைந்திருக்கிறது. புரட்சியெனும் கருத்தைக் கைவிட்டு (இரண்டாவது அகிலத்தின் வீரர்கள் எல்லோரும் செய்திருக்கிறார்களே அது போல)

சீர்திருத்தவாதப் பிரமைகளை மேற்கொள்ளாத வரை, இவ்வாறன்றி வேறு எவ்விதமாகவும் இருக்க முடியாது.

முடிவில், விவசாயிகள், பொதுவாய்க் குட்டிபூர்ஷுவாக்களைப் போல, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்திலுங்கூட நடுவழியிலான, இடைப்பட்ட நிலை வகிக்கின்றனர். ஒருபுறத்தில் அவர்கள் ஓரளவு பெரியதான (பிற்பட்ட ருஷ்யாவில், மிகப் பெரிய) உழைப்பாளி மக்கள் திரளாய் இருக்கின்றனர்; நிலப்பிரபுவிடமிருந்தும் முதலாளியிடமிருந்தும் தம்மை விடுவித்து கொள்வதில் உழைப்பாளி மக்கள் அனைவருக்குமுள்ள பொதுவான நாட்டத்தால் ஒன்றுபடுத்தப்பட்டிருக்கின்றனர். மறுபுறத்தில், இவர்கள் ஒன்றுபடாத சிறு உற்பத்தியாளர்களாகவும் சொத்துடைமையாளர்களாகவும் வியாபாரிகளாகவும் இருக்கின்றனர். இப்படிப்பட்ட ஒரு பொருளாதார நிலை தவிர்க்க முடியாதபடி இவர்களைப் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் இடையே ஊசலாடச் செய்கிறது. பின்னவர்கள் இருவருக்கும் இடையே நடைபெறும் போராட்டம் கடுமையான வடிவத்தை அடைந்திருப்பதாலும், சமூக உறவுகள் எல்லாமே நம்ப முடியாத அளவுக்கு வெகுவாய்ச் சிதைந்திருப்பதாலும், விவசாயிகளுக்கும் பொதுவாய்க் குட்டிபூர்ஷுவாக்களுக்கும் பழையவற்றிலும் மாமூலானவற்றிலும் மாறுதவற்றிலும் இருக்கும் மிகுந்த பற்றுதலாலும், இயற்கையாகவே இவர்கள் ஒரு பக்கத்திலிருந்து எதிர்ப்பக்கத்துக்கு மாறிமாறிச் சென்று கொண்டிருப்பதையும், ஊசலாடுவோராகவும் நிலையின்றி மாறுவோராகவும் நிச்சயமில்லாதோராகவும் இருக்கக் காண்கிறோம்.

இந்த வர்க்கம் சம்பந்தமாய்—அல்லது இந்தச் சமூகக் கூறுகள் சம்பந்தமாய் — தொழிலாளி வர்க்கத்துக்குள்ள பணி இதைத் தனது செல்வாக்குக்கு உட்படச் செய்வதும், இதற்கு வழிகாட்டுவதும்தான். ஊசலாடுவோருக்கும் நிலையற்றோருக்கும் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கியாக வேண்டும்.

இந்த அடிப்படை சக்திகள் அல்லது வர்க்கங்கள் யாவற்றையும், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தால் மாற்றியமைக்கப்படும் இவற்றினிடையிலான பரஸ்பர உறவுகளையும் நாம் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், பொதுவான ''ஜனநாயகத்தின் மூலம்'' சோஷலிசத்துக்கு மாறிச் சென்றுவிட

லாம் என்னும் சகஜமான குட்டிபூர்ஷுவாக் கருத்து—இரண்டாவது அகிலத்தின் எல்லாப் பிரதிநிதிகளிடமும் இருந்து வரும் இக்கருத்து—எப்படிச் சொல்ல முடியாத அளவுக்கு அபத்தமாகும், தத்துவார்த்தக் கண்ணோட்டத்தின்படி அசட்டுத்தனமாகும் என்பது புலனாகும். ''ஜனநாயகமானது'' ஏதோ தனிமுதலானது, வர்க்கங்களுடன் சம்பந்தப்படாதது என்பதாய் முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து வரப் பெற்ற தப்பெண்ணம்தான் இந்தத் தவறுக்குரிய அடிப்படை ஆதாரமாகும். உண்மை என்னவெனில், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தில் ஜனநாயகமானது முற்றிலும் ஒரு புதிய வளர்ச்சிப் படியை வந்தடைகிறது; வர்க்கப் போராட்டம் ஓர் உயர் மட்டத்துக்கு உயர்ந்து, ஒன்றுவிடாமல் எல்லா வடிவங்கள்மீதும் ஆதிக்கம் செலுத்துகிறது.

சுதந்திரம் என்பதாகவும் சமத்துவம் என்பதாகவும் ஜனநாயகம் என்பதாகவும் பொதுப்பட பேசுவதானது, பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி உறவுகளிலிருந்து வடித்தமைக்கப்பட்ட கருத்துக்களை அப்படியே கண்ணை மூடிக் கொண்டு திருப்பிச் சொல்வதாகுமே அன்றி வேறல்ல. பொதுப்பட அமைந்த இப்படிப்பட்ட பேச்சுக்களின் மூலம் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் ஸ்தூலமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலுவது, முதலாளித்துவ வர்க்கத்தின் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் அப்படியே முழுமையாய் ஏற்றுக் கொண்டுவிடுவதே ஆகும். பாட்டாளி வர்க்கத்தின் கண்ணோட்டத்தில், இந்தக் கேள்வியைப் பின்வரும் முறையில் மட்டுமே எழுப்ப வேண்டும்: எந்த வர்க்கத்தினுடைய ஒடுக்குமுறையிலிருந்து சுதந்திரம்? எந்த வர்க்கத்துக்கு எதனுடன் சமத்துவம்? தனியார் சொத்துடைமையின் அடிப்படையில் அமைந்த ஜனநாயகமா, அல்லது தனியார் சொத்துடைமையை ஒழிப்பதற்கான போராட்டத்தின் அடிப்படையில் அமைந்த ஜனநாயகமா? என்பன போன்ற முறையில் தான் எழுப்பபட வேண்டும்.

நெடுங் காலத்துக்கு முன்பே எங்கெல்ஸ் **டூரிங்குக்கு மறுப்பு** என்னும் தமது நூலில் சமத்துவம் என்கிற கருத்தை விளக்கிக் கூறினார்: பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி உறவுகளிலிருந்தே சமத்துவம் என்னும் கருத்து வடித்தமைக்கப்பட்டது; சமத்துவம் என்பது **வர்க்கங்கள் ஒழிக்கப்படுதலைக்**

குறிப்பதாய்க் கொள்ளாவிடில் இக்கருத்து ஒரு தப்பெண்ணமாய் மாறிவிடுகிறது. சமத்துவத்தைப் பற்றிய முதலாளித்துவ ஜனநாயகக் கருத்தோட்டத்துக்கும் சோஷலிசக் கருத்தோட்டத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடு பற்றிய இந்த சர்வசாதாரண உண்மை இடையறாது மறக்கப்பட்டுவிடுகிறது. இது மறக்கப்படாதிருந்தால், முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதன் மூலம் பாட்டாளி வர்க்கமானது வர்க்கங்களை ஒழிப்பதை நோக்கி யாவற்றிலும் தீர்மானகரமான நடவடிக்கையை எடுக்கின்றது என்பது தெட்டத்தெளிவாய்ப் புலப்படும்; வர்க்கங்கள் ஒழிக்கப்படும் இந்த நிகழ்ச்சிப்போக்கு நிறைவு எய்தும் பொருட்டு பாட்டாளி வர்க்கம் அரசு அதிகார இயந்திர அமைவை உபயோகித்தும், வீழ்த்தப்பட்ட முதலாளித்துவ வர்க்கத்தாரையும் ஊசலாடும் குட்டிபூர்ஷுவாக்களையும் எதிர்த்துச் செயல்படுவதற்காகவும் இவர்கள் மீது செல்வாக்கு செலுத்துவதற்காகவும் இவர்களை நிர்ப்பந்திப்பதற்காகவுமான பல்வேறு முறைகளையும் கையாண்டும் தனது வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்ல வேண்டுமென்பதும் தெட்டத்தெளிவாய்ப் புலப்படும்.

*(தொடரும்)**

1919, அக்டோபர் 30

பிராவ்தா, இதழ் *250*,
1919, நவம்பர் *7*

நூல் திரட்டு,
தொகுதி *39*
பக்கங்கள் *271-82*

---

* இந்தக் கட்டுரை முடிக்கப்படவில்லை.—[பதிப்பாசிரியர்.]

நிலப் பிரச்சினை பற்றிய ஆய்வுரைகளின் பூர்வாங்க நகல்

(கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசுக்காக)

நிலப் பிரச்சினை சம்பந்தமாய்ப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் போர்த்தந்திரத்தை இரண்டாவது அகிலம்—இப்பொழுது இது மஞ்சள் அகிலமாகிவிட்டது—வரையறுப்பதற்கு மட்டுமின்றி, ஒழுங்காய் இந்தப் பிரச்சினையை எடுத்துரைப்பதற்குங்கூட ஏன் தவறிற்று என்பதற்குத் தோழர் மார்ஹ்லேவ்ஸ்கி தமது கட்டுரையில்[31] சிறந்த விளக்கம் தருகிறார். இதன்பின், மூன்றாவது அகிலத்தினுடைய கம்யூனிஸ்டு நிலத் துறை வேலைத்திட்டத்துக்குரிய தத்துவார்த்த அடிப்படைகளைத் தோழர் மார்ஹ்லேவ்ஸ்கி எடுத்துரைக்க முற்படுகிறார்.

இந்த அடிப்படைகள் 1920 ஜூலை 15ல் கூடப் போகும் கம்யூனிஸ்டு அகிலத்தின் காங்கிரசில் நிலப் பிரச்சினை பற்றிய பொதுத் தீர்மானத்துக்குத் தக்க அடிநிலையாய் அமைய முடியும் (என் அபிப்பிராயத்தில், அமையவும் வேண்டும்).

இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்துக்கான பூர்வாங்க நகல் வருமாறு:

1) கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையிலுள்ள நகரத்துத் தொழில் துறைப் பாட்டாளி வர்க்கத்தால் மட்டும்தான் கிராமப்புறத்து உழைப்பாளி மக்கள் பெருந்திரளினரை மூலதனம், நிலப்பிரபுக்களினது பெரிய நிலவுடைமை இவற்றின் ஒடுக்குமுறையிலிருந்தும், முதலாளித்துவ அமைப்பு நீடித்து இருக்கும் வரையில் தவிர்க்க முடியாதபடி மீண்டும் மீண்டும் மூளவே செய்யும்படியான நாசத்திலிருந்தும் ஏகாதிபத்திய யுத்தங்களிலிருந்தும் விடுவிக்க முடியும். கிராமப்புறத்து உழைப்பாளி மக்கள் திரளினர் கம்யூனிசப் பாட்டாளி வர்க்கத்துடன் கூட்டணி கொண்டாலொழிய, நிலப்பிரபுக்களின்

(பெரு நிலப் பண்ணையுடைமையாளர்கள்), முதலாளி வர்க்கத்தாரின் ஒடுக்குமுறையை வீழ்த்துவதற்கான புரட்சிப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்துக்குப் பற்றுறுதி மிக்க ஆதரவு அளித்தாலன்றி, அவர்கள் கடைத்தேற வழியில்லை.

மறுபுறத்தில் தொழில் துறைத் தொழிலாளர்கள் தமது குறுகிய தொழிற் கிளை, தொழிற் சங்க நலன்களில் மட்டுமே கருத்து செலுத்தியும், தமது சொந்த நிலைமைகளை, சில நேரங்களில் குட்டிபூர்ஷுவாக்களுக்குரிய சகிக்கக்கூடிய நிலைமைகளாய் இருக்கும் இவற்றை மேம்படுத்திக் கொள்வதுடன் திருப்தியுற்றும் வருவார்களாயின், மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந்தும் யுத்தங்களிலிருந்தும் மனிதகுலத்தை விடுவிப்பதென்னும் சகாப்தகர முக்கியத்துவம் வாய்ந்த தமது பணியை அவர்களால் நிறைவேற்ற முடியாது. முன்னேறிய நாடுகள் பலவற்றிலும் ''தொழிலாளர் பிரபுக்குலத்தோருக்கு'', சோஷலிஸ்டுக் கட்சிகள் என்பதாய்க் கூறிக் கொள்ளும் இரண்டாவது அகிலத்தின் கட்சிகளது உட்கருவாய் இருந்து வரும் இவர்களுக்கு, இதே நிலைமைதான் ஏற்படுகிறது —உண்மையில் இவர்கள் சோஷலிசத்தின் கடும் பகைவர்களாகவும், துரோகிகளாகவும் குட்டிபூர்ஷுவா தேசியவெறியர்களாகவும் தொழிலாளி வர்க்க இயக்கத்தினுள் செயல்படும் முதலாளித்துவ வர்க்கக் கையாட்களாகவும் இருந்து வருகிறார்கள். பாட்டாளி வர்க்கமானது உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமான மக்களது முன்னணிப் படையாய், சுரண்டலாளர்களை வீழ்த்துவதற்கான போராட்டத்தில் இம் மக்களது தலைவனாய் முன்வந்து செயலாற்றும் போதுதான், மெய்யாகவே புரட்சிகர வர்க்கமாய் விளங்கி, மெய்யாகவே சோஷலிச முறையில் செயல்படுவதாகிறது. ஆனால் வர்க்கப் போராட்டம் கிராமப்புறத்தினுள் எடுத்துச் செல்லப்பட்டாலன்றி, கிராமப்புற உழைப்பாளி மக்கள் திரளினர் நகரத்துப் பாட்டாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்டுக் கட்சியை மையமாய்க் கொண்டு ஒன்றுபடுத்தப்பட்டாலன்றி, மற்றும் இவர்கள் பாட்டாளி வர்க்கத்தால் பயிற்றுவிக்கப்பட்டாலன்றி, பாட்டாளி வர்க்கம் இவ்வாறு செயலாற்ற முடியாது.

2) கிராமப்புறத்து உழைப்பாளரும் ஒடுக்கப்பட்டோருமான மக்கள்—நகரத்துப் பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்பட்டு போராட்டத்துக்கு அழைத்து வரப்பட

வேண்டியவர்களாகிய, அல்லது எப்படியும் தம் பக்கத்துக்கு வரும்படி ஈர்க்கப்பட வேண்டியவர்களாகிய இம்மக்கள் — எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் பின்வரும் வர்க்கங்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறார்கள்:

முதலாவதாக, விவசாயத் துறைப் பாட்டாளி வர்க்கத்தவர்களான கூலியுழைப்பாளர்கள் (ஆண்டு, அல்லது பருவ, அல்லது நாள் அளவில்); முதலாளித்துவ விவசாயத் தொழிலகங்களில் கூலிக்கு வேலை செய்து இவர்கள் பிழைப்பு தேடிக் கொள்கிறவர்கள். இந்த வர்க்கத்தைக் கிராம மக்களின் ஏனைய பிரிவினரிடமிருந்து சுயேச்சையாகவும் தனியாகவும் (அரசியல், இராணுவ, தொழிற் சங்க, கூட்டுறவு, கலாசார, கல்வித் துறை முதலான நிறுவனங்களில்) ஒழுங்கமையச் செய்வதும், இந்த வர்க்கத்தினிடையே கடுமையான பிரசார, கிளர்ச்சி வேலைகள் நடைபெற ஏற்பாடு செய்வதும், சோவியத் ஆட்சியதிகாரத்துக்கும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கும் இவ்வர்க்கத்தின் ஆதரவைப் பெறுவதும் எல்லா நாடுகளிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குரிய **அடிப்படைப்** பணிகளாகும்.

இரண்டாவதாக, அரைப்பாட்டாளி வர்க்கத்தவர்கள் அல்லது சின்னஞ்சிறு விவசாயிகள், அதாவது பகுதியளவுக்கு விவசாயத் துறை, தொழில் துறை முதலாளித்துவ நிலையங்களில் கூலியுழைப்பாளர்களாகவும், பகுதியளவுக்குத் தமது சொந்த நிலத்திலோ, குத்தகைக்கு எடுக்கப்பட்ட நிலத்திலோ வேலை செய்வதன் மூலம் பிழைப்புக்கு வகை செய்து கொள்கிறவர்கள்; சொந்த அல்லது குத்தகை நிலம் இவர்களுடைய குடும்பங்களுக்குப் பகுதியளவுக்கே ஜீவனோபாயம் அளிக்கிறது. கிராம உழைப்பாளி மக்களின் இப்பகுதியினர் முதலாளித்துவ நாடுகள் யாவற்றிலுமே எண்ணிக்கையில் மிகுதியாகவே இருக்கின்றனர். இவர்கள் இருந்து வருவதையும், இவர்களுடைய விசேஷ நிலையையும் முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகளும் இரண்டாவது அகிலத்தைச் சேர்ந்த மஞ்சள் ''சோஷலிஸ்டுகளும்'' புலப்படாதபடி குழப்படி செய்துவிடுகின்றனர்; ஓரளவுக்குத் தொழிலாளர்களை வேண்டுமென்றே ஏமாற்றுவதன் மூலமும், ஓரளவுக்குக் குட்டி பூர்ஷுவா மாமூல் கருத்தோட்டங்களுக்குக் கண்ணை மூடிக் கொண்டு கீழ்ப்படிந்து, ''விவசாயிகள்'' எனப்படும் பொதுப்

படையான மக்கள் திரளுடன் இப்பகுதியினரைக் குழப்பிக் கொள்வதன் மூலமும் இவர்கள் இதைச் செய்கின்றனர். தொழிலாளர்களே ஏமாற்றுவதற்கான இந்த முதலாளித்துவ முறை பெரும்பாலும் ஜெர்மனியிலும் பிரான்சிலும் கையாளப்படுகிறது, அமெரிக்காவிலும் இதர நாடுகளிலும்கூட அனுசரிக்கப்படுகிறது. கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைகள் சரிவர ஒழுங்கமைக்கப்படுமானால், இப்பகுதியினர் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுதியான ஆதரவாளர்களாகிவிடுவார்கள். ஏனெனில் இந்த அரைப்பாட்டாளி வர்க்கத்தினரின் நிலை மிகவும் கடினமானது, சோவியத் ஆட்சியதிகாரத்தாலும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தாலும் பிரம்மாண்ட அளவிலும் உடனடியாகவும் ஆதாயமடைகிறவர்கள் இவர்கள்.

மூன்றுவதாக, சிறு விவசாயிகள், அதாவது உடைமையாளர்களாகவோ, குத்தகைச் சாகுபடியாளர்களாகவோ சிறு நிலங்களை வைத்துக் கொண்டு, வெளியிலிருந்து கூலிக்கு ஆட்களை அமர்த்தாமலே இவற்றைச் சாகுபடி செய்து, தமது குடும்பங்களின் தேவைகளையும் தமது பயிர்த்தொழிலின் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளும்படியான சிறு உழவர்கள். இந்தப் பகுதியினர் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியால் சந்தேகத்துக்கு இடமின்றி ஆதாயமடைகிறவர்கள். பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியானது இவர்களுக்கு உடனடியாகவும் முழு அளவிலும் (அ) பெரிய நிலப்பிரபுக்களுக்கு வாரம் அல்லது விளைச்சலில் பங்கு (உதாரணமாய் பிரான்சிலும், மற்றும் இத்தாலியிலும் இதர நாடுகளிலும் மேட்டயார்கள், பங்கு சாகுபடியாளர்கள்) தர வேண்டிய அவசியத்திலிருந்து நிவாரணம் பெறுவர்; (ஆ) அடமானங்களிலிருந்து விடுதலையடைவர்; (இ) பெரிய நிலச்சுவான்தார்களது ஒடுக்குமுறை, சார்பு நிலை ஆகியவற்றின் மிகப் பல வடிவங்களிலிருந்து (காடுகள், அவற்றின் பயன்பாடு முதலானவை) நிவாரணம் பெறுவர்; (ஈ) பாட்டாளி வர்க்க அரசிடமிருந்து தமது பயிர்த்தொழிலுக்கு உடனடி உதவி பெறுவர் (பாட்டாளி வர்க்கத்தால் பறிமுதல் செய்யப்பட்ட பெரிய முதலாளித்துவப் பண்ணைகளின் உழுபடைக் கருவிகளையும் கட்டிடங்களில் ஒரு பகுதியையும் உபயோகித்துக் கொள்ளுதல், கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும் விவசாயக் கழகங்களும் முதலாளித்துவத்தில் யாவருக்கும் முதலாய்ப் பணக்கார

விவசாயிகளுக்கும் நடுத்தர விவசாயிகளுக்குமே சேவை புரிந்து வந்த நிறுவனங்களாய் இருந்தவை, பாட்டாளி வர்க்க அரசால் பிரதானமாய் ஏழைகளுக்கே, அதாவது பாட்டாளி வர்க்கத்தினர், அரைப்பாட்டாளி வர்க்கத்தினர், சிறு விவசாயிகள் ஆகியோருக்கே சேவை புரியும் நிறுவனங்களாய் மாற்றப்படுதல் முதலானவை); இப்படி இன்னும் பல.

அதேபோதில், முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்லும் காலக் கூறில், அதாவது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் காலக் கூறில், இப்பகுதியினர், அல்லது எப்படியும் இவர்களில் ஒரு பிரிவினர், தவிர்க்க முடியாதவாறு கட்டற்ற வர்த்தகச் சுதந்திரத்தையும் கட்டற்ற தனியார் சொத்துரிமை அனுபோகத்தையும் நாடிச் செல்வர்; ஏனெனில் ஏற்கனவே நுகர்வுப் பண்டங்களை விற்போராய் (சிறு அளவில்தான் என்றாலும்) இருந்து வரும் இப்பகுதியினர் கொள்ளைலாப, சொத்துரிமைப் பழக்கங்களால் சீரழிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதைக் கம்யூனிஸ்டுக் கட்சி தெளிவாய் உணர வேண்டும். இருப்பினும், உறுதியான பாட்டாளி வர்க்கக் கொள்கை பின்பற்றப்படுமாயின், வெற்றி வாகை சூடும் பாட்டாளிவர்க்கம் பெரிய நிலச்சுவான்தார்கள் குறித்தும் பெரிய விவசாயிகள் குறித்தும் வைராக்கியமாய்ச் செயல்படுமாயின், இப்பகுதியினரின் ஊசலாட்டம் அதிகமாய் இருக்க முடியாது; மொத்தத்தில் இவர்கள் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு ஆதரவானவர்கள் என்னும் உண்மையை இந்த ஊசலாட்டம் மாற்றிவிட முடியாது.

3) இங்கு குறிக்கப்பட்ட இந்த மூன்று பகுதியோரும் சேர்ந்து எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் கிராம மக்களில் பெரும்பான்மையோராய் இருக்கின்றனர். ஆகவே பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றி நகரங்களில் மட்டுமின்றி கிராமங்களிலும் முழு அளவுக்கு உறுதி செய்யப்படுகிறது. ஆயினும் இதற்கு நேர்மாறான கருத்து பரவலாய் நிலவி வருகிறது. விடாப்பிடியாய் இக்கருத்து நிலவக் காரணம் என்னவெனில், முதலாவதாக, முதலாளித்துவ விஞ்ஞானமும் புள்ளி விவரங்களும் ஓயாமல் தந்திரம் புரிந்து ஏமாற்றி, கிராமப்புறத்திலுள்ள மேற்கூறிய வர்க்கங்களை நிலப்பிரபுக்களும் முதலாளிகளுமாகிய சுரண்டலாளர்களிடமிருந்து

தனியே பிரிக்கும் பெரும் பிளவையும், மற்றும் அரைப்பாட்டாளி வர்க்கத்தாரையும் சிறு விவசாயிகளையும் பெரிய விவசாயிகளிடமிருந்து தனியே பிரிக்கும் பெரும் பிளவையும் மூடிமறைப்பதற்காக எல்லா வழிகளிலும் பிரயத்தனம் செய்கின்றன. இரண்டாவதாக, கிராமத்து ஏழைகளிடையே பிரசாரமும் கிளர்ச்சியும் ஒழுங்கமைப்பு வேலைகளுமான மெய்யான பாட்டாளி வர்க்கப் புரட்சிகரப் பணியை நடத்த மஞ்சள் அகிலமான இரண்டாவது அகிலத்தின் வீரர்களும், முன்னேறிய நாடுகளில் ஏகாதிபத்தியத் தனிச் சலுகைகளால் சீரழிக்கப்பட்டிருக்கும் ''தொழிலாளர் பிரபுக்குலத்தவரும்'' முடியாதோராயும் விரும்பாதோராயும் இருக்கின்றனர்; சந்தர்ப்பவாதிகளின் கவனமெலாம் முழு அளவுக்கும் ஒன்று குவிக்கப்பட்டு வந்துள்ளதும் இனியும் வருவதும் பெரிய விவசாயிகளும் நடுத்தர விவசாயிகளும் அடங்கலான முதலாளித்துவ வர்க்கத்தாருடன் தத்துவார்த்தத்திலும் நடைமுறையிலும் சமரசங்கள் காண்பதிலேயே அன்றி (நடுத்தர விவசாயிகள் கீழே பரிசீலிக்கப்படுகின்றனர்), புரட்சிகர வழியில் பாட்டாளி வர்க்கத்தால் முதலாளித்துவ அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கமும் வீழ்த்தப்படுவதில் அல்ல. மூன்றாவதாக, மார்க்சியத் தத்துவத்தால் பூரணமாய் நிரூபிக்கப்பட்டும், ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனுபவத்தால் பூரணமாய் மெய்ப்பித்துக் காட்டப்பட்டுமுள்ள ஒரு உண்மையைப் புரிந்து கொள்ளப் பிடிவாதமாய் மறுக்கிறார்கள்—மூடத் தப்பெண்ணத்துக்கு ஒப்பானதாகிவிடும்படி(ஏனைய எல்லா முதலாளித்துவ-ஜனநாயக, பாராளுமன்ற மூடத் தப்பெண்ணங்களுடன் இணைந்த ஒன்றுகிவிடும் படி) அந்த அளவுக்குப் பிடிவாதமாய் மறுக்கிறார்கள். இந்த உண்மை என்னவெனில், கிராமத்து மக்களின் மேற்குறிப்பிட்ட மூன்று வகையினரும்—மிகவும் முன்னேறிய நாடுகளும் அடங்கலாய் எல்லா நாடுகளிலும் நம்புதற்கரிய ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டு, பிரித்துப் பிளவுபடுத்தப்பட்டு, நசுக்கப்பட்டு, பாதியளவு காட்டுமிராண்டி வாழ்க்கைக்குரிய நிலைமைகளில் இருத்தப்பட்டிருக்கும் [illegible]ம்மூன்று வகையினரும்—சோஷலிசத்தின் வெற்றியில் [illegible]ருளாதார, சமுதாய, கலாசார வழிகளில் அக்கறை கொண்டவர்களாய் இருப்பினும், புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சி

யதிகாரம் வென்று கொண்ட **பிற்பாடுதான்,** பெரிய நிலச் சுவான்தார்கள், முதலாளிகள் குறித்து அது வைராக்கியமாய் நடவடிக்கைகள் எடுத்த **பிற்பாடுதான்,** ஒடுக்கி மிதிக்கப்படும் இம்மக்கள் தமக்கு ஆதரவளிக்கவும் தலைமை தாங்கவும் சரியான பாதையைக் காட்டவும் போதிய வலிமையும் உறுதியும் வாய்ந்த, நிறுவன முறையில் ஒழுங்கமைந்த தலைவனும் காவலனும் கிடைத்திருப்பதை **நடைமுறையின் வாயிலாய்க்** கண்டுகொண்ட **பிற்பாடுதான்** இந்தப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு வைராக்கியத்துடன் ஆதரவளிக்கக் கூடியவர்களாகின்றனர்.

4) ''நடுத்தர விவசாயிகள்'' என்போர் பொருளாதார அர்த்தத்தில் சிறு விவசாயிகளாய், உடைமையாளர்களாகவோ அல்லது குத்தகைச் சாகுபடியாளர்களாகவோ தம்மிடம் ஏதோ நிலம் வைத்திருக்கின்றனர்; இந்நிலம் சிறிதே ஆயினும், முதலாவதாக, முதலாளித்துவத்தில் பொதுவாய்ப் பேசுமிடத்து இவர்களது குடும்பத்தின் கஷ்ட ஜீவனத்துக்கும் இந்நிலத்தின் பயிர்த்தொழிலுக்குத் தேவையான மிக குறைந்தபட்ச பராமரிப்புக்கும் போதுமானதாய் இருப்பதோடு, சிறிதளவு உபரியையும் அளிக்கின்றது; இந்த உபரி சாதகமானஆண்டுகளிலேனும் மூலதனமாய் மாற்றப்படலாம்; இரண்டாவதாக, இவர்கள் பல சந்தர்ப்பங்களில் (உதாரணமாய், இரண்டு அல்லது மூன்றில் ஒருவர்) கூலியுழைப்பை அமர்த்திக் கொள்கின்றனர். முன்னேறிய முதலாளித்துவ நாட்டில் நடுத்தர விவசாயிகளுக்கு ஸ்தூலமான உதாரணமாய் ஜெர்மனியில் ஐந்திலிருந்து பத்து ஹெக்டர் வரை சாகுபடி செய்யும் விவசாயிப் பண்ணைகளின் தொகுதியைக் குறிப்பிடலாம்; 1907ஆம் ஆண்டு சங்கியையின்படி இத் தொகுதியைச் சேர்ந்த விவசாயிப் பண்ணைகளில் கூலியாட்களை அமர்த்திக் கொண்டவற்றின் எண்ணிக்கை சுமார் மூன்றில் ஒரு பகுதியாகும்.* பிரான்சில் விசேஷ வகைப் பயிர்களின்

---

* கரூரான புள்ளிகள் வருமாறு: ஐந்திலிருந்து பத்து ஹெக்டர் வரை நிலமுடைத்த விவசாயிப் பண்ணைகளின் எண்ணிக்கை—6,52,798 (பண்ணைகளின் மொத்த எண்ணிக்கை—57,36,082); இந்த விவசாயிப் பண்ணைகள் பல்வேறு வகையிலும் 4,87,704 கூலியாட்களை அமர்த்திக் கொண்

சாகுபடி அதிக வளர்ச்சி பெற்றிருக்கிறது—உதாரணமாய், கொடிமுந்திரிச் சாகுபடியைக் குறிப்பிடலாம்; இதற்கு மிக அதிக அளவில் உழைப்பு தேவைப்படுகிறது. ஆகவே பிரான்சில் இத்தொகுதியைச் சேர்ந்த விவசாயிப் பண்ணைகள் சற்று அதிக அளவில் குடும்பத்துக்கு வெளியிலிருந்து கூலியாட்களை அமர்த்திக் கொள்ளக்கூடும்.

விவசாயிகளைச் சேர்ந்த இப்பகுதியோரைத் தன் பக்கத்துக்கு வென்று கொள்ளும் பணியைப் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் தனக்கு வகுத்துக் கொள்ள முடியாது—எப்படியும் உடனடியான எதிர்காலத்திலும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் தொடக்க காலத்திலும் வகுத்துக் கொள்ள முடியாது. இப்பகுதியோரை நடுநிலைப்படுத்துவதுடன், அதாவது பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும் நடைபெறும் போராட்டத்தில் அதை நடுநிலை வகிக்கச் செய்வதுடன் பாட்டாளி வர்க்கம் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பகுதியோர் இவ்விரு சக்திகளிடையே ஊசலாடுவது தவிர்க்க முடியாதது. புதிய சகாப்தத்தின் தொடக்கத்தில், முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில், முதலாளித்துவர்க்கத்தாரின் பக்கம் சாய்வதே இப்பகுதியோரது பிரதான போக்காய் இருக்கும். ஏனெனில் இப்பகுதியோரிடத்தே சொத்துடைமையாளர்களுடைய கண்ணோட்டமும் மனப்பாங்குமே மேலோங்கியிருக்கின்றன; கொள்ளலாபத்திலும், வர்த்தகச் ''சுதந்திரத்திலும்'', சொத்துடைமைச் ''சுதந்திரத்திலும்'' இப்பகுதியோர் உடனடியான அக்கறை கொண்டவர்களாய் இருக்கிறார்கள்; கூலித்தொழிலாளர்களுக்கு நேரடியான பகைமை நிலை கொண்டிருக்கிறார்கள். வெற்றி

டன. எல்லாப் பண்ணைகளிலும் வேலை செய்த விவசாயிக் குடும்ப உறுப்பினர்களின்(Familienangehörige)எண்ணிக்கை—*20,03,633*. ஆஸ்திரியாவில் *1902*ஆம் ஆண்டு சங்கியையின் படி இத்தொகுதியைச் சேர்ந்த விவசாயிப் பண்ணைகள் *3,83,331*; இவற்றில் *1,26,136* பண்ணைகள் கூலியாட்களை அமர்த்திக் கொண்டன. இப்பண்ணைகளில் வேலை செய்த கூலியாட்களின் எண்ணிக்கை—*1,46,044*; விவசாயிக் குடும்ப உறுப்பினர்களில் வேலை செய்தோரின் எண்ணிக்கை—*12, 65,969*. ஆஸ்திரியாவில் பண்ணைகளின் மொத்த எண்ணிக்கை—*28,56,349*.

வாகை சூடும் பாட்டாளி வர்க்கம் உடனடியாய் நில வாரத்தையும் அடமானங்களையும்ஒழித்து இப்பகுதியோரின் நிலையை மேம்படச் செய்யும். பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளிவர்க்க அரசு உடனடியாகவே தனியார் சொத்துடைமையை அறவே ஒழிக்கலாகாது; எப்படியும் அது சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் ஆகிய இருபகுதியோருக்கும் அவர்களுடைய நிலவுடைமைகள் தொடர்ந்து நீடிக்கும்படி உத்தரவாதம் செய்வதோடு, வழக்கமாய் இவர்கள் வாரக் குத்தகைக்கு எடுத்துக் கொண்ட மொத்த நிலப் பரப்பைச் சேர்ப்பதன் மூலம் (வாரம் ஒழிக்கப்படுதல்) இவர்களுடைய நிலவுடைமைகள் பெருகும்படியும் செய்யும்.

முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராய் நடத்தப்படும் தயவுதாட்சண்யமில்லாத போராட்டத்துடன் இவ்வகை நடவடிக்கைகளையும் சேர்த்து இணைத்துக் கொள்வதானது, நடுநிலைப்படுத்துவதென்னும் கொள்கை வெற்றி பெறுவதற்கு முழு அளவில் உத்திரவாதம் செய்கிறது. கூட்டு முறையிலான சாகுபடிக்குரிய மாற்றத்தைப் பாட்டாளி வர்க்க அரசு மிகுந்த எச்சரிக்கையுடன், படிப்படியாய் மெதுவாகவுமே, நடுத்தர விவசாயியை எவ்விதத்திலும் பலவந்தம் செய்யாமல், முன்னுதாரணத்தின் கவர்ச்சி சக்தியைக் கொண்டே செய்தாக வேண்டும்.

5) பெரிய விவசாயிகள் (Grossbauern) விவசாயத் துறையில் முதலாளித்துவப் பொருளுற்பத்தியாளர்களாய் இருப்பவர்கள்; சகஜமாய் இவர்கள் கூலித்தொழிலாளர்கள் பலரையும் அமர்த்திக் கொள்கிறவர்கள். இவர்கள் தமது தாழ்ந்த கலாசார வளர்ச்சி நிலையாலும், பழக்க வழக்கங்களாலும், தமது பண்ணைகளில் நேரில் தாமே புரிந்து வரும் உடலுழைப்பாலும்தான் ''விவசாயிகளுடன்'' இணைப்பு கொண்டிருக்கின்றனர். புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்கு நேர் எதிரான, வைராக்கியம் வாய்ந்த பகைவர்களாய் இருக்கும் முதலாளித்துவப் பகுதிகளில் இவர்களே மிகப் பெரிய பகுதியாவர். கம்யூனிஸ்டுக் கட்சிகள் கிராமப்புறத்தில் தமக்குள்ள எல்லாப் பணிகளிலும், தமது கவனத்தின் மையமாய்ப் பிரதானமாக இந்தப் பகுதிக்கு எதிரான போராட்டத்தையும், கிராம மக்களில் உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமான பெரும்பான்மையோரை இந்தச் சுரண்டலாளர்களது

சித்தாந்த, அரசியல் செல்வாக்கிலிருந்து விடுவிப்பதையும், இன்ன பிறவற்றையுமே கொண்டிருக்க வேண்டும்.

நகரங்களில் பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்றதும், இந்தப் பகுதி எல்லா விதமான எதிர்ப்பிலும் சீர்குலைவு வேலைகளிலும் இறங்கும், மற்றும் எதிர்ப்புரட்சித் தன்மை கொண்ட நேரடியான ஆயுதமேந்திய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்—இது சிறிதும் தவிர்க்க முடியாதது. ஆகவே, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் இப்பகுதியோரை அறவே நிராயுத பாணிகளாக்குவதற்கு அவசியமான சக்திகளை [illegible]ந்தாந்த வழியிலும் நிறுவன வழியிலும் தயாரிப்பதற்காகவும், தொழில் துறையில் முதலாளிகள் வீழ்த்தப்படும் அதே காலத்தில் இந்த பகுதிக்கு, அது எதிர்ப்பில் இறங்குகிறது என்பதற்கான முதலாவது அறிகுறிகள் தென்பட்டதுமே, சிறிதும் தயங்காமல் உறுதியாகவும் ஈவிரக்கமின்றியும் தகர்த்து வீழ்த்தும் படியான முறையிலும் எதிரடி கொடுப்பதற்கும் உடனடியாய் முற்பட்டாக வேண்டும். இதன் பொருட்டு கிராமப்புறத்துப் பாட்டாளி வர்க்கம் ஆயுதபாணியாக்கப்பட வேண்டும்; கிராம சோவியத்துகளை அமைத்தாக வேண்டும்—இவற்றில் சுரண்டலாளர்களுக்கு இடமளிக்காமல், பாட்டாளி வர்க்கத்தினரும் அரைப்பாட்டாளி வர்க்கத்தினரும் முதன்மை நிலை பெற்றிருக்கும்படி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஆனால், பெரிய விவசாயிகளையும்கூட வெற்றிகரப் பாட்டாளி வர்க்கம் உடனே தனது முதல் வேலையாய் உடைமை நீக்கம் செய்ய முற்படக் கூடாது, ஏனெனில் இத்தகையோரது பண்ணைகளைச் சமூகவுடைமையாக்குவதற்குரிய பொருளாயத நிலைமைகளும், குறிப்பாய்த் தொழில்நுட்ப நிலைமைகளும், மற்றும் சமூக நிலைமைகளும் இன்னும் ஏற்பட்டாகவில்லை. தனிப்பட்ட, அனேகமாய் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், இவர்களுடைய நிலங்களில் துண்டு வயல்களாய் இவர்கள் குத்தகைச் சாகுபடிக்கு விடும் பகுதிகள், அல்லது சுற்றுப்புற சிறு விவசாயிக் குடிகளுக்கு அவசியமாய்த் தேவைப்படும் பகுதிகள் பறிமுதல் செய்யப்படலாம். இதோடு, பெரிய விவசாயிகளுக்குச் சொந்தமான விவசாய இயந்திரங்களிலும் பிறவற்றிலும் ஒரு பகுதியைச் சிறு விவசாயிகள் குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் இலவசமாய் உபயோகித்துக் கொள்வதற்கும்

உத்தரவாத உரிமையளிக்கப்பட வேண்டும். ஆனால் பொது விதியாய், பெரிய விவசாயிகள் தமது நிலங்களைத் தொடர்ந்து தாமே வைத்துக் கொள்ள பாட்டாளி வர்க்க அரசு அனுமதிக்க வேண்டும்; உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமான மக்கள் ஆட்சியதிகாரத்தை இந்தப் பெரிய விவசாயிகள் எதிர்த்துப் போரிடும் போது மட்டுமே அவர்களது நிலங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும். ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் போது பெரிய விவசாயிகளுக்கு எதிரான போராட்டம் பல தனி நிலைமைகளின் காரணமாய் சிக்கலாக்கப்பட்டு நீடித்து நடைபெற வேண்டியதாகி விட்டது. இருந்தபோதிலும் ருஷ்யப் புரட்சியின் அனுபவம் காட்டுவது என்னவெனில், இப்பகுதியோர் எதிர்ப்பு காட்ட சிறிதளவு முயற்சி எடுத்ததுமே கடுமையாய்ப் பாடம் கற்பிக்கப்படுமாயின், பாட்டாளி வர்க்க அரசு வகுத்தளிக்கும் பணிகளை விசுவாசமாய் நிறைவேற்றக் கூடியோரே ஆவர்; உழைப்போர் அனைவரின் காவலனாய் இருந்து பணக்கார சோம்பேறிகளிடத்து தயவுதாட்சண்யமின்றி நடந்து கொள்ளும் அரசாங்கத்தை இவர்கள் (மிகவும் மெதுவாகவே தான் என்றாலும்) போற்றவும் முற்படுகின்றனர்.

ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடித்த பிறகு, பெரிய விவசாயிகளுக்கு எதிரான போராட்டம் சிக்கலாகித் தடைப்பட்டு தாமதப்படுத்தப்பட்டதற்குக் காரணமாயிருந்த விசேஷ நிலைமைகள் பிரதானமாய்ப் பின்வருவனவாகும்: 1917 அக்டோபர் 25க்கு (நவம்பர் 7க்கு) பிற்பாடு [illegible]யப் புரட்சியானது நிலப் பிரபுக்களுக்கு எதிராய் ஒட்டுமொத்தமாய் விவசாயிகள் அனைவரின் போராட்டத்துக்குரிய ''பொதுவான ஜனநாயகக்'' கட்டத்தை, அதாவது அடிப்படையில் முதலாளித்துவ-ஜனநாயகக் கட்டத்தைக் கடந்து சென்றது; நகரப் பாட்டாளி வர்க்கம் கலாசாரத்திலும் எண்ணிக்கையிலும் பலவீனமாய் இருந்தது; முடிவில், தொலைவுகள் பிரம்மாண்டமாகவும் போக்குவரத்துச் சாதனங்கள் மிகமிக மோசமாகவும் இருந்தன. தடையெழுப்பித் தாமதப்படுத்தக் கூடிய இந்த நிலைமைகள் முன்னேறிய நாடுகளில் இருக்கவில்லை என்பதனால், ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் சேர்ந்த புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் பன்மடங்கு மும்முரமாய்த்

தயார் செய்து, பெரிய விவசாயிகளது எதிர்ப்பினை பன் மடங்கு விரைவாகவும் உறுதியாகவும் வெற்றிகரமாகவும் முறி யடித்து ஜெயக் கொடி நாட்ட வேண்டும்; எதிர்த்துப் போர் புரிவதற்கான துளியளவு சாத்தியப்பாடும் அவர்களுக்குக் கிடைக்காதபடிச் செய்ய வேண்டும். இது அவசர அவசிய மான காரியமாகும், ஏனெனில் இப்படிப்பட்ட முழுநிறை யான பரிபூரண வெற்றி சாதிக்கப் பெறுத வரை, பாட்டாளி வர்க்க அரசு நிலையானதுதான் என்பதை கிராமப்புறத்துப் பாட்டாளி வர்க்க, அரைப்பாட்டாளி வர்க்க, சிறு விவசாயி மக்கள் திரளினர் முழு அளவுக்கு ஏற்றுக் கொள்ளும்படியான நிலைமை ஏற்படாது.

6) புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் உடனடியாகவும் எந்த நிபந்தனையும் இல்லாமலும் பெரு நிலப் பண்ணைகள், நிலச்சுவான்தார்களின் பண்ணைகள் யாவற்றையும் பறிமுதல் செய்ய வேண்டும். இந்த நிலச்சுவான்தார்கள் முதலாளித் துவ நாடுகளில் நேரடியாகவோ, தமது குத்தகைச் சாகுபடி யாளர்கள் மூலமோ இடையறாது முறையாய்க் கூலியுழைப் பையும் சுற்றிலுமுள்ள சிறிய விவசாயிகளையும் (மற்றும் அடிக் கடி நடுத்தர விவசாயிகளிலும் ஒரு பகுதியோரை) சுரண்டு கிறவர்கள்; எந்த உடலுழைப்பிலும் ஈடுபடாதவர்கள்; பெரும்பாலும் பிரபுத்துவக் கோமான்களின் (ருஷ்யாவிலும் ஜெர்மனியிலும் ஹங்கேரியிலும் பிரபுக்கள், பிரான்சில் மீட்சிபெற்ற சிக்னோர்கள், இங்கிலாந்தில் லார்டுகள், அமெரிக்காவில் முன்னாள் அடிமையுடைமையாளர்கள்) வழிவந்தவர்கள், அல்லது பணக்கார நிதித் துறை பெரு முதலாளிகள், அல்லது சுரண்டலாளர்களும் புல்லுருவிகளு மாகிய இவ்விரு வகையோரின் கலப்பாய் இருப்பவர்கள்.

பெரிய நிலச்சுவான்தார்களுக்கு அவர்களிடமிருந்து பறி முதல் செய்யப்பட்ட நிலங்களுக்காக நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்பதை எந்த நிலைமையிலும் கம்யூனிஸ்டுக் கட்சி கள் ஆதரிக்கவோ, செயல்படுத்தவோ கூடாது; ஏனெனில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தற்போதுள்ள நிலைமை களில் இப்படிச் செய்வது சோஷலிசத்துக்குத் துரோகம் புரிவதாகிவிடும்; யுத்தத்தால் மிகப் பெரும் துன்பத்துக்கு ஆளாகிய உழைப்போரும் சுரண்டப்படுவோருமாகிய மக்கள் பெருந் திரளினரைப் புதிய கொள்கைக்கு உட்படுத்துவதாகி

விடும்; மக்கள் திரளினரைக் கொடுமைப்படுத்திய இதே யுத்தம் லட்சாதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து அவர்களை மேலும் பெரிய செல்வந்தர்கள் ஆக்கிற்று.

வெற்றிவாகை சூடும் பாட்டாளி வர்க்கம் பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்து பறிமுதல் செய்யும் நிலங்களை எம்முறையில் சாகுபடி செய்வது என்பதைப் பொறுத்தவரை, ருஷ்யாவில், அதன் பொருளாதார பிற்பட்ட நிலைமை காரணமாய், இந்நிலங்களை விவசாயிகளுடைய உபயோகத் துக்காக அவர்களிடையே வினியோகிப்பதுதான் மிகப் பெருவழக்காய்க் கையாளப்பட்ட முறையாய் இருந்தது, ஒப்பளவில் அரிதான, விதிவிலக்கான சந்தர்ப்பங்களில்தான் இந்த நிலங்கள் ''அரசுப் பண்ணைகள்'' எனப்படுவனவாய் நிறுவப்பட்டன. இந்த அரசுப் பண்ணைகள் பாட்டாளி வர்க்க அரசு தனக்கு உரியனவாய் நடத்தும் பண்ணைகளாகும், இவற்றில் பழைய கூலியுழைப்பாளர்கள் அரசின் தொழி லாளர்களாகவும் அரசை நிர்வகிக்கும் சோவியத்துகளின் உறுப்பினர்களாகவும் மாற்றப்படுகின்றனர். முன்னேறிய முதலாளித்துவ நாடுகளாய் இருப்பனவற்றில் பெரிய விவசாய நிலையங்களில் **மிகப் பெருவாரியானவற்றைக்** கலைக்காமல் அவற்றை ருஷ்யாவிலுள்ள அரசுப் பண்ணைகளை ஒத்த வழியில் நடத்திச் செல்வதுதான் சரியானதெனக் கம்யூனிஸ்டு அகிலம் கருதுகிறது.

ஆனால் இந்த விதியை மிதமிஞ்சிய முக்கியத்துவமுடைய தாய் மிகைப்படுத்தியோ, அப்படியே வறட்டுத்தனமாய்க் காப்பியடித்தோ, உடைமை பறிக்கப்படும் உடைமை பறிப் பாளரது நிலங்களில் ஒரு **பகுதியைச்** சுற்றிலுமுள்ள சிறிய, சில நேரங்களில் நடுத்தர விவசாயிகளுக்கு இலவசமாய் வழங்குவதற்கு ஒருபோதும் அனுமதியாதிருப்பது மிகப் பெரும் தவறாகும்.

முதலாவதாக, இப்படிச் செய்வதை எதிர்த்துப் பெரு வீதச் சாகுபடியின் தொழில்நுட்ப மேம்பாட்டு நிலையைக் குறிப்பிட்டு வழக்கமாய் எழுப்பப்படும் ஆட்சேபனையானது, மறுக்க முடியாத தத்துவார்த்த உண்மையைக் கூறிப் படு மோசமான சந்தர்ப்பவாதத்தையும் புரட்சிக்கு இழைக்கப் படும் துரோகத்தையும் கள்ளத்தனமாய் ஏற்புடையதாக்கு

வதாகவே பல சந்தர்ப்பங்களிலும் அமைந்துவிடுகிறது. வட அமெரிக்காவில் அடிமை முறையின் பகைவர்களாய் இருந்த முதலாளிகள், எப்படி 1863-65ஆம் ஆண்டுகளின் உள்நாட்டு யுத்தத்தின் விளைவாய்ப் பருத்தி உற்பத்தியின் தற்காலிகக் குறைவுக்காகப் பயந்து பின்வாங்கவில்லையோ, அதே போல பாட்டாளி வர்க்கம் இந்தப்புரட்சியின் வெற்றியை முன்னிட்டு பொருளுற்பத்தியின் தற்காலிகக் குறைவுக்காகப் பயந்து பின்வாங்காதிருக்கக் கடமைப்பட்டிருக்கிறது. முதலாளித்துவ வர்க்கத்தாருக்குப் பொருளுற்பத்தியை முன்னிட்டே பொருளுற்பத்தி முக்கியமானதாய் இருக்கிறது. ஆனால் உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்கள் பெருந்திரளினருக்கு, சுரண்டலாளர்களை வீழ்த்துவதும், உழைப்பாளி மக்கள் முதலாளிகளுக்காக அல்லாமல் தமக்காகவே பாடுபடுவதற்குரிய நிலைமைகளைத் தோற்றுவிப்பதும்தான் யாவற்றிலும் மிகவும் முக்கியமானது. பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியையும் இந்த வெற்றியின் நிலைப்பாட்டையும் உறுதி செய்து கொள்வதுதான் பாட்டாளி வர்க்கத்தின் முன்னுள்ள அடிப்படையான முதற்பெரும் பணி. நடுத்தர விவசாயிகளை நடுநிலைப்படுத்தி, சிறு விவசாயிகளில் முழுமையாய் இல்லாவிடிலும் மிகக் கணிசமான பகுதியோரின் ஆதரவைப் பெறுவிடில் பாட்டாளி வர்க்க ஆட்சியை உறுதி பெறச் செய்து கொள்ள முடியாது.

இரண்டாவதாக, விவசாயத்தில் பெருவீதப் பொருளுற்பத்தி அதிகரிப்பதற்கு மட்டுமின்றி, இது குறையாது பாதுகாக்கப்படுவதற்குங்கூட, முழு அளவுக்கு வளர்ச்சி பெற்றதும் புரட்சி உணர்வுடையதுமாகிய கிராமப்புறத்துப் பாட்டாளி வர்க்கம் இருப்பதும், இது தொழிற் சங்க, அரசியல், நிறுவன ஒழுங்கமைப்பில் கணிச அனுபவமுடையதாய் இருத்தலும் அவசிய முன்னிபந்தனைகளாகும். இந்த நிலைமை இன்னமும் இல்லாத போது, அல்லது இந்த வேலையை வர்க்க உணர்வு படைத்த, தகுதி வாய்ந்த தொழில் துறைத் தொழிலாளர்களிடம் ஒப்படைப்பது சாத்தியமாய் இராத போது, அரசு நிர்வகிக்கும்படியான பெரிய பண்ணைகளைத் தோற்றுவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் அவசர முயற்சிகளால் பாட்டாளி வர்க்க ஆட்சி மதிப்பிழக்கும்படியே நேரிடும். இப்படிப்பட்ட நிலைமைகளில் மிகுந்த எச்சரிக்கையுடன்

நடந்து கொள்ள வேண்டும்; அரசுப் பண்ணை அமைக்கப்படு முன் திர்க்கமான தயாரிப்பு நடந்தேறியிருக்க வேண்டும்.

மூன்றுவதாக, எல்லா முதலாளித்துவ நாடுகளிலும், மிகவும் முன்னேறியவற்றிலுங்கூட, நிலப்பிரபுக்கள் சுற்றிலு முள்ள சிறு விவசாயிகளை மத்திய காலத்திய, அரைப் பிரபுத்துவ முறையில் சுரண்டுவதன் மீதமிச்சங்கள் இன்னமும் இருந்து வருகின்றன. ஜெர்மனியில் Instleute* உம் பிரான்சில் மெட்டயார்களும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் பங்குச் சாகுபடியாளர்களும் (தெற்கு மாநிலங்களில் வெகு வாய் இவ்விதம் சுரண்டப்படும் நீக்ரோக்கள் அன்னியில் சில சமயம் வெள்ளையருங்கூட) இவ்வாறுதான் சுரண்டப்பட்டு வருகிறார்கள். இது போன்ற சந்தர்ப்பங்களில், வேறு பொருளா தார, அல்லது தொழில்நுட்ப அடித்தளம் எதுவும் இல்லை என்பதாலும், எடுத்தயெடுப்பில் ஒன்றைத் தோற்றுவித்து விட முடியாது என்பதாலும், இந்தச் சிறு விவசாயிகளின் இலவச உபயோகத்துக்காக முன்பு இவர்கள் குத்தகைக்கு எடுத்துச் சாகுபடி செய்து வந்த நிலங்களை வழங்குவது பாட்டாளி வர்க்க அரசுக்குரிய கடமையாகும்.

பெரும் பண்ணைகளின் உழுபடைக் கருவிகள் தவறுமல் பறிமுதல் செய்யப்பட்டு அரசாங்கச் சொத்தாக்கப்பட வேண்டும், அதோடு பெரிய அரசுப் பண்ணைகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு, சுற்றிலுமுள்ள சிறு விவசாயி கள் பாட்டாளி வர்க்க அரசு விதிக்கும் நிபந்தனைகளுக்கு ஏற்ப இவற்றை இலவசமாய் உபயோகித்துக் கொள்ளலாம் என்பதாய்த் தனியொரு விதி வகுத்துக் கொள்ள வேண்டும்.

பாட்டாளி வர்க்கப் புரட்சியை உடனடியாய் அடுத்து வரும் காலத்தில் பெரிய நிலச்சுவான்தார்களுடைய நிலங் களை உடனே பறிமுதல் செய்வதோடுகூட, எதிர்புரட்சியின் தலைவர்களும் கிராம மக்கள் அனைவரின் ஈவிரக்கமற்ற ஒடுக்கு முறையாளர்களுமான இவர்கள் எல்லோரையும் வெளி யிடங்களுக்குக் கடத்துவது அல்லது தடை வரம்புகளிட்டுக் கட்டுப்படுத்துவது அத்தியாவசியமாகும். ஆனால் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரம் கிராமப்புறத்திலும் மற்றும் நகரங் களிலும் உறுதி பெற முற்பட்டதும் இவ்வர்க்கத்தினரில்

---

* குத்தகைச் சாகுபடியாளர்கள்.—[பதிப்பாசிரியர்.]

மதிப்பு மிக்க அனுபவமும் அறிவும் ஒழுங்கமைப்புத் திறனும் கொண்டோராய் இருக்கும் பகுதியோரை (மிகவும் நம்பகமான கம்யூனிஸ்டு தொழிலாளர்களுடைய தனிக் கண்காணிப்பின் கீழ்) பெருவீத சோஷலிச விவசாயத்தை நிறுவுவதற்காகப் பயன்படுத்திக் கொள்ள முழு முனைப்புடன் முயற்சிகள் செய்தாக வேண்டும்.

7) பாட்டாளி வர்க்க அரசாட்சி சுரண்டலாளர்களுடைய எதிர்ப்பு அனைத்தையும் அறவே அடக்கி, பூரணமாய்த் தனக்குக் கீழ்ப்படிய வைத்து, தன்னை நிலையுறுதி செய்து கொண்டபின், தொழில் துறை பூராவையும் பெருவீதக் கூட்டுறப்பத்திக்குரிய வழிகளிலும் நவீன தொழில்நுட்ப அடித்தளத்தின் மீதும் (பொருளாதாரம் அனைத்தும் மின்னூக்கப்படுதலின் அடிப்படையில் அமைந்தது) திருத்தியமைத்துக் கொண்ட பிறகே, முதலாளித்துவத்தின் மீதான சோஷலிச வெற்றியும் சோஷலிசத்தின் உறுதிப்பாடும் உத்தரவாதமானதாய்க் கருதப்பட முடியும். இந்த நிலைமையில் மட்டும் தான் நகரங்கள் பிற்பட்ட நிலையிலுள்ள, சிதறுண்ட கிராம மக்களுக்குப் போதிய அளவில் ஆதாரத் தொழில்நுட்ப, சமுதாய உதவி அளித்து, சாகுபடியிலும் பொதுவாய் விவசாயத்திலும் உழைப்பினுடைய பொருளுற்பத்தித் திறனை வெகுவாய் அதிகரிக்கச் செய்வதற்கும், இவ்வழியில் முன்னுதாரணத்தின் கவர்ச்சி சக்தியைக் கொண்டு சிறு உழவர்களுக்கு ஊக்கமளித்து, அவர்களைத் தமது சொந்த நலன்களை முன்னிட்டே இயந்திரமயமான பெருவீத, கூட்டு விவசாயத்தை மேற்கொள்ளுமாறு தூண்டுவதற்கும் அவசியமான பொருளாயத அடித்தளத்தைத் தோற்றுவிக்க முடியும். மறுக்க முடியாத இந்தத் தத்துவார்த்த உண்மையைப் பெயரளவில் எல்லா சோஷலிஸ்டுகளும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்ற போதிலும், மஞ்சள் அகிலமான இரண்டாவது அகிலத்திலும், ஜெர்மன், பிரிட்டிஷ் ''சுயேச்சையாளர்களது'' தலைவர்களிடத்தும், பிரெஞ்சு லொங்கேயிஸ்டுகளிடத்தும், இன்ன பிறரிடத்தும் மலிந்திருக்கும் சந்தர்ப்பவாதத்தால் திரித்துப் புரட்டப்படுகிறது. ஒப்பளவில் தொலைவிலுள்ள எழிலார்ந்த இன்னரும் எதிர்காலத்தில் கவனம் செலுத்தப்படுவதிலும், இந்த எதிர்காலத்தை அணுகுவதிலும் சென்றடைவதிலுமுள்ள கடினமான நடைமுறை குறித்த உடனடிப்

பணிகளிலிருந்து கவனம் திசை திருப்பிவிடப்படுவதிலும் இந்தப் புரட்டைக் காணலாம். நடைமுறையில் இப்புரட்டு, முதலாளித்துவ வர்க்கத்துடன் சமரசம் வேண்டுமென்றும், ''சமூக அமைதி'' வேண்டுமென்றும் உபதேசிப்பதில் அடங்கியிருக்கிறது; அதாவது, யுத்தத்தால் எங்கும் உண்டாக்கப்பட்டிருக்கும் என்றும் கண்டிராத நாசத்துக்கும் ஏழ்மைக்கும் மத்தியில், யுத்தத்தின் விளைவாய் ஒரு சில கோடீஸ்வரர்கள் என்றும் கண்டிராதபடி பெற்றிருக்கும் செல்வக் கொள்ளைக்கும் செறுக்குக்கும் மத்தியில் தற்போது தனது போராட்டத்தை நடத்தி வரும் பாட்டாளி வர்க்கத்துக்கு இழைக்கப்படும் கடுந் துரோகத்தில் அடங்கியிருக்கிறது.

கிராமப்புறத்தில் சோஷலிசத்துக்காக வெற்றிகரமாய்ப் போராடுவதற்கு மெய்யான வாய்ப்புகள் தோற்றுவிக்கப்பட வேண்டுமாயின், அதற்கு, முதலாவதாக, எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளும் தொழில் துறைப் பாட்டாளி வர்க்கத்துக்குப் போதமளித்து முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்காகவும் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரத்தை உறுதியாக்குவதற்காகவும் தான் தியாகங்கள் புரிந்தாக வேண்டுமென உணர்த்துவதும் தியாகங்கள் புரியத் தயாராயிருக்கும் படியான உணர்வை அதற்கு ஊட்டுவதும் அவசியமாகும். ஏனெனில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கு, பாட்டாளி வர்க்கமானது உழைப்போரும் சுரண்டப்படுவோருமாகிய பெருந்திரள் மக்கள்அனைவரையும் ஒழுங்கமையச் செய்வதற்கும் அவர்களுக்குத் தலைமை தாங்கிச் செல்வதற்கும் திறனுடையதாய் இருத்தலும், முன்னணிப் படையாய் இருக்கும் வர்க்கம் இக்குறிக்கோள் ஈடேறும் பொருட்டு மிகுதியாய்த் தியாகம் புரியவும், மிகுதியாய் வீரம் வெளிப்படுத்தவும் திறனுடையதாய் இருத்தலும் அவசியமாகும். இரண்டாவதாக, கிராமப்புறத்திலுள்ள உழைப்போரும் மிகவும் கடுமையாய்ச் சுரண்டப்படுவோருமான வெகுஜனங்கள் தொழிலாளர்கள் பெறும் வெற்றியின் விளைவாய், சுரண்டலாளர்களின் செலவில் தமது நிலையை உடனடியாகவும் கணிசமளவிலும் மேப்படுத்திக் கொள்வது இந்த வெற்றிக்கு அவசியமாகும். அவர்கள் தம் நிலைமைகளை இவ்விதம் மேம்படுத்திக் கொள்ள முடியவில்லையானால், தொழில் துறைப் பாட்டாளி வர்க்கம் கிராமப்புறத்தின் ஆதரவு தனக்கு உண்டென்றும்,

குறிப்பாய் நகரங்களுக்கு உணவு தடையின்றி வழங்கப்படு மென்றும் உறுதியாய் இருக்க முடியாது.

8) கிராமப்புறத்து உழைப்பாளிப் பெருந்திரள் மக்களை முதலாளித்துவம் கேடுகெட்ட படுமோசமான நிலையில் இருத்தியிருக்கிறது, சிதறுண்ட நிலைக்கு, அடிக்கடி மத்திய காலத்தியதைப் போன்றதான சார்பு நிலைக்குத் தாழ்வுறச் செய்திருக்கிறது. இம்மக்கள் திரளினரை நிறுவன ஒழுங் கமைவு பெறச் செய்வதிலும் புரட்சிப் போராட்டத்துக்காக இவர்களைப் பயிற்றுவிப்பதிலும் இருக்கும் பிரம்மாண்டமான சிரமத்தின் காரணமாய், கம்யூனிஸ்டுக் கட்சிகள் கிராமப் புறத்தில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் தனிக் கவனம் செலுத்துவதும், விவசாயத் துறைப் பாட்டாளி வர்க்கத் தினர், அரைப்பாட்டாளி வர்க்கத்தினர் ஆகியோரது வெகுஜன வேலைநிறுத்தங்களுக்குக் கூடுதலான ஆதரவு அளித்து எல்லா வழிகளிலும் இவற்றை ஒங்கச் செய்வதும் இன்றியமையாத வையாகின்றன. வளர்ச்சி பெறும் வெகுஜன வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றுல் மட்டும்தான் (சில நிலைமைகளில் சிறு விவசாயிகளும் இந்தப் போராட்டத்தில் ஈடுபடும்படி ஈர்க்கப் பட முடியும், ஈர்க்கப்படவும் வேண்டும்), கிராமப்புறத்தை அதன் உறக்கத்திலிருந்து தட்டியெழுப்பவும், கிராமப் புறத்திலுள்ள சுரண்டப்படும் வெகுஜனங்களுடைய வர்க்க உணர்வை உசுப்பிவிடவும், வர்க்க நிறுவன ஒழுங்கமைப்பின் அவசியத்தை அவர்கள் உணரும்படிச் செய்யவும், நகரத்துத் தொழிலாளர்களுடன் அவர்கள் கூட்டணி கொள்வதன் முக்கியத்துவத்தைக் கண்கூடான, நடைமுறை வழியில் அவர் களுக்குப் புலப்படுத்தவும் முடியும் என்பதை 1905ஆம் ஆண்டு, 1917ஆம் ஆண்டு ருஷ்யப் புரட்சிகளின் அனுபவம் தெளிவுபடுத்துகிறது; ஜெர்மனி, ஏனைய முன்னேறிய நாடு களின் அனுபவம் ருஷ்யாவின் இவ்வனுபவத்தை இப்பொழுது ஊர்ஜிதம் செய்து, மேலும் விரிவுபடுத்தியிருக்கிறது.

கிராமப்புறத்து வேலைநிறுத்தப் போராட்டம் குறித்து பராமுகமாய் இருப்பதோடு அன்னியில், இந்தப் போராட் டம் நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தியைக் குறையச் செய்கிறது என்று காரணம் கூறி இதைக் (காவுத்ஸ்கியைப் போல) எதிர்ப்போராய் இருக்கும் சோஷலிஸ்டுகளை—துரதி ருஷ்டவசமாய் இவர்கள் மஞ்சள் அகிலமான இரண்டாவது

அகிலத்தில் மட்டுமின்றி இந்த அகிலத்திலிருந்து விலகிக் கொண்டுவிட்ட மூன்று மிக முக்கிய ஐரோப்பிய கட்சிகளிலுங்கூட காணப்படுகிறார்கள்—கம்யூனிஸ்டு அகிலத்தின் இந்தக் காங்கிரஸ் துரோகிகளென நிந்தனை செய்கிறது. கம்யூனிஸ்டுகளும் தொழிலாளர் தலைவர்களும் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வளர்ச்சியே, அதன் வெற்றியே உலகில் ஏனைய யாவற்றுக்கும் முதன்மையானவையெனக் கொள்வோர் என்பதையும், இதற்காக எவ்வளவு பெரிய தியாகங்கள் வேண்டுமாயினும் புரியத் தயாராய் இருப்பவர்கள் என்பதையும் நடைமுறையில், செயல்கள் மூலம் நிரூபிக்கவில்லையானால், வேலைத்திட்டங்களுக்கும், புனிதப் பிரகடனங்களுக்கும் எந்த மதிப்பும் இல்லை. ஏனெனில் கரையேறுவதற்கு வேறு வழி ஏதும் இல்லை, பட்டினியிலிருந்தும் நாசத்திலிருந்தும் புதிய ஏகாதிபத்திய யுத்தங்களிலிருந்தும் தப்புவதற்கு வேறு வழி ஏதும் இல்லை.

பழைய சோஷலிஸ்டு இயக்கத்தின் தலைவர்களும், ''தொழிலாளர் பிரபுக்குலத்தோரின்'' பிரதிநிதிகளும்—இப்பொழுது இவர்கள் வாயளவில் அடிக்கடி கம்யூனிசத்துக்குச் சலுகைகள் காட்டுகின்றனர், இன்று வேகமாய்ப் புரட்சி மனோபாவம் கொண்டோராகி வரும் தொழிலாளர் வெகுஜனங்களிடையே தமது செல்வாக்கைப் பாதுகாத்துக் கொள்வதற்காகப் பெயரளவில் கம்யூனிசத்தின் பக்கத்தில் சேர்ந்து கொள்ளவும்கூட செய்கின்றனர்—பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியத்தில் பற்றுறுதி கொண்டிருப்பவர்களா, புரட்சிகர உணர்வின் வளர்ச்சியும் புரட்சிப் போராட்டத்தின் வளர்ச்சியும் மிக மூனைப்பாகவும், நிலச்சுவான்தார்கள் முதலாளித்துவ வர்க்கத்தினர் (பெரிய விவசாயிகள், குலாக்குகள்) ஆகியோரின் எதிர்ப்பு மிகக் கடுமையாகவும், சோஷலிஸ்டுச் சமரசவாதிக்கும் கம்யூனிஸ்டுப் புரட்சியாளருக்கும் இடையிலான வேறுபாடு மிக எடுப்பாகவும் இருக்கும்படியான பணித் துறைகளில் பொறுப்புள்ள பதவிகள் வகிப்பதற்கு இலாயக்கானவர்களா என்று சோதித்துப் பார்ப்பது அவசியமென்பதை வலியுறுத்திக் கூறியாக வேண்டும்.

9) கிராமப்புறத்தில் பிரதிநிதிகளது சோவியத்துகளை, முதலாவதாகக் கூலித்தொழிலாளர்கள், அரைப்பாட்டாளி வர்க்கத்தினர் ஆகியோரது சோவியத்துகளை அமைப்பதற்காக

எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் முற்படக் கம்யூனிஸ்டுகள் எல்லா முயற்சிகளையும் செய்தாக வேண்டும். சோவியத்துகள் வெகுஜன வேலைநிறுத்தப் போராட்டத்துடனும் மிகவும் அதிகமாய் ஒடுக்கப்பட்டிருக்கும் வர்க்கத்துடனும் இணைந்திருந்தால்தான், அவை தமது கடமைகளை நிறைவேற்றி, போதிய அளவுக்கு வன்மையும் திண்மையும் பெற்று சிறு விவசாயிகளை வயப்படுத்தவும் (பிற்பாடு அவர்களைத் தம்முடன் சேர்த்துக் கொள்ளவும்) கூடியனவாக முடியும். ஆனால் வேலைநிறுத்தப் போராட்டம் இன்னமும் வளர்ச்சி பெறவில்லையானால், நிலச்சுவான்தார்கள், பெரிய விவசாயிகளது ஒடுக்குமுறையின் கடுமை காரணமாகவும் தொழில் துறைத் தொழிலாளர்களிடமிருந்தும் அவர்களது சங்கங்களிடமிருந்தும் ஆதரவு இல்லாததன் காரணமாகவும் விவசாயத் துறைப் பாட்டாளி வர்க்கம் வலிமை வாய்ந்த நிறுவன ஒழுங்கமைப்பு பெற இன்னமும் முடியாததாகவே இருக்குமானால், கிராமப் புறத்தில் பிரதிநிதிகளது சோவியத்துகளை அமைப்பதற்கு நீண்ட தயாரிப்பு தேவையாயிருக்கும். கம்யூனிஸ்டு மூலக் குழுக்களை—சிறியவையே ஆயினும்—அமைப்பது, கிளர்ச்சி தீவிரமாக்கப்படுதல்—இந்தக் கிளர்ச்சியில் கம்யூனிசத்தின் கோரிக்கைகள் மிக எளிய முறையில் எடுத்துரைக்கப்பட்டு, சுரண்டலின், ஒடுக்குமுறையின் மிகவும் அப்பட்டமான உதாரணங்களைக் கொண்டு விளக்கப்பட வேண்டும்—தொழில் துறைத் தொழிலாளர்கள் முறையாய்க் கிராமப்புறங்களுக்குப் போய் வருவதற்கு ஏற்பாடு செய்தல் முதலான பல வழிகளிலும் இந்தத் தயாரிப்பு செய்யப்பட வேண்டும்.

1920 ஜூன் தொடக்கத்தில்
எழுதப் பெற்றது

நூல் திரட்டு,
தொகுதி 41,
பக்கங்கள் 169-82

பண்ட வடிவ வரி பற்றிய உரை

ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியினது (போல்ஷிவிக்குகள்) பத்தாவது அனைத்து ருஷ்ய மாநாட்டில் நிகழ்த்தியது 1921 மே 26

தோழர்களே, பண்ட வடிவ வரிப் பிரச்சினை குறித்து, கட்சியின் பயன் கருதி ஒரு பிரசுரத்தில் ஏற்கனவே நான் விவாதித்திருக்கிறேன். உங்களில் பெரும்பாலோரும் இந்தப் பிரசுரத்தை அறிந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இந்தப் பிரச்சினை கட்சி மாநாட்டில் விவாதத்துக்கு வருகிறது என்ற போது எனக்கு வியப்பாகவே இருந்தது, ஏனெனில் இது அவசியமே என்பதற்கான அறிகுறி எதையும் நான் அறிந்திருக்கவில்லை. ஆனால் வட்டாரங்களுக்குச் சென்று வந்துள்ள தோழர்களில் மிகப் பலரும், குறிப்பாய், பல குபேர்னியாக்களுக்கும் சென்று சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பியிருக்கும் தோழர் அசீன்ஸ்கியும், பண்ட வடிவ வரி சம்பந்தமாய் உருவாகியிருக்கும் கொள்கையானது வட்டாரங்களில் பெரு மளவுக்குத் தெளிவற்றதாகவே இருந்து வருகிறதென்றும், ஓரளவுக்குப் புரியாததாகவே இருப்பதாய்ச் சொல்லலா மென்றும் மத்தியக் கமிட்டிக்கு அறிவித்தனர்; மற்றும் பல தோழர்களாலும் இது வலியுறுத்தப்பட்டது. இந்தப் பிரச்சினையின் தனி முக்கியத்துவத்தைக் கருதி, இது குறித்து மேலும் கூடுதலாய்க் கட்சி மாநாடு ஒன்றில் விவாதிக்கப் படுவது மிகவும் அவசியமாய்த் தோன்றியதால், குறிக்கப் பட்டிருந்த காலத்துக்கு முன்னதாகவே மாநாட்டைக் கூட்டுவதென்று முடிவு செய்யப்பட்டது....

...இந்தக் கொள்கையின் பொதுவான முக்கியத்துவம் குறித்துக் கூறி அறிமுகம் செய்து வைக்கும் பணி எனக்குக் கிடைத்திருக்கிறது; ஏற்கனவே இந்தப் பிரசுரத்தில் நான் கூறியிருப்பதற்கும் கூடுதலாய்ச் சிறிதளவு சொல்வதுடன் நிறுத்திக் கொள்ள விரும்புகிறேன். வட்டாரங்களில் இப்

பிரச்சினை எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது என்பது குறித்தோ, அதில் இருக்கக் கூடிய குற்றங்குறை, தெளிவின்மை குறித்தோ, எனக்கு நேரடியாய்த் தகவல் தெரியாது. கட்சியும் வட்டாரங்களில் ஊழியர்களும் எத்திசையில் கவனம் செலுத்த வேண்டுமென்பது இம்மாநாட்டில் எழுப்பப்படும் பிரச்சினைகளிலிருந்தோ நடைபெறப் போகும் விவாதத்திலிருந்தோ தெளிவானதும், பிற்பாடு நான் சில விவரங்களை விரித்துரைக்க வேண்டி வரலாம்.

பண்ட வடிவ வரியுடனும் புதிய பொருளாதாரக் கொள்கையுடனும்[32] சம்பந்தப்பட்ட அரசியல் பணிகள் குறித்து இருக்கக் கூடிய தவறான எண்ணங்களும் தெளிவின்மையும், எனக்குத் தெரிந்த வரை, இந்த விவகாரத்தின் ஏதேனும் ஓர் அம்சத்தை மிகைப்படுத்துவதன் விளைவாய் ஏற்படுகிறவையாகவே இருக்கும். ஆனால் இந்தப் பணியை நடைமுறைக்குரிய வழிகளில் வகுத்தமைத்துக்கொள்ளும் வரை தவிர்க்கவொண்ணாதவாறு மிகைப்பாடுகள் ஏற்படவே செய்யும். புதிய வழிகளில் குறைந்தது உணவுக் கொள்முதல் இயக்கம் ஒன்றையேனும் நடத்தி முடிக்கும் வரையில் இந்தக் கொள்கையில் எந்தவொரு கூறுக்கும் நடைமுறைச் செயற்பாட்டிலுள்ள மெய்யான வரம்புகளைக் கறாராய் வரையறுப்பது இயலாத காரியமாகவே இருக்கும். இங்கு கூடியிருப்போர் அனுப்பி வைத்த சில குறிப்புகளிலிருந்து நான் நிதானிக்க முடிந்த வரை, மிக அதிகமாய்த் தவறான கருத்துக்களை ஏற்படுத்தியிருப்பதாய்த் தெரியும் முரண்பாடுகளில் சிலவற்றைப் பொதுவான முறையில் பரிசீலிக்கின்றேன். பண்ட வடிவ வரியும் அதையொட்டி நமது கொள்கையில் ஏற்படும் மாறுதல்களும் கொள்கையின் தலைகீழ் மாற்றத்தின் அறிகுறியாய்ப் பல சந்தர்ப்பங்களிலும் வியாக்கியானம் செய்யப்படுகிறது. இந்த வியாக்கியானம் வெளிநாடுகளிலுள்ள வெள்ளைப் படைப் பத்திரிகைகளால், குறிப்பாய் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர், மென்ஷிவிக்குகளின் பத்திரிகைகளால் அப்படியே எடுத்துக் கையாளப்பட்டுப் பிரமாதப்படுத்தப்படுவதில் வியப்பில்லை. ருஷ்ய சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசின் பரப்பிலும் இவற்றையொத்த கூறுகளது செல்வாக்கு தலைதூக்கிச் செயல்படுவதன் விளைவோ, அல்லது உணவு நிலைமை மிகக் கடுமையாகிவிட்ட காரணத்தால் சில

வட்டாரத்தினரிடையே காணப்பட்டதும், ஒருவேளை இன்னமும் காணப்பட்டு வரக் கூடியதுமான தீவிர அதிருப்தியின் விளைவோ—நான் அறியேன்; ஆனால் இம்மாதிரியான திகைப்பும் கலக்கமும் நமக்கிடையேகூட ஓரளவுக்குப் பரவி, தற்போது நாம் செய்திருக்கும் மாற்றத்தின் முக்கியத்துவம் குறித்தும், புதிய கொள்கையின் தன்மை குறித்தும் பெருமளவுக்குத் தவறான ஒரு கருத்தோட்டத்தை உண்டாக்கியிருக்கலாம்.

தேச மக்களில் விவசாயிகள் பிரம்மாண்டப் பெருவாரியினராய் இருப்பதனால், தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்குமிடையே குறிப்பிட்ட முறையிலான உறவுகளை நிறுவுவதுதான் இயற்கையாகவே நமது தலையாய பணியாய்—பொதுவாய் நமது கொள்கையிலும், குறிப்பாய் நமது பொருளாதாரக் கொள்கையிலும் நமது தலையாய பணியாய்—அமைந்துவிடுகிறது. தற்கால வரலாற்றிலே முதன்முதலாய்ச் சுரண்டும் வர்க்கம் அகற்றப்பட்டுவிட்ட ஒரு சமுதாய அமைப்பை நாம் வகுத்துக் கொண்டுவிட்டோம். ஆனால் இதில் தொழிலாளி வர்க்கம், விவசாயிகள் ஆகிய இருவேறு வர்க்கங்கள் இருக்கின்றன. விவசாயிகள் பிரம்மாண்டப் பெருவாரியினராய் இருப்பது நமது பொருளாதாரக் கொள்கையையும், பொதுவாய் நமது கொள்கையையும் பாதிக்காமல் இருக்க முடியாது. இந்த இரு வர்க்கங்களுக்கும் இடையே ஒழுங்கான உறவுகளை, வர்க்கங்களை ஒழிப்பதன் கண்ணோட்டத்தின்படி ஒழுங்கான உறவுகளை நிறுவுவதே இன்னமும் நம் முன்னுள்ள தலையாய பிரச்சினையாகும்—வருகிற பல ஆண்டுகளுக்குத் தவிர்க்க முடியாதபடி தொடர்ந்து இது நமது தலையாய பிரச்சினையாகவே இருக்கும். தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் உடன்பாடு காண்பதெனும் சூத்திரம்குறித்து சோவியத் ஆட்சியதிகாரத்தின் பகைவர்கள் இப்படி ஓயாமல் விவாதிக்கிறார்கள், அடிக்கடி நமக்கு விரோதமாய் உபயோகிக்கிறார்கள் என்றால், இந்த சூத்திரம் தெளிவற்றதாய் இருப்பதுதான் அதற்குக் காரணம். தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் உடன்பாடு காண வேண்டுமென்பதற்கு எந்த அர்த்தம் வேண்டுமானாலும் தரலாம். தொழிலாளி வர்க்கத்தின் கண்ணோட்டத்தில் இப்படியொரு உடன்பாடு, தொழிலாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கு

ஆதரவளிப்பதாகவும் வர்க்கங்களின் ஒழிப்பை நோக்க மாய்க் கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றாய் அமைவதாக வும் இருக்கும் போது மட்டும்தான் கோட்பாட்டு அளவில் சாத்தியமானது, அனுமதிக்கத் தக்கது என்று கொள்ளாத வரை, சோவியத் அரசாங்கத்தின் எல்லாப் பகைவர்களுக் கும், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் எல்லாப் பகை வர்களுக்கும் இது ஏற்புடைத்த சூத்திரமாகவே இருக்கும். நமது புரட்சியின் முதலாவது காலக்கூறில், அதாவது இப் பொழுது ஏறத்தாழ முடிவடைவதாய்க் கருதக்கூடிய இந்தக் காலக்கூறில் இந்த உடன்பாடு எப்படிச் சாதிக்கப்பட்டது? பிரம்மாண்டப் பெரும்பான்மையோராகிய விவசாயி மக்கட் பகுதியோரிடையே பாட்டாளி வர்க்கச் சர்வாதி காரம் எப்படி நிலைநாட்டப்பட்டு உறுதியாக்கப்பட்டது? உள்நாட்டு யுத்தம்தான் நம்மிடையே உடன்பாடு ஏற்படுவ தற்கான பிரதான காரணமாகவும், பிரதான இயக்கு சக்தி யாகவும், பிரதான தீர்வுக் கூறுகவும் இருந்தது. பெரும்பா லான சந்தர்ப்பங்களில் உள்நாட்டு யுத்தமானது, வெள்ளைப் படையினர், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர், மென் ஷிவிக்குகள் ஆகியோர் நமக்கு எதிராய் ஒன்றுசேர்ந்து கூட் டணியாய்ப் பங்கு கொண்டு துவக்கப்பட்டது என்றாலும், சோஷலிஸ்டு-புரட்சியாளர், அரசியல் நிர்ணயச் சபை, மென் ஷிவிக்குக் கூறுகள் யாவும்—ஆட்சிக் கவிழ்ப்பு மூலமோ வேறு வழியிலோ—தவறாமல் பின்னணிக்குத் தள்ளப்பட்டு, முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவக் கூறுகள் வெள்ளைப்படை இயக்கத்துக்குத் தலைமை தாங்கும்படி விடப்படும் நிலைக்கே இட்டுச் சென்றது. கொல்ச்சாக்குக்கும் தெனீக்கினுக்கும் கீழும், நமக்கு எதிரான எண்ணற்ற குட்டி ஆட்சிகள், இயக்கங்கள் யாவற்றிலுமே இப்படியேதான் நேர்ந்தது. இதுதான் பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணியின் வடிவத்தை நிர்ணயம் செய்த பிர தான காரணியாய் அமைந்தது. இந்தச் சூழ்நிலைமை விவரிக்க இயலாத நமது இன்னல்களை மேலும் பன்மடங்கு பெருகச் செய்தது; ஆனால் மறுபுறத்தில் கூட்டணிச் சூத்திரத்தை எப்படிச் செயல்படுத்துவதென்று மண்டையை உடைத்துக் கொள்ளும் அவசியம் நமக்கு ஏற்படாதபடிச் செய்தது; ஏனெனில் இந்தச் சூத்திரமும் இது சித்தி பெறுவதற்கான

நிலைமைகளும் நாம் தேர்வு செய்து தீர்மானிப்பதற்கு வழி இல்லாமலே யுத்தத்தின் சூழ்நிலையாலேயே முடிவு செய்யப் பட்டுவிட்டன.

தொழிலாளி வர்க்கம் ஒன்று மட்டும்தான் உள்நாட்டு யுத்தத்தாலும் அதன் நிலைமைகளாலும் அவசியமாக்கப் பட்டுவிட்ட வடிவில் சர்வாதிகாரத்தைச் செயல்படுத்தக் கூடியதாய் இருந்தது. நிலப்பிரபுக்கள் உள்நாட்டு யுத்தத்தில் இறங்கியதானது தொழிலாளி வர்க்கத்தையும் விவசாயிகளையும் முழுநிறைவாகவும் நிபந்தனையின்றியும் பிரிக்கவொண்ணாதவாறும் ஒன்றுபடச் செய்தது. இந்த விவகாரத்தில் உள்ளுக்குள் எவ்விதமான அரசியல் ஊசலாட்டமும் இருக்கவில்லை. ருஷ்யா அதன் பிரதான தானியச் சாகுபடி பிரதேசங்களிலிருந்து துண்டிக்கப்பட்டுவிட்டதனாலும், உணவுத் தட்டுப்பாடு மிகக் கடுமையாய்த் தீவிரமடைந்துவிட்டதனாலும் நம்மை எதிர்நோக்கிய பிரம்மாண்ட இடர்ப்பாடுகளுக்கு இடையே, உபரி தானியத்தைக் கட்டாய முறையில் கொள்முதல் செய்யாமல் நமது உணவுக் கொள்கையை நாம் நிறைவேற்றிச் சென்றிருக்க முடிந்திருக்காது. இது குறிப்பிட்டது, உபரியாய் இருப்பிலிருந்த தானியத்தை எடுத்துக் கொள்வது மட்டுமல்ல. இந்த உபரி தானியம் சரிவர வினியோக்கப் பட்டிருந்தாலுங்கூட அது சிறிதும் போதுமானதாய் இருந்திருக்காது. இந்தக் கொள்முதல் முறையைப் பின்தொடர்ந்து எழுந்த முறைகேடுகளை இங்கே நான் விவரமாய் ஆராய்வதற்கில்லை. எப்படியும் இதன் பிரதான குறிக்கோள் ஈடேற—தானியச் சாகுபடிப் பிரதேசங்களிலிருந்து அறவே துண்டிக்கப் பட்டிருந்த போதிலும் தொழில் துறையானது தொடர்ந்து இயங்க வழி செய்வதென்னும் பிரதான குறிக்கோள் ஈடேற—இந்த கட்டாயக் கொள்முதல் பயன்பட்டது. ஆனால் யுத்த நிலைமைகளில் மட்டுமே இது ஒருவாறு திருப்திகரமானதாய் இருக்கக் கூடியது. புறப் பகைவனை முடிவாய் நாம் ஒழித்துக் கட்டியதும்—1921ல் இது எதார்த்த உண்மையாகிற்று—மற்றொரு பணி நம் முன்னே எழுந்தது; தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே **பொருளாதாரக்** கூட்டணியை நிறுவிக்கொள்ளும் பணி இது. 1921 வசந்தத்தில்தான் உண்மையில் இந்தப் பணியில் நாம் இறங்கினோம். 1920ல் பயிர்கள் கேடுற்றதால் விவசாயிகளின் நிலைமை

மேலும் வெகுவாய் மோசமடைந்திருந்த காலம் அது. அப்பொழுதுதான் முதன்முதலாய் உள்ளுக்குள் அரசியல் ஊசலாட்டம் ஏற்படக் கண்டோம். இந்த ஊசலாட்டம் வெளியிலிருந்து பகைவன் செய்த நிர்ப்பந்தத்தால் ஏற்பட்டதல்ல, தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான உறவுகளிலிருந்து ஏற்பட்டதாகும். 1920ல் அமோக அறுவடை கிடைத்திருந்தால், குறைந்தது நல்ல அறுவடையாவது கிடைந்திருந்தால், கட்டாய உபரி தானியக் கொள்முதல் மூலம் திட்டமிடப்பட்டிருந்த 42 கோடி பூடுகளில் 40 கோடி பூடாவது கிடைத்திருந்தால், நமது தொழில் துறைத் திட்டத்தில் பெரும் பகுதியை நாம் நிறைவேற்ற முடிந்திருக்கும்; விலைபொருள்களுக்குப் பதிலாய்க் கொடுத்துப் பரிவர்த்தனை செய்வதற்குத் தொழில் துறை உற்பத்திப் பொருள்கள் நமக்குக் கிடைத்திருக்கும். ஆனால் இதற்கு நேர் மாறான ஒரு நிலைமையே ஏற்பட்டது. உணவு நெருக்கடியையும்விட கடுமையான எரிபொருள் நெருக்கடி சில இடங்களில் தோன்றியது. விவசாயிகளுக்கு வேண்டியிருந்த நகரத் தொழிற் பண்டங்களை வழங்குவது அறவே முடியாமற் போய்விட்டது. விவசாயிகளின் பயிர்த்தொழில் விவரிக்க முடியாத கடும் நெருக்கடியில் சிக்கித் தவித்தது. தொடர்ந்து பழைய உணவுக் கொள்கையை அனுசரித்துச்செல்வது இயலாதென்பதைப் புலப்படுத்திய நிலைமைகள் இவையே. நாம் முன்னேறிச் செல்வதற்குரிய அடுத்த நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு, தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டணிக்கு உடனடியாய்த் தேவைப்படும் பொருளாதார அடித்தளம் என்ன என்னும் பிரச்சினையை நாங்கள் எழுப்பவேண்டியதாயிற்று.

நாம் எடுக்கவேண்டிய அடுத்த நடவடிக்கைகள் தொழில் துறை உற்பத்திப் பொருள்களைப் பரிவர்த்தனையாய்க் கொடுத்து விலைபொருள்களைப் பெறுவதற்குரிய தயாரிப்பு நடவடிக்கைகளாகும்; நகரங்களது ஆலை உற்பத்திப் பொருள்களுக்குப் பரிவர்த்தனையாய் அல்லாமல் விவசாயி தனது விலைபொருள்களைத் துறக்க வேண்டியிராதபடியும், அதேபோது முதலாளித்துவ அமைப்பில் இருந்து வரும் எந்த முறைக்கும் விவசாயியைக் கீழ்ப்படுத்தாது இருக்கும்படியும் அமைந்த ஒரு முறையை உருவாக்குவதற்குரிய நடவடிக்கை

களாகும். ஆனால் தற்போதுள்ள பொருளாதார நிலைமைகளில் இதைப் பற்றி நினைப்பதே சாத்தியமற்றதாய் இருக்கிறது. எனவேதான் நான் எடுத்துரைத்த இடைக்கால முறையை, அதாவது பிரதியாய் ஏதும் அளிக்காமல் ஒரு வரியின் வடிவத்தில் விலைபொருள்களை எடுத்துக் கொண்டு, அதற்குக் கூடுதலான விலைபொருள்களைப் பரிவர்த்தனையின் மூலமாய் வாங்கிக் கொள்வதென்ற இடைக்கால முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் இதற்குப் பொருத்தமான பண்டக் கையிருப்பு தேவைப்படுகிறது. நம்மிடம் இருப்பதோ மிகச் சிறியது; இதை அயல்நாட்டு வர்த்தகத்தின் மூலம் பெரிதாக்கிக் கொள்வதற்கான சாத்தியப்பாடு, முதலாளித்துவ நாடுகளுடன் செய்யப்பட்டிருக்கும் பல ஒப்பந்தங்களின் பயனாய், இவ்வருடம்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. இன்னமும் இவ்வொப்பந்தங்கள் துவக்க நிலையையே, பீடிகையையே குறிக்கின்றன என்பது மெய்தான், மெய்யான வர்த்தகம் இன்னமும் ஆரம்பமாகவில்லை. முதலாளித்துவ வட்டாரத்தினரில் அனேகமாய் எல்லோரும், அல்லது பெரும் பகுதியானோர் தொடர்ந்து சீர்குலைவு புரிந்துவருகின்றனர்; இந்த ஒப்பந்தங்களைக் குலைப்பதற்கு எல்லா வழிகளிலும் முயலுகின்றனர். தனி விசேஷம் என்னவெனில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் பத்திரிகைகளும் மென்ஷிவிக் பத்திரிகைகளும் அடங்கலான ருஷ்ய வெள்ளைப்படைப் பத்திரிகைகள் வேறு எதையும்விட இந்த ஒப்பந்தங்களின்மீது அதிக வன்மம் கொண்டு தாக்கி வருகின்றன. பாட்டாளி வர்க்கத்தைக் காட்டிலும் முதலாளித்துவ வர்க்கம் போராடுவதற்கு நன்றாய்த் தயார் செய்திருக்கிறது, உயர்நிலை வளர்ச்சி பெற்றிருக்கிறது, அதற்கு நேர்ந்திருக்கும் எல்லாக் ''கஷ்டங்களாலும்'' அதன் வர்க்க உணர்வு அதிக கூர்மையாகியுள்ளது, அது அபார நுட்பத்திறன் படைத்ததாய் இருக்கிறது என்பது தெட்டத் தெளிவாய்த் தெரிகிறது. வெள்ளைப்படைப் பத்திரிகைகளைக் கூர்ந்து கவனித்தோமாயின் அவை நமது கொள்கையின் மையமாய், அச்சாணியாய்ப் பார்த்துத் தாக்கி வருவது தெரிய வரும்.

போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது என்றாலும், இராணுவப் படையெடுப்பு தகர்ந்துவிட்டது என்பது வெளிப்படை. இந்தத் தோல்விக்குப் பிற்பாடு வெள்ளைப்படைப்

பத்திரிகைகள் முடியாத ஒன்றை, அதாவது வர்த்தக ஒப்பந்தங்களைப் பயனற்றதாக்கிவிட வேண்டுமென்பதை, தமது இலக்காய்க் கொண்டு பாடுபடுகின்றன. எதிர்ப்புரட்சி சக்திகளின் முன்னணியில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரையும் மென்ஷிவிக்குகளையும் கொண்டு இவ்வருடம் வசந்தத்தில் மிகவும் விரிவான அளவில் துவக்கப்பட்ட இயக்கம் திட்டவட்டமான நோக்கம் கொண்டதாகும்: ருஷ்யாவும் முதலாளித்துவ உலகும் இந்த வசந்தத்தில் செய்து கொண்ட பொருளாதார ஒப்பந்தங்களைப் பயனற்றதாக்குவதே இந்த நோக்கம். அவை இந்த நோக்கத்தை நிறைவேறச் செய்வதில் கணிச அளவுக்கு வெற்றியும் பெற்றிருக்கின்றன. நாம் தலைமையான ஒப்பந்தங்கள் முடித்துக் கொண்டுள்ளோம்—இந்த ஒப்பந்தங்களின் **எண்**ணிக்கை அதிகரித்து வருகின்றன; பெருகி வரும் எதிர்ப்பைச் சமாளித்து முன் செல்கிறோம் என்பதெல்லாம் மெய்தான். ஆயினும் மிகவும் அபாயகரமான தாமதம் ஏற்பட்டிருக்கிறது; வெளிநாடுகளிலிருந்து ஓரளவுக்கு உதவி இல்லாமல் பெருவீதத் தொழிலைப் புனரமைத்து முறையான பண்டப் பரிவர்த்தனையைப் புத்துயிர் பெற்றெழச் செய்ய இயலாது, அல்லது அபாயகரமான அளவுக்கு இதில் தாமதம் ஏற்பட்டுவிடும். இப்படிப்பட்ட நிலைமைகளில்தான் நாம் செயல்பட வேண்டியிருக்கிறது, இப்படிப்பட்ட நிலைமைகள்தான் வர்த்தகத்தை மீட்டமைக்கும் பிரச்சினை விவசாயிகளுக்கு முதற்பெரும் பிரச்சினையாய் முன்வரிசைக்கு வரும்படி செய்திருக்கின்றன. சலுகைகள் பற்றிய பிரச்சினையில் நாம் இறங்கப் போவதில்லை, **ஏ**னெனில் கட்சிக் கூட்டங்களில் இவை மிகுதியாய் விவாதிக்கப்பட்டிருக்கின்றன, இது குறித்து அண்மையில் திகைப்போ குழப்பமோ ஏற்படவில்லை. சலுகைகள் அளிக்கிறோம் என்பதாய் நாம் ஓயாமல் தொடர்ந்து கூறிக் கொண்டிருக்கிறோம், ஆனால் அந்நிய முதலாளிகளிடமிருந்து கருத்துக்குரிய எந்தவொரு பிரேரணையும் இதுவரை நமக்கு **வ**ரவில்லை, உருப்படியான எந்தவொரு சலுகை ஒப்பந்தமும் இதுவரை முடிக்கப்பட்டாகவில்லை. நடைமுறையில் சோதித்துப் பார்க்கப்பட்ட மேற்கு ஐரோப்பிய மூலதனத்தை முன்வரும்படிச் செய்வதற்குரிய ஒரு வழியைக் கண்டுபிடிப்பதில்தான் எல்லாச் சங்கடமும் அடங்கியிருக்கிறது.

தத்துவார்த்தத்தில் சிறிதும் சர்ச்சைக்கு இடமில்லாதது —இது குறித்து ஒவ்வொருவருக்கும் சந்தேகம் நீங்கியிருக்க வேண்டுமென்பதாகவே தோன்றுகிறது எனக்கு— ஐரோப்பிய மூலதனத்துக்குச் சில கோடிகளை அல்லது பத்து கோடிகளைக் கொடுத்துத் தீர்த்துவிடுவது நமக்கு அனுகூலமானதே, தத்துவார்த்தத்தில் இது முற்றிலும் தெளிவாய்ப் புலப்படுகிறது என்கிறேன். நமது பெருவீதத் தொழில் துறையைப் புத்துயிர் பெறச் செய்வதற்காக நம்மிடமுள்ள சாதனங்கள், மூலப் பொருள்கள், ஏனைய பொருள்கள், இயந்திரங்கள் ஆகியவற்றை மிகக் குறுகிய காலத்துக்குள் கூடுதலாக்கிக் கொள்ளும் பொருட்டு இப்படி நாம் கொடுத்துத் தீர்த்துவிடலாம்.

நமது செல்வாதாரங்களை ஒன்றுதிரட்டித் திண்மையாக்கிக் கொண்டு சோஷலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பெருவீதத் தொழில் மட்டுமே தக்க அடிப்படையாகும். முதலாளித்துவம் தோற்றுவித்திருப்பதைப் போன்ற பெரிய ஆலைகள் இல்லாமல், உயர்நிலை ஒழுங்கமைப்பு பெற்ற பெருவீதத் தொழில் இல்லாமல் எவ்விடத்திலும் சோஷலிசத்தைக் கட்டியமைத்துவிட முடியாது; விவசாய நாட்டில் இது இன்னுங்கூட அதிக அளவுக்கு முடியாத காரியமாகும். ருஷ்யாவிலிருக்கும் நாம் இது பற்றி இப்பொழுது முன்னிலும் ஸ்தூலமாய் அறிந்து கொண்டிருக்கிறோம். ஆகவே நாம் பெருவீதத் தொழிலை மீட்டமைப்பது குறித்து திட்டவட்டமாய் அமையாத கருத்தியலான முறையில் பேசுவதற்குப் பதில், இப்பொழுது நாம் திட்டவட்டமாய், துல்லியமாய் வரையறுக்கப்பட்ட ஸ்தூலமான மின்னுக்கத் திட்டம் குறித்துப் பேசுகிறோம். சிறந்த ருஷ்ய வித்தகர்களும் விஞ்ஞானிகளும் வகுத்துத் தந்துள்ள துல்லியமான ஒரு திட்டம் நம்மிடம் இருக்கிறது. ருஷ்யாவின் இயற்கை இயல்புகளைக் கணக்கில் எடுத்து, செல்வாதாரங்களைப் பற்றிய திட்டவட்டமான ஒரு சித்திரத்தை இது நமக்கு அளிக்கிறது. இதைக் கொண்டு நமது பொருளாதாரத்துக்கு நாம் பெருவீதத் தொழிலுக்குரிய அடித்தளத்தை அமைக்கமுடியும், அமைக்கவும் வேண்டும், அமைக்கவும் போகிறோம். இதில்லாமல் நமது பொருளாதார வாழ்வுக்கு மெய்யான சோஷலிச அடித்தளம் அமைப்பது சாத்தியமன்று. இதில் சர்ச்சைக்கு இடமே

இல்லை. பண்ட வடிவ வரி சம்பந்தமாய் இதைப் பற்றிக் கருத்தியலான முறையில் பேசினோம், இப்பொழுது திட்ட வட்டமாய் நாம் யாவற்றுக்கும் முதலாய்ப் பெருவீதத் தொழிலைப் புனரமைக்க வேண்டுமென்று கூற வேண்டும். இம்மாதிரியான பேச்சுக்களைச் சில தோழர்களிடமிருந்து நான் நேரில் கேட்டிருக்கிறேன். தோளைக் குலுக்கிக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு நான் பதில் சொல்வதற்கில்லை. இந்த அடிப்படைக் குறிக்கோளை நாம் என்றும் மறுக்க முடியு மென நினைப்பது ஏளன நகைப்புக்குரியதான அபத்தமாகவே இருக்கும். இங்கு ஒரேயொரு கேள்விதான் எழ முடியும், அது என்னவெனில்: தோழர்களுக்கு இத்தகைய சந்தேகங்களும் குழப்பமும் ஏற்படுவது எப்படி? இந்தப் பணி நிறைவேற்றப் படாதவரை சோஷலிசத்துக்கு வேண்டிய பொருளுற்பத்தி அடித்தளம் எழ முடியாது, இப்படிப்பட்ட ஒரு கேந்திரப் பணி பின்னணிக்கு ஒதுக்கித் தள்ளப்பட்டுவிட்டதாய் எப்படி அவர்கள் நினைக்க முடியும்? நமது அரசுக்கும் சிறு வீதத் தொழிலுக்குமுள்ள உறவை இந்தத் தோழர்கள் தவறான முறையில் புரிந்து கொண்டிருக்க வேண்டும். பெருவீதத் தொழிலைப் புனரமைப்பதே நம் முன்னுள்ள பிரதான பணி. ஆனால் இந்தப் பணியை காரிய மனப்பான்மையோடு ஒழுங்கு தவறாமல் அணுக வேண்டுமாயின், நாம் சிறு தொழிலைப் புனரமைத்தாக வேண்டும். இந்த 1921ஆம் ஆண்டிலும் கடந்த ஆண்டிலும் பெருவீதத் தொழிலைப் புனரமைப் பதற்காக நாம் எடுத்த முயற்சிகளில் பெரிய முறிவுகள் ஏற் பட்டுவிட்டன.

1920ஆம் ஆண்டு இலையுதிர் காலத்திலும் குளிர் காலத் திலும் நமது பெருவீதத் தொழிலின் சில முக்கிய கிளைகளை நாம் துவக்கினோம்; ஆனால் மீண்டும் அவற்றை நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று. காரணம் என்ன? பல ஆலைகள் போதிய அளவில் ஆட்களையும் மூலப் பொருள்களையும் பெற முடிந்தது. பிறகு ஏன் இந்த ஆலைகளில் வேலைகள் நிறுத்தப் பட்டன? ஏனென்றால் நம்மிடம் போதிய அளவு உணவும் எரிபொருளும் இருக்கவில்லை. முறையான மாத ஒதுக்கீடுகளை ஆதாரமாய்க் கொண்டு அரசுக் கையிருப்பில் 40,00,00,000 பூடு தானியம் (குத்துமதிப்பான ஒரு புள்ளியாய்க் குறிப்பிடு கிறேன்) இல்லாமல், ஒழுங்கான எவ்வகைப் பொருளாதார

வளர்ச்சி குறித்தோ, பெருவீதத் தொழிலைப் புனரமைப்பது குறித்தோ பேசுவது கடினம். இப்படிக் கையிருப்பு இல்லாமல் பெருவீதத் தொழிலைப் புனரமைக்க வேலை தொடங்கி சில மாதங்களுக்கு வேலை செய்த நாம், திரும்பவும் இதை நிறுத்தி வைக்க வேண்டியதாயிற்று. வேலை தொடங்கி நாம் இயங்க வைத்த சில ஆலைகளில் பெருவாரியானவை இப் பொழுது ஓய்ந்து போய் நிற்கின்றன. முழுதும் உத்தரவாதமாய்ப் போதிய உணவுக் கையிருப்பு இல்லாமல் பெருவீதத் தொழிலின் புனரமைப்புக்கு முறையாய் ஏற்பாடு செய்வதில், மிதமான அளவில் புனரமைக்கப்பட்டாலும் தடைபடாமல் தொடர்ந்து இயங்கும் வண்ணம் இதை ஏற்பாடு செய்வதில், அரசால் முழுக் கவனம் செலுத்த முடியாது.

எரிபொருளைப் பொறுத்த வரை தொனேத்ஸ் பள்ளத்தாக்கு நிலக்கரிச் சுரங்கங்கள் புனரமைக்கப்படும் வரை, மற்றும் ஒழுங்காய் எண்ணெய் கிடைக்கும் வரை, நாம் மரத்தையே, விறகையே தொடர்ந்து நம்பிச் செயல்பட்டாக வேண்டும். ஆகவே திரும்பவும் சிறுவீதப் பொருளுற்பத்தியையே நாம் சார்ந்திருக்க வேண்டியாகிறது.

தற்போது விவசாயியையே யாவற்றுக்கும் நடுநாயகமாய்க் கொள்ள வேண்டுமென்பதை உணரத் தவறும் தோழர்கள் புரியும் பிழையை இது விளக்குகின்றது. விவசாயிகளுக்குச் சலுகை தரப்படுகிறது, நமக்கு ஏதும் இல்லை என்பதாய்ச் சில தொழிலாளர்கள் கூறுகின்றனர். இப்படிப்பட்ட பேச்சை நான் கேட்டிருக்கிறேன், ஆனால் இந்தப் பேச்சு பரவலாய் அடிபடவில்லை என்பதைக் குறிபிட வேண்டும். இந்தப் பேச்சு அபாயகரமானது, ஏனெனில் இது சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் குரலை எதிரொலிக்கும் பேச்சு. வெளிப்படையாகவே இது ஆத்திரமூட்டித் தூண்டிவிட்டுச் சீர்குலைக்கும் அரசியல் பகைச் செயலாகும். தவிரவும் இது தொழிலாளர்களிடையே எஞ்சியிருக்கும் கைவினைஞர் சங்க மனப்பான்மையின், வர்க்க மனப்பான்மையல்ல, கைவினைஞர் சங்க மனப்பான்மையின் தப்பெண்ணங்களைப் பிரதிபலிக்கிறது. அதாவது தொழிலாளி வர்க்கம் தன்னை முதலாளித்துவச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சமத்துவப் பகுதியாய்க் கருதிக் கொண்டு, இன்னமும் தான் பழைய முதலாளித்துவ அடிப்படையிலே நின்று பேசுவதை உணரத் தவறு

வதையே இது குறிக்கிறது. உண்மையில் இந்தத் தொழிலாளர் கள் கூறுவது இதுதான்: விவசாயிக்கு அனுகூலம் செய்யப் படுகிறது, உபரி தானியக் கட்டாயக் கொள்முதலிலிருந்து விவசாயிக்கு விலக்கு அளிக்கப்படுகிறது, உபரி தானியத்தை அளிக்காமல் தன் கையிலே வைத்துக் கொண்டு பரிவர்த்தனை செய்து கொள்ள அனுமதி தரப்படுகிறது; ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களாகிய நாங்களும் இதே சலுகை யைப் பெற வேண்டுமென விரும்புகிறோம்.

இப்படிப்பட்ட கருத்தோட்டத்துக்கு அடிநிலையாய் இருப் பது என்ன? சராம்சத்தில் அந்தப் பழைய குட்டிபூர்ஷுவா சித்தாந்தமேதான்: விவசாயிகள் முதலாளித்துவச் சமுதாயத் தைச் சேர்ந்த ஒரு பகுதியாய் இருப்பார்களாயின், தொழி லாளி வர்க்கமும் இதே சமுதாயத்தைச் சேர்ந்த பகுதியே ஆகும்; ஆகவே விவசாயி வர்த்தகம் புரிந்தால் நாமும் வர்த்தகம் புரிய வேண்டும் என்னும் குட்டிபூர்ஷுவா சித்தாந்தமேதான். தொழிலாளியைப் பழைய உலகுடன் கட்டிப்போடும் அந்தப் பழைய தப்பெண்ணங்கள் புத்துயிர் ஊட்டப்படுவதையே சந்தேகத்துக்கு இடமின்றி இங்கு காண் கிறோம். சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் மென்ஷி விக்குகளும்தான் இந்தப் பழைய முதலாளித்துவ உலகின் ஆர்வமிக்க ஆதரவாளர்கள்; அவர்கள் மட்டுமே இவ்வுலகை மெய்யாகவே மனப் பூர்வமாய் ஆதரிப்பவர்கள். ஏனைய எல்லா முகாம்களிலும் நூற்றுக் கணக்கிலும், ஆயிரக் கணக்கி லும், ஏன் லட்சக் கணக்கிலுங்கூட இருப்போரிடையே இத் தகையோர் யாரையும் நீங்கள் காண்பது அரிது. சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் மென்ஷிவிக்குகளும் பிரதிநிதித் துவம் செய்யும் கலப்பற்ற சுத்த ஜனநாயகவாதிகள் எனப் படுவோர் மத்தியிலேதான் இந்த அபூர்வப் பிறவிகள் காணப் படுகின்றனர். இவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு விடாப் பிடியாய்த் தமது கருத்துக்களை முன்வைத்து வாதாடுகிறார் களோ அவ்வளவுக்கு அவ்வளவு அபாயகரமானதாகிவிடு கிறது, தொழிலாளி வர்க்கத்தில் இவர்களுக்குள்ள செல் வாக்கு. பொருளுற்பத்தி தடைப்பட்டு நிற்கும்படியான காலங்களைத் தொழிலாளி வர்க்கம் கடக்க வேண்டியிருக் கும் போது இவர்களால் உண்டாகும் அபாயம் இரட்டிப்பு மடங்கு அதிகரித்து விடுகிறது. பெருவீதத் தொழில்தான்

பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வை வளரச் செய்வ தற்குரிய பிரதான பொருளாயத அடித்தளம்; தொழிலாளி இங்கு ஆலைகள் இயங்குவதைக் கண்ணுறுகிறார், வர்க்கங்களே மெய்யாகவே ஒழிக்க வல்ல சக்தி செயல்படுவதைத் தினமும் உணருகின்றார்.

இந்தப் பொருளுற்பத்தி அடித்தளத்தில் தொழிலாளர் கள் தமக்குள்ள ஆதார நிலையை இழக்கையில், இவர்களில் சிலர் திடமின்மையாலும் உறுதி குலைவாலும் மனக்கசப் பாலும் சந்தேக மனப்பான்மையாலும் பீடிக்கப்படுகின்றனர். இந்த நிலைமையுடன் நமது முதலாளித்துவ ஜனநாயகவாதி களாகிய சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் மென்ஷி விக்குகளும் புரியும் அப்பட்டமான சதிகாரத் தூண்டுதல் களும் சேர்ந்து கொள்ளும் போது திட்டவட்டமான பாதிப்பு ஏற்படவே செய்கின்றது. இது பலரிடத்தும், கம்யூனிஸ்டுக் கட்சியின் அணிகளிலுங்கூட, பின்வருமாறு நினைக்கச் செய் யும் மனப்பாங்கை உண்டாக்குகிறது: விவசாயிகளுக்கு இணை தரப்படுகிறது, இதே காரணங்களை முன்னிட்டு இதே முறை யில் தொழிலாளர்களுக்கும் இணை தரப்பட வேண்டும். இந்த மனப்பாங்குக்கு நாம் ஓரளவுக்கு அடி பணிய நேர்ந்திருக் கிறது. தொழிலாளர்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் வடிவில் ஒரு பகுதியை போனசாக அளிப் பது பற்றிய அரசாணை, பழங் காலத்திலே வேர் கொண்ட இந்த உள்ளப் பாங்குக்கு, சந்தேக மனப்பான்மையாலும் நம்பிக்கை குலைவாலும் தோற்றுவிக்கப்படும் இந்த உள்ளப் பாங்குக்கு அளிக்கப்பட்டிருக்கும் சலுகையே ஆகும். குறுகிய வரம்புகளுக்குள் இப்படிச் சலுகை அளிப்பது அவசியமா யிருந்தது. இது அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு சலுகை யை அளித்திருக்கிறோம் என்பதை நாம் ஒருபோதும் மறக்க லாகாது. இந்தச் சலுகை அவசியமாகியது பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்தே அன்றி, அதாவது பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை முன்னிட்டே அன்றி, வேறு எந்தக் கண்ணோட்டத்திலும் இருந்தல்ல. பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படையான, ஜீவாதாரமான நலன்கள் திடமான பொரு ளாதார அஸ்திவாரத்தை அடியாதாரமாய்க் கொண்ட பெரு வீதத் தொழிலைப் புனரமைப்பதுடன் இணைந்தவை. இந்தப் பெருவீதத் தொழில் புனரமைக்கப்பட்டதும் பாட்டாளி

வர்க்கம் தனது சர்வாதிகாரத்தை வலுவாக்கிக் கொள்ளும்; எல்லா அரசியல், இராணுவ இடர்ப்பாடுகளையும் மீறி தனது சர்வாதிகாரத்தைத் திடமாய் இறுதி வரை செயல்படுத்திச் செல்லும். அப்படியானால் நாம் ஏன் இந்தச் சலுகையை அளிக்க வேண்டி வந்தது? இந்தச் சலுகைக்கு அதற்குரிய தைக் காட்டிலும் விரிவான அர்த்தம் தருவது ஏன் அளவு கடந்த அபாயம் விளைவிப்பதாகிறது? ஏனென்றால் தற்காலிக உணவு, எரிபொருள் சிரமங்களின் காரணமாய் மட்டுமே, நாம் வேறு வழியின்றி இந்தப் பாதையில் செல்லும்படி நேர்ந்திருக்கிறது.

''விவசாயிகளுடனான நமது உறவுகளுக்கு உபரி தானியக் கொள்முதலை அடிப்படையாய்க் கொள்ளலாகாது, வரியின் அடிப்படையிலே கொள்ள வேண்டும்'' என்று நாம் கூறும் போது, நமது கொள்கையைத் தீர்மானிக்க உதவும் பிரதான பொருளாதாரக் காரணியாய் இருப்பது எது? உபரி தானியக் கொள்முதல் முறையில் சிறு விவசாயிகளது பண்ணைகள் தக்க பொருளாதார அடித்தளம் இல்லாமல் பல ஆண்டு களுக்கு உயிரற்ற நிலையில் இருத்தப்படுகின்றன என்பதே இந்தக் காரணி. சிறிய சாகுபடி நிலைத்திருக்கவும் வளர வும் முடிவதில்லை, ஏனெனில் சிறு விவசாயி தமது பயிர்த் தொழிலை நிலையானதாக்கி வளர்த்துச் செல்வதிலும் விளைச் சலை அதிகமாக்குவதிலும் அக்கறை இல்லாதவராகிவிடுகிறார். இவற்றின் காரணமாய் நாம் பொருளாதார அடித்தளம் இல் லாமல் விடப்படுகிறோம். நமக்கு வேறு அடித்தளம் அல்லது ஆதாரம் இல்லை. அரசானது பெரிய அளவில் உணவுக் கை யிருப்பைச் சேகரித்துக் கொள்ள முடியாத வரை பெருவீதத் தொழிலைப் புனரமைப்பது குறித்து நினைத்துப் பயனில்லை. எனவேதான் உணவுத் துறையில் நமது உறவுகளை மாற்றி யமைத்து வரும் இந்தக் கொள்கையை யாவற்றுக்கும் முதலாய்ச் செயல்படுத்துவதில் முனைந்திருக்கிறோம்.

நாம் இந்தக் கொள்கையைப் பின்பற்றுவது, பெருவீதத் தொழில் துறையின் புனரமைப்புக்கு வேண்டிய உணவுக் கையிருப்பைப் பெறுவதற்காக; வேலைக்கு ஏற்படும் எல்லாத் தடங்கல்களிலிருந்தும் தொழிலாளி வர்க்கத்தை விடுவிப்ப தற்காக. இந்தத் தடங்கல்கள் பெருவீதத் தொழிலில், முன்னேறிய நாடுகளில் இருப்பதுடன் ஒப்பிடுகையில் அவல

நிலையிலுள்ள நமது பெருவீதத் தொழிலிலுங்கூட ஏற்படக் கூடாது. பிழைப்புக்கு வழி தேடிக் கொள்ளும் பொருட்டு குட்டிபூர்ஷுவாக்குரியதான லாபமடிக்கும் முறையில் ஈடுபடும்படி வரும் நிலையிலிருந்து பாட்டாளி வர்க்கத்தவரை விடுவிப்பதற்காக நாம் இக்கொள்கையைப் பின்பற்றுகிறோம். லாபமடிப்பது பாட்டாளி வர்க்கத்துக்குரிய முறையாகாது, இதனால் நமக்கு மிகக் கடுமையான பொருளாதார அபாயங்களே உண்டாகும். தற்போதுள்ள நமது பரிதாபகரமான நிலைமைகளின் காரணமாய் பாட்டாளி வர்க்கத்தவர் பாட்டாளி வர்க்கத்துக்கு உரியதல்லாத முறைகளில், பெருவீதத் தொழிலுடன் சம்பந்தப்படாத முறைகளில் பிழைக்க வேண்டியதாகிறது. லாபமடிக்கும் குட்டிபூர்ஷுவா முறைகளை கையாண்டு அவர்கள் பிழைக்க வேண்டியதாகிறது; திருடியோ அல்லது பொது உடைமையான ஆலையில் தமக்கென உற்பத்திச் செய்தோ பொருள்களைப் பெற்று, அவற்றைப் பரிவர்த்தனை செய்து, விவசாய விளைபொருள்களை வாங்கிக் கொள்ள வேண்டியதாகிறது—சோவியத் அமைப்பு முறைக்கே ஊறு விளைவிக்கும் பிரதான பொருளாதார அபாயமாகும் இது. திடமான அடிநிலையைப் பெற்று ஒரு வர்க்கம் என்ற முறையில் பாதுகாப்பான நிலைக்குரிய உணர்வைப் பெறும்படி பாட்டாளி வர்க்கம் இப்பொழுது தனது சர்வாதிகாரத்தைச் செயல்படுத்திச் சென்றுக வேண்டும். ஆனால் ஆதார அடிநிலை அதன் காலுக்கு அடியிலிருந்து நழுவிச் செல்கிறது. இடையறுது இயங்கும் பெரிய தொழிற்சாலைகளுக்குப் பதிலாய்ப் பாட்டாளி வர்க்கத்தவர் முற்றிலும் மாறுன ஒன்றையே பார்க்கின்றார், ஆகவே அவர் லாபவேட்டையாளராய் அல்லது சிறு உற்பத்தியாளராய்ப் பொருளாதார அரங்கில் நுழைய வேண்டிய நிர்ப்பந்தம் எற்படுகிறது.

இந்நிலைமையிலிருந்து இந்த இடைக்காலத்தில் பாட்டாளி வர்க்கத்தைப் பாதுகாக்க நாம் எந்தத் தியாகம் புரியவும் தயங்கக் கூடாது. பெருவீதத் தொழிலானது மெதுவாகவே ஆயினும் தடங்கலின்றி இடையறுது புனரமைக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு, நாம் பேராசை பிடித்த அந்நிய முதலாளிகளுக்கு ரொட்டித் துண்டங்களைப் போடத் தயங்கலாகாது. ஏனெனில் பாட்டாளி வர்க்கத்தின் பொருளாதார அடித்தளத்தை மீட்டமைத்து, லாப

வேட்டையில் ஈடுபடும் ஒன்றாய் இருப்பதற்குப் பதிலாய் உறுதி வாய்ந்த பாட்டாளி வர்க்கமாகும்படி மாற்றும்படியான பெருவீதத் தொழில் துறையைப் புனரமைப்பதற்கு வேண்டிய இயந்திரங்களையும் பொருள்களையும் பெறும் பொருட்டு அந்நிய முதலாளிகளுக்குக் கூடுதலாகவே சில பத்து கோடிகளை அளிப்பதானது, சோஷலிசத்தைக் கட்டியெழுப்பும் கண்ணோட்டத்திலிருந்து தற்போது நமக்கு அனுகூலமானதாகவே இருக்கும். பாட்டாளி வர்க்கம் வர்க்கச் சீர்கேடுற்று தாழ்ந்துவிட்டதால் நாம் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரப் பணிகளைக் கைவிட்டுவிட வேண்டுமென்று சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும் மென்ஷிவிக்குகளும் காது செவிடுபடும்படிக் கூச்சலிட்டு வருகின்றனர். 1917 முதலாகவே அவர்கள் கூச்சலிட்டு வருகிறார்கள்; ஆச்சரியம் என்னவென்றால் 1921 வரை ஓயாது இப்படிக் கூச்சலிட்டுங்கூட இன்னும் அவர்களுக்கு அலுக்கவில்லை. இந்தத் தாக்குதல்களைக் கேட்கும் போது நாம் வர்க்கச் சீர்கேடு ஏற்பட்டுவிடவில்லை, தடங்கல்கள் உண்டாகிவிடவில்லை என்பதாய் மறுப்புரைக்கவில்லை. பாட்டாளி வர்க்கமானது வர்க்கச் சீர்கேடு அடைந்து தாழ்வுற்று, தடங்கல்களுக்கு ஆளாகும் ஒரு காலக் கூறைக் கடக்க வேண்டி நேர்ந்திருப்பினும்கூட, பாட்டாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரம் ஏற்று, அதைத் தன்னிடமிருந்து நழுவாதபடி இருத்திக் கொள்ள முடியும், ருஷ்ய, சர்வதேசிய எதார்த்த நிலைமைகள் அத்தகையனவாகவே இருக்கின்றன என்றுதான் நாம் கூறுகிறோம்.

பாட்டாளி வர்க்கம் வர்க்கச் சீர்கேடுற்றிருப்பது தடங்கலே என்பதை மறுப்பது அபத்தமாகும். புறப் பகைவனுக்கு எதிரான போராட்டத்தில் அழியாது எஞ்சியிருக்கும் ஒரு சில பெரிய ஆலைகள் தொடர்ந்து இயங்குவதற்கு நாம் உறுதியான முறையில் வகை செய்ய முடியாமற் போவதுதான் நம்மை எதிர்நோக்கும் பிரதான அபாயமும் மிகப் பெருங் கேடுமாகும் என்பதை 1921க்குள்ளாகவே நாம் உணர்ந்து கொண்டுவிட்டோம். இந்தப் பெரிய ஆலைகள் தொடர்ந்து இயங்குவதற்கு வகை செய்வதே பிரதான காரியம். இத்தகைய பொருளாதார அடித்தளம் ஒன்று இல்லாமல் தொழிலாளி வர்க்கத்தால் உறுதியாய் அரசியல் ஆட்சியதிகாரத்தைத் தன் பிடியில் வைத்திருக்க முடியாது. பெருவீதத் தொழில்

இடை முறிவின்றி புத்தமைக்கப்படும்படி உறுதி செய்து கொள்ளும் பொருட்டு, சுமார் 40,00,00,000 பூடு தனியக் கையிருப்பைச் சேகரிக்கவும் ஒழுங்காய் வினியோகிக்கவும் முடியக் கூடிய முறையில் நாம் உணவு வழங்கீட்டுக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். பழைய உபரி தானியக் கொள் முதல் முறையைக் கொண்டு நாம் இந்தத் தானியக் கையிருப்பைச் சேகரிப்பதென்பது முடியாத காரியமாகும். 1920, 1921ஆம் ஆண்டுகள் இதை நிரூபித்துக் காட்டின. மிகவும் கடினமான இந்தப் பணியைப் பண்ட வடிவ வரியின் மூலம் நிறைவேற்ற முடியுமென்பதை இப்பொழுது நாம் காண்கிறோம். பழைய முறைகளைக் கொண்டு இப்பணியைச் செய்து முடிக்க இயலவில்லை, ஆகவே நாம் சில புதிய முறைகளைக் கையாண்டு பார்க்க வேண்டும். பண்ட வடிவ வரியின் மூலம், சிறு உற்பத்தியாளராகிய விவசாயியுடன் ஒழுங்கான உறவுகளை நிறுவிக் கொள்வதன் மூலம், இதைச் செய்ய முடியும். இதைத் தத்துவார்த்த முறையில் நிரூபிப்பதற்கு நாம் கணிச அளவில் முயற்சிகள் எடுத்திருக்கின்றோம்.

பாட்டாளி வர்க்கம் போக்குவரத்து அமைப்பையும் பெரிய ஆலைகளையும் பொருளாதார அடித்தளத்தையும் மற்றும் அரசியல் ஆட்சியதிகாரத்தையும் தன் கையில் வைத்திருக்குமாயின், இந்தப் பணியைச் செய்து முடித்துவிடலாம் என்பது தத்துவார்த்த முறையில் பூரணமாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது; கட்சிப் பத்திரிகைகளில் எழுதப்படுவதையும் கூட்டங்களில் கூறப்படுவதையும் கொண்டு பார்க்கையில் இது தெளிவாகிறது என்று நினைக்கிறேன். சிறு உற்பத்தியாளராய் இருக்கும் விவசாயிக்குக் கணிசமான ஓரளவுக்குச் செயலிடம் அளிக்க வேண்டும். விவசாயியின் பயிர்த்தொழிலைப் புத்துயர் பெற்றெழச் செய்யாமல் நம்மால் உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

இந்தக் கட்டுக்கோப்பிற்கு உட்பட்டுதான் நாம், வர்த்தகச் சுதந்திரம், மற்றும் தங்குதடையற்ற பண்டப் புழக்கம் இவற்றின் அடிப்படையில் சிறு தொழிலை வளரச் செய்யும் பிரச்சினையைப் பரிசீலித்தாக வேண்டும். தங்குதடையற்ற இந்தப் பண்டப் புழக்கமானது தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்குமிடையே பொருளாதார வழியில் நிலையான உறவுகளை நிறுவுவதற்குரிய ஒரு வழியாகும். விவ

சாய விளைபொருள்களைப் பற்றி இப்பொழுது நமக்கு மேலும் மேலும் துல்லியமான புள்ளிவிவரங்கள் கிடைத்து வருகின்றன. தானிய உற்பத்தி பற்றிய பிரசுரம் ஒன்று கட்சிக் காங்கிரசில் வினியோகிக்கப்பட்டது. அச்சுப்படி நிலையிலே இப்பிரசுரம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு வினியோகிக்கப் பட்டது. அதன்பின் இதில் கூடுதல் விவரங்கள் சேர்க்கப்பட்டுப் புழக்கத்தில் விடப்பட்டது. இந்தப் பிரசுரம் அதன் இறுதி வடிவில் இப்பொழுது அச்சாகி வருகிறது, ஆனால் இம்மா நாட்டில் வினியோகிப்பதற்கு அது இன்னும் தயாராகவில்லை. மாநாடு முடிவுற்று, பிரதிநிதிகள் கலைந்து செல்வதற்கு முன்பு அது தயாராகிவிடுமா என்று என்னால் சொல்ல முடியவில்லை. முன்னதாகவே அதை வெளிக் கொண்டுவர இயன்றது அனைத்தும் செய்வோம், ஆனால் அதற்குள் கொண்டுவந்து விடுவோமென நாங்கள் வாக்குறுதி அளிக்கவில்லை.

விவசாய விளைபொருளையும் நம் கைக்குக் கிடைக்கக் கூடிய வளங்களையும் பற்றிய நிலைவரத்தைக் கூடுமான அளவுக்குத் துல்லியமாய் நிர்ணயிப்பதற்காக நாம் எடுத்துள்ள முயற்சிகளில் இது ஒரு சிறு பகுதியாகும்.

நமது பொருளாதாரப் பிரச்சினைக்கு, குறிப்பாய் இவ்வாண்டில் நம்மால் தீர்வு காண முடியும் என்பதற்கான சான்றுகள் இருப்பதாய்ச் சொல்லலாம். இவ்வாண்டில் அறுவடை மோசமாயிருக்காது, அல்லது வசந்தத்தில் நாம் எதிர்பார்த்ததைப் போல் அவ்வளவு மோசமாயிருக்காது. நமது பெருவீதத் தொழிலை மெதுவாகவே என்றாலும் இடையறாது புனரமைத்துச் செல்லும் பணியில் முழு மூச்சுடன் இறங்குவதற்கு வகை செய்ய வல்ல விவசாய விளைபொருள் கையிருப்பைச் சேகரிப்பது சாத்தியமே என்ற உறுதிப்பாட்டை இது நமக்கு அளிக்கிறது.

உணவுக் கையிருப்பைச் சேகரிக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சிறு உடைமையாளராகிய விவசாயியுடனான உறவுகளுக்குத் தக்க வடிவத்தை நாம் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். பண்ட வடிவ வரியை அன்னியில் வேறு வடிவம் எதுவும் இருக்கவில்லை. வேறு வடிவம் எதையும் யாரும் எடுத்துரைக்க முன்வரவில்லை, வேறு எதையும் கற்பனை செய்து பார்க்கவும் முடியாது. ஆனால் இந்தப் பிரச்சினைக்கு நடைமுறை சாத்தியமான முறையில் நாம் தீர்வு

கண்டாக வேண்டும்; அதாவது இந்த வரியைப் பழைய முறையில் அல்லாமல் ஒழுங்கான முறையில் வசூலிக்க நாம் ஏற்பாடு செய்தாக வேண்டும். பழைய முறையில் இரண்டு மூன்று தரம் சென்று விவசாயிகளிடமிருந்து தானியம் கொள்முதல் செய்யப்பட்டது, முன்னெப்போதையும்விட விவசாயிகள் மோசமான நிலையில் விடப்பட்டும் அதிக பிரயாசையுடன் வேலை செய்வோரை மிகவும் கூடுதலான இன்னல்களுக்கு உள்ளாக்கியும் பொருளாதார வழியில் நிலையுறுதியான உறவுகளை நிறுவிக் கொள்வதற்கான சாத்தியப்பாடே இல்லாதபடி நாசமாக்கப்பட்டது. பண்ட வடிவ வரியும் ஒவ்வொரு விவசாயி மீதுமான வரி விதிப்பே என்றாலும், இது வேறொரு வழியில் வசூலிக்கப்பட வேண்டும். பண்ட வடிவ வரி இப்பொழுது தீர்மானகரமான ஒரு மாறுதலை உண்டாக்கும் என்று—சேகரிக்கப்பட்டும் வெளியிடப்பட்டு முள்ள புள்ளிவிவரங்களின் அடிப்படையில்—நாம் கூற முடியும். ஆனால் இது யாவற்றுக்கும் போதியதாய் இருக்குமா என்று இன்னமும் ஓரளவுக்கு முடிவாய்ச் சொல்வதற்கில்லை. இருப்பினும் சந்தேகத்துக்கு இடமின்றி நிச்சயமாய் ஒன்றைச் சொல்ல முடியும்; விவசாயியின் நிலைமையை நாம் உடனடியாய் மேம்படச் செய்ய வேண்டுமென்பதே அது.

பண்ட வடிவ வரியைப் பாக்கியின்றி முழு அளவில் வசூலிக்க வேண்டும், இதைக் கூடுமான அளவுக்குக் குறுகிய காலத்தில் செய்தாக வேண்டும்—வட்டாரத்திலுள்ள ஊழியர்கள் முன்னுள்ள பணியாகும் இது. இவ்வருடம் அறுவடை வழக்கமான காலத்துக்கு மிகவும் முன்னதாகவே முடிவுற்று விடும் போலத் தெரிகிறது. வழக்கமான தேதிகளின் அடிப்படையில் நாம் தயாரிப்புகளைச் செய்வோமாயின் காலங் கடந்து போய்க் காரியம் கேடுறும்படி ஆகலாம். எனவே தான் கட்சி மாநாடு முன்னதாகவே கூட்டப்படுவது முக்கியமானதாகவும் தக்கதாகவும் இருந்தது. முன்னிலும் சீக்கிரமாகவே செயல்பட்டு பண்ட வடிவ வரியை வசூலிப்பதற்கான ஏற்பாட்டைத் தயார் செய்தாக வேண்டும். 24 கோடி பூடு தானியமெனும் குறைந்த பட்ச அரசுக் கையிருப்பைச் சேகரம் செய்வதும், விவசாயியின் நிலையை மேம்படச் செய்வதும் பண்ட வடிவ வரியை எவ்வளவு விரைவாய் வசூலிக்கிறோம் என்பதையே பொறுத்திருக்கின்றன. இந்த வரி

வசூலில் ஏற்படும் தாமதத்தால் விவசாயிக்கு ஓரளவுக்குத் துன்பமே உண்டாகும். மனமுவந்து இந்த வரி தரப்படாத ஒரு நிலைமை ஏற்படும்; நாம் பலவந்த முறையைக் கையாள வேண்டி வரும். ஏனெனில் இந்த வரிவிதிப்பு விவசாயியின் பண்ணைக்குச் சில தடை வரம்புகள் இடுகிறது. வரி வசூல் வேலைகள் விரைவில் முடிவுறுது நீடிக்குமாயின் விவசாயிக்கு அதிருப்தி ஏற்படவே செய்யும்; தமது உபரி விளைபொருளைத் தமது விருப்பம் போல் விற்பதற்குத் தடை போடப்படுவ தாய் விவசாயி கூறுவார். இந்தச் சுதந்திரம் நடைமுறையில் கைகூடுவதாய் இருக்க வேண்டுமாயின் சீக்கிரமாய் இந்த வரியை வசூலித்துக் கொண்டுவிட வேண்டும்; வரி வசூலிப் பவர் நீண்ட காலத்துக்கு விவசாயியை வட்டமிட்டுக் கொண்டிருக்கக் கூடாது. ஆகவே அறுவடைக்கும் இந்த வரி பூரணமாய் வசூலித்து முடிக்கப்படுவதற்கும் இடையி லுள்ள காலம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவான தாக்கப்பட வேண்டும்.

இது ஒரு பணி. மற்றொன்று என்னவெனில், விவசாயியின் வர்த்தகச் சுதந்திரத்தை அதிகபட்ச அளவுக்கு விரிவுபடுத்து வதும், சிறுவீதத் தொழிலைப் புத்துயிர் பெறச் செய்வதும் ஆகும். சிறு தனிவுடைமையையும் சிறு வர்த்தகத்தையும் அடிப்படையாய்க் கொண்டு வளரும் முதலாளித்துவத்துக்கு இது ஓரளவுக்கு இடம் தருவதாகவே இருக்கும். இது பற்றி நாம் அச்சப்பட வேண்டியதில்லை; ஏனென்றால் இது நமக்கு அபாயகரமானதல்ல.

தற்போது ஏற்பட்டிருக்கும் பொதுவான பொருளாதார, அரசியல் சூழ்நிலையையும், பாட்டாளி வர்க்கம் பெருவீதப் பொருளுற்பத்தியின் எல்லா மூல ஊற்றுகளையும் தனது பிடியில் வைத்துக் கொண்டிருப்பதையும், எந்த வகையிலோ வடிவத்திலோ தேசவுடைமையாக்க நீக்கமெனும் பேச்சுக்கு இடமில்லாததையும் மனதிற் கொள்வோமாயின், நாம் அச்சப்படத் தேவையில்லை. யாவற்றுக்கும் முதலாய் உணவுப் பொருள் தட்டுப்பாட்டின் கடுமையாலும் படுமோசமான ஏழ்மையாலும் நாம் துன்புறும் ஒரு நேரத்தில் சிறு வர்த்த கத்துக்குரிய விவசாயத்தின் அடிப்படையில் முதலாளித்து வம் தலைதூக்கிவிடும் அபாயம் ஏற்படுமென அஞ்சுவது நகைக்கத் தக்கதே ஆகும். இப்படி அஞ்சுவது, நமது

பொருளாதாரத்தில் சக்திகளது உறவு நிலையைக் கணக்கில் எடுக்க அறவே தவறுவதையே குறிப்பதாகும். சிறுவீதப் பொருளாதாரமாய் இருந்து வரும் விவசாயியினது பயிர்த் தொழில், ஓரளவுக்குத் தங்குதடையில்லாப் பரிவர்த்தனை யும் அதைத் தொடர்ந்து வரும் முதலாளித்துவ உறவு களும் இல்லாமல் சிறிதும் நிலைத்திருக்க முடியாதென்ப தைப் புரிந்து கொள்ளத் தவறுவதையே இது குறிக் கின்றது.

தோழர்களே, நீங்கள் உறுதியாய் உங்கள் மனதிற் கொள்ள வேண்டியது இதுதான். எல்லா வட்டாரங்களிலும் தோழர்களை உசுப்பி விடுவதும், முன்முயற்சிக்கு உச்ச அளவில் வாய்ப்பளிப்பதும், தற்சார்புணர்ச்சியையும் துணிவை யும் வெளிக்காட்டும்படி அவர்களுக்கு ஊக்கமூட்டுவதும் தான் நமது தலையாய பணி. இத்துறையில் இன்னமும் நாம் மெய்யாகவே விரிவான அளவில் செயல் புரிய அச்சப்படு கிறோம். வட்டாரப் பண்டப் பரிவர்த்தனை, வர்த்தகம் இவை சம்பந்தமாய் இருந்து வரும் நிலைமை என்ன, சிறு தொழிலை மீட்டமைத்து வளர்த்திடுவதில் எந்த அளவுக்கு வெற்றி கிட்டியிருக்கிறது என்பதை நடைமுறை அனுபவத்தின் நோக்கிலிருந்து காட்டும்படியான, அட்டவணையாக்கப்பட்ட திட்டவட்டமான வட்டாரப் புள்ளிவிவரங்கள் நம்மிடம் இல்லை. சிறு தொழிலானது விவசாயியின் கடின நிலைமைகளை உடனடியாய் மட்டுப்படுத்த வல்லது; பெருவீதத் தொழி லுக்கு ஏராளமான உணவையும் எளிபொருளையும் தொழில் மையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு வேண்டியிருக்கும் பெரிய அளவிலான முயற்சிகள் தேவைப்படுகின்றன, ஆனால் சிறு தொழிலுக்கு இவை தேவைப்படவில்லை. பொதுவான பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், இது விஷயத்தில் வட்டாரங்களில் போதுமான அளவில் செய்யப்பட வில்லை. வட்டாரங்களிலிருந்து நமக்குத் தகவல்கள் இல்லை; குடியரசு பூராவிலும் இருக்கும் நிலை என்ன என்பதை அறி யோம்; மெய்யாகவே திறம்பட ஒழுங்கமைக்கப்பட்ட வேலை களுக்கு உதாரணங்கள் எடுத்துரைக்கப்படவில்லை. தொழிற் சங்கக் காங்கிரஸ் குறித்தும் தேசப் பொருளாதாரத் தலைமைக் கவுன்சிலின் காங்கிரஸ் குறித்தும் இவ்வாறேதான் சொல்ல வேண்டியிருக்குமென நினைக்கிறேன்.

இந்தக் காங்கிரசுகளின் பிரதான குறைபாடு என்ன வெனில், ஆய்வுரைகள், பொது வேலைத்திட்டங்கள், வாதங்கள் போன்ற ஓயாது அடிபட்டு நைந்துபோன விவகாரங்களில் தான் பிரதானமாய்க் கவனம் செலுத்துகிறோமே ஒழிய, காங்கிரசுகளில் பங்குகொள்வோர் வட்டார அனுபவத்தைப்பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு அளிப்பதில்லை; ஊருக்குத்திரும்பியதும் ''நாம் கேட்ட ஆயிரம் உதாரணங்களில் ஒன்று சிறந்த உதாரணமாகும், இதை நாம் பின்பற்றுவோம்'' என்று அவர்கள் கூற முடிவதில்லை. உண்மையில், நாம் கூறக்கூடிய சிறந்த உதாரணங்களில் ஆயிரத்தில் ஒன்று மட்டுமின்றி, மிகப் பலவும் உள்ளன. ஆனால் காங்கிரசின் வேலைகள் இவ்வழியில் ஏற்பாடு செய்யப்படுவதைக் காண்பது அரிதிலும் அரிதாய் இருக்கிறது.

நிகழ்ச்சிகளை முந்திக் கொண்டு சென்று காலத்துக்கு முன்னதாகவே பேச நான் விரும்பவில்லை. இருந்தபோதிலும் கூட்டாகத் தொழிலாளர்களுக்குத் தேவைப் பொருள்களை வழங்கும் ஆலோசனைகுறித்து, அதாவது பங்கீட்டு முறைக்குப் பதிலாய், உண்மையில் இயங்கி வரும் ஆலைகளுக்கு அவற்றின் பொருளுற்பத்தி அளவுக்கு ஏற்ப குறிப்பிட்ட அளவு உணவுப் பொருள்களை உத்திரவாதமான அடிப்படையில் வழங்கும் ஆலோசனை குறித்து இரண்டொரு வார்த்தைகள் கூறியாக வேண்டும். இது சிறந்த கருத்துதான், ஆனால் இதற்காக மெய்யான தயாரிப்பு வேலை எதுவும் செய்யாமல், பாதி யளவுக்கு இதைக் கற்பனையாக்கிவிட்டோம். எந்தவொரு உயெஸ்திலும் குறிப்பிட்ட எந்தவொரு ஆலையிலும், சொற்ப எண்ணிக்கையிலான தொழிலாளர்களைக் கொண்ட ஆலையிலும் இந்த முறை பரீட்சித்துப் பார்க்கப்பட்டு, இந்திந்த பலாபலன்கள் கிடைக்கப் பெற்றதாய் இதுகாறும் உதாரணம் எதுவும் இருப்பதாய் நாம் அறியோம். இன்னமும் நமக்குக் கிடைக்கப் பெறுத ஒன்றாகவே இருக்கிறது இது. நமது பணியிலுள்ள குறைபாடுகளில் இதுவும் ஒன்றாகும். பொதுப்பிரச்சினைகளை விவாதிப்பதற்குப் பதில், 1918ல், அதாவது பல ஆண்டுகளுக்கு முற்பட்ட பழங் காலத்தில் செய்தோமே அப்படி விவாதிப்பதற்குப் பதில், இப்பொழுது 1921ல் நாம் நடைமுறைப் பிரச்சினைகளுக்கான தயாரிப்பு களைச் செய்ய வேண்டும். சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப் பட்ட வேலைகளுக்கான உதாரணங்களை—இவை போதிய

அளவில் இருக்கின்றன—காங்கிரசுகளில் ஏனைய யாவற்றுக்கும் முதலாய் அறிவிப்பதால், அரிதான, விதிவிலக்கான சில வட்டாரங்களில் சாதிக்கப்பட்ட மிகச் சிறந்தவற்றைப் பின் பற்றிச் செல்ல முயலுவதை ஏனைய வட்டாரங்களுக்குரிய கடமையாக்கமுடியும். தொழிற்சங்கக் காங்கிரசின் வேலைகளை மனதிற் கொண்டு இதைச் சொல்கிறேன், ஆனால் உணவுப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட எல்லா வேலைகளுக்கும் இது பொருந்தும்.

பண்ட வடிவ வரியை வசூலிப்பதற்காகத் தயார் செய்வதிலும், வர்த்தகத்துக்கு ஏற்பாடு செய்வதிலும், பிறவற்றிலும் சில சந்தர்ப்பங்களில், சிற்சில வட்டாரங்களில் மிகப் பலவும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த அனுபவத்தை நாம் ஆராய்ந்ததாகவில்லை. மிகப் பெருவாரியான வட்டாரங்களை மிகச் சிறந்தவற்றின் உதாரணத்தைப் பின்பற்றுமாறு ஊக்கமளிப்பது இப்பொழுது நம் முன்னுள்ள மிகப் பெரிய பணியாகும். நடைமுறை அனுபவத்தை ஆராய்ந்து அறிந்து, தரத்தில் மோசமாய் இருக்கும், பிற்பட்ட நிலையிலும் நடுத்தர நிலையிலுமுள்ள உயெஸ்துகளையும் வோலொஸ்துகளையும் மிகவும் திருப்திகர நிலையிலுள்ள சொற்ப எண்ணிக்கையிலானவற்றின் நிலைக்கு உயரச் செய்வதே தற்போது நம் முன்னுள்ள பணி. நமது காங்கிரசுகளில் நாம் நமது பிரதான கவனத்தைக் கூட்டங்களது பொது ஆய்வுரைகளையும் வேலைத்திட்டங்களையும் பற்றிய பரிசீலனையிலிருந்து நடைமுறை அனுபவத்தை ஆராய்ந்து அறிவதற்கு மாற்றியாக வேண்டும்; சிறப்புக்கும் உயர்சிறப்புக்குமுரிய வட்டாரங்களது உதாரணங்களை ஆராய்ந்து அறிவதிலும், பெருவாரியாய் இருக்கும் பிற்பட்ட, நடுத்தர வட்டாரங்களை, சொற்பமேயான, ஆனால் மெய்யாகவே இருந்து வரும் மிகச் சிறந்த வட்டாரங்களின் நிலைக்கு உயரச் செய்வதிலும் நாம் கவனம் செலுத்தியாக வேண்டும்.

இவையே நான் கூறக் கூடிய கருத்துரைகள். (கையொலி முழக்கம்.)

ரு. க. கட்சியின் (போ) அனைத்து ருஷ்ய மாநாட்டுச் செய்தியறிக்கை, இதழ்கள் 1, 2ல் 1921 மே 27, 28ல் வெளிவந்தது.

நூல் திரட்டு, தொகுதி 43, பக்கங்கள் 299-316

கூட்டுறவு குறித்து

1

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. தற்போது, அக்டோபர் புரட்சி நடைபெற்றது முதலாய், புதிய பொருளாதாரக் கொள்கையையும் அன்னியில் (இதற்கு மாறுப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் காரணமாய் என்றே இச்சந்தர்ப்பத்தில் நாம் கூற வேண்டும்), நமது கூட்டுறவு இயக்கம் மிகுந்த முக்கியத்துவமுடையதாகி விட்டதை எல்லோரும் புரிந்து கொள்வதாய்ச் சொல்வதற்கில்லை. பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனைப் புனைவுகள் மிகுதியாய் உள்ளன. அடிக்கடி அவை நகைக்கத் தக்க அளவுக்குக் கற்பனைப் புனைவுகளாய் அமைந்துவிடுகின்றன. அவை நம்ப முடியாத கற்பனைகளாய் இருக்கக் காரணம் என்ன? காரணம் என்னவெனில், சுரண்டலாளர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காக நடைபெறும் தொழிலாளி வர்க்க அரசியல் போராட்டத்தின் அடிப்படையான, ஆழ்மட்டத்து முக்கியத்துவத்தை இவர்கள் புரிந்து கொள்வதில்லை. நாம் சுரண்டலாளர்களுடைய ஆதிக்கத்தை வீழ்த்திவிட்டோம், ஆகவே பழைய கூட்டுறவாளர்களுடைய கனவுகளில் கற்பனையாகவும், ஏன் புத்தார்வ மனப்பாங்காகவும், கொச்சையாகவும் கூட இருந்தவை பலவும் இப்பொழுது அப்பட்ட எதார்த்த உண்மையாகி வருகின்றன.

அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு வந்துவிட்டதால், உற்பத்திச் சாதனங்கள் யாவும் இந்த அரசியல் ஆட்சியதிகாரத்துக்குச் சொந்தமாகிவிட்டதால், இனி மக்கள் எல்லோரையும் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரளச் செய்வதுதான் நமக்குள்ள ஒரே பணி என்றுகி

விட்டது. வர்க்கப் போராட்டத்தை நடத்துவதும், அரசியல் ஆட்சியதிகாரத்துக்காகப் போராடுவதும், இன்ன பிறவும் அவசியமென்று பிழையற்ற முறையில் கருதியோர், நியாய மாகவே நகைப்புக்கும் இகழ்ச்சிக்கும் ஏளனத்துக்கும் உரிய தாய்க் கொண்ட அந்த சோஷலிசம், இப்பொழுது மக்கள் தொகையில் மிகப் பெருவாரியானோர் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டப்பட்டதும் தானுகவே தனது குறிக்கோளை நிறைவேற்றிக் கொண்டுவிடும். ஆனல் இப்பொழுது ருஷ்யா வின் மக்கள் எல்லோரையும் கூட்டுறவு சங்கங்களில் ஒன்று திரளச் செய்வது எவ்வளவு பிரம்மாண்ட, எண்ணிலடங்கா மடங்கு முக்கியத்துவமுடையதாகும் என்பதை எல்லாத் தோழர்களும் உணர்வதில்லை. புதிய பொருளாதாரக் கொள் கையை ஏற்றதன் மூலம் நாம், வியாபாரியாய்ச் செயல்படும் விவசாயிக்கு, தனியார் வர்த்தகமெனும் கோட்பாட்டுக்கு ஓரளவு விட்டுக் கொடுத்தோம். இதே காரணத்தால் (சிலர் நினைப்பதற்கு நேர் மாறுய்), கூட்டுறவு இயக்கம் இன்று இந்தப் பிரம்மாண்ட முக்கியத்துவம் பெறுகிறது. புதிய பொருளாதாரக் கொள்கையின்கீழ் நாம் செய்ய வேண்டிய தெல்லாம் போதுமான அளவுக்கு விரிவாய் ருஷ்யாவின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஒன்றுதிரட்டுவதுதான். ஏனெனில் இப்பொழுது நாம் தனியார் நலத்தை, தனியார் வர்த்தக நலத்தை, அந்த நலத்தின் மீதான அரசு மேற்பார் வையுடன், கண்காணிப்புடன் எந்த அளவுக்கு இணைக்க வேண்டுமென்று கண்டு கொண்டு விட்டோம்; அதைப் பொது நலன்களுக்கு எந்த அளவுக்குக் கீழ்ப்படியச் செய்ய வேண்டு மென்று கண்டு கொண்டுவிட்டோம். பல சோஷலிஸ்டுகளுக் கும் முட்டுக்கட்டையாய் இருந்த இதனை நாம் கண்டு கொண்டு விட்டோம். எல்லாப் பெருவீத உற்பத்திச் சாதனங்களும் அரசின் ஆட்சியதிகாரத்தின் கீழ் இருத்தல், அரசியல் ஆட்சி யதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் கையில் இருத்தல், இந்தப் பாட்டாளி வர்க்கம் கோடிக் கணக்கான சிறிய, மிகச்சிறிய விவசாயிகளுடன் கூட்டணி கொண்டிருத்தல், பாட்டாளி வர்க்கம் விவசாயிகளுக்குத் தலைமை தாங்குவது உறுதி பெறுதல் முதலான இவைதானே கூட்டுறவுகளைக் கொண்டு—கூட்டுறவுகளை மட்டுமே கொண்டு—முழுநிறை சோஷலிசச் சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவைப்படு

கிறவை? முன்பு நாம் இந்தக் கூட்டுறவுகளை லாப வேட்டை அடிப்படையாய் இழித்துக் கூறினோம், இப்பொழுதுங்கூட புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் இவற்றை ஒரளவுக்கு இவ்வாறு இழித்துக் கூற நமக்கு உரிமை உண்டு. இந்தக் கூட்டுறவுகளிலிருந்து முழுநிறை சோஷலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதெல்லாம் மேற் கூறியவைதானே? இன்னும் இது சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைப்பது ஆகிவிடாது என்றாலுங்கூட, சோஷலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கத் தேவையானதும் போதுமானதும் இதுதானே.

இதைத்தான் நமது செய்முறை ஊழியர்கள் பலரும் குறைத்து மதிப்பிட்டுவிடுகிறார்கள். நமது கூட்டுறவுச் சங்கங்களை அவர்கள் ஏளனமாய்க் கருதுகிறார்கள். அவற்றின் தனி முக்கியத்துவத்தை—முதலாவதாய், கோட்பாட்டின் கண்ணோட்டத்திலிருந்தும் (உற்பத்திச் சாதனங்கள் அரசுக்குச் சொந்தமயிருக்கின்றன), இரண்டாவதாய், **மிகவும் எளிய, சுலபமான, விவசாயிக்கு மிகவும் ஏற்புடையதான** வழிகளில் புதிய அமைப்புக்கு மாறிச் செல்லும் கண்ணோட்டத்திலிருந்தும் அவற்றுக்குள்ள தனி முக்கியத்துவத்தை—அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

இதுவும் அடிப்படை முக்கியத்துவத்துக்குரியதே. எல்லா வகையான தொழிலாளர் சங்கங்களைக் கொண்டும் சோஷலிசத்தைக் கட்டியமைப்பது குறித்து விபரீதத் திட்டங்களை வகுப்பது ஒன்று; ஆனால் நடைமுறையில் சோஷலிசத்தைக் கட்டுவது, **ஒவ்வொரு** சிறு விவசாயியும் அதில் பங்கெடுத்துக் கொள்ளும்படியான முறையில் சோஷலிசத்தைக் கட்டுவது முற்றிலும் வேறொன்று. இப்பொழுது நாம் வந்தடைந்திருப்பது இதே கட்டத்தைத்தான். இதை வந்தடைந்தபின், நாம் இதைச் சொற்ப அளவுக்கே பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

புதிய பொருளாதாரக் கொள்கையைக் கைக்கொண்ட போது நாம் அளவுமீறிச் சென்றுவிட்டோம்; தடையில்லாத் தனியார் தொழில், தடையில்லா வாணிபம் என்னும் கோட்பாட்டுக்கு மிதமிஞ்சிய இடம் அளித்தோம் என்பதாலல்ல, கூட்டுறவுகளைக் கருதத் தவறிவிட்டோம், கூட்

டுறவுகளைக் குறைத்து மதிப்பிட்டோம்; மேற்கூறிய இரு கண்ணோட்டங்களிலும் கூட்டுறவுகளுக்குள்ள மிகுந்த முக்கியத்துவத்தை ஏற்கனவே மறக்கத் தொடங்கிவிட்டோம் என்பதால் நாம் அளவு மீறிச் சென்றோம்.

இந்தக் ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் அடிப்படையில் நடைமுறையில் என்ன செய்யலாம், என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இப்பொழுது வாசகருடன் விவாதிக்கப் போகிறேன். ''கூட்டுறவுக்'' கோட்பாட்டின் சோஷலிசப் பொருள் எல்லோருக்கும் தெளிவாய்ப் புலப்படும் வண்ணம் உடனடியாய் இக்கோட்பாட்டை நாம் எவ்வழிகளில் வளர்க்க முற்படலாம், முற்படவும் வேண்டும்?

கூட்டுறவானது பொதுவாகவும் எப்பொழுதும் சில தனிச் சலுகைகள் பெற்றிருப்பதோடன்றி, இந்தத் தனிச் சலுகைகள் முற்றிலும் பொருளாயதத் தன்மையனவாகவும் (சலுகைக்குரிய பாங்கி வட்டிவிகிதம் முதலானவை) இருக்கும் படியான அரசியல் வழியில் அது ஒழுங்கமைக்கப்பட வேண்டும். தனியார் தொழில் நிலையங்களுக்கு நாம் அளிக்கும் கடன்களைக் காட்டிலும், கனரகத் தொழிலுக்கும் பிற வற்றுக்கும் அளிப்பதையும் காட்டிலும் அதிகமான, சிறிதள வேனும் அதிகமான, அரசாங்கக் கடன்கள் கூட்டுறவுகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் நிதி ஆதரவு இருந்தால் தான் ஒரு சமுதாய அமைப்பு தோன்ற முடியும். ''தடையில்லா'' முதலாளித்துவம் பிறப்பதற்கு நூறு கோடிக் கணக்கான ரூபிள் தொகை செலவிட வேண்டியிருந்ததைக் குறிப்பிடத் தேவையில்லை. தற்போது நாம் வழக்கத்தைவிட அதிகமாய் உதவி அளிக்க வேண்டிய சமுதாய அமைப்பு கூட்டுறவு அமைப்பே என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். மெய்யாகவே நாம் இந்த உதவியை அளித்தாக வேண்டும். அச்சொல்லின் மெய்ப் பொருளில் அது உதவியாய் இருத்தல் வேண்டும். அதாவது எந்த வகையான கூட்டுறவு வர்த்தகத்துக்கும் அளிக்கப்படும் உதவியாய் அதை அர்த்தப்படுத்தினால் போதாது; உதவி அளிக்க வேண்டும் என்று கூறும் போது, **மெய்யாகவே பெருந் திரள்களான மக்கள் தொகையினர் நடைமுறையில் பங்கெடுத்துக் கொள்ளும்** கூட்டுறவு வர்த்தகத்துக்கு உதவுவதையே அது குறிக்க வேண்டும். கூட்டுறவு

வர்த்தகத்தில் பங்கு கொள்ளும் விவசாயிக்கு போனஸ் தருவது சரியானதோர் உதவி முறைதான், ஆனால் பிரதான விவகாரம் என்னவெனில் விவசாயி எடுத்துக் கொள்ளும் இந்தப் பங்கின் இயல்பையும், அதில் அடங்கியுள்ள உணர்வையும், அதன் தன்மையையும் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். கமுராய்ச் சொல்வதெனில், கூட்டுறவாளர் ஒருவர் கிராமத்துக்குச் சென்று கூட்டுறவுப் பண்டகசாலை திறந்தால், மக்கள் அதில் எந்தப் பங்கும் எடுத்துக் கொள்வதில்லை, ஆயினும் தமது சொந்த நலன்களால் உந்தப்பட்டு அதில் அவர்கள் பங்கெடுத்துக் கொள்ள முன்வரவே செய்வர்.

இந்தப் பிரச்சினைக்கு மற்றோர் அம்சமும் இருக்கிறது. ''அறிவொளி படைத்த'' (பிரதானமாய் எழுத்தறிவு படைத்த) ஐரோப்பியரின் கண்ணோட்டத்தின்படி கூட்டுறவுச் செயற்பாடுகளில் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் தன் முனைப்பில்லாத முறையிலல்ல, முழுமூச்புடன் பங்கெடுத்துக் கொள்ளும்படி தூண்டுவதற்கு நாம் மேலும் செய்ய வேண்டியுள்ளது அதிகமில்லை. கமுராய்க் கூறுகையில் நாம் மேலும் செய்ய வேண்டியிருப்பது **''ஒன்றே ஒன்றுதான்''**. கூட்டுறவுகளில் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்வதன் அனுகூலங்களை நம் மக்கள் புரிந்து கொள்ளும்படியும், இவ்வாறு எல்லோரும் பங்கெடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யும் படியும் அவர்களை ''அறிவொளி பெறச் செய்வதுதான்'' அது. இந்த **''ஒன்றே ஒன்றுதான்''** மேலும் செய்ய வேண்டிய தெல்லாம். சோஷலிசத்துக்கு முன்னேறிச் செல்வதற்குத் தற்போது வேறு வழிமுறைகள் தேவைப்படவில்லை. ஆனால் இந்த ''ஒன்றே ஒன்றைச்'' செய்து முடிப்பதற்கு ஒரு பெரும் புரட்சியே நடந்தேறியாக வேண்டும்—மக்கள் அனைவரும் கலாசார வளர்ச்சி பெறுவதற்குரிய ஒரு கட்டத்தைக் கடந்தாக வேண்டும். ஆகவே, தத்துவார்த்தம் பேசுவதையும் கர்ணமடித்து வித்தை புரிவதையும் கூடுமான அளவுக்குக் குறைத்துக் கொள்வதென நாம் விதி செய்து கொண்டாக வேண்டும். இவ்விதத்தில் புதிய பொருளாதாரக் கொள்கை ஒரு முன்னேற்றமாகும். ஏனெனில் இது சர்வசாதாரண விவசாயியின் நிலைக்கு ஏற்றதாகக் கூடியதாய் இருக்கிறது, இந்த நிலைக்கு உயர்வானது எதையும் அது விவசாயியிடமிருந்து

கோரவில்லை. ஆனால் மக்கள் தொகையினர் அனைவரையும் புதிய பொருளாதாரக் கொள்கையின் வாயிலாய்க் கூட்டுறவுகளில் பங்கு கொள்ளச் செய்வதற்கு ஒரு முழு வரலாற்றுச் சகாப்தமே வேண்டியிருக்கும். இதைச் சாதிக்கக் குறைந்தது பத்து, இருபது ஆண்டுகளாவது ஆகும். ஆயினும் இது ஒரு தனி வரலாற்றுச் சகாப்தமே ஆகும். இந்த வரலாற்றுச் சகாப்தம் இல்லாமல், அனைத்து மக்களும் எழுத்தறிவு பெறுமல், போதிய அளவு விவேகமுடையோராய் இராமல், புத்தகம் படிக்கும் பழக்கம் ஏற்படப் போதிய அளவுக்கு மக்கள் பயிற்சி பெறுமல், இதற்குரிய பொருளாயத அடித்தளம் இல்லாமல், உதாரணமாய் அறுவடை மோசமாகிவிடுதல், பஞ்சம் போன்ற பலவற்றிடமிருந்தும் பாதுகாப்பு பெறுவதற்கு வேண்டிய ஓரளவு நிறைவு நிலை இல்லாமல்—இவையாவும் இன்றி நாம் நமது குறிக்கோளை அடைய முடியாது. செயல்களில் விரிவான புரட்சிகர வீச்சை, நாம் வெளிப்படுத்திக் காட்டி—மிகுதியாய் வெளிப்படுத்திக் காட்டி—முழு அளவில் வெற்றி ஈட்டியுள்ள புரட்சிகர ஆர்வத்தை (விவேகமுள்ள, அறிவு பெற்ற வர்த்தகருக்குரிய திறன் என்பதாய்க் கூற வேண்டும் என்றே தோன்றுகிறது எனக்கு) அந்தத் திறனுடன் இணைக்கத் தெரிந்து கொள்வதுதான் இப்பொழுது தலையாயதாகும். சிறந்த கூட்டுறவாளராவதற்கு விவேகமும் அறிவுமுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் இருந்தால் போதும். வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றல் என்பதன் மூலம் நான் பண்பாடுடைய வர்த்தகராய் இருப்பதற்குரிய ஆற்றலையே குறிப்பிடுகிறேன். வர்த்தகம் புரிகிறோம் என்பதால் தாம் நல்ல வர்த்தகர்களே என்பதாய்க் கற்பனை செய்து கொள்ளும் ருஷ்யர்கள் அல்லது விவசாயிகள் இதைத் தெளிவாய்ப் புரிந்து கொண்டாக வேண்டும். முன்னதிலிருந்து பின்னது பெறப்பட்டுவிடவில்லை. அவர்கள் வர்த்தகம் புரிவது மெய்தான், ஆனால் பண்பாடுடைய வர்த்தகர்களாய் இருப்பதற்கும் அதற்கும் நெடுந்தூரம். இப்பொழுது அவர்கள் ஆசிய முறையில் வர்த்தகம் புரிகின்றனர், ஆனால் நல்ல வர்த்தகராய் இருக்க வேண்டுமாயின் ஐரோப்பிய முறையில் வர்த்தகம் புரிந்தாக வேண்டும். அந்த நிலையிலிருந்து அவர்கள் ஒரு முழுச் சகாப்தம் பின்தங்கியோராய் இருக்கின்றனர்.

முடிவுரையாய்க் கூற வேண்டியது: சோஷலிச அரசு கூட்டுறவுகளுக்குப் பொருளாதார, நிதித் துறை, பாங்கித் துறை சலுகைகள் பலவும் வழங்க வேண்டும்—மக்களை ஒன்று திரட்டுவதற்குரிய புதிய கோட்பாட்டுக்கு ஆதரவளிக்க இதுவே வழி. ஆனால் இது இப்பணியின் பொது உருவரையே தவிர, நடைமுறைப் பணியின் முழு உள்ளடக்கத்தையும் வரையறுத்து விவரமாய் எடுத்துரைக்கவில்லை. அதாவது கூட்டுறவுகளில் சேருவதற்காகத் தர வேண்டிய ''போனசின்'' வடிவம் என்ன (இதை நாம் எந்த நிபந்தனைகளின் பேரில் தருவது), கூட்டுறவுகளுக்கு நாம் போதுமான அளவில் உதவுவதற்கு வேண்டிய போனசின் வடிவம் என்ன, பண்பாடுடைய கூட்டுறவாளரை உருவாக்கக் கூடிய போனசின் வடிவம் என்ன என்பதை நாம் கண்டறிந்து கொண்டாக வேண்டும். உற்பத்திச் சாதனங்களில் சமூக உடைமை இருக்குமாயின், பாட்டாளி வர்க்கமானது முதலாளித்துவ வர்க்கத்தின்மீது வர்க்க வெற்றி பெற்றுவிடுமாயின், பண்பாடுடைய கூட்டுறவாளர்களது அமைப்புதான் சோஷலிச அமைப்பு.

1923, ஜனவரி 4

2

புதிய பொருளாதாரக் கொள்கை குறித்து நான் எழுதிய போதெல்லாம், *1918*ல் அரசு முதலாளித்துவத்தைப் பற்றி நான் எழுதிய கட்டுரையை எப்பொழுதுமே மேற்கோளாய்க் குறிப்பிட்டேன். பன்முறை இது சில இளத் தோழர்களது மனதில் சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது. ஆனால் இவர்களுடைய சந்தேகங்கள் பிரதானமாய்க் கருத்தியலான அரசியல் விவகாரங்களைப் பற்றியவையே.

''அரசு முதலாளித்துவம்'' என்னும் தொடரை உற்பத்திச் சாதனங்கள் தொழிலாளி வர்க்கத்தின்—அரசியல் ஆட்சியதிகாரம் வகிக்கும் தொழிலாளி வர்க்கத்தின்—உடைமையாய் இருக்கும் ஓர் அமைப்பைக் குறிப்பதற்கு உபயோகிக்கக் கூடாதென இவர்கள் நினைத்தனர். ஆனால் ''அரசு முதலாளித்துவம்'' என்னும் தொடரை நான் முதலாவதாக, நமது தற்போதைய நிலையை இடதுசாரி கம்யூனிஸ்டுகள் என்போருடன் நடைபெற்ற எனது வாக்குவாதத்தில் ஏற்கப்பட்ட நிலையுடன் வரலாற்றுவழியில் இணைத்துக் காட்டு

வதற்காக உபயோகித்தேன் என்பதை இவர்கள் கவனிக்க வில்லை. தவிரவும் அப்பொழுது நான் அரசு முதலாளித்துவம் தற்போதுள்ள நமது பொருளாதாரத்தைக் காட்டிலும் மேம்பட்டதாய் இருக்கும் என்று வாதாடினேன். சாதாரண அரசு முதலாளித்துவத்துக்கும், புதிய பொருளாதாரக் கொள்கையை வாசகருக்கு அறிமுகம் செய்கையில் நான் குறிப்பிட்ட அசாதாரணமான—மிகமிக அசாதாரணமான என்றுகூட சொல்ல வேண்டும்—அரசு முதலாளித்துவத் துக்கும் இடையிலுள்ள தொடர்பைக் காட்டுவது எனக்கு முக்கியமானதாய் இருந்தது. **இரண்டாவதாக,** நடைமுறைக் குறிக்கோள் எப்பொழுதுமே எனக்கு முக்கியமானதாய் இருந்தது. சலுகை உரிமைக் குத்தகைகள் தருவதே நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் நடைமுறைக் குறிக் கோள். நடப்பிலுள்ள சூழ்நிலையில் நமது நாட்டில் சலுகை உரிமைகள் சந்தேகத்துக்கு இடமில்லாமல் அரசு முத லாளித்துவத்தின் கலப்பற்ற சுத்தமான ஒரு வடிவமாகவே இருக்கும். அரசு முதலாளித்துவம் குறித்து இப்படித்தான் நான் வாதாடினேன்.

ஆனால் இந்த விவகாரத்தின் மற்றோர் அம்சமும் இருக் கிறது. இதற்கு அரசு முதலாளித்துவம் தேவைப்படலாம்; அல்லது குறைந்தது அதனுடனை ஒப்பிடலாவது தேவைப் படலாம். கூட்டுறவுகள் பற்றிய பிரச்சினையே இந்த அம்சம்.

முதலாளித்துவ அரசில், கூட்டுறவுகள் கூட்டு முதலாளித் துவ நிலையங்களாகும் என்பதில் ஐயமில்லை. நமது தற்போ தைய பொருளாதார நிலைமைகளில், தனியார் முதலாளித் துவத் தொழில் நிலையங்களை—தேசவுடைமையாக்கப்பட்ட நிலத்தில் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல், தொழி லாளி வர்க்க அரசின் கண்காணிப்பின் கீழ் அல்லாது வேறு எவ்வழியிலும் அல்லாமல்—முழுக்க முழுக்க சோஷலிச வகையிலான தொழில் நிலையங்களுடன் (உற்பத்திச் சாதனங் களும் இந்நிலையங்கள் அமைந்திருக்கும் நிலமும் மற்றும் இந்நிலையங்கள் பூராவும் அரசின் உடைமையாய் இருப்பவை) இணைத்திடும் மூன்றாவது வகையிலான நிலையங்களைப் பற்றிய பிரச்சினை, அதாவது கூட்டுறவுகளைப் பற்றிய பிரச்சினை எழுவதிலும் ஐயமில்லை. முன்பெல்லாம் கூட்டுறவுகள் ஏனைய நிலையங்களிலிருந்து அடிப்படையாகவே மாறுபடும் சுயேச்சை

யான ஒரு தனி வகை நிலையங்களாய்க் கருதப்படவில்லை. கூட்டுத் தொழில் நிலையங்கள் எப்படித் தனியார் தொழில் நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றனவோ அதே போல தனியார் முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலையங்கள் முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன. அரசு முதலாளித்துவத்தில் கூட்டுறவு நிலையங்கள் அரசு முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன; ஏனெனில் முதலாவதாக, அவை தனியார் நிலையங்கள், இரண்டாவதாக, அவை கூட்டு நிலையங்கள். நம்முடைய தற்போதைய அமைப்பில் கூட்டுறவு நிலையங்கள் தனியார் முதலாளித்துவ நிலையங்களிலிருந்து மாறுபடுகின்றன, ஏனெனில் அவை கூட்டு நிலையங்கள்; ஆனால் அவை அமைந்துள்ள நிலமும் அவற்றின் உற்பத்திச் சாதனங்களும் அரசுக்கு, அதாவது தொழிலாளி வர்க்கத்துக்குச் சொந்தமாயிருக்குமாயின் அவை சோஷலிச நிலையங்களிலிருந்து மாறுபடுகிறவை அல்ல.

கூட்டுறவுகள் குறித்து விவாதிக்கையில் இந்த நிலைமை போதிய அளவுக்குக் கவனிக்கப்படுவதில்லை. நமது அரசியல் அமைப்பினுடைய தனி இயல்புகளின் காரணமாய் நமது கூட்டுறவுகள் முற்றிலும் தனி வகைப்பட்ட முக்கியத்துவம் பெறுவது மறக்கப்பட்டுவிடுகிறது. சலுகை உரிமைகளை நாம் ஒதுக்கிவிடுவோமாயின்—எவ்விதத்திலும் இவை கணிச அளவில் வளர்ந்துவிடவில்லை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிடலாம்—நமது நிலைமைகளில் கூட்டுறவானது எப்பொழுதும் அனேகமாய் முழு அளவுக்கு சோஷலிசத்துக்கு ஒத்ததாகிவிடுகிறது.

நான் நினைப்பதை விளக்கமாய்க் கூறுகிறேன் கேளுங்கள். ராபர்ட் ஓவன் முதலான பழைய கூட்டுறவாளர்களுடைய திட்டங்கள் விபரீதமான கற்பனைகளாய் இருந்தது ஏன்? ஏனெனில் அவர்கள் வர்க்கப் போராட்டம், தொழிலாளி வர்க்கம் அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுதல், சுரண்டும் வர்க்கத்தினுடைய ஆதிக்கத்தை வீழ்த்தல்போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைக் கருதாமலே அக்காலத்திய சமுதாயத்தை சமாதான வழியில் சோஷலிசமாய்த் திருத்தியமைக்கலாமெனக் கனவு கண்டனர். எனவேதான் நாம் இந்தக் ''கூட்டுறவு'' சோஷலிசத்தை முற்றிலும் கற்பனை மயமானதென்றும், நாட்டின் மக்களைக் கூட்டுறவுச் சங்கங்

களில் ஒன்றுதிரட்டுவதாலேயே வர்க்கப் பகைவர்களை வர்க்க ஒத்துழைப்பாளர்களாகவும், வர்க்கப் போரை வர்க்க அமைதியாகவும் (சமூக அமைதி என்பதாய்க் கூறப்பட்டது) மாற்றிவிடலாம் என்ற கனவை புத்தார்வ மனப்பாங்காகவும் கொச்சையானதாகவும்கூட கருதுவதில் பிழை ஏதுமில்லை.

தற்போதுள்ள அடிப்படைப் பணியின் கண்ணோட்டத்தின் படி இவ்வாறு கருதுவது முற்றிலும் சரியே. ஏனெனில் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதற்கான வர்க்கப் போராட்டம் இல்லாமல் சோஷலிசத்தை நிறுவிவிட முடியாது.

ஆனால் இப்பொழுது அரசியல் ஆட்சியதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கைக்கு மாறியதால், சுரண்டலாளர்களுடைய அரசியல் ஆட்சியதிகாரம் வீழ்த்தப்பட்டதால், உற்பத்திச் சாதனங்கள் யாவும் (தொழிலாளர் அரசு தானே விரும்பி குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் குறிப்பிட்ட காலத்துக்குச் சலுகை உரிமைகளின் வடிவில் சுரண்டலாளர்களிடம் விட்டு வைப்பதைத் தவிர்த்து) தொழிலாளி வர்க்கத்தின் உடைமையாய் இருப்பதால், நிலைமை எப்படி மாறிவிட்டது பாருங்கள்.

நமக்குக் கூட்டுறவின் வளர்ச்சியே முற்றிலும் சோஷலிசத்தின் வளர்ச்சிக்கு ஒப்பானதாகிவிட்டது (மேற்கூறிய ''சிறிய'' விதிவிலக்கைத் தவிர்த்து) என்று இப்பொழுது நாம் முழு உரிமையுடன் கூறலாம். அதே போது சோஷலிசத்தைப் பற்றிய நமது கண்ணோட்டம் அனைத்திலும் ஒரு தீவிர மாற்றம் ஏற்பட்டிருப்பதையும் நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும். முன்பு நாம் அரசியல் போராட்டத்தையும் புரட்சியையும் அரசியல் ஆட்சியதிகாரம் பெறுவதையும் இன்ன பிறவற்றையுமே பிரதானமாய் வலியுறுத்தி வந்தோம், வலியுறுத்தி வரவும் வேண்டியிருந்தது. வலியுறுத்தலானது இப்பொழுது சமாதான வழியிலான ஒழுங்கமைப்பு வகைப்பட்ட ''கலாசாரப்'' பணிக்கு இடம் பெயர்ந்து மாறி வருகிறது. நமது சர்வதேச உறவுகளையும், உலக அளவில் நாம் நமது நிலைக்காகப் போராட வேண்டியிருப்பதையும் கருதத் தேவை இல்லையாயின், வலியுறுத்தல் கலாசாரப் பணிக்கு மாறிச் செல்லுகிறது என்று நான் கூற வேண்டியிருக்கும். ஆனால் இதைக் கருதாது ஒதுக்கிவிட்டு, உள்நாட்டுப் பொருளாதார உறவுகளுடன் நிறுத்திக் கொள்வோமாயின், நமது பணியில்

வலியுறுத்தலானது நிச்சயமாய்க் கலாசாரத் துறைக்கே இடம் பெயர்ந்து மாறிச் செல்கிறது.

இரண்டு பிரதான பணிகள் நம்மை எதிர்நோக்கு கின்றன. இந்தச் சகாப்தமே இவ்விரு பணிகளாலும் ஆனது தான். முதலாவது, நமது அரசின் இயந்திரத்தைத் திருத்தி யமைத்தல். இந்த இயந்திரம் முற்றிலும் உபயோகமற்ற தாகும்; முந்திய சகாப்தத்திலிருந்து முழுமையாய் இவ் வியந்திரத்தை நாம் பெற்றுக்கொண்டோம். போராட்டத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த இயந்திரத்தைத் தீவிர மாய்த் திருத்தியமைக்கவில்லை, திருத்தியமைக்க முடியவும் இல்லை. நமது இரண்டாவது பணி விவசாயிகளிடையே நடை பெற வேண்டிய கலாசாரப் பணி. விவசாயிகளைக் கூட்டுறவுகளில் ஒன்றுதிரளச் செய்வதே, விவசாயிகளிடையே நடைபெற வேண்டிய கலாசாரப் பணியின் பொருளாதார நோக்கம். விவசாயிகள் அனைவரும் கூட்டுறவுகளில் ஒன்று திரட்டப்பட்டிருப்பார்களாயின், இப்பொழுது நாம் சோஷ லிசத்தில் இரு கால்களையும் ஊன்றிக் கெட்டியாய் நின்று கொண்டிருப்போம். ஆனால் விவசாயிகள் அனைவரையும் கூட்டுறவுகளில் ஒன்றுதிரட்டும் முன் விவசாயிகளுடைய (மிகப் பெருவாரியான மக்கள் திரளான விவசாயிகளுடைய) கலாசார நிலையை உயர்த்தியாக வேண்டும். கலாசாரப் புரட்சி இல்லாமல் உண்மையில் இப்பணியை நிறைவேற்ற முடியாது.

போதிய அளவு கலாசார வளர்ச்சி பெறுத ஒரு நாட்டில் நாம் சோஷலிசத்தை நாட்ட முற்பட்டது குருட்டுத் துணிச்சலான காரியமாகுமென நமது எதிராளிகள் திரும்பத் திரும்பக் கூறினர். தத்துவத்தால்(எல்லா வகையான பகட்டுப் புலமையாளர்களது தத்துவத்தால்) விதிக்கப்பட்டதற்கு எதிர் முனையிலிருந்து நாம் தொடங்கியதால், அவர்களுக்கு இந்தத் தவறான எண்ணம் ஏற்பட்டது. ஏனெனில் நமது நாட்டில் அரசியல், சமுதாயப் புரட்சி கலாசாரப் புரட்சிக்கு முன்னதாகவே நடைபெற்றது. இப்பொழுது நம்மை இதே கலாசாரப் புரட்சி எதிர்நோக்குகிறது.

இந்தக் கலாசாரப் புரட்சி இப்பொழுது நம் நாட்டை முழுநிறை சோஷலிச நாடாக்குவதற்குப் போதுமானதாகும். ஆனால் இப்புரட்சி முற்றிலும் கலாசாரத் தன்மையதான

இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் நாம் எழுத்தறியாதோராய் இருக்கிறோம்), முற்றிலும் பொருளாயதத் தன்மையதான இடர்ப்பாடுகளையும் (ஏனெனில் கலாசார வளர்ச்சி பெறுவதற்கு நாம் பொருளாயத உற்பத்திச் சாதனங்களில் குறிப்பிட்ட ஓர் அளவு வளர்ச்சி அடைந்தாக வேண்டும், குறிப்பிட்ட ஒரு பொருளாயத அடித்தளத்தைப் பெற்றுக வேண்டும்) மிகப் பெரிய அளவில் உண்டாக்குகிறது.

1923, ஜனவரி 6

பிராவ்தா, இதழ்கள் *115-116*ல், *1923*, மே *26-27*ல், முதன்முதலாய் வெளிவந்தது

நூல் திரட்டு, தொகுதி *45*, பக்கங்கள் *369-77*

பதிப்பாளர் குறிப்புகள்

[1] அரசாங்க டூமா—1905ஆம் ஆண்டின் புரட்சிகர நிகழ்ச்சிகளின் காரணமாய் ஜாரிஸ்டு அரசாங்கம் கூட்ட வேண்டியதாகிய பிரதிநிதித்துவச் சபை பெயரளவில் சட்ட மன்றமாயிருந்த அரசாங்க டூமா மெய்யான அதிகாரம் எதுவும் இல்லாததாகவே இருந்து வந்தது. அரசாங்க டூமாவுக்கான தேர்தல்கள் நேரடியானவையாகவோ, சமத்துவ வாக்குரிமையுடையதாகவோ, குடி மக்கள் அனைவருக்குமானதாகவோ இருக்கவில்லை. உழைப்பாளி மக்களுக்கும் ருஷ்யாவிலிருந்த ருஷ்யரல்லாத பிற இனத்தோருக்கும் வாக்குரிமை வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தது. ஏராளமான தொழிலாளர்களும் விவசாயிகளும் வாக்குரிமையற்றோராகவே இருந்தனர்.

பக்கம் 5

[2] காடேட்டுகள் — அரசியல் சட்ட-ஜனநாயகக் கட்சியின் (கான்ஸ்டிடூஷனல்-டெமாக்கிராட்டிக் பார்ட்டி) உறுப்பினர்கள். ருஷ்யாவின் மிதவாத-முடியாட்சிவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் தலைமையான கட்சியாக இருந்தது. இது 1905 அக்டோபரில் துவக்கப்பட்டதாகும். பக்கம் 5

[3] துருதொவிக்குகள்—அரசாங்க டூமாவின் உருப்பினர்களாகிய குட்டிபூர்ஷுவா ஜனநாயகவாதிகள். முதலாவது டூமாவின் உறுப்பினர்களாகிய விவசாயிப் பிரதிநிதிகளும் அறிவுத்துறையாளர் பிரதிநிதிகளும் 1906 ஏப்ரலில் துருதொவிக் குழுவை நிறுவிக் கொண்டனர். பக்கம் 5

[4] ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் நான்காவது (ஒற்றுமை) காங்கிரஸ் 1906 ஏப்ரல் 10-25ல் (ஏப்ரல் 23—மே 8ல்) ஸ்டாக்ஹோமில் நடைபெற்றது. பக்கம் 5

[5] சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர் — ருஷ்யாவில் 1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் பல்வேறு நரோத்னிக்

கோஷ்டிகளையும் இணைத்து நிறுவப்பட்ட குட்டி பூர்ஷுவாக் கட்சியின் உறுப்பினர்கள்.

நரோதிசம் — ருஷ்யாவில் குட்டிபூர்ஷுவா விவசாயி ஜனநாயகத்தின் சித்தாந்தம். நரோத்னிக்குகளின் விசேஷ இயல்புகள் என்னவெனில், அவர்கள் சிறு விவசாயிகளாலான பொருளாதாரம் முதலாளித்துவப் பொருளாதாரத்திலிருந்து அடியோடு மாறுபாடான ஒன்றுகுமென நிரூபிக்க விரும்பினர்; விவசாயிகளிடையே பொருளாதார, வர்க்கப் பாகுபாடு இருப்பதை மறுத்தார்கள்; நிலத்துறையிலான உறவுகளை மாற்றியமைப்பதின் அடிப்படையிலான கற்பனாவாத சோஷலிசத்தை ஆதரித்தார்கள்.

பக்கம் 5

6 இங்கு குறிக்கப்படும் நிலச் சட்டத் திட்டம் நிலத்தில் தனியார் சொத்துடைமையின் ஒழிப்பையும், நிலத்தை உபயோகிப்பதில் எல்லோருக்கும் சமத்துவ உரிமையையும், கிராமச் சமுதாய நிலவுடைமைக் கோட்பாட்டையும்—அதாவது உபயோகிப்பாளரின் தர அளவைக்கும் உழைப்புத் தர அளவைக்கும் ஏற்ப அவ்வப்பொழுது நிலம் மறு பங்கீடு செய்யப்படுவதையும்—ஆதரித்தது.

பக்கம் 7

7 **குடித்துறை நடுவர்கள்** — ருஷ்யாவில் பண்ணையடிமை முறையின் ஒழிப்புக்கான 1861ஆம் ஆண்டு விவசாயிச் சீர்திருத்தம் செயல்படுத்தப்பட்ட போது தோற்றுவிக்கப்பட்ட நிர்வாக அதிகாரிகள். அந்தந்த வட்டாரத்தையும் சேர்ந்த பிரபுக் குலக் கோமான்களிடையிலிருந்து ஜாரிஸ்டு அரசாங்கத்தால் இவர்கள் நியமிக்கப்பட்டனர். சீர்திருத்த ''ஒழுங்கு விதிகளைச்'' செயல்படுத்துகையில் நிலப்பிரபுக்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் எழுந்த தகராறுகளைப் பரிசீலித்துத் தீர்த்து வைப்பதற்கான அதிகாரம் இவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. குடித்துறை நடுவர்கள் முற்றிலும் பிரபுக்குலத்தோரையே பிரதிநிதித்துவப்படுத்தினர், அநியாயமான ''விவசாயிச் சீர்திருத்தத்தை'' நிலப்பிரபுக்களுக்குச் சாதகமான முறையில் செயல்படுத்துவதற்கு இவர்கள் ஜாரிஸ்டு அரசாங்கத்துக்கு உதவி புரிந்தனர்.

பக்கம் 12

8 பண்ணையடிமை முறையை நீக்குவதற்காக 1861 பிப்ரவரி 19ல் ருஷ்யாவில் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதன்படி பண்ணையடிமை விவசாயிகள் ''ஆளுடைமைச் சுதந்திரம்'' பெற்றதும், இதன்முன் தாம் சாகுபடி செய்து வந்த நிலங்களை சந்தை விலைகளுக்கும் கணிசமான அளவு கூடுதலான விலைகளுக்கு வாங்கிக் கொள்ள

வேண்டியிருந்தது. அதோடு விவசாயிகளுடைய துண்டு நிலங்களிலிருந்து புல்வெளிகளும் காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் நீர்நிலைகளும் அடங்கலாய்ச் சிறந்த பகுதிகள் துண்டித்து எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டன.

பக்கம் 12

9 **ஸ்தலீப்பினது நிலத்துறைக் கொள்கை அல்லது சீர்திருத்தம்** *(1906-1911)*—உள்நாட்டு அமைச்சரும் அமைச்சரவைத் தலைவருமான ஸ்தலீப்பினது பெயரால் அழைக்கப்படும் இக்கொள்கை, விவசாயிகளிடையே வசதி படைத்தோரைப் பொருளாதார வழியிலும் அரசியல் வழியிலும் மேலும் உறுதி பெறச் செய்வதையும், இவ்விதம் விவசாயிகளிடையே வர்க்க முறையில் பிளவு உண்டாக்கி, நிலப்பிரபுக்களுக்கு எதிரான புரட்சிப் போராட்டத்திலிருந்து அவர்களைத் திசை திருப்பிவிடுவதையும் நோக்கமாய்க் கொண்டிருந்தது. விவசாயி கிராமச் சமுதாயத்திலிருந்து பிரிந்து செல்ல அனுமதிக்கப்பட்டதும், இப்படிப் பிரிந்து செல்வோருக்குத் தனியார் சொத்தாகத் துண்டு நிலம் ஒதுக்கப்பட்டதும், அவருக்குத் தமது தனித்தனி துண்டு நிலங்கள் ஒரே நிலப் பகுதியாய் இணைத்துத் தரப்பட வேண்டுமென்று கோர உரிமை அளிக்கப்பட்டதும்தான் இந்தச் சீர்திருத்தத்தின் பிரதான அம்சமாகும். இந்தச் சீர்திருத்தம் எதிர்பார்க்கப்பட்ட பலனை அளிக்கவில்லை, அதற்குப் பதில் விவசாய வெகுஜனங்களைப் போண்டியாக்கும் நிகழ்ச்சிப் போக்கைத் துரிதப்படுத்தி விவசாய நெருக்கடியை மேலும் தீவிரமடையச் செய்தது.

பக்கம் 19

10 **உழைப்பு வாரம்**—விவசாயிக்குத் தரப்படும் கடனுக்காகவோ, சாகுபடி அல்லது மேய்ச்சல் நிலத்துக்காகவோ, சேதத்துக்கான அபராதமாகவோ, வேறு எதற்காகவோ பிரதியாக விவசாயி தமது உழுபடைக் கருவிகளைக் கொண்டு நிலப்பிரபுவின் நிலங்களில் வேலை செய்தல்.

பக்கம் 20

11 **குளிர் காலத்தில் செய்து கொள்ளப்படும் வேலை ஒப்பந்தம்**—குளிர் காலத்தில் விவசாயிகளுக்குப் பண முடை மிகவும் கடுமையாய் இருக்கையில் நிலப்பிரபுக்களும் குலாக்குகளும் அவர்களை அநியாயமான பேரங்களை ஏற்று கோடை காலத்தில் வேலை செய்வதாய் ஒத்துக் கொள்ளச் செய்துக் கடன் கொடுத்து ஒப்பந்தம் செய்து கொள்ளுதல்.

பக்கம் 20

[12] **திட்டுநில உழைப்புச் சேவை**—சீர்திருத்தத்துக்கு முற்பட்ட ருஷ்யாவில் விவசாயிகள் நிலப்பிரபுக்களுக்காக வேலை செய்வதற்கும், கடும் நிபந்தனைகளின் பேரில் நிலப்பிரபுக்களுடைய நிலத்தை வாரச் சாகுபடிக்காகப் பெறுவதற்குமான ஒரு ஏற்பாடு. இதன்படி விவசாயிகள் பணத்துக்காகவோ, குளிர் காலத்தில் தரப்படும் கடனுக்காகவோ, வாரச் சாகுபடிக்காகத் தரப்படும் நிலத்துக்காகவோ பிரதியாகத் தமது உழுபடைக் கருவிகளையும் குதிரைகளையும் கொண்டு நிலப்பிரபுவின் வசந்த பருவப் பயிர் நிலத்தில் ஒரு தெஸ்ஸியத்தீனுவையும் (சுமார் 1.1 ஹெக்டார்) குளிர் காலப் பயிர் நிலத்தில் ஒரு தெஸ்ஸியத்தீனுவையும், சில சமயம் மேய்ச்சல் நிலத்திலும் ஒரு தெஸ்ஸியத்தீனுவையும் உழுது தர வேண்டியிருந்தது. பக்கம் 20

[13] **புரிஷ்கேவிச் வி. எம்.** (1870-1920)—பெரிய ருஷ்ய நிலப்பிரபு, முடியரசுவாதி, கறுப்பு நூற்றுவரின் ருஷ்ய மக்கள் சங்கம் என்னும் நிறுவனத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர், எதிர்ப்புரட்சி முடியரசுவாத நிறுவனமாகிய ஆர்கேங்கல் மிஹயீல் சபையின் மூலவர், 2ஆவது, 3ஆவது, 4ஆவது டூமாக்களில் உறுப்பினர். பக்கம் 39

[14] 1871 ஏப்ரல் 12ல் லு. குகல்மனுக்குக் கார்ல் மார்க்ஸ் எழுதிய கடிதத்திலிருந்து தரப்படும் மேற்கோள். மார்க்ஸ் இந்தக் கடிதத்தில் பாரிஸ் கம்யூனைப் பற்றிய மதிப்பீட்டை அளிக்கிறார். பக்கம் 40

[15] கார்ல் மார்க்சின் **தத்துவத்தின் வறுமை** என்னும் நூலின் முதலாவது ஜெர்மன் பதிப்புக்கு எங்கெல்ஸ் எழுதிய முன்னுரையிலிருந்து மேற்கோள். பக்கம் 42

[16] **அரச குடும்ப நிலங்கள்** — அரசுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து முதலாம் பாவெலின் ஆணைப்படி 1797ல் ஜார் மன்னர் குடும்பத்தின் உறுப்பினர்களுடைய சொந்த உடைமைகளாய் மாற்றப்பட்ட நிலங்கள். இந்நிலங்களில் வேலை செய்த விவசாயிகளும் இந்நிலங்களுடன்கூட மாற்றப்பட்டனர். அரச குடும்ப நிலங்களைச் சேர்ந்த விவசாயிகளைச் சுரண்டிப் பெறப்பட்ட வருமானம் அரச குடும்பத்தாரின் சொந்த செலவுகளுக்காக உபயோகிக்கப் பட்டது. இந்தத் தொகைகள் அரசின் பட்ஜெட்டில் சேர்க்கப்படவில்லை, இவை அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டவை அல்ல. பக்கம் 46

17 விவசாயிப் பிரதிநிதிகளது அனைத்து ருஷ்யக் காங்கிரசின் இஸ்வேஸ்தியா—1917 மே 9லிருந்து (22) டிசம்பர் வரை பெத்ரொகிராதில் வெளிவந்த நாளேடு. இது சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் வலதுசாரியினரது ஏடாகும். பக்கம் 50

18 1906 நவம்பர் 9 (22) அரசாணையானது விவசாயிகள் தமக்கு ஒதுக்கப்பட்ட துண்டு நிலங்களைத் தமது தனிச் சொத்தாய்த் தாமே எடுத்துக் கொண்டு கிராமச் சமுதாயத்திலிருந்து பிரிந்து தனியே சென்று சொந்தத்தில் சாகுபடி செய்து கொள்ள உரிமை அளித்தது. ஒதுக்கப்பட்ட நிலங்களை விற்பதற்குரிய உரிமையை அவர்களுக்கு வழங்கிற்று. கிராமப்புறங்களில் முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்றுவிப்பதே ஜாரிஸ்டு நிலச் சீர்திருத்தத்தின் நோக்கமாய் இருந்தது. கிராமப்புறத்து ஏழைகளை இது அறவே ஓட்டாண்டிகளாகிற்று. பக்கம் 53

19 ஸ்துரூவேயிசம்—மார்க்சியத்தை மிதவாத முதலாளித்துவ முறையில் திரித்துப் புரட்டும் ஒரு போக்கு. இது ருஷ்யாவில் சட்டபூர்வ மார்க்சியத்தின் பிரதான பிரதிநிதியாகிய பி. பி. ஸ்துரூவேயின் பெயரைப் பெறலாயிற்று. சட்டபூர்வ மார்க்சியமானது 1890ஆம் ஆண்டுகளில் ஒரு சமூக-அரசியல் போக்காய் உருவாயிற்று. ஸ்துரூவேயைத் தலைவராய்க் கொண்ட சட்டபூர்வ மார்க்சியவாதிகள் மார்க்சியத்தை முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ள விரும்பினர்கள். ஸ்துரூவேயிசமானது மார்க்சியத்திடமிருந்து மிதவாத முதலாளித்துவ வர்க்கத்துக்கு ஏற்புடையவை யாவற்றையும் எடுத்துக் கொண்டு, மார்க்சியத்தின் மிக முக்கிய கூறுகளாகிய அதன் புரட்சிகர உள்ளடக்கத்தை, பாட்டாளி வர்க்கப் புரட்சியையும் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தையும் முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத தகர்வையும் பற்றிய தத்துவத்தை ஒதுக்கித் தள்ளிவிடுகிறது என்று லெனின் குறிப்பிட்டார். ஸ்துரூவே முதலாளித்துவ அமைப்பை மெச்சிப் புகழ்ந்தார், ''முதலாளித்துவத்திடமிருந்து கற்றறிந்து கொள்ள வேண்டும்'' என்றார். சட்டபூர்வ மார்க்சியத்தை லெனின் கடுமையாய்க் கண்டன விமர்சனம் செய்தார், ''முதலாளித்துவ எழுத்துக்களிலான மார்க்சிய பிம்பம்'' என்பதாய் அதைக் குறிப்பிட்டார். சட்டபூர்வ மார்க்சியவாதிகள் மிதவாத முதலாளித்துவ வர்க்கத்தின் சித்தாந்தவாதிகளாவர் என்பதை லெனின் அம்பலப்படுத்தினர். ருஷ்யாவில் சட்டபூர்வ மார்க்சியவாதிகளை எதிர்த்து லெனின் நடத்திய

உறுதியான போராட்டம் சர்வதேசத் திருத்தல்வாதத்துக்கு எதிரான போராட்டமாகவும் அமைந்தது.

பக்கம் 56

[20] **திசெரெத்தேலி ஐ. ஜி.** *(1882-1959)* — மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப்பின் பெத்ரொகிராது சோவியத்தின் செயற் குழு உறுப்பினரும், சோவியத்துகளின் (முதலில் கூட்டப்பட்டவை) செயற் குழு உறுப்பினரும் ஆனார். 1917 மே மாதத்தில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சரானார்.

ஸ்கோபெலெவ், எம். ஐ. *(1885-1939)*—1924 வரை மென்ஷிவிக்காய் இருந்தார், 1917 மே—ஆகஸ்டு மாதங்களுக்கு இடையில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் தொழிலாளர் துறை அமைச்சராய் இருந்தார்.

செர்னேவ், வி. எம். *(1876-1952)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவரும் தத்துவவாதியும் ஆவார். 1917 மே—ஆகஸ்டு மாதங்களுக்கு இடையில் விவசாய அமைச்சர். நிலப்பிரபுக்களின் பண்ணைகளைக் பற்றிக் கொண்ட விவசாயிகளுக்கு எதிரான கொடிய அடக்குமுறை கட்டவிழ்த்துவிடப்படுவதற்கு உத்தரவிட்டவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிற்பாடு எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்.

அவ்க்சேன்தியெவ், என். டி. *(1878-1943)*—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். கேரென்ஸ்கியின் தலைமையில் அமைந்த இரண்டாவது கூட்டு அமைச்சரவையில் உள்நாட்டு அமைச்சராகவும், பிறகு எதிர்ப்புரட்சி குடியரசின் இடைக்காலக் கவுன்சிலின் தலைவராகவும் இருந்தார். அக்டோபர் புரட்சிக்குப் பிற்பாடு எதிர்ப்புரட்சிக் கலகங்களுக்குத் தூபமிட்டவர்களில் ஒருவர்.

பக்கம் 56

[21] இங்கு குறிக்கப்படுகிறவை வெகுஜனங்களைப் புரட்சிப் போராட்டத்திலிருந்து திசை திருப்பிவிடுவதற்காக அயர்லாந்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டு வந்த நிலச் சீர்திருத்தங்கள். 1881ஆம் ஆண்டின் நிலச் சட்டம் ''நியாய'' வாரத்தின் அளவை நிர்ணயிப்பதில் நீதி விசாரணை அதிகாரிகள் பங்கு கொள்வதற்கு ஏற்பாடு செய்தது. குத்தகைச் சாகுபடியாளர் தாம் சாகுபடி செய்யும் நிலத்தை வேறொருவரிடம் கொடுப்பதற்கு இச்சட்டம் அனுமதியளித்தது. இச்சட்டம் நிலப் பிரபுக்களுடைய

நலன்களைப் பாதுகாத்தது. நிலப்பிரபுக்கள் தமது நிலத்தை மிகவும் சாதகமான அடிப்படையில் அரசுக்கு விற்பதற்கு உரிமை பெற்றனர்; விலை பொருள்களுடைய விலைகள் சரிந்து சென்ற ஒரு காலத்தில் 15 ஆண்டுகளுக்கு வாரம் மாற்றமின்றி நிலையானதாக்கப்பட்டதன் மூலம் நிலப் பிரபுக்கள் லாபமடைந்தனர். பக்கம் 71

22 **டான் (குர்விச், எப். ஐ.)** *(1871-1947)* — மென்ஷிவிக் தலைவர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெத்ரொகிராது சோவியத்தின் செயற் குழு உறுப்பினராகவும் சோவியத்துகளின் (முதலில் கூட்டப்பட்டவை) மத்தியச் செயற் குழுவின் தலைமைக் குழு உறுப்பினராகவும் இருந்தார். முதலாளித்துவ இடைக் கால அரசாங்கத்தை ஆதரித்து வந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடினார், 1922ல் சோவியத் அரசின் பகை யாய் நாடு கடத்தப்பட்டார். பக்கம் 74

23 **ஆலை நிலங்கள்**—தொழில் நிலையங்களின் சொந்தக்காரர் களுக்கு அரசு அளித்த நிலங்கள். ஆலைகளில் விவசாயிகள் செய்யும் வேலைகளுக்குரிய ஒரே ஊதியமாய் அவர்களுக்கு ஒதுக்குவதற்காக இந்நிலங்கள் அளிக்கப்பட்டன. பக்கம் 76

24 மக்கள் கமிசாரவைக்கு விண்ணப்பித்த பல விவசாயித் தூதுக் குழுக்களுக்கும் பதிலளிக்கும் முறையில் லெனின் இந்தக் கட்டுரையை எழுதினார். குறிப்பிட்ட ஒரு தூதுக் குழுவின் குபோர்னியாவுக்கென லெனின் எழுதிய ''பதிலின்'' தட்டெழுத்துப் பிரதி லெனின் கையொப்பத் துடன் விவசாயிப் பிரதிநிதிகளுக்குத் தரப்பட்டது. இந்தப் ''பதில்''செய்தியேடுகளிலும் வெளியிடப்பட்டது, துண்டுப் பிரசுரமாகவும் வெளியாயிற்று. இது நிலப்பிரபுக்களுடைய பண்ணைகளைப் புரட்சிகர முறையில் ஒழிப்பதற்கு உதவிய முக்கிய பத்திரமாய் இருந்தது. பக்கம் 83

25 செக்கோஸ்லோவாக் படைகளின் எதிர்ப்புரட்சிக் கலக மானது மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரது நேரடிப் பங்குடன் அமெரிக்க ஐக்கிய நாடு, பிரட்டன், பிரான்சு இவற்றின் ஏகாதிபத்தியவாதிகளால் ஏற்பாடு செய்யப்பட்டது. செக்கோஸ்லோவாக் படைத் தொகுதி அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன்பு ருஷ் யாவில் செக், ஸ்லோவாக் போர்க் கைதிகளைக் கொண்டு நிறுவப்பட்டதாகும். அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றியடைந்ததும் செக்கோஸ்லோவாக் படைத் தொகு தியை சோவியத் குடியரசுக்கு எதிராய்ப் பயன்படுத்திக்

கொள்ளத் திட்டமிட்டு ஆன்டான்ட் அரசுகள் அதற்குப் பணம் உதவ முற்பட்டன. இந்தக் கலகம் 1918 மே இறுதியில் ஆரம்பித்தது. வெள்ளைப் படையினர், குலாக்குகள் இவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு செயல்பட்ட செக்கோஸ்லோவாக் படைத் தொகுதி ஊராலிலும் வோல்காப் பிரதேசத்திலும் சைபீரியாவிலும் ஒரு பெரும் பரப்பைக் கைப்பற்றி இங்கு முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியை மீண்டும் நாட்டிற்று. ஆனால் பெருவாரியான செக், ஸ்லோவாக் போர்க் கைதிகள் சோவியத் அரசாங்கத்தின்பால் அனுதாபம் கொண்டிருந்ததால் அவர்களது பிற்போக்குவாத மேலாளர்களின் சோவியத்-எதிர்ப்புப் பிரசாரத்துக்குச் செவி சாய்க்க மறுத்துவிட்டனர். தாம் ஏமாற்றப்படுவதை உணர்ந்து கொண்ட சாதாரண படையாட்கள் பலரும் சோவியத் ருஷ்யாவை எதிர்த்துப் போராட மறுத்து இப்படைத் தொகுதியை விட்டுத் துறந்து ஓடினர். ஏறத்தாழ 12,000 செக், ஸ்லோவாக் படையாட்கள் செஞ்சேனையில் சேர்ந்து கொண்டுவிட்டனர். கொல்ச்சாக்கின் வெள்ளைப் படைகள் முறியடிக்கப்பட்டதும் 1919 இறுதியில் செக்கோஸ்லோவாக் படைத் தொகுதியின் கலகம் அடக்கப்பட்டது. பக்கம் 89

[26] **ஏழை விவசாயிகள் கமிட்டிகள்** அனைத்து ருஷ்ய மத்தியச் செயற் குழுவின் 1918 ஜூன் 11 அரசாணையின்படி துவக்கப்பட்டவை. விவசாயிகளிடமிருந்த உணவு பொருள் கையிருப்புகளைக் கணக்கெடுத்து வைத்துக் கொண்டு குலாக்குகள் பதுக்கி வைத்திருந்த உபரி உணவு பொருள்களைப் பகிரங்கமாக்கி இந்த உபரிப் பொருள்களை சோவியத் உணவுக் கொள்முதல் நிறுவனங்கள் கைப்பற்றுவதற்கு உதவி புரியும் பொருட்டு இந்தக் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. குலாக்குகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட உபரி உணவுப் பொருள்களிலிருந்து ஏழை விவசாயிகளுக்கு வழங்கும் பொறுப்பும், மற்றும் அவர்களுக்கு விவசாயக் கருவிகளையும் தொழிற் துறை உற்பத்திப் பொருள்களையும் விநியோகிக்கும் பொறுப்பும் இக்கமிட்டிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

ஏழை விவசாயிகளின் கமிட்டிகளை நிறுவும்படி கம்யூனிஸ்டுக் கட்சி அறைகூவியதைத் தொடர்ந்து 1918ஆம் ஆண்டு இலையுதிர் காலத்துக்குள் கிராமப் புறங்களில் எண்பது ஆயிரத்துக்கும் மேற்பட்ட கமிட்டிகள் செயல்படத் தொடங்கிவிட்டன. நடைமுறையில் அவை கிராமப் புறத்தில் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குரிய உறுப்புகளாகி, குலாக்குகள் துவக்கிய எதிர்ப்புரட்சிக் கலவரங்களை நசுக்குவதற்கும், அவர்களுடைய பொருளா

தார அதிகாரத்துக்குக் குழி பறிப்பதற்கும் முக்கிய பங் காற்றின. நிலப்பிரபுக்களுடைய பண்ணைகளை அறவே ஒழிப்பதற்கும், பஞ்சத்தால் அவதியுற்ற நகரத் தொழி லாளர்களுக்கும் செஞ்சேனைப் படைப் பிரவுகளுக்கும் உணவு பொருள்களை வழங்குவதற்கும் முக்கிய பங் காற்றின.

ஏழை விவசாயிகளின் கமிட்டிகள் தமக்களிக்கப்பட்ட பணிகளை 1918ஆம் ஆண்டின் கடைப் பகுதியில் நிறை வேற்றி முடித்தன. இக்கமிட்டிகள் ஆற்றிய பணிகளின் விளைவாகவும் கிராமங்களில் கட்சியினது ஆரம்பக் குழுக் கள் நிறுவப்பட்டதன் விளைவாகவும் இதற்குள் கிராமப் புறங்களில் சோவியத்துகளின் நிலை வெகுவாய்ப் பல மடைந்துவிட்டது. 1918 நவம்பரில் கூடிய சோவியத்து களின் அனைத்து ருஷ்ய ஆறுவது சிறப்புக் காங்கிரஸ் இதைக் கணக்கில் எடுத்துக் கொண்டது; ''சோவியத் குடி யரசின் பரப்பு பூராவிலும் ஒருமித்த சோவியத் நிறுவன ஒழுங்கமைப்பை உருவாக்குவதன் மூலம் சோவியத் நிர் மாணத்தை நிறைவு பெறச் செய்யும்'' பொருட்டு ஏழை விவசாயிகளின் கமிட்டிகளை வோலொஸ்து, கிராம சோவியத்துகளுடன் இணைப்பதென முடிவு செய்தது.

பக்கம் 89

[27] கேரென்ஸ்கியின் முதலாளித்துவ இடைக்கால அரசாங் கம் 1917ல் காகித நோட்டுப் பணம் வெளியிட்டது.

பக்கம் 90

[28] கிராமப்புற வேலை சம்பந்தமான கமிட்டி ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிக்குகள்) எட்டாவது காங்கிரசின் முதல் அமர்வில் 1919 மார்ச் 18ல் நிறுவப் பட்டது. இக்கமிட்டி மூன்று தரம் கூடிற்று (மார்ச் 20, 21, 22). நிலத் துறைக் கொள்கையையும் கிராமப்புற வேலையையும் பற்றிய அறிக்கைகளைக் கேட்டுப் பரிசீலித் தது, இவை சம்பந்தமான கோட்பாடுகளைப் பரிசீலிப்பதற் காக ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்தது. நடுத்தர விவசாயி குறித்து அனுசரிக்கப்பட வேண்டிய போக்கு குறித்து லெனின் வரைந்த தீர்மானத்தையும், லுனச்சார்ஸ்கியால் எழுதப் பெற்று லெனினுல் சரிபார்க்கப்பட்ட ''கிராமப் புறத்தில் அரசியல் பிரசாரத்தையும் கலாசார, கல்வி யறிவு போதனைப் பணியையும் பற்றிய'' கோட்பாடுகளை யும் இந்தக் காங்கிரஸ் அங்கீகரித்தது. பக்கம் 116

[29] 1919 மார்ச் 21ல் ஹங்கேரியில் சோவியத் குடியரசு பிர கடனமாயிற்று. இதன் அரசாங்கத்தில் ஹங்கேரிய சோஷ லிஸ்டுக் கட்சியாய் இணைந்து கொண்ட கம்யூனிஸ்டு,

சமூக-ஜனநாயகக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கியிருந்தனர். ஆன்டான்ட் ஏகாதிபத்தியவாதிகள் ஹங்கேரிய சோவியத் குடியரசுக்கு எதிராய் இராணுவத் தலையிட்டுக்கும் பொருளாதார முற்றுகைக்கும் ஏற்பாடு செய்தார்கள். தலையீட்டுப் படைகளின் தாக்குதலுடன் கூடவே ஹங்கேரியினுள் எதிர்ப்புரட்சி சக்திகள் புத்துயிர் பெற்றெழுந்தன. இதோடு கூட, வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளது துரோகமும், மிகப் பல பகைவர்களால் வலையமிடப்பட்டு முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த சோவியத் ருஷ்யாவால் ஹங்கேரிக்கு உதவ முடியாமற் போனதும் ஹங்கேரிய சோவியத் குடியரசு பலமிழக்க நேர்ந்ததற்குரிய காரணங்களாகும். இக்குடியரசு *1919* ஆகஸ்டு 1ல் வீழ்ச்சியுற்றது. பக்கம் *121*

[30] **கொல்ச்சாக், அ. வ.** *(1873-1920)* — ஜாரிஸ்டுக் கடற்படை அட்மிரல், முடியரசுவாதி, *1918-19*ல் ருஷ்யாவில் எதிர்ப்புரட்சிக்குத் தலைமை தாங்கியோரில் ஒருவர், ஆன்டான்ட் அரசுகளின் கையாள். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் தம்மை ருஷ்யாவின் தலைமை அதிபதியாய்ப் பிரகடனம் செய்து கொண்டு ஊரால், சைபீரியா, தொலைக் கிழக்கு ஆகியவற்றில் முதலாளிகள், நிலப் பிரபுக்களது இராணுவச் சர்வாதிகாரத்துக்குத் தலைமை தாங்கினர். அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஏகாதிபத்தியவாதிகள் அவருக்கு இதில் உதவியாய் இருந்தார்கள். செஞ்சேனையின் தாக்குதல்களும் கொரில்லாப் போராட்டமும் கொல்ச்சாக் சேனைகளை முறியடித்தன. கொல்ச்சாக் கைதி செய்யப்பட்டு இர்க்கூத்ஸ்க் புரட்சிக் கமிட்டியால் மரண தண்டனை விதிக்கப்பட்டு, *1920* பிப்ரவரி 7ல் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். பக்கம் *122*

[31] **யூ. மர்ஹ்லேவ்ஸ்கி எழுதிய நிலப் பிரச்சினையும் உலகப் புரட்சியும் என்னும் கட்டுரை கம்யூனிஸ்டு அகிலம்,** இதழ் *12*ல் *(1920 ஜூலை 20)* வெளியிடப்பட்டது. இதில் வெளியாவதற்கு முன்பு லெனின் இக்கட்டுரையைப் படித்தார். பக்கம் *168*

[32] **புதிய பொருளாதாரக் கொள்கை** — முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் சென்ற கட்டத்தில் *1921* முதலாய் பாட்டாளி வர்க்க அரசு கடைப்பிடித்த கொள்கை இது. தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே ஒற்றுமையைப் பலப்படுத்துவதே இக்கொள்கையின் சாரப்பொருளாகும். இதற்கு முன்பு உள்நாட்டு யுத்தமும் அந்நியத் தலையீடும் நடைபெற்ற காலத்

தில் சோவியத் ருஷ்யா கடைப்பிடித்த ''யுத்தக் காலக் கம்யூனிசக்'' கொள்கையிலிருந்து (1918-20) வேறு படுத்திக் காட்டுவதற்காக இக்கொள்கை ''புதிய'' கொள்கை என்பதாய் அழைக்கப்பட்டது.

1918-20ஆம் ஆண்டுகளில் பகைவன்மீது வெற்றி பெறுவ தற்காக மக்களுடைய பலம் அனைத்தையும் ஒன்று திரட்டு வதற்காக அரசின் தானிய ஏகபோகம் நிலைநாட்டப் பட்டது, அதாவது உணவு பொருள்களிலும் பிறவற்றிலும் தனியார் வர்த்தகத்துக்குத் தடை விதிக்கப்பட்டது. கட்டாயக் கொள்முதல் மூலம், அதாவது நிர்ணய விலை களில் உபரி உணவுப் பொருள்களை அரசு கொள்முதல் செய்து கொள்வதன் மூலம் விவசாயிகளிடமிருந்து அரசு உணவுப் பொருள்களைச் சேகரித்துக் கொண்டது.

புதிய பொருளாதாரக் கொள்கை ஏற்கப்பட்டதும் (1921) கட்டாயக் கொள்முதல் நீக்கப்பட்டு பண்ட வடிவிலான வரி விதிக்கப்பட்டது. இந்த வரியின் மூலம் வசூலிக்கப்பட்ட உணவுப் பொருள்களின் அளவு கட்டாயக் கொள்முதல் மூலம் கிடைத்ததைவிட குறைவாய் (ஏறத் தாழ இரு மடங்கு குறைவாய்) இருந்தது. இந்த பண்ட வடிவ வரியைச் செலுத்தியபின் விவசாயிகள் தம்மிடம் எஞ்சியிருந்த உபரி விளைபொருள்களை எந்தத் தடையு மின்றி சந்தையில் விற்பனை செய்ய முடிந்தது. இதனால் விவசாயிகளுடைய பொருளாதார முன்முயற்சி ஊக்கு விக்கப்பட்டது.

யுத்த காலத்தில் சேதமடைந்துவிட்ட விவசாயத்தைப் புதிய பொருளாதாரக் கொள்கையின் பயனாய், குறுகிய காலத்துக்குள் மீட்சி பெறச் செய்ய முடிந்தது; நகருக்கும் கிராமப்புறத்துக்கும் இடையே பண்டப் புழக்கத்தை விரிவடையச் செய்ய முடிந்தது; தொழிலாளி வர்க்கத்துக் கும்விவசாயிகளுக்கும் இடையே ஒற்றுமையை உறுதி பெறச் செய்து இதன் அடிப்படையில் தொழில் துறை யையும் மீட்சி பெறும்படி வைக்க முடிந்தது.

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து,

"Progress Publishers, 21,
Zubovsky Boulevard, Moscow, USSR"

என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

6, நல்லதம்பி செட்டித் தெரு, சென்னை-2

ஷோ-ரூம்

6/30, மவுண்ட் ரோடு, சென்னை-2

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை-1

87/89, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர்-1

சிங்காரத்தோப்பு, திருச்சிராப்பள்ளி-8

பஸ் நிலையம், தஞ்சாவூர்

''முன்னெற்றப் பதிப்பகம்''விரைவில் வெளியிடப் போகும் தமிழ்ப் புத்தகங்கள்

கார்ல் மார்க்ஸ்: ''கூலியுழைப்பும் மூலதனமும்''

பிரசெல்சில் 1874ல் ஜெர்மான் தொழிலாளர்களுக்குக் கார்ல் மார்க்ஸ் வரிசையாய் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகையாய் அமைந்த புத்தகம் இது. முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை மார்க்ஸ் ஆராய்கிறார், முதலாளிகளின் வர்க்கம் கூலி உழைப்பாளர்களைச் சுரண்டுவதன் அடிப்படையில் இவை அமைந்திருப்பதைத் தெளிவுபடுத்துகிறார். அரசியல் பொருளாதாரத்தின் பிரச்சினைகள் எளிமையான, தெளிவான நடையில் விவரிக்கப்படுகின்றன.

விளக்கக் குறிப்புகளுடன் கூடிய புத்தகம்.

பி. எங்கெல்ஸ்: ''கற்பனாவாத சோஷலிசமும் விஞ்ஞான சோஷலிசமும்''

சோஷலிசப் போதனைகளின் வளர்ச்சி பற்றிய இந்தக் கட்டுரை கார்ல் மார்க்ஸ் உருவாக்கிய விஞ்ஞான சோஷலிசத்தின் அடிப்படை நிர்ணயிப்புகளை விளக்கிக் கூறுகிறது. முதலாளித்துவத்திலிருந்து மேலும் உயர்ந்த சமுதாய வளர்ச்சிக் கட்டமான சோஷலிசத்துக்கான மாற்றம் ஏற்படுவது ஏன் தவிர்க்க முடியாததாகும் என்பதை எங்கெல்ஸ் விளக்குகிறார்.

விளக்கக் குறிப்புகளும் பெயர்க் குறிப்பு அகராதியும் அடங்கிய புத்தகம்.

வி. இ. லெனின்: ''சோஷலிச சித்தாந்தமும் கலாசாரமும் குறித்து''

சமுதாய வாழ்வின் பல்வேறு இயல்புகளையும் குறித்து விஞ்ஞான சோஷலிசத்தின் அடிப்படையான தத்துவார்த்த நிர்ணயிப்புகளை இந்தக் கட்டுரைத் தொகுப்பு எடுத்துரைக்கிறது. கலாசாரப் புரட்சிக்குரிய நிறுவன ஒழுங்கமைப்பும் இப்புரட்சியை நடத்திச் சென்று நிறைவுறச் செய்வதும் பற்றிய பிரச்சினைகளுக்கும், உழைப்பாளி மக்களின் கம்யூனிசக் கல்விபோதம் பற்றிய பிரச்சினைகளுக்கும் முதன்மையான முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

''மாபெரும் தொடக்கம்'', ''இளைஞர் கழகங்களின் பணிகள்'', ''பாட்டாளி வர்க்கக் கலாசாரம் குறித்து'' ஆகியவையும் மற்றும் பல கட்டுரைகளும் இத் தொகுப்பில் இடம் பெறுகின்றன.

விளக்கக் குறிப்புகளுடன் கூடிய புத்தகம்.